காந்தி மலர் 1969 ஸௌம்ய தில்லித் தமிழ்ச் சங்கம்

சுடர்



மலர் 18 60 காசு

தஞ்சை கூட்டுறவு மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட்.,

விசயபுரம், திருவாரூர்.

தொலைபேசி : 471, 472. | தந்தி : பெடரேஷன்

நவீன அரிசி ஆலை,
நவீன விதை பக்குவபடுத்தும் ஆலை
நவீன நெற்குதிர்கள்,
நவீன தவிட்டு எண்ணெய் ஆலை
முதலியவற்றை அமைத்துள்ள தமிழகத்தின்
தலை சிறந்த கூட்டுறவு உற்பத்தியாளர்கள் நிறுவனம்.

தஞ்சை மாவட்ட விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்கிறது.

ஒரு லட்சம் டன்னுக்கு மேல் உரங்களையும், விஞ்ஞான முறையில் பக்குவப்படுத்தப்பட்ட விதைகளையும், பூச்சி மருந்துகளையும் விநியோகித்து வருவதுடன் எங்களுடன் இணைக்கப்பட்டுள்ள 586 கூட்டுறவு சங்கங்களின் மூலம் 1·5 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தும், 20,000 டன் உயர்ரக அரிசியை உற்பத்தி செய்தும் உள்ளோம்.

சமீப காலத்தில் நிறுவப்பட்டுள்ள நவீன தவிட்டு எண்ணெய் நிலையத்தில் உற்பத்தியாகும் சத்துள்ள தவிடு அரிசி மொக்கு முதலிய கால்நடைத் தீவனங்களை தஞ்சை விவசாயிகளுக்கும் இதர மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்படுகிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜி. என். தாஸ், பி. காம்.,
கூட்டுப்பதிவாளர்-செயலர்

வி. எஸ். தியாகராசமுதலியார், M. A.
தலைவர்

ஸமர்ப்பணம்

காந்தி மலர் ஆசிரியக் குழுவின் அங்கத்தினர் பேராசிரியர். கே. ஸ்வாமிநாதன். (தலைவர்) திரு. புறநானூறு எஸ். சீனிவாசன், திரு. ஸி. ஆர். கஸ்தூரிரங்கன், திரு. கே. எஸ். ஜம்புநாதன், திரு. அ. வெ. குப்புஸ்வாமி (கூட்டுனர்) சார்பில் மலரை, காந்திவழி நடந்தோர்க்கும், நடப்பவர்க்கும், நடக்க உத்தேசித்திருப்போர்க்கும், உலகெலாம் பரவியிருக்கும் தமிழன்பர்களுக்கும், இருள் நீக்கி ஒளிபரப்பும் புனித தீபாவளியன்று பெருமகிழ்ச்சியுடன் ஸமர்ப்பணம் செய்கிறேன்.

தி. கோ. அனந்தஸ்வாமி
நிர்வாக ஆசிரியர், "சுடர்"

நன்றி

—o—

மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா உலகம் முழுதும், இந்த வருஷம் அக்டோபர் 2உமுதல் கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் தலை நகரில் 1946 முதல் தமிழுக்குத் தொண்டு செய்து வரும் தில்லித் தமிழ்ச் சங்கமும் "சுடர்" 18வது மலரைத் தேசத் தந்தையின் நினைவு மலராக வெளியிட்டு அண்ணலுக்கு அஞ்சலி செலுத்தத் தீர்மானித்தது. இந்த மலரின் பிரத்யேகச் சிறப்பு, அட்டை கையினல் செய்த காகிதத்தினலானது.

சங்கத்தின் பணியைப் போற்றி அமோகமாக விளம்பரங்கள் தந்துதவிய தனியார்துறை தொழிலதிபர்களுக்கும் மத்திய அரசாங்க ஸ்தாபனங்களுக்கும், வர்த்தகர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாபது. விளம்பரங்கள் சேகரித்துத் தந்த செயற்குழு அங்கத்தினர்களுக்கும், பிற ஆர்வமுடைய இளைஞர்களுக்கும் சங்கத்தின் அங்கத்தினரல்லாத எல்லா அன்பர்களுக்கும் சங்கம் கடமைப்பட்டுள்ளது.

விஷயதானம் செய்த பெரியோர்களுக்கும், இளைஞர்களுக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாயது.

விஷயதானங்கள் பலவிதப்பட்டவை வந்து குவிந்தன. அவற்றை எல்லாம் சலிப்பில்லாமல் பரிசீலித்து மலருடைய மணத்தையும், தரத்தையும் உயரச்செய்த ஆசிரியக் குழுவினர் அனைவருக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாயது. மலருடை கனத்தை ஓரளவுக்குமேல் அதிகப்படுத்த முடியாததால் ஆசிரியக்குழுவினருக்கு இந்த ஆண்டு பொறுப்பு அதிகரித்தது.

அட்டைப்படம் சலுகையுடன் எழுதித் தந்த திரு. புருஷோத்தமராவுக்கும், அட்டைப்படத்தை அழகாக அச்சிட்டுத் தந்த ரேன்கோ நிறுவனத்திற்கும், படங்களைக் கொடுத்து உதவிய மத்திய அரசுச் செய்தித் துறைக்கும், மலரை அழகாக அச்சிட்டுத் தந்த ஸிட்டி பிரிண்டிங் ஒர்க்ஸ் அதிபர் திரு.பி. பத்மனபய்யர் அவர்களுக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாயது.

—o—

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்,
சென்னை-9
6-10-69

தாய்த் தமிழகத்தை விட்டுப் பிரிந்து சென்று, இந்திய நாட்டின் பிற பகுதிகளில் வாழ்ந்துகொண்டு தமிழ்ப்பற்றோடு பணியாற்றும் தமிழ் நண்பர்கள் அமைத்துள்ள சங்கங்களில் தில்லித் தமிழ்ச் சங்கத்துக்கு ஒரு தனி இடம் உண்டு.

அவர்களது தமிழ்ப் பற்று வாழ்க! வளர்க!

அவர்களது தொண்டுள்ளம் சிறக்க!

எனது நல் வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) மு. கருணாநிதி

தெ. பொ. மீனுட்சிசுந்தரன்,
துணைவேந்தர்

MADURAI UNIVERSITY,
UNIVERSITY BUILDINGS,
MADURAI-2
5-8-1969

இந்நாள்வரை பல தமிழ்ப் பெரியார்களின் நினைவாக மலரை வெளியிட்ட தில்லித் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு நம் தேசத் தலைவர் காந்தி மகான் அன்னுருடைய நூற்றுண்டு விழாவில் அவர் பெயரில் மலர் வெளியிடுவது மிகப் பொருத்த மானதே. மலர் பல அரிய கருத்தோவியங்கள் கொண்டு சிறப்புற விளங்கி மக்கள் எல்லோரது நன்மதிப்பைப் பெறும் என்று நம்புகிறேன். வாழ்க காந்தியின் திருப்பெயர்! வளர்க அவரது கொள்கை.

தெ. பொ. மீனுட்சிசுந்தரன்

Drink **Coca-Cola** . . . Be really refreshed



THE PAUSE THAT MAKES WORK EASIER !
It's been a busy afternoon, with plans to discuss and decisions to make all the routine of an office day. So how welcome that minute or two when you take time to enjoy ice-cold Coca-Cola ! The sparkling flavour of Coca-Cola is so delicious - makes work seem easier Pause for Coca-Cola so refreshing !

DRINK
Coca-Cola

PURE DRINKS (NEW DELHI) PRIVATE LTD., NEW DELHI

FOR BETTER COMPLEXION

USE

REMY

SNOW & POWDER

WITH COMPLIMENTS

FROM

★

TATA FISON INDUSTRIES LTD.

BOMBAY

சுடர்

சௌம்ய ஹு மலர் 18 1969

பொருளடக்கம்

	பக்கம்
சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி ...	11
கி. வா. ஜகந்நாதன் ...	18
திரு. சி. என். அண்ணாத்துரை ...	23
பேராசிரியர் கே. சுவாமிநாதன் ...	35
வண்ணமுத்து ...	41
அ. வே. கிருஷ்ணமூர்த்தி ...	43
நஜன் ...	47
வெங்கடேசன் ...	52
அ. வி. குப்புஸ்வாமி ...	58
செயல் ...	62
கே. எஸ். ஜம்புநாதன் ...	64
ஜ. ஜகந்நாதன் ...	73
எஸ். மணிவாசகன் ...	77
பெ. நா. அப்புஸ்வாமி ...	81
கவியோகி சுத்தானந்த பாரதியார் ...	88
நா. பார்த்தசாரதி ...	90
சுந்தா ...	94
நாடோடி ...	96
கவிதா ரத்தினம் திருமதி ஹா. கி. வாலம் ...	106
பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் ...	108
இளமுருகு ...	113
க. அருணாசலம் ...	120
மோகூர் வாசுகி ...	128
க. நடனசபாபதி ...	138
தூன் ...	139
மங்கைதவெளி சுந்தரம் ...	150
க. சந்தானம் ...	153
எஸ். ஸ்ரீநிவாசன் ...	158
திரு. ஜே. பி. கிருபளானி ...	161
கவியோகி சுத்தானந்த பாரதியார் ...	168
மு. வில்வநாதன் ..	171
க. விசுவநாதன் ..	180
கி. கஸ்தூரிரங்கன் ..	186
கி. கோ. அனந்தஸ்வாமி ..	190

INDEX TO ADVERTISERS

	Page
Abbot	24
Agfa	177
Alvitone	75
Ambal & Co.	61
Ammapet	143
Amul	183
A.V.M.	Last Cover
Bangaru Chetty	40
Baroda Rayons	165
Binny	133
Birth control	38
Bliss and Cotton	109
British Motor Car Co.,	59
Cadbury	176
Carborandum	121
Central News agency	59
Coca-cola	29
Cynamid	17
Dalmia Cement	179
Das Reprographics	93
DGL Private	103
Emjeeyar Productions	3rd cover
Farmak	95
Food Corporation	160
Ganesh Packaging	34
Golden Tobacco	152
Govt. of Tamilnad	147
Hamam	156
Hindustan Lever	125
Hoechst	167
Imperial Tobacco	72
Indian Oil	157
Indo-Nippon	112
Karur Vysya Bank	167
Lakshmi Mills	189
Madras Hotel	187
Madura Mills	149
Mafatlal	63
Mangaram	174
Merck	105
Merck Sharp	107
Metal Box	162
Mettle Vacuum Flask	99
Mocambo	141
Modern Coffee House	86
Mohamed Ibrahim	141
Mount Mettur	173
National Seeds	137
Nestles Products	87
Nestles	9
Pandit HM	71
Pharmed	188
Phillips	185
Pure Drinks	5
Remy	6
Rhaenco	22
Sakthi Sugars	136
Sandoz	134
Seshasayee	111
Suhrid Geigy	135
Swasthik	45
Synbiotics	174
Tata	129
Tata Fison	6
Tanjore Co-op.	2nd Cover
Telco	127
Themis	164
Tube Investments	181
Wellwisher	37
Westerwork	84

—o—

PRINTED AT THE CITY PRINTING WORKS, MADRAS-14.

With the best compliments from

NESTLE'S PRODUCTS (India) LTD.

BOMBAY—CALCUTTA—DELHI

MADRAS—MOGA

அவதார புருஷன்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

உலகத்தில் பலர் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் காந்தி மகானைப்போல், அவர் செய்த அளவில், தனக்கென்று அல்லாமல் பிறருடைய நன்மைக்கான காரியங்களை ஆராய்ந்து தீர்மானித்து, அவற்றைத் தருமத்துக்கு மாறான முறைகளைக் கையாளாமல் அறவழியிலேயே நிறைவேற்றியவர் இந்த யுகத்தில் வேறு யாரும் இல்லை.

காந்தி மகான் ஜனித்த காலத்தில், நமது நாட்டில் பிரிட்டிஷ் ஆதிக்கம் வேரூன்றிப் போயிருந்தது. அவருடைய வாழ்க்கை முடிந்துபோய் இந்தியா முழுச் சுதந்தரப் பதவி பெற்ற ஒரு நாடாகியிருந்ததை நாம் கண்டோம். ஆயுதமற்ற மக்கள் சுதந்தரப் போரில் வெற்றி அடைந்து, உலகத்துக்கே பயன்படுமாறு ஒரு புதிய சக்தியைத் தோற்றுவித்துக் காட்டினார். இந்தப் புதிய சக்தியின் அதிசய வரலாறே காந்தியின் வாழ்க்கை வரலாறும் ஆகும். ஆயுதம் ஏதும் இன்றி வெற்றியடையும் ஆன்ம சக்தியை உண்டாக்கி காந்தி நிரூபித்தார்.

பல காங்கிரஸ் தலைவர்களுடைய சேவைகளை அஸ்திவாரமாகக் கொண்டே, காந்தி மகான் சுதந்தர இயக்கத்தை நடத்தினார் என்பது உண்மையாயினும், அவருடைய தனிச் சிறப்பு என்னவென்றால், பாரத சுதந்திரப் புரட்சி தீவிர வேகத்துடன், ஆனால் ஆயுத பலமே இன்றித் தார்மீக முறையில் நடந்தது அவராலேதான். அவர் கையாண்ட முறையின் விசேஷத்தினால் இந்தியாவுக்கு அவர் செய்த பணி உலக மக்கள் பணியாகி விட்டது. அவர் மக்கள் உலகம் முழுவதையுமோ நோக்கிப் பணி செய்தார். அதன் பயனும் உலகம் முழுவதிற்குமே பரவிற்று.

ஐயமற்ற தெய்வ பக்தியுடன் காந்திஜி தமது வாழ்க்கையை நடத்தினார், புதிய சமய சித்தாந்தம் எதையும் நிறுவி, பூசல்கள்



God is Truth
The way to Truth
lies through ahimsa
(non violence)
Sabarmati
13 3/27
M K Gandhi

விளைவிக்கவில்லை. கடவுளின் சகல கல்யாண குணங்களில் சத்தியத்தை வற்புறுத்தினர். சத்திய ரூபமான தெய்வத்தைக் காண்பதற்கு மார்க்கமும் காட்டினர். அது உண்மை, தளராத ஆர்வம் அன்பு, எவ்வுயிற்கும் துன்பம் செய்யாமை என்று காட்டி நிரூபித்தார்.

அவரது வாழ்க்கை மனித இனம் முழுவதற்கும் இன்னொரு பாடத்தையும் கற்பிக்கிறது. யாரும் சத்திய முயற்சியினுல் தம்மை உயர்த்திக் கொள்ளலாம் என்பதற்கு அவர் வாழ்க்கையிலிருந்து நம்பிக்கையும் ஊக்கமும் பெறலாம். அவரிடம் முக்கியமாக இருந்தது நன்மை எது, தீமை எது என்று பகுத்துக்காணும் ஐயந்திரிபற்ற உணர்வு; அதன்மேல் அதை ஒட்டிய தளரா முயற்சி. இம்முயற்சியில் படிப்படியாக அடியெடுத்து வைத்தே அவர் நடந்து சென்ருர். இம் மூயற்சியின் வெற்றிச் சிகரத்தில் அவர் நின்றபோது, மனித சாதனையைக் கடந்து நிற்கும் தனிப்பிறவியாகவும் தோற்றம் அளித்தார்.

எந்த விஷயத்தில் உண்மையைக் காண வேண்டுமாலும், ஆராயாமலே முன் கூட்டி ஒரு அபிப்பிராயத்தை மனத்தில் பதிய வைத்துக்கொண்டு சிக்கல் படுத்திக் கொள்ளாமல் பளிங்கு போன்ற சுத்த மேதையை வைத்து விஷயங்களைச் சோதித்து உண்மையை நாடுவார் அவர். திரைகளும் தடங்கல்களும் உண்டாக்கிக் கொள்ளாமல் உண்மையை நேராகப் பார்ப்பார். இப்படித் தேடி உண்மையைக் கண்டபின் அந்த உண்மையை ஒட்டி, காரியாம்சத்தில் என்ன செய்து முடிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பார். தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத் தடைகளும் தடங்கல்களும் பல இருக்கும். அவற்றைத் தாண்டுவதில் துன்பங்களும் கஷ்டங்களும் ஏற்படும். அதற்காகப் பயப்படாமல் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதே வெற்றிக்கு வழி என்று உணர்ந்து, மகிழ்ச்சியுடன் துன்பத்தில் இன்பமும் வெற்றியும் காண்பார். இந்த முறையைப் பிறருக்கும் உபதேசித்தார். முறையில் வெற்றி நிச்சயம் என்பதையும் நிரூபித்தார்.

மொழி பேதங்களையும் மத பேதங்களையும் கண்டு கவலைப் பட்டுப் பயந்து பாரத நாட்டுக்கு உய்வில்லை என்று கருதி வந்தோம். பேதங்களைக் கண்டு கலங்கவேண்டியதில்லை, எல்லா மொழிகளுக்கும், எல்லாச் சமயங்களுக்கும் சம கௌரவமுண்டு, பிற மொழியை மதித்தே தன்னுடைய மொழிக்குப்

பக்தி செலுத்தலாம், சமயங்கள் எல்லாம் ஒரே தெய்வத்தை அடையும் வழிகளாகும், மற்ற மார்க்கங்களும் நாம் வழிபடும் தெய்வத்தினிடமே போய்ச்சேரும் என்ற மகத்தான உண்மையைப் போதித்து தம் வாழ்க்கையில் அந்த விசாலமான கருத்தையே செலுத்தி வாழ்ந்து காட்டினர். அதன் பயனைப் பாரத நாடு விடுதலை பெற்றது.

'நான் சீர்திருத்தக்காரன். ஆனால் எந்த ஒரு நவீன சம்பிரதாயத்தையும் தோற்றுவிக்க நான் விரும்பவில்லை' என்று விளக்கமாகவும் ஊர்ஜிதமாகவும் கூறி வந்தார். ஹிந்து சம்பிரதாயம் மிக விசாலமானது; அதில் நாம் எல்லாத் திருத்தங்களையும் செய்து கொண்டு சுகமாக இருக்கலாம்; அதற்காகப் புது மார்க்கமாவது சம்பிரதாயமாவது நாம் உண்டாக்கிக்கொள்ள வேண்டியதில்லை என்று ஆயுள் முழுவதும் தம்முடைய விளக்கத்தைச் செய்து வந்தார். மற்றச் சீர்திருத்தக்காரர்களுக்கும் காந்தி மகானுக்கும் இது ஒரு பெரிய வித்தியாசம், ஆயினும் 'காந்தீயம்' என்று ஒரு சொல் பிரயோகத்தில் வந்துவிட்டது. அன்பும், சத்தியமும், அஹிம்சையும் ஹிந்து மதத்துக்குப் புதிதல்ல, இவற்றுக்குக் காந்தி மகான் அடிக்கோடு இட்டு அழுத்தம் கொடுத்தார். அதைத்தான் காந்தீயம் என்று சொல்லி வருகிறார்கள். காந்தீயம் என்பது ஒரு புது சம்பிரதாயம் அல்ல. "செய்ய வேண்டிய காரியங்களைச் செய்; பசை கொள்ளாமல் செய், இதுவே சந்யாசம்" என்பது கண்ணன் போதித்த சாஸ்திரம். காந்தி மகான் உபதேசித்த காந்தீயமும் இதுவே. இதைச் சாஸ்திரம் படித்தோர் கர்மயோகம் என்பார்கள். ஆயினும் காந்திஜியினுடைய மார்க்கம் பக்தி மார்க்கமே. அனைத்தும் உன்னுடையது என்று ஆண்டவனுக்குப் பணியையும் தன்னையும் அர்ப்பணம் செய்வதே பக்தி மார்க்கம். இதை காந்தி மகான், தானும் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் போதித்தார்.

அறம் வேறு உலக வியவகாரம் வேறு என்கிற மோசமான லோகாயதக் கருத்தை அகற்றித் தள்ளினர். பொருளும் இன்பமும் அறத்தோடே கலந்ததாக இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்திப் போதித்தார். ஓரளவு ஜனங்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள். இதனுடன் இன்னொரு பொய்யையும் பொய்யென்று விளக்கி அகற்றினர். நல்லதென்று கருதிய ஒரு பயனை

அடைவதற்காக அறம் வழுவிய முறைகளையும் கையாளலாம், குற்றமில்லை என்று உபதேசிக்கப்பட்டு வந்த கருத்து மிகவும் தீங்கு விளைவிக்கும் என்று விளக்கினார். பயன் மட்டும் நல்லதாக வைத்துக்கொண்டு அதை அடைவதற்காக நாம் உபயோகப்படுத்தும் கரணங்களும் செய்யும் செயல்களும் எவ்வகையாகவும் இருக்கலாம் என்று வெகு நாளாக ஒரு தவறான கொள்கையைப் பலர் அங்கீகரித்து வந்தார்கள். இது முற்றிலும் தவறு என்பதைக் காந்திஜி வற்புறுத்திச் சித்தாந்தம் செய்தார்.

அரசியல் துறையில் மகத்தான ஒரு புது நிலைமையை உலகத்துக்கே உண்டாக்கி நிலைபெறச் செய்து விட்டார். பாரத நாட்டில் நடந்த புரட்சியின் பலனாக, உலகத்தில் எந்த ஜன சமுதாயத்தையும் அன்னியர் வந்து இனி அடக்கியாள முயற்சி செய்வதில்லை என்று வல்லரசுகள் அனைத்தும் உணரும் படியான நிலைமையை ஏற்படுத்தி விட்டார். அடக்கி ஆளப்பட்ட பிரதேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விடுதலை அடைந்து வருகின்றன. அடக்கி ஆண்ட அந்நியர்கள் இனி வேண்டாம் என்று சந்தோஷமாகவே திரும்பிப் போகும் முறை ஏற்பட்டு விட்டது. இதற்கெல்லாம் காரணம்; எந்த ஜன சமூகமும் தன் சம்மதத்தைக் கொடுத்துத்தான் அன்னிய ஆட்சிக்கு உட்பட்டு வருகிறது. சம்மதத்தை மறுத்துவிட்டால் அன்னிய ஆட்சி முடியாத காரியம். சம்மதத்தை மறுப்பதற்கு ஆயுதங்கள் வேண்டியதில்லை. இணங்காமல் இருப்பதே மறுப்பாகும். அப்படி மறுப்பதில் துன்பங்களைத் தாங்கவேண்டியது அவசியமாகும். துன்பத்தைத் தாங்கும் சக்தியும் பொறுமையும் திரட்டிக்கொள்ள வேண்டும் அடிமை நிலையைத் தீர்க்கும் யுத்தம் இதுவே. இந்த யுத்தத்தில் ஏற்படும் நஷ்டங்களையும் கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்வதே வெற்றிக்கு வழி. கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்ட ஒவ்வொரு கட்டமும் மலை ஏறுவதற்கு ஒரு படியாகும். ஏறின ஒவ்வொரு படியும் சிரமம் தந்ததாயினும் கொடுமுடி நெருங்கினேமே என்கிற இன்பத்துடன் நம்பிக்கைதரும். இந்தியாவில் இதை நிரூபித்தாய்

பெண் தியாகத்தின் உறைவிடம். சரியான மன ஊக்கத்தோடு அவளொரு செயலைச் செய்வதானால், ஆம், மலையைக்கூட அசைத்து விடுவாள். நாமோ நம் பெண்களுக்குக் கொடுமை இழைத்து விட்டோம். அவர்களை ஒதுக்கி வைத்து விட்டோம்.

—காந்தி வாக்கு.

விட்டது. மற்ற நாடுகளில் இந்த உண்மையை ஆளப்பட்டவர்களும் ஆளும் அந்நிய சர்க்காரும்—இருபட்சத்தாருமே உணர்ந்து கொண்டு யுத்தமில்லாமலேயே சுதந்தர நிலைமை தோன்றி வருகிறது. உலக சரித்திரத்தில் இது ஒரு புதிய அத்தியாயம். புது யுக தர்மமென்றே சொல்லலாம். இந்த அத்யாயத்துக்கு காரணகர்த்தா நம்முடைய காந்தியாவார்.

ஒரு அவதார புருஷன் வந்து நாம் அழிந்து போகாமல், கைகொடுத்துத் தூக்கினன். பாதாளத்தில் அமுந்திய பூமியை மகாவிஷ்ணு வராகனாக வந்து தோண்டித் தூக்கி நிறுத்தினது போல் என்றால் மிகையாகாது.

[1956 ல் கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா வெளியிட்ட காந்தி படக் கோவைக்கு எழுதிய முன்னுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.]

—o—

மகாத்மாவின் வாழ்க்கையில்...

ஆத்மசுத்திக்காக காந்திஜி உபவாச விரதம் ஏற்றுக்கொண்டபோது, இந்தச் சோதனையில் அவர் வெற்றி பெற வேண்டும் என்று பல்லாயிரக்கணக்கான இந்துக்களும் முஸ்லிம்களும் பிற இனத்தாரும் பிரார்த்தனை செய்தார்கள். அந்தச் சமயத்திலும், பம்பாயைச் சேர்ந்த ஓர் முஸ்லிம் அன்பர், (தம்முடைய விலாசத்தைத் தராமல் பெயரை மட்டும் தெரிவித்துவிட்டு) ஒரு ஜோடி தந்த வளையல்களையும் குங்குமத்தையும் அவற்றுடன் ஒரு கடிதத்தையும் கஸ்தூரிபாவுக்கு அனுப்பி வைத்தார்.

29—5—'33 தேதியிட்ட அந்தக் கடிதத்தின் வாசகம்: "இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு, இந்தச் சிறிய காணிக்கையை உங்களுக்கு அனுப்புகிறேன். இவற்றை அணிந்துகொண்டு நீங்கள் 'சௌபாக்கியவதியாக' வாழ வேண்டும் என்பதே எனது தாழ்ந்த வேண்டுகோள்." கஸ்தூரிபா அவற்றை நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டார். மகிழ்ச்சியுடன் அணிந்து கொண்டார்.

இந்தச் செய்தியைக் கேட்டதும், காந்திஜி மக்களுக்கு தம்மிடமுள்ள அன்பை நினைந்து மனங் கசிந்தார்.

—ஜ.

WHERE THERE'S LIFE,
THERE'S CYANAMID

Where seeds are
bursting into eager life.
Where children jump
and play with glee.
Where fields sway in
the gentle breeze.
Where people relax
after the day's toil.
Where livestock and
poultry add to
farmland's prosperity.
There, world-famous
Lederle pharmaceuticals,
Cyanamid pesticides
and veterinary health
products stand guard...
to protect life and health.

CYANAMID INDIA LIMITED
Agricultural Division
Lederle Division

CMCI-29-46

இமயமும் பொதியிலும்

கி. வா. ஜகந்நாதன்

—o—

"மகாத்மா காந்தியவர்கள் இந்த ஊருக்கு வருகிறார்கள். ஒரு மகாநாட்டில் தலைமை தாங்கப் போகிறார்கள். அதில் தாங்கள் கலந்து கொள்ள வேண்டும். மகாத்மாவைத் தாங்கள் வரவேற்க வேண்டும்" என்றார் கல்கி கிருஷ்ணமூர்த்தி.

"எங்கள் ஹிந்திப் பிரசார சபையில் அகில இந்திய இலக்கியக் கழகத்தின் முதல் மகாநாடு கூடுகிறது. பாரத தேசத்திலுள்ள எல்லா மொழிகளிலும் உள்ள அறிஞர்கள் சேர்ந்து ஒற்றுமையாக இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்பது இந்தக் கழகத்தின் நோக்கம். இதற்குப் பாரத பாஷா சாகித்திய பரிஷத் என்று பெயர்" என்று மேலும் விளக்கினார் ஸ்ரீ ஹரிஹர சர்மா. அவர் அப்போது தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையின் செயலாளராக இருந்தார்.

1937-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஒருநாள் மாலை கல்கி கிருஷ்ணமூர்த்தியும் ஸ்ரீ ஹரிஹர சர்மாவும் திருவேட்டீசுவரன் பேட்டையிலுள்ள தியாகராஜ விலாசத்துக்கு வந்தார்கள். அங்கேதான் ஐயரவர்கள் என்று தமிழுலகம் போற்றும் தமிழ்த் தாத்தா வாழ்ந்துவந்தார்கள். பாரத பாஷா சாகித்திய பரிஷத்தின் முதல் மகாநாடு சென்னையில் கூடுவதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். காந்தியடிகளே அந்த மகாநாட்டின் தலைவராக இருக்க வேண்டுமென்று யாவரும் விரும்பினார்கள். மகாத்மா அதற்கு உடம்பட்டார். ஸ்ரீ காகா காலேல்கர் முதலியவர்கள் இந்த மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை செய்து வந்தார்கள்.

மகாநாடு சென்னையில் கூடுவதனால் அதற்குரிய வரவேற்புக் குழுவைச் சென்னையிலுள்ள மக்களைக் கொண்டே அமைக்க வேண்டும் என்பது அன்பர்களுடைய கருத்து. வரவேற்புக் குழுவுக்குத் தலைவராக யாரை ஏற்பது? இந்தக் கேள்வி எழும்போது, "அரசியலோடு தொடர்பு இல்லாதவர்களாக இருந்தால் நன்றாக இருக்கும்" என்று சிலர் யோசனை கூறினார்கள். ஸ்ரீ ராஜாஜியும் அதை ஆதரித்தார். "அப்படி யார் இருக்கிறார்கள்? மகாத்மா தலைமை தாங்கும் ஒரு மகாநாட்டின் மதிப்புக்கு ஏற்ற சிறப்பும் தகுதியும் உடைய ஒருவர் வேண்டுமே!" என்று

யாவரும் யோசித்தார்கள். "மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்களைக் கேட்டுப் பார்க்கலாமே!" என்று ஒருவர் கூற, "அவர்கள் சம்மதிப்பதாக இருந்தால் இந்த மகாநாடு எல்லா வகையிலும் சிறப்பாக அமைந்துவிடும்" என்று பலரும் சொன்னார்கள். "அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?" என்று சிலர் கேட்க, "நான் முயன்று காரியத்தைச் சாதிக்கப் பார்க்கிறேன்" என்று கல்கி கூறினார்.

அதன்படியே கல்கியும் ஸ்ரீ ஹரிஹர சர்மாவும் ஐயரவர்களைக் கண்டு பேசுவதற்காக வந்தார்கள்; செய்தியைச் சொல்லி விளக்கினார்கள்.

"மகாநாட்டில் எந்த மொழியில் மகாத்மா பேசுவார்? மற்றவர்கள் எதில் பேசுவார்கள்?" என்று தமிழ்த்தாத்தா கேட்டார்.

"காந்தியடிகள் ஹிந்தியில் பேசுவார், மற்றவர்களும் பெரும்பாலும் அந்த மொழியில்தான் பேசுவார்கள்" என்றார் கல்கி.

"எனக்கு ஹிந்தி தெரியாதே!"

"தாங்கள் தமிழிலே வரவேற்பைப் படியுங்கள். அதுதான் இயற்கையாக இருக்கும். நாங்கள் அதற்கு ஹிந்தி மொழி பெயர்ப்பு ஒன்று அமைக்கச் செய்து அதையும் கூட்டத்தில் படிக்கிறோம். மற்ற மொழி பேசும் அறிஞர்கள் தங்கள் பேச்சின் சிறப்பை உணர்ந்து கொள்வார்கள்" என்றார் சர்மா.

தமிழ்த்தாத்தா ஒப்புக் கொண்டார். மகாநாட்டின் வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையோடு அவ்விருவரும் சென்றார்கள்.

ஐயரவர்கள் வரவேற்புச் சொற்பொழிவை எழுதினார். தமிழின் தொன்மையையும் சங்க நூல்களின் பெருமையையும் பிறமொழியாளரோடு தமிழர்களுக்கு இருந்த தொடர்பையும் அதில் விரித்தார் மகாத்மாவுக்கு உளங்கனிந்த அஞ்சலி செலுத்தி வரவேற்றார். அந்த வரவேற்புரையை அக்காலத்தில் ஹிந்திப் பிரசார சபையில் பணிபுரிந்து வந்த ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழி பெயர்த்துத் தந்தார். மூல வரவேற்புரையையும் ஹிந்தியாக்கத்தையும் அச்சிட்டார்கள்.

பாரத பாஷா சாஹித்திய பரிஷத் மகாநாடு சென்னையில் தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையைச் சார்ந்த வெளியில் நடைபெற்றது. வெளி முழுதும் பந்தல் போட்டு அலங்கரித்திருந்தார்கள். காந்தியடிகள் வருகை காரணமாகத் திரள் திரளாக மக்கள் கூடியிருந்தார்கள். இந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள் வந்திருந்தார்கள். 1937-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 27-ஆம் தேதி இந்த மகாநாடு கூடியது.

மகாநாடு நடைபெற்ற அன்று காலையில் ஐயரவர்களை ஹிந்திப் பிரசார சபைக்கு அழைத்துச் சென்றார்கள். முதலில் ஐயரவர்களைக் காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டுமல்லவா? அந்த வேலையை ஸ்ரீ ராஜாஜி ஏற்றுக்கொண்

டார். ஐயரவர்களைப் பின்தொடர்ந்து நானும் சென்றேன். ஸ்ரீ ராஜாஜி ஐயரவர்களை மெல்ல அழைத்துக்கொண்டு சென்றார். அவருடன் காந்தியடிகளின் காரியதரிசியாக இருந்த மகாதேவ தேசாயும் வந்தார். நெடிய உருவம், தேசுடைய முகம், செக்கச் செவேல் என்ற திருமேனி. அவரைக் கண்ட தமிழ்த் தாத்தா, "இவர்கள் யார்?" என்று ராஜாஜியை விசாரித்தார். "இவருக்கு மகாதேவ தேசாய் என்று பெயர். தங்களுக்கு இவர் எப்படியோ அப்படி மகாத்மாவுக்கு மகாதேவ தேசாய்" என்று என்னைச் சுட்டிக் காட்டியபடியே சொன்னார். ராஜாஜியின் வாக்கிலிருந்து வந்த அந்த அமுத மொழியைக் கேட்டு நான் பெருமிதம் அடைந்தேன்; உடல் பூரித்தேன். மகாதேவ தேசாயைப் போன்றவன் என்று சொன்னதற்காக அல்ல; ஐயரவர்களுக்குத் தொண்டன் என்ற கருத்தைச் சொன்னாரே, அதற்காக. ஐயரவர்களுக்கும் இந்த வார்த்தை மகிழ்ச்சியையே தந்தது என்பதை அவருடைய முகக் குறிப்புப் புலப்படுத்தியது.

ஐயரவர்களும் மகாத்மாவும் சந்திக்கப் போகும் காட்சியை நான் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்தேன். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று: இருவரும் சத்திய சோதனை செய்தவர்கள். மகாத்மா தம்முடைய வாழ்க்கையையே சத்திய சோதனையாக்கி, அந்தச் சோதனையில் வரும் அல்லல்களுக்கு மனந் தளராமல் நிமிர்ந்து நின்று வெற்றி பெற்றவர். தமிழ்த் தாத்தாவோ பழந்தமிழ் இலக்கியச் சுவடிகளை ஆராய்ந்து உண்மையைக் கண்டவர். அவருக்கும் எத்தனையோ இன்னல்கள் எதிர்ப்பட்டன. ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணாகி நின்று வெற்றி பெற்றுத் தமிழுலகை வாழ்வித்த பெருமான் அவர். இவ்வாறு உண்மையைச் சோதனை செய்து அறிந்துகொண்ட காந்தித் தாத்தாவும் தமிழ்த் தாத்தாவும் இணையும்போது பாரதத் தாயும் தமிழ்த் தாயும் கூடிக் குலவும் காட்சியாகவே அது இருக்கும் என்று நான் எண்ணியதில் தவறு இல்லையே!

மற்றொன்று; ஆரம்ப காலத்தில் ஐயரவர்களுக்குக் காந்தியடிகளின் பெருமை மிகுதியாகத் தெரியாது. அரசாங்க அதிகாரிகள் காந்தியடிகளைக் குறை கூறினார்கள். அவரால் தேசம் கெட்டுப் போயிற்றென்று சொன்னார்கள். பரம காருண்ணியரான வெள்ளைக்கார அரசினருக்கு ஒப்பே இல்லையென்றும் அவர்கள் இல்லாவிட்டால் நாடு அதோகதியாகிவிடும் என்றும் பேசிக்கொண்டார்கள். இப்படி உள்ள பேர்வழிகள் பலர் ஐயரவர்களைச் சந்திப்பதுண்டு. தம் கருத்தை அவர்கள் ஐயரவர்களிடம் தூவிவிட்டுச் செல்வார்கள். இதனால் காந்தியடிகளின் பெருமையை நன்கு உணரும் வாய்ப்பு அப் பெரியாருக்குக் கிடைக்காமற் போயிற்று.

ஏதோ சொந்தப் புகழை டமாரம் அடித்துக்கொள்வதாக அன்பர்கள் நினைக்கக் கூடாது. ஐயரவர்கள் திருவடியின் கீழ் இருந்து தமிழ் பயிலும் பாக்கியம் எளியேனுக்குக் கிடைத்தது. நான் காந்தியடிகளைத் தெய்வமாகப் பேணுபவன். எப்போதும் கதர் கட்டுபவன். ஐயரவர்களிடம் வந்த புதிதில், அவர்களைக்

காணவரும் கனவான்களில் சிலர் காந்தியடிகளை இழித்துப் பேசு வதைக் கேட்டு என் காதும் நெஞ்சும் புண்ணாயின. ஒருவர் என்னைக் கருணைப் பார்வையுடன் பார்த்து, "அந்தப் பைத்தியக் காரக் காந்தியின் பேச்சைக் கேட்டு இந்தச் சாக்குத் துணியை ஏன் கட்டிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். காந்தியடிகளை இப்படிச் சொல்கிறாரே என்று என் உள்ளம் துடித்தது.

அதுமுதல் தமிழ்ப் பத்திரிகைகளில் உள்ள காந்தியைப் பற்றிய செய்திகளையும் காந்தியடிகளின் உரைகளையும் ஐயரவர்களுக்குப் படித்துக் காட்டத் தொடங்கினேன். காந்தியடிகளின் பெருமையை எனக்குத் தெரிந்த வகையில் உணர்த்தினேன். உண்மையை எளிதில் உணர்ந்துகொள்ளும் தமிழ்ப் பெரியாருடைய உள்ளத்தில் காந்தியடிகளின் உண்மையான உருவம் குடிகொண்டது. இப்போது அவ்விருவரும் சந்திக்கப் போகிறார்கள் என்றால் நான் களிநடம் புரிவதில் வியப்பு ஒன்றும் இல்லையே!

காந்தியடிகளின் திருமுன்னர் வந்துவிட்டோம். அங்கே அமர்ந்திருந்த பெருமானிடம் ராஜாஜி ஐயரவர்களைப்பற்றிச் சொன்னார். உடனே அந்தச் சாந்த மூர்த்தி, "உட்காருங்கள், ஐயா!" என்று தமிழிலே அழுத்தமாகச் சொல்லித் தம் இரண்டு கைகளையும் அமர்த்திக் காட்டினார். வடவிமயத்தின்முன் தமிழ்ப் பொதியில் அமர்ந்தது. ராஜாஜி தமிழ்த் தாத்தாவைப்பற்றி எல்லாம் சொன்னார் அப்போது ஐயரவர்கள், "சில வருஷங்களுக்கு முன் எளியேன் இல்லத்துக்கு வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன், வருவதாகச் சொன்னீர்கள்" என்றார்.

"அதை நிறைவேற்றினேனா?" என்று கேட்டார் காந்தியடிகள்.

"இல்லை."

அதைக் கேட்டுச் சிரித்தார் மகாத்மா. "என்னுடைய வேலை அப்படி ஆகிவிட்டது" என்றார்.

அப்போது ஐயரவர்களுக்கு 83 வயசு; மகாத்மாவுக்கு 68 வயசு. ஐயரவர்கள் நடையில் தளர்ச்சி இருந்ததேயொழியப் பேச்சில் சிறிதும் தளர்ச்சியில்லை. இரண்டு பெரியவர்களும் சிறிது நேரம் பேசிக்கொண்டார்கள், பிறகு மகாநாட்டுக்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

மகாநாடு கூடியது. பாரத நாட்டை அடிமைத் தளையினின்றும் விடுவிக்க அவதரித்த மகாத்மா காந்தியவர்கள் மேடையின்மேல் அமர்ந்திருந்தார். தமிழ்த் தாயைக் கறையான் வாயிலிருந்தும் அறியாமைத் தளையிலிருந்தும் வீடுவிக்க அவதரித்த ஐயரவர்கள் அவர் அருகே அமர்ந்திருந்தார்.

ஐயரவர்கள் தம் வரவேற்புச் சொற்பொழிவைப் படிப்பதற்கு முன் சில சொற்களை வாய்மொழியாகக் கூறிவிட்டு, "தளர்ச்சியினால் இதை முழுவதையும் இங்கே படிக்க முடியாத நிலையில் இருக்கிறேன். இவர் எனக்காகப் படிப்பார்" என்று

எளியேனைப் பணித்தார். அந்த உரையைப் படிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. பிறகு அதன் ஹிந்தி மொழிபெயர்ப்பைப் படித்தார்கள்.

நெடிதுயர்ந்த திருவுருவமும், அறிவொளி ததும்பும் முகமும் உடைய ஐயரவர்களைக் கண்டவுடனே மதிப்புணர்ச்சியோடு வரவேற்ற காந்தியடிகள் இந்தப் பேச்சைக் கேட்டவுடன் வியப்பில் ஆழ்ந்தார். அவர் பேசுகையில், "இந்தப் பெரியவரைப் பார்த்து, இவருடைய சிறந்த உரையைக் கேட்ட பிறகு இவர் அடிநிழலிலிருந்து தமிழ் கற்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு எழுகிறது" என்று சொன்னார். காந்தியடிகள் ஐயரவர்களுடைய தமிழ்ப் புலமையை நன்கு மதித்ததற்கு இந்தத் திருவாக்கே சான்று. தம்மைப்போலச் சத்தியத்தைத் தேடிச் செல்லுவதையே தம் வாழ்க்கையாக உடையவர் அப்பெரியார் என்பதைக் காந்தியடிகள் நன்கு உணர்ந்து கொண்டார்.

கங்கையும் காவிரியும் சேர்ந்தது போலவும், இமயமும் பொதியிலும் இணைந்தது போலவும், பாரதத் தாயும் தமிழ்த் தாயும் கைகோத்துக்கொண்டு காட்சியளித்தது போலவும், வாழ்க்கையில் சத்திய சோதனை செய்த மகாத்மாவும் இலக்கியத்தில் சத்திய சோதனை செய்த மகானும் சந்தித்த சந்திப்பு இருந்தது. அதை இப்போது நினைத்தாலும் உடம்பு புல்லரிக்கிறது. ●

With the best compliments from :

RHAENKO
38-B, MOUNT ROAD,
MADRAS-8.

SCREEN PRINTERS
DISPLAY PRODUCERS
AND
MANUFACTURERS OF
SCREEN PRINTING INKS
FLOURESCENT COLOURS ETC.,

Cover Page of this issue is printed by us.

உலகப் பெரியார் காந்தி

(திரு. சி. என். அண்ணுதுரை)

—o—

"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ணவேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கவேண்டும். மக்களில், உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக்கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்யோன்யமாய் வாழவேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்."

இதுவே, உலக உத்தமர் காந்தியாரின் இலட்சியம். என்று அறிவிக்கிருர் பண்டித நேரு.

விடுதலைப்போர் நடத்தப்படும் காலம். நாட்டின் வரலாற்றிலே சுவையுள்ள பகுதி வீரச்செயல்கள், தியாக நிகழ்ச்சிகள் நிரம்பிய பகுதி. குன்றுகள் கோட்டைகளாகி, வீதிகள் போர் முகாமாகி, வீடுகளெல்லாம் பாசறையாகி, நாட்டு மக்கள் வீரர்களாகும் வேளை அது. அப்போதெல்லாம் அவர்களின் ஒரே நோக்கம், ஒரே லட்சியம், தன்னுட்சி பெறுவது என்பதுதான். தோட்டத்துக்குள்ளே புகுந்து புலியை விரட்டி அடித்துக் கொல்லவேண்டுமென, தோட்டக்காரர் தன் துணைவருடன்கூடி ஆயுதமெடுத்து, புலி தப்பி ஓடாதபடி நாற்புறமும் நல்ல முறையில் காவல் அமைத்து, தீரமாக உள்ளே நுழைந்து புலியுடன் போராடுகிறபோது, எப்படியாவது இந்தப் புலியை அடித்துக் கொன்றுவிட்டால் போதும் என்று ஒரே எண்ணம்தான் தோன்றும். புலி கொல்லப்பட்டதும், "அப்பா! கொன்று விட்டோம் புலியை. இனிப் பயமில்லை" என்ற ஆறுதல் தோன்றும்—ஆயாசமும் ஏற்படக்கூடும். அதுபோலவே பல்வேறு நாடுகளிலே, விடுதலைப்போர் நடந்த காலங்களிலெல்லாம் எப்படியாவது, நம்மை அடிமைப் படுத்திய அன்னிய ஆட்சியை ஒழித்து நாட்டிலே தன்னுட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரே எண்ணம். ஒரே இலட்சியமே தலைசிறந்து விளங்கிற்று. அந்த ஒரே குறிக்கோளுடனேயே, மக்கள் வீரமாகப் பணியாற்றினர்—அவர்களை நடத்திச்சென்ற தலைவர்களும் பல நாடுகளிலே விடுதலை வேட்கையைமட்டுமே, முக்கியமானதாக்கினர். பல நாடுகளிலே, விடுதலை கிட்டியதும், மக்கள், 'தமது நோக்கம் ஈடேறிவிட்டது, அன்னியன் விரட்டப்பட்டான், தாய்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது. சுதந்திரக்கொடி கெம்பீரமாகப் பறக்கிறது. ஆகவே, நமது வேலை முடிந்தது, இனிச் சொந்த வேலையைப் பார்ப்போம் என்று என்று எண்ணி அங்ஙனமே, பழைய

World—wide health care

From Birth to Old Age

ABBOTT LABORATORIES INDIA PRIVATE LTD.

BOMBAY—CALCUTTA—MADRAS

படி "பிரஜைகள்" ஆகிவிடுவதே முறை எனக் கொண்டனர்—புலியைக் கொன்றுன் பிறகு தோட்டத்காரன், தன் வேலே முடிந்தது' என்று எண்ணிவிடுவதுபோலவே, புலி புகுந்ததால் ஏற்பட்ட சேதம், புலியைக் கொல்ல போரிட்டதால் உண்டான சேதம், ஆகியவைகளைப் போக்குவது, வேறு ஏதேனும் துஷ்ட மிருகங்கள் புகாதபடி பாதுகாவல் அமைப்பது போன்ற காரியங்களைக்கூட தோட்டக்காரன் வெற்றிபெற்ற மகிழ்ச்சியால்; கொஞ்சகாலம் பொறுத்துத்தான் செய்ய முற்படுவான். அது போலவே, அடிமைப்பட்டிருந்தபோது ஏற்பட்ட அவதிகளையும் அல்லல்களையும் துடைத்திடும் அரும்பணியை, விடுதலைப் போரில் வெற்றிபெற்ற பல நாடுகள் செய்யாமல் இருந்துவிட்டதுண்டு—காலங்கடந்தபின் செய்யத் தொடங்கியதுண்டு.

அடிமைப்பட்ட பல நாடுகளிலே, சுதந்திரம் வேண்டும் என்பது மட்டுமே பிரச்னை—இங்கோ சுதந்திரமும் வேண்டும், புது சமுதாய அமைப்பும் வேண்டும் என்று கேட்கவேண்டிய நிலைமை இருந்தது. இங்கோ, விடுதலை வேண்டும் என்று போராடத் தொடங்கியபோது, அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும் என்பது மட்டும் முழக்கமாக இல்லை. அந்த ஒரு ஆட்சிமட்டும் தொலைந்தால் போதும் என்ற அளவுடன், தேவையான வேறுபல இலட்சியங்களைக் கொள்ளவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டது. எனவேதான் இங்கு சாதாரணமாக, அடிமைப்படுத்தப்பட்ட மற்ற நாடுகளிலே, அன்னிய ஆட்சி ஒழியவேண்டும் என்ற ஒரே முழக்கம் மட்டும் கிளம்பியது போலல்லாமல்,

அன்னிய ஆட்சி ஒழியவேண்டும்.
மக்களாட்சி மலர்வேண்டும்.
இந்து—முஸ்லிம் ஒற்றுமை வேண்டும்,
தொழில்கள் பெருகவேண்டும்.
கல்வி பரவ வேண்டும்-
ஜாதி பேதம் ஒழிய வேண்டும்.
தீண்டாமை போக வேண்டும்.
கிராமம் சீர்பட வேண்டும்.
வறுமை போக வேண்டும்.
சுரண்டல் முறை ஒழிய வேண்டும்.

என்ற வேறு பல இலட்சிய முழக்கங்கள் கிளம்பின. மற்ற நாடுகளிலே நடைபெற்ற விடுதலைப் போர் நடந்தபோதும், அதற்குப் பிறகும் உள்ள சூழ்நிலைக்கும், இது ஓர் மகத்தான வித்தியாசம்—இதிலேதான், எதிர்காலத்தை உருவாக்கும் சூட்சுமம் இருக்கிறது.

திருமணத்திற்காக வரதட்சணை கேட்கும் எந்த இளைஞனும் தன் கல்வியையும், தாயகத்தையும் தாழ்த்துபவனாகிறான். பெண் குலத்தையே அவமதிப்பவனாகிறான்.

—காந்தி வாக்கு.

பரந்த இலட்சியம் எனவேதான் மறைந்த உத்தமர் அன்னியராகிய வெள்ளையர் நீங்கிய, இந்தியர் அரசாள்கிற, இந்தியாவைக் காண்பதே எனது இலட்சியம் என்று மட்டும் கூறாமல், பண்டிதர் எடுத்துக் காட்டியதுபோல,

ஏழை ஈடேறவேண்டும்.
ஏழை உரிமை பெறவேண்டும்.
ஜாதிபேதம் ஒழியவேண்டும்.
ஒற்றுமை மலரவேண்டும்.

என்று கூறினதுடன், 'இத்தகைய இந்தியா உருவாகவேண்டும், அதுவே என் இலட்சியம், இதற்கே நான் பாடுபடுகிறேன்' என்றும் கூறினர். மற்ற நாடுகளில் நலிவு அன்னிய ஆட்சியின் போது, அதன் விளைவாகவே ஏற்பட்டதால், அந்த நாடுகளிலே தோன்றிய தலைவர்கள், நாட்டின் நலிவை நீக்க அன்னியரை விரட்டினாலே போதும் என்று கருதினர். அவர்கள் அங்ஙனம் கருதினதில் தவறுமில்லை. அதுபோல இங்கு அன்னியர் விரட்டப் பட்டு, நாடு, தன்னாட்சி பெறுவது மட்டுமே போதும் என்று கருதினால், நிச்சயமாகத் தவறு—ஏனெனில் இங்கு, அன்னிய ஆட்சியினால் மட்டுமல்ல அதற்கு முன்பிருந்தே, நமக்கென்று தோன்றிய சில அரசர்களாலும் அவர்கள் அனுஷ்டித்த முறைகளாலும், நமது சமூக அமைப்பினாலும் அதன் பயனாக ஏற்பட்ட பழக்க வழக்கங்களாலும் நமது வாழ்க்கை இலட்சியத்தினாலும் அதை ஒட்டி கட்டிவிடப்பட்ட வெட்டி வேதாந்த முறைகளினாலும், நமது மத அமைப்பினாலும் அதைப் பயன்படுத்திக்கொண்ட தந்நலக்காரரின் போக்கினாலும், பலப்பல கேடுகள் முளைத்துக் காடெனக் கிடந்தன. எனவே அன்னிய ஆட்சி அகன்றால் நாட்டின் நலிவு நீங்கிவிடும் என்ற அளவோடு அடிகள் நிற்கவில்லை—அன்னிய ஆட்சியை நீக்குவதுடன், மக்களாட்சிக்கு, நல்லாட்சிக்குத் தடையாக உள்ள சகல கேடுகளையும் நீக்கியாக வேண்டும் என்று தெளிவாகக் கூறினர்.

நான் காணவிரும்பும் இந்தியா இவ்விதமானது—என்று உரைத்துவிட்டார். உயிர் துறக்கும் நேரம் வரையிலே அதற்காகவே உழைத்தார்—அவர் உயிர் பிரியும்போது, அவருடைய மனக்கண்முன், எத்தகைய இந்தியா தெரிந்திருக்கும்? அவர் காணவிரும்பிய காட்சியா! அல்லவே! அவர் காணவிரும்பிய இந்தியாவில் கோட்சே இருக்க முடியுமா—இருக்க இடமுண்டா? அவர் காணவிரும்பிய இந்தியாவில், சேரிகள் உண்டா? அவர் காணவிரும்பிய இந்தியாவில் ஜாதிபேதக் கொடுமை இருக்குமா? அவர் காணவிரும்பிய இந்தியாவில், ஏழையின் வாழ்வு இருண்டு கிடக்குமா? அவர் அவ்விதமான இந்தியாவை அல்ல, ஏழைக்கு வாழ்வுதரும் இந்தியாவை—எல்லோரும் ஓர் குலம் என்ற இலட்சியத்தைக் கொண்ட இந்தியாவைக்—காண விரும்பினர். அந்த இலட்சிய பூமியை உருவாக்குவதையே பணியென்று கொள்வது தான், அவருடைய காலத்திலே பிறந்தவர்களின் கடமை—அப்போதுதான் எதிர்காலத் தலைமுறைகள், 'உத்தமர் மறைந்தார்—ஆனால்—அவருடைய உள்ளத்திலிருந்த இலட்சியத்தை,

அவர் காலத்தவர், உருவாக்கிக் காட்டினர்' என்று பெருமையுடன் பேசுவர், விடுதலைப்போர், அந்நிய ஆட்சியாளரிடமிருந்து நாட்டை மீட்பது என்ற அளவோடு மட்டும் உள்ளது என்ற முறையிலே அவர் கொள்ளவில்லை—அறிவித்தது அதுவல்ல—ஒரு இலட்சிய பூமியைக் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார். நாட்டை அன்னிய ஆட்சிலிருந்து விடுவிக்கும் விடுதலைப் போர்க் கட்டம், அன்னியப் படை பலத்துக்கு மட்டுமே நாம் பயப்படக் கூடிய நிலையை உண்டாக்கக் கூடியது. விண்ணிலிருந்தும், மண்ணிலிருந்தும், கடலிலிருந்தும் அன்னியர், எதிர்த்து அடிப்பர் விடுதலைப் போரின் மற்றோர் கட்டத்தின்போது, மறைந்தவரின் மனக்கண்முன் தோன்றிய நாடு உருவாவதற்காக நடத்தப்படும் விடுதலைப் போரின்போது, அன்னியரிடமிருந்தல்ல, நம்மவரிடமிருந்தே, விண், மண், கடல் எனும் இடங்களிலிருந்து மட்டுமல்ல, தம் ஒவ்வொருவர் மனதிலேயே இருந்துங்கூட, சந்தேகம், பயம், சஞ்சலம், நம்பிக்கைக் குறைவு, பழக்க வழக்கம் ஏற்படுத்தியதால் உண்டான பற்று பாசம் ஆகிய பல்வேறு எதிரிகள் கிளம்பக்கூடும்—இவைகளை எல்லாம் முறியடிக்கவேண்டும். உலகம், இதை நாம் செய்ய முடியுமா: நமக்கு அந்த ஆற்றல் இருக்கிறதா என்று பார்க்கக் காத்துக்கொண்டிருக்கிறது. நாம் அவருடைய காலத்தவர், அவருடைய கருத்துக்களை அறிந்தவர்கள், என்பதற்கு, நாம் உதிர்த்த கண்ணீர் மட்டும் உலகுக்கு அத்தாட்சியாகிவிடாது. அவர் எத்தகைய இந்தியாவைக் காண விரும்பினாரோ, அதை உருவாக்கும் அரும்பணியை நாங்கள் ஏற்று நடத்துகிறோம் பாரீர் என்று கூறி, வெற்றிகரமாக நடத்துவதுதான் தகுதியான அத்தாட்சியாகும்.

இந்த நாடு—காந்தி நாடு—காண்பதுதான், நமது தலைமுறைக்கு உள்ள வேலை. இதைச் சாதிக்க, அனைவரும் ஒன்றுபட நமது தலைவர்களெல்லாம் கூடிப்பேசி, அனைவரின் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி, இந்த அரும்பணியை வெற்றிகரமாக முடிக்க வேண்டும். நாடெங்கும், நகரெங்கும், இலட்சக்கணக்கிலே கூடினர்—மக்கள்—அவர்கள் மறைந்த உத்தமருக்குத் தமது கண்ணீரை அர்ப்பணித்தனர்.—அவர் காட்டிய வழிச்சென்று திட்டிய சித்திரத்தைக் காண, இனிப் புதியதோர் ஆர்வத்துடன், அனைவரும் ஒன்றுபட்டுப் பணிபுரிய மக்களுக்கு நேர் வழி காட்டுவதும், ஒற்றுமைக்கான திட்டம் தீட்டுவதும், தலைவர்கள் கடமை.

நாம் அரசுரிமை இழந்திருந்தபோது அவர் பிறந்தார். அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்.

காந்தி வாக்கு

சமுதாய அநீதிகளையும் தீமைகளையும் பலாத்கார முறையினால் மாற்றிவிட முடியாது. அன்பு வழியில் போராடினால்தான் அவற்றை நிரந்தரமாக அழித்து, வெற்றி காணமுடியும் என்பது என் கருத்து.

அவர் பிறந்தபோது நமது நாடு, உலகிலே இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. அவர் மறைந்திடுவதற்கு முன்னம், மாஸ்கோவிலிருந்து நியூயார்க் வரையிலே உள்ள சகல நாடுகளிலும் நமது விடுதலையை விளக்கும் விருதுபெற்று, தூதுவர்களும், பிரதிநிதிகளும் வீற்றிருக்கும் நிலை உண்டாக்கிவிட்டது.

அவர் பிறந்தபோது உலக மன்றத்திலே, நமக்கு இடம் கிடையாது. இன்று, நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அவர் பிறந்தபோது, இங்கு தேவைப்படும் எந்தச் சாமானுக்கும், வெளிநாட்டின் தயவை நாடி, ஏங்கிக் கிடந்தோம். இன்று வெளிநாடுகள், நமது சரக்குகளைப் பெற நம்முடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்குத் தமது ராஜதந்திரத்தை உபயோகிக்கும் அளவு மாறுதலைக் காண்கிறோம்.

அவர் பிறந்தபோது, கோயில்கள் மூடிக்கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப்பட்டு வந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண் மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள் எல்லாம் திறந்துவிடப்பட்டன.

குடித்துக் கிடப்பது மிகச் சாதாரணம், சகஜம் என்று யாரும் எண்ணிக்கொண்டிருந்த நாட்கள், அவர் பிறந்த காலம். மதுவிலக்குச் சட்டம் அமல் நடத்தப்படுவதைக் கண்டான பிறகே, அவர் மறைந்தார்.

அவர் பிறந்த காலத்திலே, சூரியனே அஸ்தமிக்க அஞ்சும் படியான அளவுள்ளதாக இருந்தது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். அந்த சாம்ராஜ்யத்தின் ஆதிக்கப் போக்கு அழிந்ததைக் கண்டான பிறகே, அவர் கண்களை மூடினார்.

இவ்வளவையும், அவர் மந்திரக்கோல் கொண்டோ, யாக குண்டத்தருகே நின்றோ சாதிக்கவில்லை—மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார்; புதிய வாழ்வு தந்தார்; புதிய அந்தஸ்து தந்தார்.

இவ்வளவு தந்தவருக்கு, அந்தத் துரோகி தந்தது, மூன்று குண்டுகள், சாக்ரடீசுக்கு விஷம் தந்ததுபோல.

அவர் சாதித்தவைகள் மகத்தானவை: ஆனால் அவர் சாதிக்க எண்ணியிருந்தவை, வேறுபல; அவை மேலும் மகத்தானவை.

நாட்டிலே உள்ள மற்றக் கொடுமைகள் ஜாதிச் சனியன், வறுமை, அறியாமை ஆகியவற்றை அடியோடு களைந்தெறிந்துவிட்டு, உலகினர் கண்டு பின்பற்றத்தக்க முறையிலே, உன்னதமான இலட்சியங்களைக்கொண்ட ஓர் சமுதாயத்தைக் காண விரும்பினார். அதற்காக அரும்பாடுபட்டு வந்தார்: அந்த நேரத்தில், ஆத்திரத்தால் அறிவை இழந்தவனால், அவர் கொலை செய்யப்பட்டார்.

things
go better
with
Coca-Cola

Coca-Cola is the Registered Trademark of
The Coca-Cola Company

CMCC-9-103

முடி தரித்த மன்னர்களெல்லாம் ஆங்கில ஆட்சியின் பிடியிலே கோட்டை கொத்தளம் கட்டிக் காத்தவர்களெல்லாம்—நாட்டை இனி மீட்டிட முடியாது என்றெண்ணி வாட்ட முற்றுக் கிடந்தனர். எப்படியோ ஆட்சி நடக்கட்டும், இதை எதிர்ப்பதோ முடியாத காரியம், இதற்குப் பயபக்தி விசுவாசம் காட்டி ஏதேனும் பலன் பெற்று, காலந்தள்ளுவோம் என்று பலர் எண்ணிவிட்டனர்.

அவர்களிடம் ஆயுதம் இல்லை—ஆட்சியாளர்களோ ஆயுத பலமுள்ளவர்கள்.

அவர்களிடம் நம்பிக்கை இல்லை, ஆட்சியாளர்களிடமோ நம்பிக்கை, ஆணவமாகிவிட்ட நிலை.

இந்த நிலையிலே தோன்றினார், விடுதலைப் போர் தொடுக்க. யார் அந்தச் சமயத்திலே நாட்டை நோக்கினாலும், நம்பிக்கை துளியும் பிறக்காது. இவர் நம்பிக்கையுடன் பணியாற்றினார். நாட்டு மக்களிடம் நம்பிக்கை ஊட்டினார்; அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார்; நானிலத்தின் நன்மதிப்பைப் பரிசாகப் பெற்றார்.

'முடியுமா?' என்ற சந்தேகத்தை அவர் விரட்டினார். நாடு விடுதலை பெறவேண்டுமா, அல்லவா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டார்; ஆம் என்றது அவருடைய தூய்மையான உள்ளம்—உள்ளம் உரைத்ததை ஊராருக்கு அறிவித்தார். ஊரார் சந்தேகமும் பயமும் கொண்டனர். விடுதலை வேண்டும், நாடு மீளவும், கேடு தீரவும், நாம் இனி மனிதராய் வாழவும், கட்டாயமாக விடுதலை வேண்டும்; ஆனால் நம்மால் முடியுமா? என்று கேட்டனர்.

'விடுதலை வேண்டும் என்று மனம் கட்டளையிட்டுவிட்ட பிறகு மறு கேள்வி ஏது?' என்று அவர் கேட்டார்,

"மரண பயமின்றி இக்காரியத்திலே ஈடுபடத் தீர்மானித்து விட்டேன். ஆயுத பலத்தை நம்பி அல்ல, மன உறுதியை நம்பி-நாம் நமது பிறப்புரிமைக்காகப் போராடுகிறோம். இது தர்மம் என்ற பலத்தை நம்பிப் போரைத் தொடுக்கிறேன்' என்றார்; தொடுத்தார். வயலோரத்திலிருந்து வாட்டமுற்ற உழவன் முதற்கொண்டு வசீகர வாழ்விலே இருந்துவந்த சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை வரையிலே, அவர் முகாமில் வந்து குமிந்தனர்.

வேறு நாடுகளிலே விடுதலைப் போர் தொடுத்தவர்கள், இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ, சொந்தத்திலேயோ, வேறு நாட்டின் துணைகொண்டோ, இராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைக் குவிப்பது, மறைந்திருந்து தாக்குவது, சதி செய்வது என்ற பல முறைகளைக் கையாண்டனர். தாய் நாட்டின் விடுதலைக்காக இவையாவும். எனவே, சரியா தவறா என்ற கேள்விக்கும் இடம் இல்லை என்றனர்.



பிரபு பெதிக் லாரென்ஸும் மகாத்மாவும்

உலக வரலாற்றிலேயே முதன் முறையாக இந்தத் திட்டம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, புதியதோர் தத்துவத்தைக் கொண்ட திட்டத்தை, ஆயுதமின்றி, இரகசியமின்றி, வெளிப் படையாக, தூய்மையுடன் விடுதலைப் போர் நடத்தலானர்; அதிலே வெற்றியும் கண்டார்.

அந்த வெற்றி வீரனுக்கு வெறியன் தந்த பரிசு மூன்று குண்டுகள் — அடிமைகளின் விடுதலையைப் பெற்றுத்தந்த ஆபிரகாம் லிங்கன் மீது அங்கோர் வெறியன் குண்டு வீசியது போல.

விடுதலைப்பெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவு கட்டவில்லை. நாட்டை மீட்க வேண்டும் — நல்லாட்சி அமைகக வேண்டும் — மக்களை நல்லவர்களாக்க வேண்டும் — வீரம், திறம், விவேகம் மூன்றையும் விரும்பினர். மக்களை நல்லவர் களாக்க வேண்டும் என்பதே அவருடைய இறுதி இலட்சியம். நல்ல மனிதர்களால்தான் நல்லாட்சி நடத்தமுடியும். நாட்டுக்கு விடுதலையும் கிடைத்து மக்கள் நல்லவர்களாகாமல், கொலைபாத கர்கள், கொள்ளைக்காரர்கள், ஆதிக்க வெறியர்கள், ஆள் விழுங்கி கள், ஆஷாடபூதிகள் ஆகியோரின் ஆதிக்கம் அதிகரித்துபடாதிருந் தால், விடுதலையால் என்ன பலன்? வேடனிமிருந்து மீட்டுவந்த புள்ளிமானை வேங்கையின் முன் துள்ளி விளையாட விடுவதா?

இதை எண்ணிஞல், நாடு விடுதலை பெற்றதும் நல்லாட்சி அமைக்கும் வழிவரை கூறி, அந்தப் பொறுப்பை உடனிருந் தோரிடம் தந்தார்; மக்களை நல்லவர்களாக்கும் நற்பணி புரிய லானர்.

நாட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்கப் பல கலைவாணரையும் மக்களையும் நல்வழிப் படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாகவேண்டும். எந்த நாட்டிலும் அனைவரும் ஏககாலத்தில் கிடைக்கமாட்டார்கள். ஒரு தலை முறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

முழுமையான பிரம்மச்சரியம் அல்லது இல்லற பிரம்மச்சரியத் தின் நோக்கம் உயர்ந்த ஆன்மீக வாழ்க்கையில் உய்ப்பது; அது அத்தகைய வாழ்க்கைக்கு இன்றியமையாதது. கட்டவிழ்த்து விடப் பட்ட காதலும், பாலுணர்வுத் தாகத்தீர்வும் மிகவும் இயற்கை யானவை; அவற்றைத் தடுப்பது தவறு என்று சொல்லப்படுகிறது. இதைவிட அழிவு தரக்கூடிய மூட நம்பிக்கை வேறெதுவும் இருக்க முடியாது. குறிக்கோளை அடைய முடியாமல் போகலாம், உங்கள் உடம்பு பலவீனமானதாக இருக்கலாம், ஆனால் உயர்ந்த இலட்சியத் திலிருந்து விழ வேண்டாம். மற்றசமயத்தை அறச்சமயமாக்கிக் கொள்ள வேண்டாம். திருமணத்தின் நோக்கமே பாலுணர்வின் வேகத்தைத் தணிப்பதுதான்.

— காந்தி வாக்கு.

உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித்தனித் தலைவர்கள் கொள்ளவேண்டிய குணத்தை அவர் கொண்டிருந்தார். உலக வரலாற்றிலே இதற்கு வேறு ஈடு கிடையாது.

விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு. போர்த்திறனால்; நல்லாட்சி நிறுவியவர்கள் உண்டு—அறிவின் மேம்பாட்டினால்; மக்களை நல்லவர்களாக்கினவர்கள் உண்டு — தூய்மையினால். மூன்று அரும்பணிகளையும் ஒருசேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு உத்தமர் காந்தியார் ஒருவருக்கேதான் உண்டு!

இந்து மதத்திலே ஏறிப்போய் ஊறிப்போயிருந்த கேடுகளைத் தமது பரிசுத்த வாழ்க்கையாலும் தூய்மையான உபதேசத்தாலும் புதிய விளக்க உரைகளாலும் நீக்கும் காரியத்தில் ஈடுபடலானார். அன்பு நெறி தழைக்கவேண்டும் என்றார். அவன் இந்த மதம். அவன் அந்த மதம் என்று குரோதம் கொள்ளாதீர் என்றார்; இது பெரியது இன்னொன்று தாழ்ந்தது என்று எண்ணாதீர் என்றார்; தீண்டாமை போகவேண்டும் என்றார்; அமளிக்கிடையே நின்று படுகொலைகள் நடைபெற்ற இடத்திற் கெல்லாம் சென்று இதனைக் கூறிவந்தார்.

மிக மிக எளிய வாழ்க்கையில் இருந்துகொண்டு இன்சொல் பேசி, எந்த முறையையும், ஐதீகத்தையும் ஒரே அடியாக ஒழித்து விடும் புரட்சித் திட்டமும் கூறாமல் மக்களை நல்லவர்களாக்கு மளவுக்குப் பழைய முறைகளிலே உள்ள தூசுதட்டி, மாசு போக்கி, பயனுடைய மனித மேம்பாட்டுக்கு உதவக்கூடிய ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று பாடுபடலானார்—இதற்கு இவரைக் கொலை செய்தான் மாபாவி, எண்ணும்போதே நெஞ்சு பதறுவதுமட்டுமல்ல. இவருடைய இன்சொல் முறைக்கே மதவெறி இவரைப் பலிகேட்டது என்றால், நாட்டிலே தலைகீழ் மாற்றம். செங்கோல் ஜபமாலை இரண்டும் செலுத்தும் ஆதிக்கம் ஆகியவற்றை ஒழிக்க வேண்டுமே!

மக்களை நல்லவர்களாக்கவேண்டுமானால், அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி, ஜாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாகவேண்டும் — என்று பேசிவந்தபோதும் நாட்டை மீட்கவேண்டும் என்று அவர் அன்னியருடன் போரிட்ட போதும் கிளம்பாத பயங்கரச் சக்தியொன்று கிளம்பியது. கோட்சே உருவில், அதுதான் மத ஆதிக்க வெறி! அதனால் கொலையுண்டார்.

தோட்டத்தை மண்மேடாக்கியவனிடமிருந்து மீட்டு அதைப் புன்னகைப் பூந்தோட்டமாக்குவதற்காக, அழகிய மலர்ச்செடிகளுக்கான விதைகளைத் தூவ அங்கு சென்றபோது, புதருக்குள்ளிருந்து பாம்பொன்று வந்து கடித்துக் கொல்லுவதுபோல், நாட்டை மீட்டு, நல்லாட்சி அமைத்து, மக்களை நல்லவர்களாக்கு வதற்காகக் கருத்தை பரப்பும்போது, கோட்சே கிளம்பினான். இந்தப் பழியைத்! துடைத்தாக வேண்டும். பாரெங்கும் பேசுவர் நாட்டை மீட்டுத்தந்த உத்தமனை, உள்நாட்டு மத ஆதிக்க வெறி கொன்றது என்று.

மேட்டினைப் பூந்தோட்டமாக்க விதை கொண்டு வந்த வேளையில் பாம்பொன்றினால் இறந்த தோட்டக்காரனைக் கண்டு புலம்புவதும், பாம்பை அடித்துக் கொல்வதுமட்டுமல்ல, குடும்பத்தாரின் கடமை—இறந்து கிடப்பவரின் கரத்திலே உள்ள விதையை எடுத்துப் பார்த்து விம்மி விம்மி அழுதானபிறகு, இவைகளைத் தூவி இங்கு பூந்தோட்டம் காண விரும்பினார், அவர் மறைந்தார். விதையோ இருக்கிறது. இதோ, இதைத் தூவுவேன், இதோ இருக்கிறது. பூந்தோட்டம் காண்பேன், அந்த உருவில் அவரைக் காண்பேன், அந்த மணத்திலே அவர் பெருமை தெரியக் கண்டு மகிழ்வேன். அவர் செய்து வந்த பணியை, நான் மேற்கொள்வேன் என்றுகூறி அதை நடைமுறையில் ஆற்றலேயாகும். மறைந்த உத்தமர், மத ஆதிக்க வெறியால் கொல்லப்பட்டார். அந்தக் கொடும் பாம்பை, ஒழித்தாக வேண்டும். அவர், அனைவரும் ஒன்று எனும் அன்பு மார்க்கக் கருத்தை தூவிவந்தார். அதை நாம் செய்து முடிப்போம் என்பதே நமது உறுதியாக இருக்கவேண்டும்.

புத்தர் காலத்திலே நடந்தேறியதுபோல புதிய வழியைக் கொள்வோம் என்ற உறுதிக்கொண்டு உழைப்பதே, நாம் அந்த உத்தமருக்கு எழுப்பக்கூடிய நிலையான ஞாபகச் சின்னம்.

'உலகப் பெரியார் காந்தி' என்ற நூலிலிருந்து—

—நன்றி : திராவிடப் பண்ணை, திருச்சி.

With the best compliments of

GANESH PACKAGING INDUSTRIES

Manufacturers

"GANESH" Corrugated Paper Rolls, Sheets, and Fibreboard containers and Printed Cardboard Cartons

HEAD OFFICE

C-514 Defence Colony
NEW DELHI-3.

Branch Office and Factory
I-4 Industrial Estate,
DINDIGUL-3
Tamil Nadu.

Factory at
Sector 6 90, Industrial Estate,
FARIDABAD
Haryana.

Sole Proprietor :

Shri R. VENKATESA IYENGAR

சர்வோதயம்

பேராசிரியர் கே. சுவாமிநாதன்

—o—

சர்வோதயம் என்ற சொல்லின் வரலாற்றிலிருந்தே அதன் பொருளின் ஆழத்தையும் விரிவையும் காணலாம். பரமார்த்த ராஜ்யத்தை வர்ணிக்கும் பொருட்டு ஏசுநாதர் அருளிய சிறுகதையொன்றில் "unto this last" என்ற தொடர் வருகிறது. தோட்டத்தில் காலை முதல் மாலை வரை உழைத்தவனுக்கும், பிற்பகல் வந்து சேர்ந்து சற்றுநேரம் கையசைத்தவனுக்கும் ஒரே கூலியைக் கொடுக்கிறான் எஜமான். நாள் முழுவதும் வெயிலில் வாடி வருந்தியவன் "இது என்ன நியாயம்?" என்று கேட்க எஜமான் "முதல்வனுக்கு உள்ள கூலியே கடையவனுக்கும் உண்டு" என்று விடை கூறுகிறான். அன்பும் அருளும் அளவுக் கடங்குமோ?

"Unto this Last" என்ற இதே தலைப்புடன் ரஸ்கின் இயற்றியுள்ள நூலிலே, ஏசுநாதர் அருளிய பரமார்த்த ராஜ்யம் இம்மையிலேயே கைகூட வேண்டுமானால், மக்கள்: அன்பின் ஆற்றலையறிந்து உழைத்தால்போதும்,என்று வற்புறுத்தியிருக்கிறார். இந்த நூலைப் படித்ததும் காந்திஜி பரவசமாகி, அன்பு, அறிவு, உழைப்பு இம் மூன்றின் சக்தியை உடனடியாகச் செயல்படுத்தித் தென்னாப்பிரிக்காவில் வசித்த போது சோதிக்கவேண்டி, பீனிக்ஸ் ஆசிரமத்தை நிறுவினார். பிறகு, 1908-ஆம் ஆண்டில் இந்த நூலை குஜராத்தி மொழியிலே சுருக்கி எழுதும்போது ஏசுநாதர் உபதேசித்த உண்மையை உணர்த்துவதற்கு "அந்த்யோதயம்" என்றால் போதாது என்று நினைத்து "அனைவரும் உயர்தல்" என்ற பொருள்பட "சர்வோதயம்" என்ற சொல்லைப் பயன்படுத்தினார். "எல்லா உயிரும் ஒன்றே என்ற அறிவுதான் மக்கள் சமுதாயத்தை ஒன்றாய்ப் பிணைத்து வளரச் செய்யும் சக்தியாகும். இந்தச் சக்தியை இப்போது நாம் தினசரி வாழ்க்கையிலும், உறவு, நட்பு இரண்டிலும் உணர்கிறோம். இதைப் பரப்பி, அரசியல், பொருளாதாரம் முதலிய பொதுத்துறைகளிலும் பிரயோகித்து,இந்த மகத்தான முயற்சியின் மூலம் சத்திய-சோதனை நடத்தி, அன்புக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பை செயலாலும் சொல்லாலும் காந்திஜி விளக்கிக் காட்டியிருக்கிறார்.

காந்தி கசடறக் கற்று அதன்பின் அதற்குத்தக நிற்க முயன்றது வைஷ்ணவ சித்தாந்தமே, எனவே, அவரால் சமயத்தையும் உலகியலையும் பிரித்து வைக்க முடியவில்லை. தமது அரசியல் குருவாகிய கோகலே "தமது பொதுவாழ்க்கையை ஆன்மீகமயமாக்கவேண்டும்"

சிந்தனைச் சிற்பி ரோமன் ரோலந்தும் மகாத்மாவும்

என்றதை காந்திஜி மகாவாக்யமாகக் கருதி, அந்த ஒரு முயற்சியிலேயே தமது எண்ணம், உழைப்பு முழுவதையும் செலுத்தினார்.

1918-ஆம் ஆண்டு ஆமதாபாத்தில் ஆலைத்தொழிலாளர் போராட்டத்தை ஒரு சத்திய-சோதனையாக நடத்திக் காட்டினார். தொழிலாளர் ஒரு சமயம் மனமுடைந்து தங்கள் பிரதிக்ஞையை மீறி வேலைக்குத் திரும்பிப்போக எண்ணியபோது, அவர்கள் நெஞ்சில் உரம் ஏற்றி அவர்களுடைய வாக்கை உறுதிப்படுத்தவேண்டி உண்ணாவிரதம் மேற்கொண்டார். இந்த விரதத்தை விளக்கும் முறையிலே அவர் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்திலே சொன்னார்: "நமது ஹிந்து தர்மம் மிகவும் உயர்ந்தது; பேரறிஞர் போற்றுவது; அறிவதற்கெளியது; அனைவராலும் பின்பற்றக் கூடியது. இந்த தர்மத்தின் நுட்பம் லோகமான்ய திலகருக்கும் மதன்மோகன் மாளவியாவுக்கும் நன்றாய்த் தெரியும். ஆயினும் அதைப் பொது மக்களுக்கு எடுத்துக் காட்டிச் செயல்படுத்த அவர்களால் இயலவில்லை. இது என்னால் முடியும் என்று துணிந்தே நான் பல ஆண்டுகளாக என் வாழ்க்கையை நடத்திவருகிறேன். நடைமுறையில் செயல்படாத உண்மையை அறிந்து சற்றும் பயனில்லை. அந்த உண்மையானது யாது என்றால் நாம் செய்த சங்கல்பத்தை, நாம் கொடுத்த வாக்கை, உயிர் போனாலும் கைவிடாது கடைப் பிடிக்கவேண்டும் என்பதே" சத்திய வாக்யம், திடவிரதம்- இதுதானே ராமாயண ஸாரம்!

நாட்டுப் பிரிவினையின் விளைவாக இந்தியா பாகிஸ்தானுக்குச் செலுத்த வேண்டிய ரொக்க பாக்கித் தொகை 55 கோடி ரூபாயை இந்தியா, காஷ்மீர் விவகாரம் குறுக்கிட்டதால் 1948 ஜனவரியில் கொடுத்துத் தீர்க்கத் தயங்கியபோது, "என்ன தான் நேர்ந்தாலும் சொன்ன சொல் தவறாது நிறைவேற்றத்தான் வேண்டும்" என்று இந்திய சர்க்காரை காந்திஜி வற்புறுத்தியது ராமாயண ஸாரத்தை உலகத்திற்குப் புகட்டவே". என்று ராஜாஜி வியாக்யானம் செய்துள்ளார்.

ராம நாம மகிமையை நன்கு உணர்ந்து நாடெங்கும் பரப்பினார். "ஈச்வர் - அல்லா"வை நோக்கி "ஸப்கோ ஸன்மதி" என்று மன்றாடினார். தர்ம மூர்த்தியிடம் பக்தி செலுத்தி தர்மத்தின் சக்தியை 'கர்மத்திலே பிரயோகித்து, அர்த்தம் வேறு பரமார்த்தம் வேறு, தனிநலம்

Best

Compliments

From

A WELL WISHER


अगला बच्चा
अभी नहीं
तीन के बाद
कभी नहीं
davp 69/267

வேறு பொதுநலம் வேறு, இம்மை வேறு மறுமை வேறு என்ற மயக்கத்தை மாய்த்தார்.

Limmer, Thomas Merton போன்ற மேனாட்டறிஞர்கள், காந்திஜியாற்றிய கர்மயோகத்தின் பயனை இந்துமதம் மட்டுமன்றி எல்லா சமயங்களிலும் ஆன்மீக சக்தி ஆற்றுப்பெருக்காய் உலகூட்டப் பாய்கிறது, என்று கூறுகிறார்கள்.

இந்து தர்மத்தை சனாதனம் என்பதின் பொருள் என்ன? அது நீர் நிற்கும் கிணறு அன்று குட்டையன்று. மலையிலே தோன்றிக் கடல்நோக்கிப் பாயும் ஜீவநதியாகும். ஆற்றிலே இருமுறை மூழ்கினால் குளித்த நீரிலே குளிப்பதில்லையே!

அன்பிலே விளையும் கர்மம் விரைந்து மாறத்தான் செய்யும். புரண்டோடும் பிரவாகத்தை அடக்கியாண்டு, நதியை நதியாய் வைத்துக் காக்க இரு கரைகள் எப்படித் தேவையோ, அப்படியே அன்பும் அறிவும் – அதாவது பக்தியும் ஞானமும்-காலப்போக்கில் மாறும் கர்மத்தைத் தூய்மையாக்கி முன் செலுத்த உதவுகின்றன.

"எண்ணுருயாவும் இறையுருவாமென எண்ணி வழிபடல் ஈசன் நற்பூசனை" என்ற வாக்கின்படி, தரித்திர நாராயணனுக்கு அன்பு செலுத்தி, அவன் "பாதாரவிந்தம் தலையாற் பணிவோமாய்" அவனுக்கே தூய்தாய் தொண்டுபட்டு. அவன் தோழமைக்கே பாங்காகி, அவனோடு ஒன்றிவிட்டால்; நாம் அன்புக் கரையில் இறங்கி, செய்கை வெள்ளத்தில் நீந்தி. ஞானக்கரையேறி இம்மையிலேயே பரகதி பெறுவோமே! அன்பு, அறிவு-இரண்டிற்கும் இடையே உழைப்பு- இம் மூன்றையும் தெளிவாய்த் தெரிந்து, துணிவுடன் செயல் வெள்ளத்தில் இறங்கினால் கரையேறுவது திண்ணம்.

"ஞானிக்கோர் செயலில்லை" என்பது குணாதீத, தர்மாதீத நிலையிலே நிற்கும் மௌனிக்குத்தான் பொருந்தும். தாமசத்தை சாத்விகம் என்று எண்ணிக் கொண்டு, அருகிலுள்ள அநீதியழுக்கைக் காணாமற் கண்மூடி, கேளாமற் காதைப் பொத்தி, மௌனம் சாதித்து, சுயகார்யத்தில் மட்டும் புலியாய்ப் பாய்ந்து வேலை செய்தால் நமக்குக் கதி பிறக்காது; சமூகம் முன்னேறாது.

மாணவர்களுக்கு

மாணவர்கள் பள்ளிகளில் எதைப் படிக்கிறார்கள், எதைப் படிக்கவில்லை என்று நான் கவலைப்படவில்லை. ஆனால் ஒரு நிபந்தனை; அசாதாரண சூழ்நிலையில்கூட அச்சமின்றி உண்மையைப் பின்பற்றுபவனே சிறந்த மாணவன்; உண்மையைப் பின்பற்றுபவனே ஆண்மை பெறுகிறான்.

மனம், உடல், செயல் ஆகிய மூன்று நிலைகளிலும் தூய்மையைக் கடைப்பிடிக்கும் மாணவனே பிறருக்குத் தொண்டு செய்யும் தகுதி பெறுகிறான். இம்மூன்று தூய குணங்களும் ஒரு மாணவன் வாழ்க்கையில் அமையுமானால் அவன் வாழ்க்கை வெற்றி பெறுவது திண்ணம்.

— காந்திஜி

பரம ஞானி சூரியனைப்போல் எல்லோருக்கும் பொதுவாய் ஒளி வீசி நிற்கிறான். ஆனால் வெயிலின் வெப்பத்தால் சமையல் ஆகாது. வீட்டுக்கு வீடு தீ மூட்டித்தான் ஆக வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நாட்டிலும் செயலாகிய எரிபொருளை வைத்து அறத்தீ வளர்க்கத்தான் வேண்டும். ஞானபானுவை வணங்கி விட்டு ஸ்வதர்மத் தீயை வளர்த்ததால் அன்றோ காந்திஜி நாட்டு விடுதலை, தீண்டாமையொழிப்பு ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை முதலிய மகத்தான சாதனைகளை சிறப்பாகச் செய்தார்.

காந்திஜியின் சர்வோதய மனப்பான்மையையும், அதிதீவிர முமுக்ஷுத்வத்தையும் ஒருபுறம் தள்ளிவிட்டு, மனவியல் நிபுணரும் அரசியல் நிபுணரும் அவரது சத்தியாக்கிரக இயக்கங்களை அலசிப்பார்க்கும் போது pre-scientific, அதாவது விஞ்ஞான முறையில் கண்டு பிடித்துக் கையாளப்படவில்லை, என்று குறை கூறுகிறார்கள். இதற்குச்சமாதானம் வினோபா சொல்லுகிறார்: "சத்ய-யுகம் இறந்த காலத்தில் இருந்ததென்று புராணவாதிகள் கூற, சத்ய-யுகம் ஐந்தாறு ஐந்தாண்டுத்திட்டங்களுக்குப் பின் தோன்றும் என்று எதிர்காலவாதிகள் கூற, காந்திஜி சத்ய-யுக வாதம் செய்ய மறுத்து சத்ய-யுக காரியாக, சத்ய-யுகம் இன்றே உள்ளது, இங்கே உள்ளது, என்னுள் உள்ளது, என்னைப் பொறுத்த மட்டில் சத்ய-யுகம் சித்தித்து விட்டதாகவே நம்பிச் செயலாற்றுவேன்' என்று சொல்லாமற் சொல்லி வாழ்ந்து சமுதாய வளர்ச்சிக்காக சர்வோதய நோக்கையும், அவ்வப்போது தோன்றும் தீமைகளைப்போக்க சத்தியாக்கிரக முறையையும் நமக்குத் தந்திருக்கிறார்."

அறத்தைக் காத்து அறிவை பெறுவதற்கான எளிய முறைகள் சிலவற்றையும் காந்திஜி கற்பித்துள்ளார். ஒன்று - கட்டுப்பாடு, தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொள்வதில் ஈவு இரக்கமற்றவர்: இரண்டாவது வெளிப்படை வாழ்வு - தமக்கு

Grams: "Mursoks" Phone { Fac: 51388 / Offi: 53358

White Horse Bar Soap

A SUPERFINE SOAP FOR SILK AND LINENS WASHES WHITE AND BRIGHT

WHITE HORSE SOAP

వైట్‌హార్స్ సాబూను

Manufactured by

D. BANGARU CHETTY

NATIONAL INDUSTRIES

220, T.H. ROAD, MADRAS-21.

மேல் கேள்வி முறையிட்டுக் காகப் பிறரை எற்றுக்கொண்டு சங்கல்பத்தையும் செயலையும் பகிரங்கப்படுத்தி வந்தார்.

இங்கிலாந்தில் மது, மங்கை மாமிசம் முதலியவற்றை தொடுவதில்லை என்று தாயாருக்கு உறுதி தந்துவிட்டுப் போய், நடந்ததை நடந்தவாறு தமையனுக்கு எழுத வேண்டியிருந்ததே தம்மைக் காப்பாற்றிற்று, என்கிருர் காந்திஜி.

கணக்கு வைத்துக்கொள்வதே நம்மை டிரஸ்டிகள் அல்லது பொறுப்பாளிகள் ஆக்கி நமது நேர்மையைக் காக்கும் என்கிருர். எந்தப் பொது வேலைக்காகப் பணம் வசூலித்தாலும் வரவு செலவு விவரங்களைத் தெளிவாய், திருத்தமாய் தமது பத்திரிகைகளில் அச்சிட்டு வெளிப்படுத்துவார். திட்டமிட்டுக் கட்டுப்படுத்திய தூய வாழ்க்கையை ஒளிவு மறைவின்றி பகிரங்கமாய் நடத்தி கணக்கும் ஒப்புவிக்க ஆயத்தமாயிருந்தால் செயலின் மூலம் அறிவு பெறலாம் என்பது அவர் கண்ட உண்மை.

சத்தியாக்கிரகத்தின் அடிப்படைத் தத்துவத்தை இக்கால மனவியல் முறையில் விளக்கினாலும், நமது சம்பிரதாய முறையில் விளக்கினாலும் முடிவு ஒன்றேதான். "பகைவனுக் கருள்வாய்", என்று சொன்னதும் அறிவில்லாதவன் 'முடியவே முடியாது' என்பான். ஆனால் அறிவாளி எதிரியின் நிலையில் தன்னை வைத்துப் பார்த்து, அவன் உள்ளத்துள் புகுந்து, தனது மனத்தெளிவால் அவனுக்கும் மனத் துணிவு தந்து, தான் மாறுவதால் அவனையும் மாற்றி, எதிரியை நண்பனுகப் பயன்படுத்திக் கொள்வான். சூழ்நிலை முழுவதையும் நோக்கினால், வலது கையும் இடது கையும், மேற்பல்லும் கீழ்ப்பல்லும், எதிர்ப்பினுலேயே ஒத்துழைக்கவில்லையா?

தில்லை நடராஜனின் தவிப்பு!

தில்லையில்வாழ் கூத்தனைநான் கண்டு ஐயா
சிர்தாழு எனவினவச் சிரித்துச் சொல்வான்
கல்லாலும், வில்லாலும், பிரம்பினாலும்,
கால்செருப்பு தன்னாலும், கண்ட பேர்கள்
சொல்லாலும், எனையடித்து விடுத்தாராஞல்
சுற்றிலுமே, சுவர்எழுப்பி துணையை நீக்கி
'இல்லென்றே,' ஓர்காலில் நிற்க விட்டால்
நீங்காத துயரன்றி சுகம்தான் ஏது!

— 'வண்ணைமுத்து'

மனவியல் அறிஞர் Erikson இந்த பரந்த அறிவை, "Gandhiji established a larger identity which included his opponent" என்றும், "He gave his opponent the courage to change" என்றும் வியந்து கூறுகிறார்.

எதிரிக்கு நாம் பயப்பட வேண்டாம். அவனை நாம் பயமுறுத்தவும் வேண்டாம். ராமனை நினைத்தால், இருவர் பயமும் தீரும். என்னுள் எப்படியோ அப்படியே எதிரியினுள்ளும் ஒரு ராமனும் ஒரு ராவணனும் இருக்கின்றனர். உண்மையான அறப்போர் தொடங்கினால், இருவருள்ளும் இருக்கும் ராமனை ஒன்று சேர்த்து, அவன் சக்தியால் என்னுள் இருக்கும் ராவணனை மாய்த்து நான் தூய்மையடைய, அறிவின் மூலம் தீமை அகலும்.

உயிர்களிடையே தோன்றும் தீமைகளுக்கெல்லாம் மூல காரணம் பயம். பயப்படாமல், பயமுறுத்தாமல், நமக்கும் எதிரிக்கும் இடையே நிற்கும் பயத்தை அழித்தால் தீமை, தானே மறையும். பயம் நீங்கினால் அனைவருக்கும் ஸன்மதி தானே அமையும். உலகெலாம் அமைதி நிலவும்.

தானந் தழைத்திடுமே தன்மஞ் செழித்திடுமே
ஞானம் பழுத்திடுமே ஞாலமெலாம்—ஊனமிலாச்
சாந்தியுப தேசித்த சன்மார்க்க சற்குருவாம்
காந்திநன் னெறி நடக்குங்கால். —(முருகனார்)

—o—

காந்தி வாக்கு

ஜனநாயகத்தைப் பேணும் ஒவ்வொருவனும் ஒழுக்க சிலன் என்பதே என் கருத்து. மனிதன் இயற்றிய சட்டங்களுக்கும் தெய்வ நெறிக்கும் கட்டுப்பட்டு செயலாற்றும் திறன் ஒழுக்க சிலனுக்கு உண்டு.

தன்னுடைய உரிமைகளை இழக்காமல் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பு அளித்து சமுதாய மேம்பாட்டுக்கு உழைப்பவனே ஜனநாயகவாதி, சமுதாயத்திற்கு அடங்காமல் தன்னுரிமை பேணுவது சிறப்பல்ல. சமுதாய நலனுக்காக, தியாகம் செய்து, தானும் உயர்வடைந்து, சமுதாயமும் மேம்பாடு அடையச் செய்வதே சிறந்த உழைப்பு. தன்னுடைய சுதந்திரத்தைப் பற்றிச் சிந்திக்கும் ஒருவன், தன்னை சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வுடன் செயலாற்றினால், தனி நபரும் சமுதாயமும் மேம்பாடு அடையும்.

—ஹரிஜன் 27-5-1939.

காந்தி மகான்

(அ. வே. கிருஷ்ணமூர்த்தி)

—o—

"செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம் செய்தால்
எய்த விரும்பியதை யெய்தலாம் - வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்த லியல்பு"

—மகாகவி சி. சுப்பிரமணிய பாரதி.

மரத்திற்கு மண்ணும் நீரும்போல், மனித வாழ்க்கைக்கு வாய்மையும் நேர்மையும் அவசியமானவை. 'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' என்ற குறளை மெய்ப்பித்தது காந்திமகானின் வாழ்க்கை "உண்மையே பேசு" "அறவழி நட" என்ற உபநிடத உபதேசத்திற்கிணங்க மானிட வாழ்க்கையில் வெற்றி கண்ட பெருமை அன்று ஸ்ரீராமபிரானையும், இன்று காந்தியடிகளையும் சாரும். தம் வாழ்க்கையையே "சத்திய சோதனை"யாக்கியது மட்டுமின்றி, அதைச் சத்தியத்தின் சாதனையாக்கிய சித்தர் காந்தி அண்ணல் 'தேசப்பிதா' என்று பாரதமக்கள் அன்போடு போற்றிப் பணியும் புகழ் எய்தினார் அவர்.

சத்தியவாதி, சாந்தப்பிரேமி, தர்மசாரி, கர்மயோகி, விருப்பு வெறுப்பின்றி வினைகள் திருத்திய தியாகி, பிறர் நலம்வேண்டிப் பிறர் துயராற்றப் பிறந்த புண்ணிய மூர்த்தி, தெய்வ ஒளியால் காந்தி பெற்ற தவ வாழ்க்கை காந்திமகானுடையது. தியாகமே உருவாய், மக்கள் நலமே உணர்வாய், பரந்த அன்பே உடலாய், சத்திய விரதமே உயிராய் வாழ்ந்த மகாத்மாவின் அறிவும் ஆற்றலும், உழைப்பும், ஊக்கமும், எண்ணமும், எழுத்தும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. உலகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றிற்கும் ஆராய்ச்சிக் கருவூலமாக அமைந்தவை அவை.

மகாத்மாவின் மகத்தான சாதனைகள், அவரைப் பின்பற்றிய ஒவ்வொருவருடைய தன்னலமற்ற தியாகத்தினுலும், சேவை

யினுலும் திகழ்ந்ததே. ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒவ்வொரு காந்தியைத் தலைவராக அளித்தார். மக்கள் மனத்தில் மறையா இடம் பெற்று மகாத்மாவானுர். தேசத்தின் அடிமைத்தளை நீக்கி நாட்டிற்குச் சுதந்திர காந்தியளித்ததுக் காந்தி'யானுர். மோகனப் புன்னகையாலும், அதன் பிறப்பிடமாகிய தமது அன்பு உள்ளத்தாலும், மாற்றுரையும் குழந்தை மனமுடையோராகச் செய்து 'மோகனதாஸ்' ஆனுர். அனுசக்தியோகத்தில், எண்ணத்திலும். சொல்லிலும், செயலிலும், தியாகப் பணியாற்றிச் சந்திரன் போல் பொதுநலத் தண்ணெளி வீசிக் 'கரம் சந்' தானுர். பா (அன்னை கஸ்தூரிபா)வின் புருஷரானதால் 'பா பு' ஆ னு ர். ஹரிஜனங்களின் பந்துவானதால் 'அரிசன்பந்து' வானுர்.

இராம நாமத்திலே காந்திமகான் அசையா நம்பிக்கை கொண்டவர். "நற்றவா, உனை நான் மறக்கிலும், சொல்லும் நா நமச்சிவாயவே' என்ற அருள்மொழியின் உண்மையை நிலை நாட்டியவர் அவர். குண்டுபட்டுக் கீழே விழுந்தபொழுதிலும் கொன்றவன் உருவிலும் ராமனைக் கண்டு 'ஹே ராம்' என்று உரைத்திட்ட உத்தம இராமபக்தர். அஹிம்சையைப் பின்பற்றிப் பயனுற்றதால் 'அஹிம்சாவாதியானுர். சத்தியாக்கிரகத்தின் இலக்கணத்தை வகுத்த முதல் 'சத்தியாக்கிரகி'யானுர். உழைப் பிற்கும், ஏழைகளின் முன்னேற்றத்திற்கும் இராட்டையை அளித்தவராதலால் 'சர்க்கா தாதா' ஆனுர். ஏழைப்பங்காளரானதால் 'தீனபந்து' வானுர். குழந்தைகளின் அன்பழைப்பில் 'காந்தித் தாத்தா'வானுர்.

துன்பத்தில் மனம் தளராமலும். இன்பத்தில் திளைக்காமலும், விருப்பு, வெறுப்பு, பயம், கோபதாபமின்றி நிச்சய புத்தியுடன் விளங்கிய மோனமுனிவர் காந்திமகான். சத்தியவிரதம் சாதித்தார். சமரச வாழ்க்கையைப் போதித்தார். அன்பின் பெருமையை எடுத்துரைத்தார். துன்பம் யாவையும் சகித்தார்.

திருமணத்திற்காக மணமக்கள் மதம் மாறுவதை அன்றும் சரி, இன்றும் சரி கடுமையாக எதிர்க்கிறேன். விருப்பத்திற்கேற்றபடி மாற்றிக்கொள்ள ஆடை அணிகலன்களைப் போன்றதல்ல சமயம்.

—காந்தி வாக்கு.

தூய நன்னடத்தையினை வகித்தார். ஜாதி மத வேற்றுமைகளின் வேரைக் களைந்தெறிந்தார். நாட்டோர் அனைவரின் சமத்துவத்தை நிலைநாட்டினார். நீதியும் அறங்களும் நிலைத்திட நீடு உழைத்தார். நாட்டின் விடுதலைக்காக நித்தியமும் தவம் செய்தார்.

உலகத்துக்கே உயர்ந்த வழிகாட்டியாகத் திகழும் காந்தியடிகளின் போதனையை உலகமக்கள் பின்பற்றினால் உலகம் முழுதுமே ஒரு குடும்பமாக வாழும் என்பதில் சந்தேகமில்லை.

"சத்தியம் வெல்லுமென்றால் தவமது பலிக்குமானால்
உத்தமன் கடவுளென்ற ஒருபொருள் உண்மையானால்
இத்துறை எங்கள் காந்தி இடருறா வண்ணங்காத்து
வைத்திடவேண்டும் இந்த வையகம் வாழ்த்தும் என்றும்"

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

ரிஜிஸ்டர்டு நெ. 111866

ஸ்வஸ்திக்

வேதாரண்யம் புகையிலை

தயாரிப்பாளர்கள் :-

ஸ்வஸ்திக் புகையிலை தொழிற்சாலை, வேதாரண்யம்.

சேல்ஸ் டெப்போ :-

559, பூந்தமல்லி ஹைரோடு. சென்னை—3.

டில்லி ஸ்டாக்கிஸ்ட் :-

ஜி. டி. ஈரண்ணா, மைசூர் ஸ்டோர்,

20, நியூ முனிசிபல் மார்க்கெட், நியூ டெல்லி—1.

காந்தியடிகளும் தமிழ்நாடும்

"நஜன்"

—o—

காந்தியடிகளுக்கும் தமிழ்நாட்டிற்கும் நீண்ட காலமாகவே நெருங்கியத் தொடர்புண்டு. தமிழர்களையும் தமிழ்நாட்டையும் அவர் நன்கறிந்திருந்தார். தமிழர்களுடன் நெருங்கி உறவாட அவர்கள் மொழியைக் கற்கவேண்டும் என்று தமிழையும் சிறிது கற்றார். தமிழ்நாடும் அவர் இழித்தக் கோட்டை என்றுமே தாண்டியதில்லை.

அமெரிக்க எழுத்தாளரான ஜான் கந்தர் காந்தியடிகளைக் குறித்து எழுதும்போது, "ஒரே மனிதர் மகாத்மாவாகவும் அவதார புருஷராகவும் உலகறிந்த ராஜதந்திரியாகவும் இருப்பது மானிட விதிகளை மீறியது" என்று குறிப்பிட்டிருக்கிறார். தெய்வீக அம்சம் கொண்ட மேதைகளான வள்ளுவரையும் ஆழ்வார், நாயன்மார்களையும், சங்கர இராமானுஜ, மத்வர்களையும் கண்டிருக்கும் தமிழ் நாட்டிற்கு, ஜான் கந்தருக்கு ஏற்பட்டுள்ள ஐயம் ஏற்படக் காரணமில்லை. அந்த மேதைகள் போன்று காந்தியடிகளை, ஓர் அற்புத மேதையாகத் தரிசித்திருக்கிறது தமிழ்நாடு.

தமிழ் நாட்டில் திருவள்ளுவர், மெய்ப்பொருள் நாயனார் போன்ற மகான்கள் சத்தியத்தையும், அஹிம்சையையும் வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டியிருந்த போதிலும், அந்நியர் ஆட்சியை எதிர்த்துக் காந்தியடிகள் நடத்திய அஹிம்சைப் போராட்டம் உலகத்திலேயே முற்றிலும் புதிது.

பகுத்தறிவைக் கொண்டு பார்த்தவர்களுக்கு "இந்த முறையா, உலகிலேயே மிக வல்லமை கொண்ட அதிகார வர்க்கத்தை அசைத்துவிடப் போகிறது?" என்று தோன்றியபோதிலும், காந்தியடிகள் ஒரு விஞ்ஞானிபோலவே அஹிம்சை நெறியில் சத்தியச் சோதனைகளை தம் வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் செய்து பார்த்தார் என்பதில் ஐயப்பாடு இல்லை. இத்தகைய சோதனைகளுக்கே காந்தியடிகளின் வாழ்க்கை முழுவதும் செலவிடப்பட்டது.

தமிழ்க் காதல்

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருக்கும்போதே தமிழர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றார். கூலியாட்களாகவும், தொழிலாளர்களாகவும் அங்கேயிருந்த தமிழர் பலர் தம்முடன் சேர்ந்து அஹிம்சைப் போராட்டம் நடத்தியதைக்

காந்தியடிகள் பெரிதும் பாராட்டியிருக்கிறார். அவர்களைத் "தமிழ் வீரர்கள்" என்றே மதித்திருக்கிறார். அந்தத் தமிழர்கள் மீதுள்ள அன்பு தமிழ்க் காதலாகவும் தமிழ் மொழிக் காதலாகவும் மகாத்மாவின் உள்ளத்தில் தழைத்தன. இதுகுறித்துக் காந்தியடிகளே, "மாடர்ன் ரிவ்யூ" என்கிற கல்கத்தா ஆங்கில மாதாந்திர ஏட்டில் பின்வருமாறு தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார் :—

"இந்த டிரான்ஸ்வால் கிளர்ச்சியில் தமிழர்கள் செய்த தொண்டுபோல வேறு எந்த இந்திய ஜாதியினரும் செய்யவில்லை. ஆதலால் வேறு காரணம் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு என் திருப்தியை உணர்த்துவதற்காகவாவது நான் அவர்களுடைய புத்தகங்களை ஊன்றிப் படிக்கவேண்டும். சென்ற மாதம் அவர்கள் மொழியைக் கற்க ஆரம்பித்திருக்கிறேன். அதைப் படிக்கப் படிக்க அம்மொழியிலுள்ள அழகு அதிகமாகத் தெரிகிறது. தமிழ் மிக நேர்த்தியான மொழி. அமுதம் போன்றது.

"தமிழர்களிலே முன்னாளிலும் இந்நாளிலும் அநேக ஞானிகளும், அறிவாளிகளும் இருந்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒருமைப்பாட்டை யடையவேண்டுமானால் தமிழ் நாட்டிற்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ் மொழியைக் கற்கவேண்டும்."

"தமிழ் சுயபாட போதினி" என்ற நூலைக் கொண்டே அவர் தமிழைக் கற்க ஆரம்பித்துவிட்டதுடன், தன் முயற்சியில் வெற்றியும் கண்டார். இதைக் குறித்து அவர் தன் சுயசரிதையில் எழுதியிருப்பதாவது :—

"இந்தத் தமிழும் தெலுங்கும் தெரியாதது கையொடிந்தது போல் இருக்கிறது. எந்தத் தமிழரைக் கண்டாலும், தென்னாப்பிரிக்காவில், தன்னலமின்றி, உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்துப் பணியாற்றியத் தமிழர்களின் நினைவே எனக்கு உடனே வருகிறது.

தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் பெரும்பாலோருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அப்படியிருந்தும் அவர்களுடன் உறவாடவும் அவர்கள் அன்பைப் பெறவும் தடையாக இருக்கவில்லை. இருந்தாலும் நான் தமிழ் கற்றால்தான் அவர்களுடன் இருதய பூர்வமாக உறவாட முடியும்"

தென்னாப்பிரிக்காவிலுள்ள டால்ஸ்டாய்ப் பண்ணையில் தமிழர் குழந்தைகளுக்கு தமிழ் அரிச்சுவடியைக் காந்தியடிகள் கற்பித்து வந்திருக்கிறார். "தென்னாப்பிரிக்காவில் நான் சேவை செய்ய நேரிட்டது என் பாக்கியம். ஏனென்றால் அதன் மூலம் தானே தமிழர்கள்மீது எனக்கு விசேஷ உரிமை ஏற்பட்டுள்ளது" என்று அவர் தன் சுயசரிதையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

திருமணம் என்பது பொருளுக்காக பெற்றோர்களிடையே ஏற்படுத்திக்கொள்ளுகிற ஒரு ஒப்பந்தமாக இருக்கும் நிலை மாற வேண்டும்.

—மகாத்மா காந்தி.

காந்தியடிகள் தன் நண்பர் காலஞ்சென்ற திரு. ஜி. ஏ. நடேசனுக்கு ஒரு முழுக் கடிதத்தையும் தமிழிலேயே எழுதியிருக்கிறார்.



Natesan

சகோதரன் நடேசனுக்கு,

இப்படிக்கு,

மோ. க. காந்தி

திரு 'காந்தி' அண்ணாமலை என்கிற நண்பர், தான் பர்மாவுக்குப் போகுமுன் வர்தா சென்று காந்தியடிகளைச் சந்தித்தார். ஒரு நோட் புத்தகத்தை நீட்டி கையெழுத்திடும்படி அண்ணாமலைக் கேட்டாராம்.

கா: "பணம் தரவேண்டுமே!"

அ: "ஹரிஜன நிதிக்கு ரூ 5 வைத்திருக்கிறேன்; ஆனால் தமிழில் கையெழுத்துப் போட்டுத் தரவேண்டும்."

கா: அப்போது இன்னும் இரண்டு ரூபாய் அதிகம் தர வேண்டும்.

அ: "நான் பர்மா போகிறேன். அதனால் சிக்கனமாகச் செலவிட வேண்டியவனாக இருக்கிறேன்.

கா: போனால் போகிறது, ஆறு ரூபாயாகக் கொடுத்துவிடு.

அ: "சரி! கையெழுத்துடன் ஒரு நீதியும் சேர்த்து எழுதிக் கொடுங்கள்."

கா: உடனே "நீரில் எழுத்தாகும் யாக்கை' என்று எழுதி அதன்கீழ் மோ. க. காந்தி என்று தமிழில் கையொப்பம் செய்து கொடுத்தார்.

காந்தியடிகள் சந்தித்த முதல் தமிழர்

காந்தியடிகள் பாரிஸ்டர் வேலையைத் தொடங்கி நான்கு மாதங்கள் ஆகி இருக்கும். அப்போதுதான் முதன்முதலாக ஒரு தமிழரை தென்னாப்பிரிக்காவில் சந்தித்தார்.

ஒரு நாள் ஒரு தமிழர் கந்தல் உடையுடன் மண்டைக் காயத்திலிருந்து வழியும் இரத்தத்துடனும் முன்வரிசையில் இரு பற்கள் உடைந்து மிகப் பரிதாபமாக காந்தியடிகள் முன்பு வந்து நின்றார். அவரை விசாரித்ததில், அவர் எஜமானன் அவரைத் தண்டித்ததில் அம்மாதிரி நிலைமைக்குள்ளானார் என்று தெரிய வந்தது. பாலசுந்தரம் என்ற அந்தத் தமிழர் டர்பனில் ஒரு பிரபல வெள்ளைக்காரத் தோட்ட முதலாளியிடம் சேவை செய்து வந்தவர். இம்மாதிரி கூலிவேலைக்கு வருபவர்களை இவ்வளவு மிருகத்தன்மையுடன் ஓர் முதலாளி நடத்தியிருப்பது குறித்து காந்தியடிகள் மனம் வேதனைப்பட்டது.

முதல் வேலையாக ஒரு டாக்டரை வரவழைத்து அவரிடமிருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம் பெற்று காயமடைந்தவரை ஒரு மாஜிஸ்திரேட்டிடம் அழைத்துச் சென்றார் காந்தி. அடித்த முதலாளிக்குத் தண்டனை வாங்கித் தருவது அவருடைய நோக்கமில்லை. அம்முதலாளியிடமிருந்து பாலசுந்தரத்தை விடுவித்து வேறு ஒருவரிடம் அவரை வேலைக்கு வைத்தார். இச்செயல் மூலம் கூலி வேலைக்காகத் தென்னாப்பிரிக்காவுக்கு வந்துள்ள அவ்வளவு பேர்களின் அன்பையும் காந்தியடிகள் கவர்ந்துவிட்டார். அவர்கள் எல்லோரும் காந்தியடிகளை "பாய்" என்றே செல்லமாகக் கூப்பிடத் தொடங்கினார்கள்.

தென்னாப்பிரிக்க அரசாங்கம் இந்தியர்களுக்கு தொல்லைமேல் தொல்லை கொடுத்து வந்தது. 1913 மார்ச் மாதம் தென்னாப்பிரிக்க உயர்நீதிமன்றம் இந்து முறைப்படி நடைபெற்ற விவாகங்களை ஒப்புக்கொள்ள முடியாது என்று தீர்ப்பளித்தது. கிறிஸ்துவ சம்பிரதாய திருமணங்களையும், பதிவு செய்யப்பட்ட திருமணங்களையும் மாத்திரம் ஒப்புக் கொண்டது அந்த அரசாங்கம்.

காந்தியடிகள் இந்த விவாக நிர்ப்பந்தத்தை வைத்துக் கொண்டே பெண்களையும் தமது அகிம்சைப் போராட்டத்தில் சேரும்படி அழைத்தார். இப்போராட்டத்தில் வள்ளியம்மை என்கிற 17 வயதுப் பெண் காட்டிய துணிச்சலும், வீரமும் தியாகமும் காந்தியடிகள் மனத்தை உருக்கிவிட்டன.

அவர் தமிழகத்திற்கு 12 தடவை விஜயம் செய்திருக்கிறார். அவைகளில் நான்குதடவை தமிழகத்தில் விரிவான சுற்றுப் பிரயாணமாகும்.

பண்டிதை அசலாம்பிகை அம்மையார் பாடியுள்ள 'காந்தி புராணம்' என்ற நூலின் பாடல்களில் ஒன்றுடன் இக்கட்டுரையை முடிப்போம்.

அருணனெனும் ஒளிக்கதிர்கள்
　　சென்றுலவும் அதற்கப்பாலும்
மருள்நெறிசேர் சுயநலமாய விரிந்தோட
　　மதிக்க வொண்ணாக்
கருணை யென்னும் அளிக்கதிர்கள்
　　தமை வீசியிலட்டு மருட காந்தியேந்தல்
வருணமலர்த் திருவடிகள் மாநிலத்தில்
　　பல்லாண்டு மருவி வாழ்க!

கண்ணன் காட்டிய கல்வி

கிருஷ்ண பகவான் வேலை செய்து கொண்டே, தொழில் புரிந்து கொண்டே கல்வி பெற்றதைப்போல் நம் பிள்ளைகளும் பெறவேண்டும். கிருஷ்ண பகவான் மாடுமேய்த்தார், பால் கறந்தார், வீட்டை மெழுகினார், கூலியாளைப்போல உழைத்தார். ஆசிரியரின் வீட்டிற்குப் போய் விறகுடைத்தார்; அர்ச்சுனனுடைய குதிரைகளைப் பராமரித்தார், அர்ச்சுனனுக்குத் தேரும் ஓட்டினார்; ராஜசூய வேள்வி நடந்தபொழுது அவர் தருமரிடம் "எனக்கு வேலை ஏதேனும் தாரும்" என்று கேட்க தருமர், "உமக்குத் தர என்னிடம் வேலை இல்லையே" என்றார். ஆனால் பகவானோ, "என்னால் சும்மா இருக்க முடியாது" என்றார். அப்பொழுது தருமர் "நீங்களே ஒரு வேலையைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார். அதற்கு பகவான், "நான் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொண்டுவிட்டேன். எச்சில் இலைகளை அகற்றி உணவருந்திய இடத்தைச் சாணமிட்டு மெழுகும் வேலையைச் செய்கிறேன். அந்த வேலைதான் எனக்குத் தகுந்தது. அதைச் சிறு வயதிலிருந்தே செய்து எனக்குப் பழக்கம்; அதில் நான் தேறியிருக்கிறேன்" என்றார். இவ்வாறு அவர் எச்சில் இலைகளை எடுக்கும் வேலை செய்தார். கிருஷ்ண பகவான் பிறகு சந்தர்ப்பம் வந்தபொழுது அர்ச்சுனனுக்கு பிரம்ம வித்தையும் போதித்தருளினார்.

வினோபா அடிகள்.

தந்தை காந்தி

"வெங்கடேசன்"

—:o:—

உண்மையொளி உள்ளத்தினில் ஏற்றவந்த காந்தி
உண்மைவழி வாழ்வெனவே உரைக்கவந்த காந்தி
வெண்மைமனம் கோயிலென்று விளக்கவந்த காந்தி
வெண்மைச்செயல் வேதமென்றே விரிக்கவந்த காந்தி
[உண்மை]

உள்ளத்திலே அன்புமலர் விரித்துவந்த காந்தி
உள்ளத்திலே அன்பதனில் தெய்வம்கண்ட காந்தி
வள்ளுவரின் வாய்மொழியை வாழ்ந்துதந்த காந்தி
தெள்ளுதமிழ் வேதநெறி திகழவைத்த காந்தி
[உண்மை]

தேரோட்டும் கண்ணனுப தேசம்கொண்ட காந்தி
பாரெல்லாம் அதன்புகழைப் பரப்பவந்த காந்தி
பாருக்கெல்லாம் உண்மையதன் ஒருருவாம் காந்தி
ஊருக்கெல்லாம் உலகுக்கெல்லாம் ஒரேதந்தை காந்தி
[உண்மை]

எளியோரின் ஏக்கமெல்லாம் போக்கவந்த காந்தி
எளிமையதில் இறைவனுரு கண்டுவந்த காந்தி
எளியமனம் பெருநினைவு எளிதுஎன்ற காந்தி
எளியவாழ்வில் பெரியவாழ்வின் ஏற்றம்சொன்ன காந்தி
(உண்மை)

நல்லவர்க்கும் அல்லவர்க்கும் நண்பரான காந்தி
நல்லமனம் நல்லசெயல் நாளும்கொண்ட காந்தி
நல்லஉரை நல்லமொழி நாவில்கொண்ட காந்தி
தில்லித்தமிழ்ச் சங்கம்போற்றும் தெய்வமகான் காந்தி
[உண்மை]

தில்லித் தமிழ்ச் சங்கச் செயற்குழு உறுப்பினர்கள்

தலைவர் :	திரு. கே. வி. வெங்கடாசலம்
துணைத் தலைவர் :	திரு. என். கிருஷ்ணமூர்த்தி
நிருவாகத் துணைத் தலைவர் :	திரு. அ. வி. குப்புசாமி
பொதுச் செயலாளர் :	திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி
இணைச் செயலாளர் :	திரு. ஆர். எஸ். வெங்கடேசன்
பொருளாளர் :	திரு. எஸ். குருஸ்வாமி
வட்டாரச் செயலாளர்கள் :	திருமதி யோகா கணபதி (கரோல் பாக்) திரு. வைத்தீஸ்வரன் (லோதி காலனி) திரு. எஸ். சங்கரன் (சரோஜினி நகர்) திரு. ஆர். ஆர். சாரி (மோதி பாக்) திரு. எம். நாகப்பன் (இராமகிருஷ்ணபுரம்)
உறுப்பினர்கள் :	திரு. சி. என். ரங்கநாதன் திரு. ஆர். விசுவநாதன் திரு. தி. வை. நாராயணசாமி திரு. வீ. செ. கந்தசாமி திரு. கே. கஸ்தூரி ரங்கன்
நூலக நிருவாகிகள் :	திரு. எஸ். ரங்கராஜன் திரு. பி. ஆர். வேங்கடகிரி திரு. எஸ். ரங்கராசன் திரு. ஏ. டி. என். இராமசாமி திரு. சி. ராகவன்
தணிக்கையாளர்கள் :	திரு. ஏ. வெங்கடேசுவரன் திரு. ஆர். சுப்பிரமணியன்
சுடர் நிருவாக ஆசிரியர் :	திரு. தி. கோ. அனந்தசுவாமி


building for DELHI-TAMIL SANGAM
ramakrishna puram, new delhi -22

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் - புது மனை

—o—

இன்னும் இரண்டு மாதத்தில் தில்லித் தமிழ்ச் சங்கத்து வயது 24 ஆகும். 1946-ல் கன்னுட் ஸர்கஸில் ஒரு விடுதியின் அறையில் ஆரம்பித்த சங்கம், சில காலம் துருக்மான் ரோடில் ஒரு இலவச இரவுப் பாடசாலையிலும் பணியாற்றி வந்தது. பிறகு தில்லி சீப் கமிஷனருடைய தயவால் சங்கத்துக்கு ஒரு சிறு வீடு (மூன்று அறைகளும் முற்றமும்) வருஷத்திற்கு ஒரு ரூபாய் வாடகைக்கு கிடைத்தது. இரண்டாவது யுத்த காலத்தில் கட்டப்பட்ட வீடு கிடைத்ததில் சங்கம் மகிழ்ச்சியடைந்தது. புதுதில்லி நகரத்தின் கேந்திர ஸ்தானமான கன்னுட் பிளேசில் கட்டடம் கிடைத்தது, சங்கத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாயிருந்தது. ஆனால் சிறு நிகழ்ச்சிகள் மட்டுமே கட்டடத்தில் நடத்த முடியும். பெரு விழாக்களுக்கெல்லாம் பெரிய கூடங்கள் வாடகைக்கு எடுக்கும்படியாய் இருந்தது.

சங்கத்தின் ஸ்தாபக காரியதரிசியான ஸ்ரீ அ. வெ. குப்புஸ்வாமி தீர்க்கதரிசனத்துடன் சங்கத்துக்கென்று ஒரு கட்டடம் வேண்டுமென்று ஒரு பொதுக்கூட்டத்தில் பிரேரேபித்தார். பேராசிரியர் க. ஸ்ரீ. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் 1957-ம் வருஷத்தில் தீர்மானம் நிறைவேறியது. ஏகமனதாகத் தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டாலும் பலருக்கும் ஐயப்பாடிருந்தது. காணி நிலம் வேண்டும், கட்டடம் கட்ட வேண்டும் என்ற ஆசை அனேகருக்கு இருந்தது. ஆனால் செயலில் கொண்டுவர ஒரு தூண்டுகோல் வேண்டியிருந்தது. அந்தத் தூண்டுகோல் இறைவனருளால் ஸ்ரீலஸ்ரீ தருமபுரம் ஆதீனத்தின் மஹா ஸந்நிதானத்துக்கு சங்கம் வரவேற்பு அளிக்கப் பெரிய கூடமொன்றும் கிடையாததால் சங்கக் கட்டிடத்திலேயே ஏற்பாடு செய்ய நேர்ந்தது. மஹா ஸந்நிதானம் வரவேற்புக்குப் பதிலளிக்கையில், "சங்கத்தின் தமிழார்வத்தைக் கண்டு மகிழ்ச்சியுறுகிறேன். சங்கம் சிறப்பாகச் செயல்படவேண்டுமானால் அதற்கென்றொரு கூரை வேண்டும். நல்ல வகையில் வெகு சீக்கிரமாக அமைத்துக் கொள்ளவேண்டும். கட்டடம் எழுப்ப சங்கம் இனி தீவிரமாய் முயலவேண்டும்" என்று அருள்மொழி கூறி, நிலம் வாங்க ரூ. 1000-ம் தான் தருவதாகவும் அதே மாதிரி அன்றையக்

கூட்டத்தின் தலைவர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களும் கொடுப்பார் என்றும் பகிரங்கப்படுத்தினர். அன்று முதல் பணம் சேகரிக்கச் சங்கம் தலைப்பட்டது. பல அன்பர்கள் நன்கொடைகள் கொடுத்தார்கள். திரைப்படக் காட்சிகள், நாடகங்கள், சங்கீதக் கச்சேரிகள், நாட்டியங்கள் முதலியன நடத்தி ஒரு கணிசமான தொகை சேர்த்தது. தில்லி வளர வளர, தமிழர் கூட்டமும் பெருகிற்று—நகரமும் பெரிதாயிற்று. மத்திய அரசு பெரிய மனதுபண்ணி சங்கத்துக்கு ராமகிருஷ்ண புரத்தில் சலுகை விலையில் அரை ஏக்கர் நிலம் ஒதுக்கியது.

நிலம் சங்கத்தின் பெயரில் 1965-ஆம் ஆண்டு மேமீ பதிவு செய்து கிடைத்ததும் கட்டட நிர்மாணத்தில் ஊக்கம் உதித்தது. அங்கத்தினரும் தமிழன்பர்களும் நன்கொடைகள் கொடுத்து உதவினர்கள். பணந்திரட்ட ஏற்பாடு செய்த கச்சேரிகள், நாடகங்கள், திரைப்படங்கள் இவைகளுக்கு நல்ல ஆதரவு கொடுத்தார்கள். பல வர்த்தக ஸ்தாபனங்கள் பெருந் தொகைகள் அளித்தார்கள். அவைகளில் மதுரை மில் ஸ்தாபனத்தை முக்கியமாகக் கூறவேண்டும். பல்வேறு வழிகளில் ரூ. 1 லக்ஷம் சங்கத்தினிடம் சேர்ந்தது. சங்கத்தின் தமிழ்த் தொண்டைப் பாராட்டும் வகையில் திரு. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் சென்னை அரசாங்கம் ரூபாய் ஒரு லக்ஷம், கட்டிட நிதிக்காக நன்கொடை அளித்தது. 1968–ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து கட்டட வேலைகள் தீவிரமாய் நடந்து வந்தன. பதினறு மாத காலத்தில் கட்டடத்திற்கு மட்டும் ரூ. $3\frac{1}{2}$ லக்ஷம் வரைச் செலவாயிருக்கிறது. நிலம் தந்து உதவிய மத்திய அரசாங்கமும் சங்கத்தின் கலாச்சார நடவடிக்கைகளுக்காக ரூ. 50,000 கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

தற்காலம் கட்டடத்தில் 3 தளங்கள் உள. மூன்று பெரிய கூடங்கள் உள. தமிழ்நாட்டிலிருந்து வருபவர்களுக்குத் தங்க வசதியுள்ள 3 அறைகள் இருக்கின்றன. இலவச வாசகசாலைக்கும் தமிழ் வகுப்பு நடத்தவும் இடம் இருக்கின்றது.

கட்டடம் பூர்த்தியாய்விட்டது. இன்னும் மதில் சுவர்கள் கட்டவேண்டும். கட்டடத்தில் வேண்டிய மேஜைகள், நாற்காலிகள், விரிப்புகள் நிரப்பவேண்டும். இதற்கெல்லாம் குறைந்தது ரூ. 30,000 தேவையிருக்கிறது.

அரை ஏகரா நிலத்தில் கட்டடம் போக மிஞ்சியிருக்கும் இடத்தில் ஒரு கலைக்கூடம் கட்ட ஆசை இருக்கிறது. அதற்காக ரூ. 6 லக்ஷம் தேவை. கலைக்கூடமும் கட்டி முடிந்தால்

தான், தமிழன்பர்களுக்கும், சங்கத்தின் அங்கத்தினருக்கும், பூரணமாய் திருப்தியாகும். தில்லியில் வாழும் தமிழர்கள் இன்று அறுபதினாயிரம் இருக்கிறார்கள். எல்லோருக்கும் உதவும் வகையில் சங்கத்தின் கட்டடம் பூர்த்தியாக தமிழ்நாட்டிலும் மற்றுமுள்ள மாநிலங்களிலும் உள்ள தமிழன்பர்கள், வியாபாரிகள், தொழிற்சாலை அதிபர்கள், தனி நபர்கள் எல்லோருடைய உதவியும் வேண்டும்.

சங்கத்தின் பணியைப் போற்றி மகத்தான உதவி செய்திருக்கும் தமிழ்நாடு அரசாங்கத்துக்குச் சங்கம் விண்ணப்பம் செய்திருக்கிறது. சங்கத்தின் வேண்டுகோளுக்குத் தமிழ்நாடு அரசு இணங்கும் என்று நம்புகிறோம்.

தமிழன்பர்கள் எல்லோரும் சங்கத்தை ஊக்குவிக்கலாம். நன்கொடைகள் சிறு தொகைகளானாலும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

பெருந் தொகைகள் கொடுக்க விரும்புகிறவர்கள் நன்கொடைகளைத் தங்களது செலவுக் கணக்கில் காட்டலாம். வருமான வரி இலாகா செலவை நியாயமானதென்று வரி விலக்குத் தருவார்கள் (தில்லி ராஜஸ்தான் இன்கம்டாக்ஸ் கமிஷனர் கடிதம் நிர். JE-3 (20)/62/435 Dated 25-6-1962).

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :

காரியதரிசி,
தில்லித் தமிழ்ச் சங்கம் (ரெஜிஸ்டெர்ட்),
ஸெக்டர் 5, ராமகிருஷ்ணபுரம்,
புது தில்லி-22.

மகாத்மா வாழ்க்கையில்......

ஒரு சமயம், திரு தேவதாஸ் எரவாடா சிறையில் காந்திஜியைப் பேட்டி காண வந்தார். சிறை அதிகாரியின் முன்னிலையில் நின்று கொண்டே, தேவதாஸுடன் உரையாடினார். காந்திஜி நின்று கொண்டே உரையாடுவதைக் கண்டு தேவதாஸ் வருத்தம் தாளாமல் அழுது விட்டார்.

தேவதாஸின் வருத்தத்திற்கு காரணத்தைத் தெரிந்து கொண்ட காந்திஜி சொன்னார். "நான் ஒரு கைதி. சிறை அதிகாரிக்கு எதிரில் அமரக்கூடாது. சிறைக்கட்டுப் பாடுகளைக் கடைப்பிடிப்பதுதான் கண்ணியமான செயல் அதனால்தான் நான் நின்று கொண்டே உன்னுடன் உரையாடுகிறேன்." —ஜ.

க. கா. கி. கீ. - கு.

(அ. வி. குப்புஸ்வாமி)

—o—

கம்பன், காந்தி, கிறிஸ்து, கீதாசாரியன், குறளாசிரியர்— இவர்களிடையே மிளிர்ந்து கிடக்கும் கருத்து ஒற்றுமைகளை ஆராயப்புகுந்தால் அவை ஒரு மாபெரும் நூலாக விரியும். இக் கட்டுரையில் ஒரு சில கருத்து ஒற்றுமைகளைப் பார்ப்போம்:—

வான்மீகி முனிவர் தமது கதாநாயகன் இராமபிரானை ஓர் உத்தம புருஷனாக நமக்குச் சித்திரித்துக் காட்டியுள்ளார், ஆதி இராமாயண காவியத்திலே. கதைப்போக்குக்கு வான்மீகத்தைப் பின்பற்றிய கம்பர்பிரான், தமது இராமாவதாரக் காப்பியத்தில் இராமபிரானை மெய்ப் பொருளாகவும், முழு முதற் கடவுளாக வுமே நமக்கு எடுத்துக் காட்டுகின்றார். வெறும் மரியாதை புருஷனாகமட்டும் அல்ல.

"முப்பரம் பொருளிற்குண் முதலை மூலத்தை
யிப்பரந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
யப்பனை யப்பினு ளமிழ்தந் தன்னையே
யொப்பனை யொப்பனை யுரைக்க வோண்ணுமோ.

பால காண்டம், கடிமணப்படலத்திலே, திருமணப் பந்தலுக்கு வருவதற்கு முன் இராமபிரான் செய்து கொண்ட அலங்காரத்தைத் தன் அகக்கண் முன் கண்டுகளிக்கும் கம்பர் பிரான் இராமபிரானைச் சக்கரவர்த்தித் திருமகனைக் காணமல் ஆதிமூலப்பொருளாக் காண்கிறார் இக் கவியிலே. இதே போல பால காண்டத்தில் மற்றும் பல இடங்களிலும், இதர காண்டங் களிலும் இதே விதமான காட்சிகளில் நம்மை ஆழ்த்திவிடுகிறார் கம்பநாட்டாழ்வார்.

தசரத மன்னனுக்குக் குழந்தைகள் பிறந்து வசிட்ட முனிவர் அவர்களுக்கு நாமகரணம் செய்யும் இடத்தில்,

"......அருண் மெய்ப்பொருளுக்கே இராமனெனப் பெயர் ஈந்தனன் அன்றே" எனக் கம்பர் கூறுவதைப் பாருங்கள்.

கம்பநாட்டாழ்வார் இராமபிரானைக் கண்டுள்ள இதே நோக்கிலே தான் காந்திமகானும் இராமபிரானைக் காண்கிறார். தமது பிரார்த்தனைக் கூட்டங்களிலும், இதர நேரங்களிலும் தாம் அஞ்சலி செலுத்திவரும் இராமன், "சரித்திரவாயிலாகவும்" தசரத குமாரனாகவும் நாம் அறிந்துள்ள இராமனை மட்டும் நாம் குறிக்கவில்லை; ஆதியந்தமற்ற பரம்பொருளான அத்யாத்ம இராமனைத்தான் நாம் நாடி வழிபடுகிறோம்" என்று அவர் பல தடவைகளில் தாம் கூறும் ராம நாமத்துக்கு விளக்கம் செய்திருக்கிறார்.

For Genuine Rajdoot Motor Cycle spares
contact

British Motor Car Co. (1934) Pvt. Ltd.

CONNAUGHT CIRCUS
NEW DELHI-1.
Telephone: 44086

AUTHORISED DEALERS

NARANG BROS.

16/1, Arya Samaj Road, Karolbagh,
NEW DELHI-5.
Telephone: 561200

AIR MAIL EDITION OF
HINDU AND SWADESAMITRAN

now available in Delhi
on the evening of the publication

HOME DELIVERY ARRANGED

LOCAL AGENTS

CENTRAL NEWS AGENCY

Head Office:
23/90, Connaught Circus,
NEW DELHI-1.
Phone: 45942 & 45943

Branch Office:
15a/55, W.E.A. Karolbagh
NEW DELHI-5.
Phone: 57340

கீதையைத் தமது வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர் காந்திமகான். ராமகிருஷ்ண பரமஹம்ஸரை அணுகிய ஒரு பக்தர் கீதையின் தாத்பர்யத்தைச் சுருக்கமாகத் தமக்குத் தெரிவிக்கும்படி கேட்டாராம். "கீதா, என்ற அந்த இரண்டு எழுத்துப்பதத்தைத் திருப்பிப் படியும்; அதுவே கீதையின் உட்பொருள்"—என்று பரமஹம்ஸர் அவருக்கு எடுத்துக் கூறினாராம். வங்காளி மொழியில் தாகி—என்பது தியாகி என்ற வட மொழிச் சொல்லின் திரிபு. தியாக வாழ்வு வாழ வேண்டும் என்பது தான் கீதையின் மெய்யப் பொருள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. இரக்கத்தினின்றும் பிறப்பது தியாகம். தியாக வாழ்வு வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள்.

"இரக்கமேயாக வந்திங்கெம்பி நான் நாமம் சொல்லி
உருக்கினான் உணர்வைத்தந்தான் உயிர்......"

என்ற மொழிகளிலே அநுமனைக் குறித்துச் சீதாபிராட்டியார் கூறியுள்ள கம்பன் மொழிகளை அப்படியே அண்ணல் காந்தியடிகளுக்குக் கூறுவது மிக்கப் பொருத்தமாகிறது.

"எனது வாழ்க்கையை உருவாக்கிக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவின் உபதேசங்கள் மிகவும் இன்றியமையாதனவாயிருந்துள்ளன,"—என்று பன்முறை காந்திமகான் சொல்லியிருக்கிறார். "'ஸெர்மன் ஆன் தி மவுண்ட்' என்று குறிப்பிடப்படும் உபதேச மொழிகளுக்கும் பகவத்கீதையின் உபதேச சாரத்துக்கும் எந்த விதமானதொரு வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏதாவது ஒரு சமயத்தில், நான் இதுவரை மனப்பாடம் செய்துள்ள கீதையின் சுலோகங்கள் யாவும் என்னால் மறக்கப்பட்டு, என்வசம் உள்ள கீதையின் பிரதியும் இல்லாத ஒரு நிலை எனக்கு ஏற்பட்டால், அச்சமயம், சீடர்களுக்கு மலைமீது உரைத்த கிறிஸ்துவின் அருள்மொழிகளின் பிரதி என் கைவசம், இருந்தது என்றால், நான் கீதையை அநுசந்திப்பதில் அடையும் அதே ஆனந்தத்தை அப்போதும் அடைவேன்," இவ்விதமாக கிறிஸ்தவமதக் கிரந்தத்தில் தமக்குள்ள ஈடுபாட்டைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார் காந்தியடிகள்.

1918-ம் ஆண்டில் வினோபா பாவே அவர்களுக்கு எழுதிய ஓர் கடிதத்தில் காந்தியடிகள் எழுதியுள்ளதாவது :—

"எந்தச் சொற்றொடர்களினால் உங்களை நான் புகழ்வது என்று எனக்குப் புலப்படவில்லை. உங்களுடைய அன்புடைமை, ஒழுக்கம், தன்னாராய்வு இவைகளை நான் உன்னி உன்னிப் பார்க்கும் சமயங்களில் மிகவும் பெருமிதமடைகிறேன். அப்போதெல்லாம் உம்முடைய உயர் பண்புகளை தராசிலிட்டு எடை பார்ப்பதற்கும் நான் தகுதியுள்ளவனல்லேன் என்று எண்ணப்படுகிறேன். எதற்கும் ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். பலப்பல நாட்களாக நான் விழைந்துவந்துள்ள ஓர் ஆசையை நீர் பூர்த்தி செய்து வைத்திருக்கிறீர்கள்.

"தந்தையின் கீர்த்தியைவிட ஒரு படி உயர்வில் மாசற்றான் என்ற நற்பெயர் எடுப்பவனே சிறந்த தனயனாகிறான். தகப்பன் செய்துள்ள நற்பணிகள் ஏதேனும் இருப்பின் அவை மேலும்

சிறந்து விளங்கவைக்கும் வகையில் பணி புரியும் மகனை வாய்க்கப் பெற்றவன் தான் தந்தை என்ற சொல்லுக்குரிய சிறப்புடைய வனாகிறான். அந்தவகையில் நீர் எனக்கு ஆத்ம புத்திரனாக விளங்குகிறீர்.”

ஒரு சமயம் விநோபா பாவே காந்தியண்ணலை அணுகி தம்மை மகன் ஸ்தானத்தில் ஓர் மாணாக்கனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். விநோபாவின் தூய பக்தியை அறிந்த காந்தியண்ணலும் விநோபாவைத் தமது ஆத்மீக புத்திரனாக ஏற்றுக்கொண்டார். தந்தை—தனயன் என்ற இவ்வாத்மீக உறவைக் குறித்து எழுதிய கடிதம் அது.

மகன்; தகப்பன். இவர்களிடையே இருக்க வேண்டிய கடமைப்பண்புகளைக் குறள் ஆசிரியர் கூறியிருத்தலைச் சிந்திக்கும் போது அதே கருத்துக்கள் காந்திஜீ எழுதியுள்ள இக்கடிதத்திலும் எதிரொலி செய்வதை நாம் காண்கிறோம் அல்லவா?

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

மகன் தந்தைக் காற்று முதவி யிவன் தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

—o—

காந்தித் திருப்புகழ்

(செயல்)

—o—

பஞ்சைப்படும் நெஞ்சைத் துயரதும்
பிஞ்சிட்டெழில் துஞ்சிக் குலைவுற
வஞ்சித்தொரு நஞ்சிற் கிணையென நலிவாக்க

கொஞ்சும்மொழி கொண்டுக் குலைவுறு
நெஞ்சத்திருள் அஞ்சிச் .செயல்பெற
நெஞ்சத்தருள் தந்தக் கதையதை நினைவேற்றி

பிள்ளைப்பெரு நெஞ்சைத் தழுவிய
பச்சைச்செயல் துச்சத் திழிமன
விச்சைச்செயல் விட்டிட் டிருள்நிலை அழிந்தோட

வெள்ளத்தனை அன்புச் சிறுநகை
மெள்ளத்தரு மின்னற் சுடரதில்
கள்ளத்துயர் மெள்ளக் கருகிட மெய்வாழ

அன்புக்கொரு இன்பச் செயல்வழி
அள்ளித்தரு மூண்மைத் தனிவழி
இன்புக்கொரு இனிமைப் பெருவழி எனஓர்ந்து

அன்பைத்தரும் அச்செயல் எதிரியின்
நெஞ்சத்துரு கவ்வித் துளிர்நகை
கொஞ்சச்செயு மத்தவம் நிலையென வழிகாட்டி

எண்ணத்தொளி வண்ணச் செயலொடு
உண்மைப்பெரு வண்ணத் தழுவலில்
திண்மைப்பெறும் வண்ணத் தழகதை வாழ்நாளில்

உண்மைத்தவம் உண்மைத் தவமென
உண்மைக்கென உண்மைப் பெருநெறி
உண்மைக்கொரு உண்மைத் திருவெனத் திகழ்வோனே!

—o—

With Best Compliments of
MAFATLAL
GROUP

கஸ்தூரி பா

கே. எஸ். ஜம்புநாதன்

—o—

[காந்தியகளும் கஸ்தூரிபாவும் சமவயதினர்கள். ஆகவே அண்ணல் பிறந்த நூற்றாண்டு விழாவே அண்ணல் பிறந்த நூற்றாண்டு விழாவும் ஆகும். இளமைப் பருவத்தில் அண்ணலும் பாவும் பல்வேறு சமயங்களில் கருத்து வேற்றுமையில் பிணங்கியதுண்டு. தென் ஆபிரிகாவில் வசித்த காலத்தில் ஹரிஜன கிறிஸ்துவர் ஒருவரை தம்முடைய வீட்டில் தங்குமாறு அடிகள் பணித்தார். அப்போது பாவுக்கும் அண்ணலுக்கும் ஏற்பட்ட ஒரு பூசலால் கணவன் என்ற ஆணவத்தில், பாவை வீட்டை விட்டுத் துரத்தவும் அண்ணல் துணிந்தார். சகிப்புத் தன்மையாலும் கணவனே கண் கண்ட தெய்வம் என்ற வாழ்க்கை விரதத்தாலும் அண்ணலுடைய கோபத்தை பா சமாதானப் படுத்தினர். காந்திஜி தம்முடைய 37 ஆவது பிராயத்தில், பாவின் இசைவுடன் பிரம்மசர்ய விரதம் ஏற்றுக் கொண்டார். அதன் பிறகு, தங்களிடைய பாசமும் பற்றுதலும் பெருகிற்று என்று காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறர். அண்ணலும் பாவும் ‘ஆதியும் பாதியுமாக’ வாழ்ந்தார்கள். சிறந்த இல்லத்தரசி, தாய், அரசியல் பணியிலீடுபட்ட வீராங்கனை என பல விதங்களில் பா பிரகாசித்தார். அவருடைய வாழ்க்கைச் சம்பவங்களில் சிலவற்றை இங்கு காணலாம்.]

மறுபிறவியில் என்னுடைய வாழ்க்கைத் துணைவியைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புக் கிடைத்தால், கஸ்தூரிபாவையே நான் வரிப்பேன். என்னுடைய ஒவ்வொரு பிறவியிலும் என்னுடைய வாழ்க்கைத் துணைவியாக கஸ்தூரி பா கிடைப்பதற்கு இறைவன் அருள வேண்டும்” என்று காந்திஜி ஒரு சமயம் கூறினர். அன்பு உருவமாக, அஹிம்ஸை வழியில் செயலாற்றி, சத்திய விரதத்துடன், எளிமையும் தியாகமும் நிறைந்த வாழ்க்கை நடத்திய காந்தியடிகளுக்கு பக்கபலமாக நின்று செயலாற்றிய பெருமை அன்னை கஸ்தூரிபாய்க்கு உண்டு. காந்திஜியை, அவருடன் நெருங்கிப் பழகிய ஊழியர்கள் பாபு (தந்தை) என்று அழைத்தார்கள்; அன்னை கஸ்தூரியை பா (தாய்) என்று அழைத்தார்கள். யாக்ஞவல்கியனும் மைத்ரேயியும் போல அடிகளும் பாவும் வாழ்ந்தார்கள். மைத்ரேயி ஒரு மேதை. பாவுக்கு பள்ளிப்படிப்பு கிடையாது என்றாலும் சிறந்த உலக அனுபவமும் கணவனே தெய்வம் என்ற நம்பிக்கையும் உடையவர்.

காந்தியடிகளுடைய தந்தை கரம்சந்த் காந்தியும் கஸ்தூரி பாவுடைய தந்தை கோகுல்தாஸ் மாகன்ஜியும் நண்பர்கள்.



தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

தங்களுடைய நட்புக்கு வலிமையூட்டுவதற்காக, குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்க இருவரும் ஆசைப்பட்டார்கள். குழந்தைகளுடைய ஏழாவது பிராயத்தில் திருமண நிச்சயதார்த்தம் செய்து கொண்டார்கள். 1882 ஆம் ஆண்டில்—குழந்தைகளுடைய பதின்மூன்றாம் வயதில்—திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தார்கள்.

திருமணமான புதிதில் இல்லற வாழ்க்கையைப்பற்றிக் கூறும் ஓர் நூலைப் படிக்கும் வாய்ப்பு இளைஞன் காந்திக்கு கிடைத்தது அவர். ஆதர்ச தம்பதிகளாக வாழ வேண்டும் என்ற ஆசையில் மனைவியின் கடமைகளைப்பற்றி அந்த நூலில் கூறியவற்றை எடுத்துக்கூறி அதிகாரம் செய்வார். சுதந்திர மனப்பான்மையுடைய கஸ்தூரிபாய் அவற்றைப் பொருட்படுத்தாமல் செயலாற்றும்போது காந்திக்கு கோபம் வரும். மனைவியைக் கண்டிக்கும் உரிமை கணவனுக்கு உண்டு என்று நூலில் படித்ததை எண்ணிப் பார்த்துக்கொண்டு, மனைவியைக் கடிந்து

கொள்வார். கஸ்தூரிபாயின் கண்கலங்கும்; காந்தி வருந்து வார். தன்னுடைய மனைவி பள்ளிக்குச் சென்று படிக்கவில்லை என்ற தாபம் கொண்ட காந்தி, இரவு நேரத்தில் மனைவிக்கு எழுத்தறிவிப்பு முயற்சிலீடுபட்டார். ஆனால் அவர் வெற்றி பெறவில்லை. மனைவியின் மெதுவான போக்கைக்கண்டு கணவன் வெகுண்டால், மனைவி கண் கலங்குவாள். கணவனுடைய உறுதி தளர்ந்துவிடும். மனைவி பாடம் எழுதும் பாங்கில் லயித் திருப்பதைக் கண்டு கணவன் உணர்ச்சிவசப்பட்டு, பாடத்தை மூடிவைத்துவிடப் பணிப்பான். இப்படிச் சில இரவுகள் கழி யும். மனைவிக்கு கல்வி புகட்டும் பணிக்கு பலபலப் இடையூறுகள் குறுக்கிட்டன. பிறகு மேல்ப்படிப்புக்காக காந்தி, இங்கிலாந் துக்குச் சென்றார்.

இளமைப் பருவத்தில் கஸ்தூரிபாய் அடிக்கடி தாய் வீடு செல்வதுண்டு. அப்போது அவருடை பிரிவைத் தாளாமல் மோஹன்தாஸ் காந்தி தவிப்பார். "அந்தக் காலத்தில் இதைக் கொடுமையான துயரம் என்று கருதினேன். ஆனால் பல ஆண்டு களுக்குப் பிறகு இதைப்பற்றிச் சிந்தித்தபோது, இளமைப் பரு வத்தில் கணவனும் மனைவியும் அடிக்கடி பிரிந்து வாழ்வது அவசி யம் என்பதையும் அதனால் அவர்களிடையே அன்பும் பாசமும் வளர்கிறது என்பதையும் உணர்ந்தேன்" என்று ஒரு சமயம் காந்திஜி கூறினார்.

போயர் யுத்தம் முடிந்ததும் காந்திஜி இந்தியாவுக்கு திரும்ப விரும்பினார். நேடாலிலுள்ள இந்தியர்கள் மிகவும் விரிவான முறையில் பிரிவுபசாரம் நடத்தி ஏராளமாகப் பொன்னும் பொருளும் அன்புக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். காந்திஜி, அவற்றை ஏற்றுக் கொள்ள வில்லை. தென் ஆபிரிக இந்தியர் களுடைய நலனுக்கு உழைப்பதற்கு மூலதனமாக வைத்துவிட விரும்பினார்.

நண்பர்கள் அன்பளிப்புச் செய்த பொருள்களில் கஸ்தூரி பாய்க்காக சில நகைகளும் இருந்தன. தமக்கெனக் கொடுக்கப் பட்ட பொருள்களை தாமே வைத்துக்கொள்ள பா விரும்பினார். ஆனால் காந்திஜி இசையவில்லை. அவற்றிலிருந்து ஐந்து பவுன் எடையுள்ள ஒரு சங்கிலியை எடுத்து "இதை மட்டும் வைத்துக் கொள்கிறேன். எனக்கு அளித்த பரிசுதானே?" என்று பா காந்திஜியிடம் கேட்டார்.

காந்திஜி எதையும் தமக்கென வைத்துக்கொள்ள விரும்ப வில்லை. கஸ்தூரிபாவின் ஆசை அவருக்குச் சினம் ஊட்டியது. "உனக்காகக் கொடுத்தார்களா? உன்னுடைய சேவையைப் பாராட்டிக் கொடுத்தார்களா?" என்று கேட்டார்.

"சேவை என்று கேட்கிறீர்களே. நீங்கள் பொது ஜன சேவை செய்கிறீர்கள். உண்மைதான். உங்களுடைய பணிக்கு இடையூறு ஏற்படாமலிப்பதற்காக, உங்களுடைய ஆரோக்கியம் கெடாமல் பார்த்துக் கொண்டு உழைக்கிறேனே, அது சேவை இல்லையா? நீங்கள் நண்பர்களை அழைத்து வந்து உபசரிக்கும்படி

பள்ளி இறுதித் தேர்வில், தில்லியில். தமிழில் முதன்மையாகத் தேறிய கரோல்பாக் தமிழ்ப் பள்ளி மாணவி குமாரி ஆர். காந்திமதி. தமிழக முதல்வர் மாண்புமிகு கருணாநிதி, அவர்களிட மிருந்து தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தங்க மெடலைப் பெறுகிறார்

பணிக்கும் போது, உங்களுடைய மனம் புண்படக்கூடாது என்ற நோக்கத்துடன், என்னுடைய ஆரோக்கியத்தைப் பொருட்படுத்தாமல் உழைக்கிறேனே, அது சேவை இல்லையா?'' என்று பா கேட்டார்.

அவருடைய வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை காந்தி உணர்ந்தாலும், சங்கிலியைக் கொடுக்கவில்லை. பார்ஸி ரஸ்டோம்ஜியைத் தலைவராகக்கொண்ட ஒரு தர்ம ஸ்தாபனத்தை நிறுவி, அதனிடம் நகைகளையும் மற்றப் பொருள்களையும் ஒப்படைத்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு கஸ்தூரிபாவும் நேரடியாகப் பொதுச் சேவையில் ஈடுபட்டபோது, காந்திஜி அப்போது செய்தது சரி என்பதை உணர்ந்தார். இந்தச் சம்பவம்பற்றி ஒரு சமயம் காந்திஜி பின்வருமாறு கூறினார்: "இதனால் எனக்கு ஒரு படிப்பினை கிடைத்தது. பொது ஜன ஊழியம் செய்கிறவர்கள் விலையுயர்ந்த பொருள்களைப் பரிசாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. அன்புக் காணிக்கை என்பது பாராட்டு என்றாலும் அதை ஏற்றுக்கொள்ளும் ஊழியருக்கு மனச் சலனமும் சபலமும் ஏற்படுகிறது. சில சமயங்களில், பொருளைப் பெரிதாகக் கருதி லட்சியத்திலிருந்து வழுவிவிடக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது."

கருப்புச் சட்டத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் காந்திஜி கைதானார். அவருக்கு இருபத்தைந்து பவுன் அபராதமும் அதைக் கட்ட மறுத்தால் இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனையும் கிடைத்தது. காந்திஜி, அபராதம் கட்ட மறுத்துவிட்டு சிறைக்குச் சென்றார். இந்தச் சமயத்தில் கஸ்தூரிபா உடல்நலமற்றிருக்கும் செய்தி அவருக்குக் கிடைத்தது. சிறையிலிருந்து 9-11-1908 அன்று பாவுக்கு ஆறுதல் கூறி அவர் கடிதம் எழுதினார். அதில் ஒரு பகுதி வருமாறு: "நீ உடல்நலமற்றிருப்பது பற்றி திரு. வெஸ்ட் செய்தி அறிவித்தார். நான் வருந்தினாலும் அங்கு உடனே வரக்கூடிய நிலைமையில் இல்லை. அபராதத் தொகையைக் கட்டினால் விடுதலைப் பெறக்கூடும். ஆனால் அபராதம் செலுத்த நான் விரும்பவில்லை. நீ மனம் தளராதே. பத்தியமாக உணவு எடுத்துக்கொள். நான் பிரிந்திருக்கும்போது உன்னை இழந்தால் அதை இறைவனுடைய திருவருளாகக் கருதுவேன். உன்னை மனமார நேசிப்பதால், நீ இறந்துவிட்டால் மறுமணம் செய்துகொள்ள மாட்டேன். உன்னை நினைவில் போற்றி வாழ்க்கையைக் கழிப்பேன். உற்றாரைப் பிரிந்து துயரமடைவது சத்தியாக்கிரகத்தில் ஓர் அம்சம். நான் நடத்துவது தூய்மையான போராட்டம். அதில் சாவுக்கும் வாழ்வுக்கும் பேதமில்லை. இறைவனைச் சரணடைந்து செயலாற்றுகிறேன். நீயும் இறைவனிடம் பணிந்து மனக் கவலையை விடவேண்டும் என்பதே எனது கோரிக்கை."

காந்திஜி 1927-ஆம் ஆண்டில் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்தார். ஒரு பொதுக் கூட்டத்திற்கு வந்தபோது ஓர் ஐரோப்பிய மாது கஸ்தூரிபாவை சுட்டிக் காட்டி, "இவர் உங்களுடைய தாயாரா?" என்று காந்திஜியிடம் கேட்டார். காந்திஜி

சிரித்துக்கொண்டே 'ஆம்' என்றார். மறுநாள் இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்துவிட்டது. அன்று மாத்தளையில் நடந்த கூட்டத்திற்கு கஸ்தூரிபா வரவில்லை. அன்பர் ஒருவர் "உங்களுடைய தாயார் வரவில்லையா?" என்று காந்திஜியிடம் கேட்டார். காந்திஜி உடனே பதிலளிக்கவில்லை. கூட்டத்தில் பேசும்போது அவர் சொன்னார், "நேற்று இரவு பாவை எனது தாயாரா என்று ஒருவர் கேட்டார். இன்றும் அதே கேள்வி கிடைத்தது. பரஸ்பர சம்மதத்தின்பேரில் பல ஆண்டுகளுக்கு முன்பு பா என்னுடைய மனைவி ஸ்தானத்தை விட்டுவிட்டாள். பிறகு அவள் எனக்கு, தாய், தோழி, சமையற்காரி எனப் பல துறைகளில் அன்புப் பணி செய்து வருகிறாள். எனக்குக் கிடைக்கும் வரவேற்புக்களில் கலந்து கொள்ள அவளும் கிளம்பிவிட்டால் என்னுடைய வசதிகளைக் கவனிக்க இயலாது. எனக்கு உணவு தயாரிப்பது தனிக் கலையாகும். ஆகவே எங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் கொண்டிருக்கிறோம். உழைப்பு அவளுக்கு, அவளுடைய உழைப்பை ஏற்றுக்கொள்ளும் எனக்கு வெளியிடங்களில் கிடைக்கும் உபசாரமும் கௌரவமும் எனக்கு. நான் பனியா. என்னுடைய வியாபாரத்தில் நஷ்டமே கிடையாது. நீங்கள் கஸ்தூரிபாவைப் பற்றி அன்புடன் விசாரித்தீர்கள் என்ற செய்தியை எனது சகாக்கள் அவளிடம் தெரிவித்துவிடுவார்கள் என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்."

உப்பு சத்தியாக்கிரக காலத்தில் காந்திஜி சிறை சென்ற பிறகு பர்டோலி கிராமங்களில் பா பிரசாரம் செய்தார். சிறிது உடல் நலிவு ஏற்பட்டது. போர்ஸாத் நகரத்தில் பெண் தொண்டர்களை, போலீஸார் அடித்துத் துன்புறுத்தியதாகச் செய்தி கிடைத்தது. பா உடனே போர்ஸாத்திற்கு புறப்பட ஏற்பாடு செய்தார். உடனிருந்தவர்கள், நீங்கள் பலவீனமாக இருப்பதால் போகவேண்டாம் என்று தடுத்தபோது "பாபு சிறையிலிருக்கும்போது மக்களுக்கு ஊக்கமளித்து போராட்டத்தை நடத்துவது என் பொறுப்பு" என்று கூறிவிட்டு பா புறப்பட்டார். போர்ஸாத் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பெண் தொண்டர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்

பர்டோலி தாலுகாவில், 1932-ஆம் ஆண்டில் பா சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார். சிறையில் அவருக்கு 'சி' வகுப்புக் கைதிக்கான வசதி கிடைத்தது. இதைக் கண்டித்து திரு. போலக் லண்டனிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையில் எழுதினார். இந்தச் செய்தியை மகாதேவ தேசாய், காந்திஜிக்குப் படித்துக் காட்டினார். அப்போது அருகிலிருந்த ஸர்தார் படேல் சொன்னார், "போலக் மட்டுமல்ல. இந்தச் செய்தியைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஆத்திரம் வருவது இயல்பு. பா அஹிம்சையின் உருவம். அவருடைய முகத்தில் ததும்பும் அன்பையும் அமைதியையும் நான் வேறு எவரிடமும் கண்டதில்லை. பாவின் எளிமையும் பவ்யமும் வியக்கத்தக்கது."

அதற்கு காந்திஜி சொன்னார்: "நீங்கள் சொல்வது மெய் தான். ஆனால் பாவின் திடசித்தம்தான் அவளுடைய சிறந்த இயல்பு என்பது என்னுடைய கருத்து. அன்புள்ளமுள்ள பாவுக்கு கோபம் உண்டு, சிடுசிடுப்பு உண்டு, எதையும் நேர்மையுடனும் தூய்மையுடனும் செய்யும் இயல்பு உண்டு, ஆனால் தென் ஆபிரிகா போராட்ட காலத்திலிருந்து நாளதுவரையில் அவள் திடசித்தத்துடனும் துணிவுடனும் செயலாற்றிவருவது தான் சிறப்பு."

காந்திஜி ஆத்ம சுத்திக்காக, 1933-ஆம் ஆண்டில், உபவாசம் இருக்கத் தீர்மானித்த செய்தி கேட்டதும் அவர் இந்தச் சோதனையில் வெற்றி பெற வேண்டும் என்று ஒரு தந்தியை எரவாடா சிறைக்கு அனுப்புமாறு மீரா பஹனை பா கேட்டுக்கொண்டார். தந்தியின் ஒரு பகுதி வருமாறு: "நீங்கள் உபவாசம் இருக்கத் தீர்மானித்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்ததாகவும், நீங்கள் வெற்றிபெறப் பிரார்த்திப்பதாகவும் பா தெரிவிக்கச் சொன்னார்."

அந்தத் தந்தியைப் பார்த்ததும் காந்திஜி ஆனந்தக் கண்ணீர் விட்டார். பிறகு பாவுக்குத் தெரிவிக்குமாறு ஒரு தந்தியை மீரா பஹனுக்கு அனுப்பினார்: "வேறு எந்தப் பெண்ணாலும் தாங்க முடியாத கண்டிப்பு மிக்கதோர் துணைவனை அவளுடைய தந்தை தேடித் தந்தார். அவளுடைய அன்பை நான் பொக்கிஷமாகக் கருதுகிறேன். தன்னுடைய கடைசிக் காலம் வரையில் அவள் துணிவுடன் வாழ வேண்டும். 'உன்னை மனைவியாகத் தந்ததற்கு இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்' என்று அவளிடம் கூறவும்—பாபு."

ஆகாகான் மாளிகையில் சிறையிருக்கும்போது பா, 1944-ஆம் ஆண்டு மகா சிவராத்திரியன்று இறைவன் திருவடி சேர்ந்தார். தகனக் கிரியை முடிந்ததும் காந்திஜி, தம் அறைக்குச் சென்று கட்டிலில் படுத்தார். அப்போது அருகிலிருந்தவர்களிடம் பின் வருமாறு சொன்னார்: "பா இல்லாமல் வாழ்க்கை சூன்யமாகி விட்டது. அந்த இடத்தை நிரப்பவே முடியாது. 62 ஆண்டுகள் என்னுடன் வாழ்ந்த துணைவி மறைந்துவிட்டாள். எங்களுடைய 37-ஆம் வயதில் நாங்கள் பிரம்மசரிய விரதத்தை ஏற்றுக் கொண்டோம். அதன்பிறகு பிரிக்க முடியாத பிணைப்பு எங்களுக்கு ஏற்பட்டது. அவள் 'ஆதியில் பாதிபோல்' என்னுடன் இணைந்து வாழ்ந்தாள்."

பா மறைந்த சில நாட்களுக்குப் பிறகு மணிலால் காந்தி, தம்முடைய மனைவியுடன் ஆகாகான் மாளிகைக்கு வந்தார். "பாபு நீங்கள் ஏகாங்கியாகிவிட்டீர்களே" என்று அவர் அழுத போது காந்திஜி சிந்தனை வசப்பட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு மணிலாலுக்கு ஆறுதல் மொழி கூறினார். அப்போது, "பாவும் நானும் தறியிலுள்ள பாவும் ஊடும்போல வாழ்ந்தோம். இப்போது ஊடிழை இல்லாத பாவு போல தனித்து நிற்கிறேன்" என்றார்.

கிழக்குப் பாகிஸ்தானில் காந்திஜி சுற்றுப் பயணம் செய்த போது 22—2—1947 அன்று சார்கிருஷ்ணப்பூர் என்ற கிராமத்தில் தங்கினார். ஆங்கிலப் பஞ்சாங்கப்படி அன்று பா சிரார்த்த தினம் ஆகையால், உள்ளூர் ஊழியர்கள் பிரார்த்தனை மேடையில் பாவின் புகைப்படம் வைத்து மாலையணிவித்தார்கள். அன்று காந்திஜிக்கு மௌனதினம். ஆகவே பிரார்த்தனை முடிந்ததும் ஒரு குறிப்பு எழுதி அருகிலிருந்த அன்பரிடம் தந்தார். அதில் ஒரு பகுதி வருமாறு: “மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதே நேரத்தில் பா இறைவன் திருவடியை அடைந்தாள். கீதா பாராயணத்தின்போது அவளுடைய கடைசிக்காலக் காட்சியை நினைத்துக் கொண்டேன். அவள் என்னுடைய மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருப்பதுபோலத் தோன்றிற்று. என்னுடைய அஹிம்சை வழிக்கு அவள்தான் ஆசிரியை என்றால் மிகையல்ல. அவளுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பினால்தான் அஹிம்சை வழியை ஆண்டு வெற்றி பெற்றேன். அவள் என்னுடைய குண இயல்புகளை நன்றாகத் தெரிந்து கொண்டு செயலாற்றினாள். கணவனிடம் அவளுக்கு இருந்த பக்தி ஈடு இணையற்றது.”

With best compliments from

H. M. PANDIT

HEMUBHAI CHANCHANI

V. T. RAMANATHAN

D-46 Defence Colony,

NEW DELHI-3.

With the compliments of:

The Imperial Tobacco Company of India Ltd.



காந்திஜியும் எல்லைப்புற காந்தியும்

ஜ. ஜகந்நாதன்.

—: o :—

இந்தியாவின் வட எல்லைப் பாதுகாப்புக்காக ஆண்டு தோறும் பல லட்சம் ரூபாய்கள் செலவில் ராணுவத்தை நிறுத்தி வைத்திருந்தது பிரிட்டிஷ் அரசு. வட எல்லைப்புற மாகாணத்தில் வாழும் பட்டாணிய மக்களை அடக்கி ஆள்வதற்காகவே ராணுவத்தை நிறுத்திற்று என்றாலும் எல்லைப் பாதுகாப்பு என்ற பெயரைச் சொல்லி நிதி ஒதுக்கிற்று; பட்டாணியர்களை அடக்கியாள்வதில் சிக்கல்கள் ஏற்படும்போது கிராமத் தலைவர்

களிடையே பூசலைக் கிளப்பி மித்ரபேதம் செய்து ஒருவரை ஒருவர் அடித்து மாய்த்துக் கொள்ளவும் தயங்கவில்லை. இரத்தத்திற்கு இரத்தம் என்ற ஆவேசத்துடன் வாழ்ந்த பட்டாணியர்கள் வறுமையில் சிக்கி, கல்வியறிவு இல்லாமல் இருந்ததால் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுடைய சூழ்ச்சியில் சிக்கினர்கள். இவர்களுக்கு கல்வி போதித்து, அஹிம்ஸைத் தத்துவத்தை விளக்கி வெற்றிபெற்றவர் கான் அப்துல்கஃபார்கான். 1890 ஆம் ஆண்டில் சர்ஸதா வட்டத்தைச் சேர்ந்த உத்மான்ஸாய் கிராமத்தில், தனவந்தரும் கிராமத் தலைவருமான கான் பைராம் கானுடைய இரண்டாம் புதல்வராக கான் அப்துல் கஃபார் கான் தோன்றினர். பெஷாவாரிலுள்ள எட்வர்டு மிஷன் உயர்நிலைப்பள்ளியில் பயின்று கிராமத்திற்குத் திரும்பிய இளவலை இங்கிலாந்துக்கு அனுப்ப விரும்பினர் தந்தை. முதல் பையன் கல்வி பெறுவதற்காக இங்கிலாந்துக்குச் சென்றதால் பிரிவுத் துயரத்தை அனுபவித்த அன்னை இரண்டாம் பையனை வெளியூருக்கு அனுப்ப இசையவில்லை. அன்னையின் சோகத்தை உணர்ந்த தனயன் வெளியூர் செல்லும் யோசனையைக் கைவிட்டான். "மக்களுக்குப் பணியாற்றுவதற்காக வெளிநாடு சென்று கல்வி பயில வேண்டாம். பெற்றுள்ள அறிவைக் கொண்டே இங்கிருந்து பணியாற்றலாம்" என்று அன்னை கூறியதை ஏற்றுக் கொண்டான்.

மக்களால் அன்புடன் பாத்ஷாகான் என்றும் எல்லைப்புற காந்தி என்றும் அழைக்கப்படும் அப்துல் கஃபார் கான், தேசியக் கல்விக் கூடங்களை நிறுவ விரும்பினர். துரங்கசாய் ஹாஜியின் உதவியுடன் 1911இல் தம்முடைய வட்டாரத்தில் சமய போதனைக்கும் தாய் மொழிக்கும் முதலிடமளிக்கும் தேசியப் பள்ளிக்கூடங்களை நிறுவினர். பட்டாணியர்கள் கல்வியறிவு பெறுவதை விரும்பாத பிரிட்டிஷ் அதிகாரிகள் பலப்பல தொல்லைகளைக் கொடுத்தார்கள். அவற்றைச் சமாளித்துக் கொண்டு தம்முடைய பணியை விரிவாக்குவதில் கவனம் செலுத்தினர் பாத்ஷா கான்.

ரௌலட் சட்ட எதிர்ப்பு இயக்கத்தில் கலந்து கொண்ட போது, பாத்ஷாகானுக்கு மூன்று மாதம் சிறைத்தண்டனை கிடைத்தது. காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியதும் அவர் சிறிதும் தயக்கமின்றி அதில் கலந்து கொண்டார். "இஸ்லாமியர்களுக்கு அஹிம்ஸைத் தத்துவம் புதிதல்ல. நேர்மையான உழைப்பு, அன்பு, கடமை ஆகியவை பற்றி நபிகள் நாயகம் கூறியதை புது விளக்கத்துடன் காந்திஜி கூறி செயலாற்றுகிருர்" என்று ஒரு சமயம் பாத்ஷா கான் கூறினர். காந்திவழியில் செயலாற்றத் தொடங்கியபிறகு, மக்களுக்குத்

தொண்டாற்றுவதற்காக, ஒழுக்கம், சீலம், தொண்டு இவற்றை அடிப்படையாகக் கொண்டு — குதாய் கித்மகார் — என்ற பெயரில் அருள்பணித் தொண்டர் படையை அவர் 1928 இல் நிறுவினர். கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி ஆகியவற்றை வற்புறுத்தி மக்களிடையே பணியாற்றச் சென்ற இந்த வீரர்கள் அஹிம்ஸையை விரதமாக ஏற்றுக் கொண்டவர்கள். எதிரியைத் தாக்குவதைவிட அவன் செய்த தீங்கை மன்னித்து அன்பால் கட்டுப்படுத்துவதே வீரனுடைய தர்மம் என்பதை ஏற்றுச் செயலாற்றினர்கள் காந்திஜியும் பாத்ஷாகானும்.

உப்பு சத்தியாக்கிரகத்தில் குதாய் கித்மகார் படையைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள். சத்தியாக்கிரகிகளை தடியாலடித்தும் அவர்களுடைய உடைமைகளைச் சூறையாடியும், வீடுகளுக்குத் தீவைத்தும் இப்படி பலப்பல அக்கிரமங்களை பிரிட்டிஷ் ராணுவ வீரர்கள் செய்தார்கள். ஆனல் சத்தியாக்கிரகிகள் மனம் தளரவில்லை. பழிக்குப்பழி வாங்கும் இயல்புடைய பட்டாணிய வீரர்கள் அஹிம்ஸை விரதத்தை ஏற்றுக் கொண்டு கஷ்டநஷ்டங்களை பொறுத்துக் கொண்டு தேசப் பணியாற்றினர்கள்.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியதும் மக்களுடைய சம்மதத்தைப் பெருமலே பிரிட்டிஷ் அரசு, இந்தியாவை

With the best compliments from

ALVITONE LABORATORIES

108, G. S. T. ROAD, PALLAVARAM,

MADRAS-43.

Manufacturers of Alvitone, Alvimilk and Alvinste
a Food Beverage, Milk-Food and
Instant Tea

போரில் ஈடுபடுத்திற்று. போருக்குப் பிறகு நாட்டுக்கு விடுதலை வழங்குவதாக வாக்களித்தால், போர் முயற்சிக்கு உதவக்கூடும் என்று காங்கிரஸ் காரியக்கமிட்டி ஓர் தீர்மானத்தை நிறைவேற்றிற்று. காரியக் கமிட்டியில் அங்கம் வகித்த பாத்ஷாகான் இந்த முடிவை ஏற்கவில்லை; தம்முடைய அங்கத்தினர் பதவியைத் துறந்தார். ஏகாதிபத்தியத்திற்கு நிபந்தனையின் பேரில் உதவ முன் வருவதும் அஹிம்சைக்கு முரணானது என்பதுஅவருடைய வாதம். காந்திஜி அவருடைய கூற்றை ஏற்றுக் கொண்டார்.

காந்திஜியைப் போல் பாத்ஷாகானும் எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொண்டவர். சிறந்த சமயப் பற்றுடையவர் என்றாலும் பிற சமயங்களில் வெறுப்பு இல்லாதவர். பஞ்சாபிலுள்ள குஜரத் சிறையிலிருந்த காலத்தில் மற்றக் கைதிகளுடன் கலந்து பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அப்போது அவர் பகவத்கீதையும் சீக்கியர்களுடைய வேதமான 'கிரந்த் ஸாகேபை' யும் பொருளுணர்ந்து படித்தார். "முஸ்லிம் சமயநூல் அரபு மொழியிலும், இந்து சமய நூல்கள் வடமொழியிலும் இருப்பதால், அவற்றைப் படிப்பவர்கள் பொருளுணர்ந்து ஓதுவதில்லை. சீக்கிய சமயநூல் தாய் மொழியிலிருப்பதால்தான் ஒவ்வொரு சீக்கியனும் தன்னுடைய சமயத்தை நன்கு உணர்ந்து, ஒழுக முடிகிறது'' என்று அவர் ஒரு சமயம் சொன்னார்.

இறைவனைத் துதித்து, சத்தியத்திலிருந்து வழுவாமல் நடந்தால் அன்பும் அருளும் கிடைக்கும்; பகைமையும் குரோதமும் மறையும். மனத்தூய்மைக்கு இறைபணி அவசியம் என்ற கருத்துடையவர் பாத்ஷாகான். பகவத் கீதையை அன்றாடம் பாராயணம் செய்த காந்திஜியும், 'பலனை எதிர்பார்த்து செயலாற்றாதே. கடமையைச் செய். எல்லோரையும் நேசி. சத்திய வாழ்க்கை நடத்து.' என்று உபதேசித்தார்,

"ஒரு மதத்தில் சேர்ந்தவர்களுடைய எண்ணிக்கை பெருகுவதைக் கொண்டு அதன் வலிமையைக் கணக்கிட நான் விரும்பவில்லை. சமய நம்பிக்கையுடன் வாழ்கிறவர்களுடைய எண்ணிக்கையைக் கொண்டு ஒரு சமயத்தின் சிறப்பை உணரவேண்டும். உண்மையான உழைப்பு, நம்பிக்கை, அன்பு ஆகியவற்றையே இஸ்லாம் போதிக்கிறது. ஒரே கடவுளிடம் நம்பிக்கையும், நற்பணியும் தான் மனிதனுக்கு மோட்சமளிக்கிறது என்று 'கொரான் ஷெரீப்' கூறுகிறது'' என்று கூறியுள்ள பாத்ஷாகான், 'பகைவனுக்கு அருள்வாய்' என்று கடவுளை வேண்டி, அஹிம்சை வழியில் பணியாற்றுகிறார். காந்திஜி கூறிய அஹிம்சை வழியை செயலில் காட்டிய வீரர்களில் தலையாயவர் பாத்ஷாகான்.

மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி

எஸ். மணிவாசகன்

—o—

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சுய முயற்சியால் கல்வி பயின்று பதவிகள் வகித்து, ஏகாதிபத்திய அரசப் பேரவை உறுப்பினராக உயர்ந்த மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி காந்திஜிக்கு பத்துநாட்கள் மூத்தவர். மிதவாதக் கொள்கையுடன் ஆங்கில அரசுக்குட்பட்ட சுதந்திரத்திற்காக உழைத்த உத்தமர்களில் ஒருவர். காந்தி பிறந்த நூற்றாண்டு விழாவை சாஸ்திரி பிறந்த விழா என்றும் குறிப்பிடலாம்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வலங்கிமான் கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் 22-9-1869 அன்று ஸ்ரீனிவாச சாஸ்திரியார் பிறந்தார். கஷ்டப்பட்டு கல்வி பயின்றார். கல்லூரி நாட்களில் மாற்று உடைக்கு வசதியில்லாத அவர், அன்றாடம் மாலையில் தம்முடைய அங்கியைத் துவைத்துக் காயவைத்து மறுநாள் அதை அணிந்துகொண்டு கல்லூரிக்குச் செல்லுவது வழக்கம். ஒரு நாள் அவர், உடலைத் துண்டால் போர்த்திக் கொண்டு கல்லூரிக்குச் சென்றார். அதைக் கவனித்த முதல்வர், அவரை தம்முடைய அறைக்கு அழைத்து, “கல்லூரியின் ஒழுங்குமுறைக்குப் புறம்பாக இந்த உடையில் வந்ததற்காக உனக்கு எட்டணா அபராதம் விதிக்கிறேன்” என்றார்.

மாணவன் திகைத்தான். “என்னிடம் எட்டணா இருந்தால் மாற்று அங்கி ஒன்றை வாங்கியிருப்பேனே! என்னிடம் இருப்பது ஒரே அங்கி. அதை அன்றாடம் துவைத்து காயவைத்து அணிந்து கொள்கிறேன். இன்று அது ஈரம்புலராததால் துண்டைப் போர்த்திக் கொண்டு வந்தேன்” என்றான்.

முதல்வர் அந்த மாணவனுடைய ஏழைமை நிலையைக் கேட்டுத் தெரிந்து கொண்டதும் வருந்தினார். அவனுக்கு விதித்த அபராதத் தொகையை தாமே செலுத்தினார். கல்வி வசதிக்கும் ஏற்பாடு செய்தார். ஸ்ரீனிவாச சாஸ்திரி, கல்லூரிப்படிப்பு முடிந்ததும் ஆசிரியப் பயிற்சி எடுத்துக் கொண்டார். சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும், திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியிலும் பணியாற்றினார். ஆசிரியர்களுடைய குறைகளை எடுத்துக் கூறி பரிகாரம் தேடுவதற்காக சென்னை ஆசிரியர் சங்கத்தை நிறுவினார்.

அவருடைய மேதாவிலாசத்தைக் கவனித்த கோபால கிருஷ்ண கோகலே, புனாவில், தாம் நிறுவிய இந்திய ஊழியர் சங்கத்தில் பணியாற்றுமாறு அழைத்தார். அதன் பிறகுதான் அரசியல் துறையில் சாஸ்திரியாருடைய புகழ் பரவிற்று. சென்னை

சட்டசபையிலும், மத்திய சட்டசபையிலும், பிற்காலத்தில் ஏகாதிபத்ய அரசப் பேரவையிலும் பதவி வகித்த சாஸ்திரியார் வடமொழியில் வல்லவர்; ஆங்கிலேயர் வியக்கும் வண்ணம் ஆங்கில மொழி பேசும் திறமையுள்ளவர். ஆங்கிலச் சொற்கள் உச்சரிப்பைத் தெரிந்து கொள்வதற்காக 'வெப்ஸ்டர்' ஆங்கிலப் பேரகராதியை எப்போதும் வைத்துக் கொண்டிருப்பார். அகராதியின் புதுப்பதிப்பு வெளிவந்ததும் வாங்கிவிடுவார். சைதாப் பேட்டை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் படிக்கும்போது கல்லூரி முதல்வரான (ஆங்கிலேயர்) ஹால் ஆங்கிலச் சொல் ஒன்றை தவருக உச்சரித்தார். அந்தத் தவறை எடுத்துக்கூறி ஆங்கிலப் பேரகராதியிலிருந்து சான்று காட்டினுர் சாஸ்திரியார். கல்லூரி முதல்வர் முதலில் மனமுடைந்தாலும், ஆதாரபூர்வமாக தன்னுடைய தவறை எடுத்துக் காட்டிய பிறகு அமைதியடைந்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

அன்புள்ள கோதண்டராவ்,

என்னுடைய கல்லூரி நாட்களிலிருந்து நான் 'வெப்ஸ்டர்' அகராதியைப் படித்து வருகிறேன். நான் ஆசிரியனுகப் பதவி ஏற்றதும் சொந்தமாக ஓர் அகராதியை வாங்கினேன். அதன் பிறகு ஒவ்வொரு புதிய பதிப்பையும் வாங்கி, புதிய சொற்களை உச்சரிக்கும் பழக்கத்தை ஏற்றுக் கொண்டேன். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் உரையாற்றல் வகுப்பு நடத்தும்போது வெப்ஸ்டர் அகராதியை பக்கத்தில் வைத்துக் கொண்டே பாடம் நடத்தினேன். ஆசிரியர்களுக்கு ஆங்கிலச் சொல் உச்சரிப்பைச் சரியாகக் கற்றுத் தருகிறேன். அதற்குத் துணையாக இருக்கிறது அகராதி.

திரு. கோதண்டராவுக்கு 14-12-1940 அன்று சாஸ்திரியார் எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி.

கோபால கிருஷ்ண கோகலேயை தம்முடைய அரசியல் குரு என்று காந்திஜி குறிப்பிடுவதுண்டு. ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய கோகலே, புனவில் இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவி, மக்கள் பணியாற்றத் தொடங்கிய பிறகு, அரசியலில் புகழ் பெற்ருர். காந்திஜி இந்தியாவுக்குத் திரும்பியதும் இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்து பணியாற்றுமாறு கோகலேயின் அழைப்பைப் பெற்ருர். கோகலே கண்டெடுத்த தேசபக்த முத்துக்களில் ஒருவர்தான் சாஸ்திரியாரும். கோகலேயின் மறைவுக்குப்பிறகு இந்திய ஊழியர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை சாஸ்திரியார் ஏற்றுக் கொண்டார்.

ராமநாமத்திலும் கீதாபாராயணத்திலும் முழுநம்பிக்கை வைத்து அஹிம்ஸைவழியில் நின்று செயலாற்றினுர் காந்திஜி. அதே போல ராமாயணத்திலும் கீதையிலும் நம்பிக்கை வைத்துச் செயலாற்றினுர் சாஸ்திரியார். காந்திஜி அஹிம்ஸை

வழியில் செயலாற்றினாலும் தீவிரவாதி. அரசியலில் மிதவாதக் கொள்கையுடைய சாஸ்திரியார், காந்திஜியைப் போல அஞ்சா நெஞ்சமுடையவர். "காந்திஜியின் செயலைக் கண்டு வியப்பதில் பயனில்லை. அவரைப் போல சத்திய உபாசனை செய்து அஹிம்ஸை வழியில் செயலாற்றி அவருடைய கைகளைப் பலப் படுத்துங்கள்" என்று ஒருமுறை சொற்பொழிவாற்றும் போது சாஸ்திரியார் கூறினார். காந்திஜியின் தீவிரப்போக்குப் பிடிக்கா விட்டாலும் 'அந்தராத்மா' காட்டும் வழியில் அவர் செயலாற்று வதையும், ஏழை மக்களுடைய மேம்பாட்டுக்காக உழைப்பதை யும் சாஸ்திரியார் பாராட்டினார். சாஸ்திரியாரிடம் நேசபாவத் துடன் காந்திஜி பழகினார். தென் ஆப்பிரிக்காவாழ் இந்தியர் களுடைய நலனைக் கவனிப்பதற்காக, இந்திய அரசு 1928இல், ஏஜண்ட் ஜனரலாக சாஸ்திரியாரை நியமித்து கேட்டவுனுக்கு அனுப்பியதை காந்திஜி முழுமனதுடன் வரவேற்றார்.

காந்திஜி 1946ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சென்னைக்கு வந்தபோது உடல் நலமற்றிருந்த சாஸ்திரியாரைக் காணச் சென்றார். காந்திஜியைக் கண்டதும் சாஸ்திரியார் உணர்ச்சி வசப்பட்டார். "சின்னக் குழந்தை தன்னுடைய சகோதரனைத் தாவி அணைத்துக் கொள்வதைப் போல உங்களைக் கட்டித் தழுவ வேண்டும் போல இருக்கிறது" என்றார்.

காந்திஜி, சாஸ்திரியாருடைய கட்டிலில் அமர்ந்து, "மனசை அடக்கிக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்பட்டால் உடல்நலம் பாதிக்கும்" என்று ஆறுதல் கூறினார்.

சாஸ்திரியார் திணறிக் கொண்டே பின்வருமாறு பேசினார்: "வல்லரசுகளின் பிரதிநிதிகள் இன்று சமாதானப்பேச்சு நடத்தக் கூடியிருக்கிறார்கள். ஆனால் மனிதவர்க்கத்தைப்பற்றி—சமுதாயத்தைப்பற்றி—உலகசமாதானத்தைப்பற்றி—உங்களைத் தவிர வேறு எவரால் பேச முடியும்? சமாதான மகாநாட் டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாக உங்களை அனுப்பத் தவறியது அரசின் கடமை மறந்த செயல் என்றே கருதுகிறேன். அழைப்பு இல்லாவிட்டாலும் அஹிம்ஸை - சத்தியம் இவற்றை வாழ்க்கை விரதமாக ஏற்றுக் கொண்ட நீங்கள் அங்கே செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பம்."

சிறையிலிருந்து காந்திஜி வெளிவந்தது முதல் அவர், சர்வ தேச சமாதானத்தில் அக்கறை காட்டவேண்டும் என்றும், சான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் கலந்து கொள்வது பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றும் சாஸ்திரியார், கடிதத்திற்குமேல் கடிதம் எழுதி காந்திஜியை வற்புறுத்தி வந்தார்.

"மக்களுக்கு அஹிம்ஸை வழியில் பற்றுதலும் நம்பிக்கையும் இருந்தால் இங்கிருந்தவாறே என்னுடைய செய்தியை உலகுக் குத் தரலாமே! சத்தியத்தின் ஒளி எங்கிருந்தாலும் குன்றாது. என்னுடைய கொள்கைக்கோ வாக்குக்கோ மகிமை இருந்தால் இங்கிருந்தவாறே பணியாற்றி பலனைப் பெற்றுவிடலாம். என் னுடைய தனிக்குரலுக்கு பலன் கிடைக்கவில்லை என்றால் அது என்னுடைய பலவீனமே தவிர அஹிம்ஸையின் தவறு என்று கொள்ளல் கூடாது" என்றார் காந்திஜி.

ஆனால் அவருடைய வாதத்தை சாஸ்திரியார் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவாரத்திற்குப் பிறகு காந்திஜி, ஆஸ்பத்திரிக்குச் சென்று சாஸ்திரியைச் சந்தித்தார். இருவரும் உரையாடிக்கொண்டிருக்கும்போது சாஸ்திரியார் "ராமனைக் காணுதவர்களும் ராமனால் காணப்படாதவர்களும் மனித வர்க்கத்தால் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்று ஒரு சுலோகம் உண்டு. நீங்கள் ராமனுடைய அனுக்கிரகம் பெற்றவர்கள்... " என்று கூறிக்கொண்டு வரும்போதே மூச்சுத் திணறினார். சிறிது ஆசுவாசம் செய்து கொண்ட பிறகு அவர் சொன்னார்: "நேற்று பிற்பகல் நான் 'அரைக் கண்ணும் விழிப்புமாக' இருந்தபோது ராமாயணக்காட்சி ஒன்று தோன்றி மறைந்தது. அதைச் சுருக்கமாகக் கூறுகிறேன்: 'ராவணன் இறந்ததும் அனுமான் சீதாப் பிராட்டியிடம் சென்று—அன்னையே, உத்தரவு கொடுங்கள். உங்களை இம்சித்த இந்த ராட்சசிகளைத் தண்டிக்கிறேன் என்று சொன்னார். அதற்கு பிராட்டியார்—இந்த அபலைகள் என்ன செய்வார்கள. வயிற்றுப் பிழைப்புக்காக தலைவனுடைய ஆணையை ஏற்று நடந்தார்கள். எதிரியை மன்னித்து விடுதல்தான் வாழ்க்கையின் சிறப்பு. கருணைகாட்டுதல் தெய்வீகப்பண்பு. மாசற்ற வனகை இருப்பதும் அரிது. கருணைக்குப் பாத்திரமாவதும் இயற்கை என்று விடையளித்தார். இதைக் கூறும்போது அவர் மீண்டும் உணர்ச்சி வசப்பட்டார். காந்திஜி அவருக்கு ஆறுதலாக பதிலளித்துவிட்டு விடை பெற்றுக்கொண்டார்.

சாஸ்திரியார் இறுதிக் காலத்தில் தம்முடைய வாழ்க்கை நினைவுகளைப் பற்றி தமிழிலும் கட்டுரைகள் எழுதினர். எளிமையான நடையில் சுவை நிரம்பிய அவற்றை தமிழ் நாட்டில் பழம் பெருமையுடன் விளங்கும் 'சுதேசமித்திரன்' வெளியிட்டது. ஆங்கிலப் பேரரசுக்குட்பட்ட சுதந்தர பாரதத்தைக் காண விரும்பி, அமைதியான முறையில் அவர் தேசவிடுதலைக்கு உழைத்தார். ஆனால் நாடு விடுதலையடைவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு இறைவனடி சேர்ந்துவிட்டார். ●

சுடர் - காந்திமலர்

ஆசிரியக் குழு

பேராசிரியர் கே. ஸ்வாமிநாதன்
திரு. எஸ். ஸ்ரீநிவாசன்
,, ஸி. ஆர். கஸ்தூரிரங்கன்
,, கே. எஸ். ஜம்புநாதன்
,, அ. வெ. குப்புஸ்வாமி—கூட்டுனர்
,, தி. கோ. அனந்தஸ்வாமி—நிர்வாக ஆசிரியர்

காந்தியடிகளும் தமிழும்

பெ. நா. அப்புஸ்வாமி

—:o:—

ஒரு நன்னாள்

1933ஆம் ஆண்டு, ஸெப்டெம்டர் மாதம், 24ஆம்தேதி ஞாயிற்றுக் கிழமை, முன்னேறி வரும் தமிழின் வளர்ச்சியில் ஒரு நன்னாளாக எண்ணப்பட வேண்டிய நாள் என்று நான் கருதுகிறேன். அன்று காலையில் மயிலாப்பூரில், கற்பகாம்பாளும் கபாலீசுவரரும் குடி கொண்டிருக்கும் புகழ்பெற்றகோயிலின் வடக்கு மாடவீதியில், அங்குள்ள பெரிய குளத்தின் கரையில், 6ஆம் எண்ணுள்ள வீட்டின் மாடியில், ஒரு கூட்டம் கூடிற்று. சென்னையில் புகழ்பெற்ற வழக்கறிஞர்களில் ஒருவரும், உண்மையும் உழைப்புமே உருவாகியவரும்; பேரறிஞரும்; தமிழின்மீது அளவற்ற ஆர்வம் கொண்டவரும் அதில் மிக்க அன்பு உடையவரும்; சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கம், மியூஸிக் அக்டாதெமி, பென்னாத்தூர் சுப்பிரமணியம் உயர்நிலைப்பள்ளி, ஆகியவற்றின் உயிர் நாடி போன்று இருந்தவரும்; சென்னைப் பல்கலைக்கழகம் பதிப்பித்த தமிழ் அகராதியின் நிர்வாகக் குழுவின் தலைவருமாகிய; கே.வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் வீடு அது. தமிழில் பற்றுடைய பலர். புத்தகாலய சங்கத்தின் சார்பில் அவர் அனுப்பிய அழைப்புக்கு இணங்கி, அன்று அங்கே வந்து கூடியிருந்தார்கள்.

அன்று கூடியவர்கள் பல துறைகளில் பணியாற்றி வந்தவர்கள், பல மொழிகளில் பயிற்சி உடையவர்கள். வேற்று மொழிகளையும் தாய் மொழியாக உடையவர்கள், சென்னை நகரின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் அனைவரையும் அன்று அங்கே ஒன்றாக இணைத்துக் கூட்டியது அவர்கள் அனைவருக்கும் தமிழின் மீதிருந்த அன்பு. வடமொழிப் பெரும் புலவரும், தமிழின்மீது பேரன்பு கொண்டவருமான, மகாமகோபாத்தியாய எஸ்.குப்புஸ்வாமி சாஸ்திரியார் அன்று கூடிய கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். பின்பு அடுத்தடுத்து முறையாகக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. தமிழ் அன்பர் மகாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. வரவேற்புக் குழு, காரிய நிர்வாகக் குழு, முதலியவை உருபெற்றன. தமிழ் முதுபெரும் புலவர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் வரவேற்புக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தக் கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பியதும், தமிழ் நாட்டில் நிறுவப் பட்டிருந்த காரணத்தால், தமிழின் மீது சற்றே அன்புடையதும், தமிழில் பல சிறிய கை நூல்களை வெளியிட்டு வந்ததுமான, சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கத்தின் தலைவரான

கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் காரிய நிர்வாகச் சபையின் தலைவராகவும், பெ. நா. அப்புஸ்வாமி, செயலாளராகவும், பொருளாளராகவும், தி. கோ. ஆராவமுத ஐயங்கார், (வழக்கறிஞர், தொல் பொருள் ஆராய்ச்சி நிபுணர்), டி. ஆர். சொக்கலிங்கம் (எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர்), ஆர். விசுவநாத ஐயர் (தமிழாசிரியர்) என்போர் கூட்டுச் செயலாளர்களாகவும், நியமிக்கப் பட்டனர்.

முயற்சிகள்

அந்த ஆண்டில், ஜூலை மாதம் முதலே மகாநாட்டைக் கூட்டுவதற்கான முயற்சி ஏற்கெனவே தொடங்கப் பட்டிருந்தது. அம் முயற்சி வெற்றிகரமாகவும் பயன்படும் வகையிலும் நிறைவேறுவதற்கு வேண்டிய பணிகள் எல்லாம் முறையாகச் செய்யப்பட்டு வந்து கொண்டிருந்தன. பல ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் அவ்வப்போது செய்திகள், அறிக்கைகள், விளம்பரங்கள், முதலியவையும் நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் உள்ள தமிழ் மக்கள் அனைவரும், அதில் பங்குகொள்ளவேண்டும் என்று வேண்டுகோள்களும் ஏற்கெனவே அனுப்பப்பட்டிருந்தன. பின்னரும் அனுப்பப்பட்டன. அந்த ஆண்டில், டிசெம்பர் மாதத்தில், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் மாடியில் உள்ள மண்டபத்தில் (அக் கல்லூரி அந்நாளில் சைனா பஜார் ரோடில் நடைபெற்று வந்தது), அந்த மகாநாடு கூடிற்று. அப்போது, அம் மகாநாட்டின் கிளை விளைவுகளாக வேறு சில துணை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நிகழ்ச்சிகள்

அவற்றுள் ஒன்று தமிழ்ப் புத்தகக் காட்சி. அது அவ் ஆண்டில், டிசெம்பர் மாதம் 21 ஆம் தேதியன்று நடைபெற்றது. அன்று டி. கே. சிதம்பரநாத முதலியார் (டி. கே. சி.) முன் மொழிந்தபடி, மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தலைமை தாங்க, இராமநாதபுரம் அரசர் அதைத் திறந்து வைத்தார். டி. வி. கலியாணசுந்தர முதலியார் நன்றி கூறினார்.

தொடக்கம்

மறுநாளுக்கு மறுநாள், அதாவது டிசெம்பர் மாதம் 23 ஆம் தேதியன்று, தமிழ் அன்பர் மகாநாடு தொடங்கிற்று. 'செந்தமிழ்நாடு' என்னும் பாடலும், 'வாழிய தமிழ் மொழி' என்னும் பாடலும், தமிழ்த் தெய்வ வணக்கமாகப் பாடப் பட்டன. பின்பு வாழ்த்துச் செய்திகள் படிக்கப் பட்டன.

அறிஞர்கள் செய்த உதவி

பின்பு, அம் மகாநாட்டைக் கூட்டி வைப்பதற்கு அடிகோலிய சென்னைப் புத்தகாலய சங்கத்தின் தலைவர், கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், கேட்டுக் கொண்டபடி, ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் மகாநாட்டைத் திறந்து வைத்தார். மகா வித்துவான் ரா. இராகவையங்கர், தாமே இயற்றிய வாழ்த்துப் பாடலைப் படித்தார். வரவேற்புக் குழுவின் தலைவராகிய மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் அங்கே கூடியிருந்த அனைவரையும் வரவேற்றுத் தமது வரவேற்புரையைப் படித்தார்.

அதன் பின்பு, திரு. வி. க. அவர்கள், 'இது மகாநாட்டுக் காலம். அதை ஒட்டியே தமிழ் அன்பர் மகாநாடும் கூட்டப் பட்டிருக்கிறது. அன்பு வழி, கடமை வழி, கூலி வழி, என்னும் மூன்று வகைகளில் மக்கள் சேவை செய்யக்கூடும். இது அன்பு வழியில் சேவை செய்யக் கூட்டப்பட்ட மகாநாடு என்று தொடங்கி, அப்பொழுது கல்வி அமைச்சராக இருந்த எஸ். குமாரசாமி ரெட்டியாரைத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார். எஸ். சத்திய மூர்த்தி அந்த வேண்டுகோளை ஆதரித்துப் பேசினார். பின்பு, குமாரசாமி ரெட்டியார் தமது தலைமை உரையை நிகழ்த்தினார். பின்பு. சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின.

முற்று முழுதி தமிழ் இசை நிகழ்ச்சி

அன்று மாலை, காயகசிகாமணி ஹரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதரின் சொற்பொழிவு விரவிய, தனித் தமிழ் இசைக்கச்சேரி நடைபெற்றது. முற்று முழுதும் தமிழ்ப் பாடல்களையே பாடவேண்டும் என்று திட்டமிட்டு நடத்திய முதல் இசை நிகழ்ச்சி, எனக்குத் தெரிந்தவரையில், அது தான். அன்று பரிபாடல், சிலப்பதிகாரம், தேவாரம் திவ்வியப் பிரபந்தம், அருட்பா, இராம நாடகம், திருப்புகழ் முதலிய நூல்களிலிருந்தும்; முத்து சுப்பா பாரதி, கவிகுஞ்சர பாரதி, மதுரகவி, கடிகை முத்துப் புலவர், அழகிய சொக்கநாதப்பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி, ஆவுடையம்மாள், சுப்பிரமணிய பாரதி, ஆகியோர் இயற்றியவற்றிலிருந்தும்; 'இராகக் கட்டுப்பாடுகளுக்கும் விதிகளுக்கும் மீறிச் சங்கீதமாக உலவும்' காவடிச் சிந்திலிருந்தும்; தாமே இயற்றியவற்றிலிருந்தும்; ஒரு சில பாடல்களை, அங்கே கூடியவர்கள் மனமகிழ முத்தையா பாகவதர் பாடினார்.

தீர்மானங்கள்

அப்போது நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களில் முதலாவது இடத்தைப் பெற்றிருந்த தீர்மானத்தை, அப்பொழுது அது பெற்றிருந்த வடிவத்தில், குறிப்பிடுகிறேன். 'தற்காலத்துக்கு வேண்டிய விஞ்ஞான சாஸ்திரம் முதலிய கலைகள் அனைத்தையும் தமிழ் மக்கள், தம் தாய்மொழி வாயிலாகவே தெரிந்து கொள்வது அவசியமாதலால், சாதாரண ஜனங்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்ற வகைகளில், அக் கலை நூல்கள் தமிழில் வெளிவருவது இன்றியமையாதது என்று இம் மகாநாடு கருதுகிறது'. இதை அடுத்து, இன்னும் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒன்று (வேறு தீர்மானம்) 'தமிழில் பல்பொருள் விளக்க நூல் ஒன்றை வெளியிடுதல் அவசியமென்று இம் மகாநாடு கருதுகிறது'.

இவை எல்லாம் நிகழ்ந்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இப்போது உள்ள பலருக்கு அத்தகைய மகாநாடு ஒன்று நடந்தது என்பதே தெரியாது. ஆனால் அதில் பங்கு கொண்ட எங்களுக்கு அது எத்துணை பரபரப்பை ஊட்டியது என்பதை ஒருவாறு தெரிவிக்கவே இச் சூழ்நிலையைச் சற்றே விரிவாகக் கூறி

னேன். இப்பொழுது சாதாரணமாகி விட்டவை சில அப்போது புதியவையாகத் தோன்றின. எண்ணிச் செய்யவேண்டிய செயல்களாக இருந்தன. அந்நிகழ்ச்சிகளை எண்ணி இன்று மகிழ்கிறேன்.

சென்னையில் காந்தியடிகள்

அந்த மகாநாடு கூடிய காலத்தில், காந்தியடிகள் சென்னைக்கு வந்திருந்தார். மயிலாப்பூரில், லஸ் சர்ச்சு ரோடில், நாகேசுவர ராவ் பந்துலு குடியிருந்த ஸ்ரீபாக் என்னும் மாளிகையில், அவர் தங்கியிருந்தார். அந்த மகாநாட்டுக்கு அவரை அழைத்து வருவது இயலாத காரியம் என்பது தெரிந்தது. ஆகவே, அவரிடமிருந்து ஒரு வாழ்த்துச் செய்தியைப் பெற்று வரவேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். காந்தியடிகளோடு நெருங்கிப் பழகியவரும், அவர் நடத்திய 'ஹரிஜன்' பத்திரிகையைச் சில காலம் மேற்பார்த்து வந்தவருமான, ஆர். வி. சாஸ்திரியும், அவரது மனைவியார் விசாலாக்ஷி அம்மையாரும், எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார்கள். காந்தியடிகளிடம் நேரில் சென்று, அவரிடமிருந்து வாழ்த்துச் செய்தி ஒன்றை வாங்கிக் கொணர்ந்தார்கள்.

அந்த வாழ்த்தைக் காந்தியடிகளே தமது கைப்பட ஆங்கிலத்தில் எழுதினார். அதில் தேதியிட்டு, தமிழில் கையெழுத்தும் இட்டார். தமிழ் அன்பர் மகாநாடு, டிசெம்பர் மாதம் 23ஆம் தேதி திறந்து வைக்கப்பட்ட போது, தொடக்கத்தில் அக்கூட்டத்தில் கூடியிருந்த பொது மக்களின் முன்னிலையில் அதைப் படித்துக் காட்டிய பெருமை எனக்குக் கிடைத்தது.

COMPLIMENTS OF:

WESTERWORK ENGINEERS PRIVATE LIMITED

COMMERCE CENTRE

TARDEO ROAD, BOMBAY-34.

Telephone: 377491

Manufacturers of:

Industrial Furnaces, Packaged Steam Boilers, Pneumatic Foundary Moulding Machines & Lime Kilns



I hope that the love of Tamil lovers will prove lasting and stand the severest strain. The superficial knowledge that I have of Tamil has enabled me to appreciate the beauty & the richness of the language to neglect it would appear to me to be criminal.

மோ. க. காந்தி

22/12/33

இதன் மொழி பெயர்ப்பு:

"தமிழ் அன்பர்களின் அன்பு, எவ்வளவு கடுமையான சிரமங்கள் ஏற்பட்டாலும் அவற்றை எல்லாம் தாங்கிக் கொண்டு, நீடித்து நிலைத்திருக்கும் என்று நம்புகிறேன். தமிழ் மொழியைப்பற்றி நான் மேலெழுந்தவாரியாகவே அறிந்துள்ளேன். ஆயினும் அச்சொற்ப அறிவும் கூட அம்மொழியின் அழகையும் வளத்தையும் எனக்கு உணர்த்தியிருக்கிறது. அம்மொழியை அசட்டை செய்வது பெருங் குற்றம் என்றே எனக்குப் படுகிறது".

இக் கடிதத்தின் உருவ நேர்படி அந்த ஆண்டு (1933) டிசெம்பர் மாதம் 31ஆம் தேதியில் வெளிவந்த 'ஆனந்த விகடன்' இதழில் அச்சிடப்பட்டுள்ளது. அந்த உருவ நேர்படியின் உருவ நேர்படி இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் வேறு எத்தனையோ தொடர்புகள், அவர் தென் ஆப்ரிக்காவில் வாழ்ந்து வந்த காலம் முதலே இருந்திருக்கின்றன. ஆயினும் அவற்றுள் ஒன்றோடு எனக்கு ஒரு சிறு தொடர்பு ஏற்பட்ட காரணத்தால், அதையும் இங்கே குறிப்பிடுகிறேன். இதுவும் சற்றேறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சிதான். ஆண்டு நினைவில்லை.

ஆனந்த விகடனின் அதிபர் எஸ். எஸ். வாஸனும், அதன் ஆசிரியர் கல்கியுமாக, ஒரு கவிதைப் போட்டியை நடத்தத் திட்டமிட்டார்கள். அப் பாடல்கள் காந்தியடிகளின் வாழ்க்கையைப் பற்றிப் பாடப்பட வேண்டும். அவற்றுள் மிகச் சிறந்ததாக மதிப்பிடப்படும் பாடலுக்குப் பரிசு அளிக்கப்படும் என்று அறிக்கையை விடுத்தார்கள். பாடல்கள் வந்து குவிந்தன. அவற்றைப் படித்துப் பார்த்து, மிகச் சிறந்த பாடலைத் தேர்ந்தெடுக்க ஒரு மதிப்பாசிரியக் குழுவை நியமித்தார்கள். அக் குழுவினருள் நண்பர் வையாபுரிப்பிள்ளை ஒருவர், நண்பர் கல்கி ஒருவர் நானும் ஒருவன். வேறு இன்னும் யாரேனும் இருந்தார்களா என்பது நினைவில்லை.

அப்பாடல்களைப் படித்துப் பார்ப்பது மிகவும் சிரமமாக இருந்தது. எழுத்துக்கள் பலகாலும் அழகற்றவையாகவும், தெளிவில்லாதவையாகவும், பிழை மலிந்தவையாகவும் இருந்தன. பாடல் என்பது அனேகமாகப் பாடலாகவே இல்லை. காந்தியடிகளைப் பற்றிப் பாட வேண்டும் என்னும் ஆர்வம் பலருக்கு இருந்தது என்பதையே அவை நன்கு வலியுறுத்தின.

நாங்கள் அவற்றை எல்லாம் படித்துப் பார்த்து, பரிசுக்கு உரியது என்று ஒரு பாடலைத் தேர்ந்தெடுத்தோம். அது ஒரு நொண்டிச் சிந்து. அதன் ஆசிரியர் யார் தெரியுமா? பின்னர் அரசவைக் கவிஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாமக்கல் இராமலிங்கம் பிள்ளைதான் அப் பரிசுக்கு உரியவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர். காந்தியடிகளை இக் காலத் தமிழ்க் கவிகளில் தலைசிறந்த மூவர்—பாரதி, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, தேசிகவிநாயகம்பிள்ளை ஆகியோர் பாடியிருக்கிறார்கள். தமிழ் மொழியில் அவர்களுடைய பாடல்களாலும், வேறு எத்தனை எத்தனையோ நூல்களாலும், காந்தியடிகள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

VISITING DELHI?

Then Remember us for Excellent Boarding and Lodging in

SOUTH INDIAN STYLE

The South Indian Boarding House and for

Clean, Wholesome, Delicious North and South Indian Dishes

MODERN COFFEE HOUSE

(Opp. Telephone Exchange)

CONNAUGHT CIRCUS, NEW DELHI

Phone No. 48188 Grams: 'SIBHOUSE'

With best compliments from:

NESTLE'S PRODUCTS (INDIA) LTD.

BOMBAY – CALCUTTA – DELHI – MADRAS – MOGA

காந்தித் தாத்தா

(கவியோகி சுத்தானந்த பாரதியார்)

[இந்தப் பாட்டு காந்திஜியின் முன்னே பாடப்பட்டது. இதன் பொருளை அவர் நன்றாக உணர்ந்துகொண்டு "நான் தாத்தா இல்லே. ‖ தாதா ‖ பாரத தேசத்திற்கு உன்னை பலிதானம் தா ‖ என்று கேட்கிறேன்—தாதா" என்றார். இந்தப் பாட்டை தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு மகிழ்வுடன் அர்ப்பணிக்கிறேன்.]

தேசத்தி லேபெரிய தாத்தா—நாங்கள்
    தெய்வமெனக் கொண்டாடும் தாத்தா
நேசத்தி லேபெரிய தாத்தா—வாழ்க
    நிகரில் மகாத்மாகாந்தி தாத்தா 1

கூனிக் குறுகி யிருந்தாலும்—இளங்
    குமரன் என்றும் எங்கள் தாத்தா
வானக் கருமுகிலைப் போலே—எங்கள்
    வாழ்வு தழைக்க வந்த தாத்தா 2

என்பு தெரிய மெலிந்தாலும்—அவர்
    இமயத்தினும் பெரிய தாத்தா
அன்பு வடிவான தாத்தா—நாட்டின்
    அடிமை விலங்கறுத்த தாத்தா 3

ஏழைக் கிரங்குகின்ற தாத்தா—எங்கள்
    ஏக்கத்தைப் போக்குகின்ற தாத்தா
கோழைத்தனம் விடுத்து நாங்கள்—சிம்மக்
    கூட்டம்போல் எழச்செய்த தாத்தா 4

சீமையிலே படித்த தாத்தா—பெருஞ்
    செல்வத்தொழில் புரிந்த தாத்தா
தீமை நலியநலம் பொங்க—சர்வத்
    தியாகம் செய்த வீரத்தாத்தா 5

பாழும் சிறையில் அடைபட்டும்—கடும்
    பட்டினியிருந்து டலங் கெட்டும்—நாங்கள்
வாழும் விடுதலைக்கே நோற்ற—நல்ல
    மாதவ ராஜரெங்கள் தாத்தா 6

தண்டிக்குக் கால்நடையாய்ச் சென்றே—உப்பு
சத்தியாக் கிரகஞ் செய்த தாத்தா
எண்டிசையுலகிலும் இவர்போல்—மகான்
இல்லையெனப் பேரெடுத்த தாத்தா 7

பஞ்சடித்தி ராட்டினத்தில் நூற்றே—தொழிற்
பாடம் புகட்டுகின்ற தாத்தா
துஞ்சா முயற்சியுள்ள தாத்தா—ஒரு
சொல்லால் உலகைவெல்லும் தாத்தா 8

கோலைப்பிடித்து நடந்தாலும்—தர்மக்
கோட்டையைக் காத்துநிற்கும் தாத்தா
காலைபோற் சாந்தமுள்ள தாத்தா—நாட்டுக்
கவலை துடைத்தருளும் தாத்தா 9

புலம்பித் துடிதுடிக்கு மக்கள்—மனப்
புண்ணைக் குணப்படுத்தும் தாத்தா
விலங்குவலியை ஆத்ம சக்தி—கொண்டே
வெல்லுந் திறல்படைத்த தாத்தா 10

நேட்டால் கடுஞ்சிறையைத் தாங்கிப்—பொது
நீதிக்குப் பாடுபட்ட தாத்தா
மாட்டைப்போல் பாடுபட்டு வருந்தும்—ஏழை
மக்கள் கண்ணீர்துடைத்த தாத்தா 11

அஞ்சாத நெஞ்சுடைய தாத்தா—உண்மை
அகிம்சை விரதங்கொண்ட தாத்தா
நஞ்சான குண்டுவெடித்தாலும்—புன்
னகைத்துப் பொறுத்து வெல்லும் தாத்தா 12

எளியவாழ் வுடைய தாத்தா—உடல்
எடுத்த கீதையெங்கள் தாத்தா
தெளிந்த ராமஜபத்தாலே—தெய்வத்
தீச்சுடர் போல்விளங்கும் தாத்தா 13

தருமவீர ரெங்கள் தாத்தா—உப
சாந்த புருஷரெங்கள் தாத்தா
கருமவீரர் எங்கள் தாத்தா—வாழ்க
காந்தி மகாத்மா நல்ல தாத்தா. 14

—o—

காந்தீயம் - ஒரு சமயம்

நா. பார்த்தசாரதி, ஆசிரியர், 'தீபம்'

—o—

ஒரு காலத்தில் புத்தரிடமிருந்தும், மற்றொரு காலத்தில் சங்கரரிடமிருந்தும், மூலதனமாக சிந்தனைகள் கிடைத்திருப்பதைப்போல் அண்மைக் காலத்தில் வாய்மையான சிந்தனை மூலதனத்தை அளித்தவர் காந்தியடிகள்.

இந்த நூற்றாண்டைச் சேர்ந்த இந்தியனுக்குக் கிடைத்திருக்கும் மிகப் பெரிய மூலதனம் இது. காந்தீயம் என்னும் இந்த மூலதனம் தனக்குக் கிடைத்திருப்பதை ஒவ்வோர் இந்தியனும் இப்போது உணர்ந்திருப்பதைவிட இன்னும் முழு அளவில் உணர வேண்டும். சிந்தனை மூலதனத்தை அளித்து விட்டுச் செல்லும் தலைவர்கள், தாம் மறைந்த பிறகும், தமது நாட்டிற்கு வழி காட்டும் ஆற்றல் படைத்தோர் ஆவர்.

சுதந்திரப் போராட்டக் காலத்துக்கு முன்னும், பின்னும், இந்தியாவில் பெருந்தலைவர்களும், அறிஞர்களும், மேதைகளும் தோன்றியிருக்கிறார்கள். ஆனால் சில பல அரசியல் மாறுதல்களைத் தவிர அவர்கள் விட்டுச் சென்ற தத்துவங்களோ வேறெவையுமில்லை. காந்தியடிகள் ஒருவரே காந்தீயத்தை வாரிசாக விட்டுச் சென்றவர்.

மிக உயர்ந்த தத்துவங்களையும் சிந்தனைகளையும் வாரிசாக விட்டுச் செல்கிறவன் அதன் மூலம் தேசத்திற்குச் செய்கிற சேவையை, வேறெவரும்வேறெதன் மூலமும் செய்துவிட முடியாது. பழைய தலைமுறைகளின் தத்துவமும் புதிய தலைமுறை வேகமும் சந்தித்த இடத்தில் இருசாராருமே ஏமாற்றமின்றி ஒப்புக் கொள்ள ஏற்றதாக இன்றைய இந்தியாவிற்குக் கிடைத்திருக்கும் ஒரே தத்துவம் காந்தீயம்.

திருவள்ளுவர் எழுதி அளித்தவற்றை நம் கண்முன்னால் வாழ்ந்து விளக்கியவர் காந்தியடிகள். பரிமேலழகர் உள்ளிட்ட பதின்மரும் திருக்குறளுக்கு எழுதி உரையளித்தனர் என்றால், காந்தியடிகள் திருக்குறளுக்கு வாழ்ந்து உரையளித்தார். எழுதியளிக்கும் உரைகளைவிட வாழ்ந்தளிக்கும் உரை சிறந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னாலும் அந்த மருந்துக்குத்தான் நோய் தீர்க்கும் ஆற்றல் இருந்தது. இருபதாண்டுகளுக்குப் பின்னால் இன்றும் அந்த மருந்துக்குத்தான் நோய் தீர்க்கும் ஆற்றல் இருக்கிறது.

மற்றையத் தலைவர்களைப் போல் அல்லாமல் அரசியல் பிரச்னைகளுக்கும் சமூகப்

பிரச்னைகளுக்கும் சேர்த்தே மருந்து கண்டவர் காந்தியடிகள். சில தலைவர்களின் தத்துவங்களும் சிந்தனைகளும் அரசியல் பிரச்னைகளுக்குத்தான் விடிவு காண முடியும். வேறு சில தலைவர்களின் சித்தாந்தங்கள் சந்தர்ப்பவசமான பிரச்னைகளுக்கு மட்டுமே பரிகாரமாக அமையும். இன்னும் சில தலைவர்களின் முடிவுகள் ஒரு குறிப்பிட்ட பரிகாரம் காணபதோடு வேறு பல துறைகளில் இல்லாத புதிய பல பிரச்னைகளை உண்டாகி விட்டுவிடும்.

ஆனால் காந்தீயமோ இந்தியாவின் அரசியல், சமுதாய, ஆன்மீக, பொருளாதாரப் பிரச்னைகள் அனைத்தையும் அளாவி மிற்கிற பெரும் தத்துவமாக இருக்கிறது. பழமை, புதுமை ஆகிய இரண்டு பெரிய தலைமுறைகளை இணைக்கும் பாலமாகவும் இருக்கிறது. இத்தகைய பெருமைமிகு தத்துவத்தைப் படைக்கும் தலைவர் வேறெங்கும் தோன்றவில்லை. ஐரோப்பாவிலும் பிற மேற்கு நாடுகளிலும் கூட, அரசியலுக்கும் ஆன்மீகத்துக்கும் தொடர்பு கண்ட தலைவர்கள் இல்லை. அரசியல் என்ற கடலுக்கு ஆன்மீகம் என்ற கட்டுப்பாடான கரையைக் கண்டவர் காந்தியடிகள்.

"தற்காப்புக்கு அடுத்தவனைக் கொல்லும் சக்தி தேவையில்லை. தானே சாவதற்குரிய மன உறுதிதான் தேவை."

என்று அரசியல் புரட்சிக்கும் ஓர் அமைதியான வழியைக் கண்டுபிடித்துக் கொடுத்தவர். அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டவனே தவம் செய்கிறவனின் பெருமையையும், திருப்தியையும், அடையச் செய்தவர் இந்தியாவிலேயே காந்தி ஒருவர் தான்.

"உற்றநோய் நோன்றல்
உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."

என்று திருவள்ளுவர் தவத்திற்குக் கூறிய இலக்கணத்தை அறிம்ஸை, சாத்வீக எதிர்ப்பு, உண்ணு நோன்பு, ஆகியவற்றின் மூலமாகக் கடைப்பிடித்து அரசியலுக்கே தவம் செய்யும் பெருமையைத் தேட முயன்ற புதுமைக்காகவே காந்தியத்தின் பெருமையைக் கொண்டாடலாம்.

காந்தியத்தில் அமைந்திருக்கும் எளிமை காரணமாகவே அதைத் தவத்தோடு ஒப்பிடுவதும் இயலும். பெரிய நகரங்களையும் பல இலட்சக்கணக்கான மக்களையுமே அரசியல் மாறுதல்களை விளைவிக்கவல்ல கருவிகளாக மற்ற நாடுகளின் அரசியல் தலைவர்கள் நினைத்து வந்த வேளையில், "கிராமங்கள் அழிந்தால் இந்தியாவே அழிந்துவிடும் என்று நாட்டுப் புறத்து மக்களையும் சாதனமாகக் கருதியமைத்துக் கொண்ட பெருமைக்குரியது காந்தியம் ஒன்றே.

காந்தியத் தத்துவத்தின் அடிப்படை இந்தியப் பண்பாட்டின் வழிவழிவந்த தன்மைகளைப் பலமாகக் கொண்டிருப்பது என்பதை இப்படிச் சில பிரிவுகளைக் கொண்டே இனங்கண்டு கொள்ள முடியும்.

"மிருக பலத்தினால் எந்த மதத்தையும் காப்பாற்றிவிட முடியாது" என்று காந்தியம் நம்பியது. இவற்றையெல்லாம் சேர்ந்து கூர்ந்து கவனிக்கும் பொழுது காந்தியம் என்பது, வேறெந்த அரசியல் தத்துவங்

கலையும் போல, இரவல் வாங்கப்பட்ட வெளிநாட்டுத் தூண்டுதலை உடையதல்ல.

இந்த மண்ணிலேயே பிறந்து இந்த மண்ணின் அசல் தேசியத் தன்மைகளை உடைய ஒரே தத்துவம் காந்தியம்தான் என்று தெரிகிறது. காந்தியடிகளுக்கு முன்பும் இந்த நாட்டிலே சமுதாய, சமய, ஆன்மீக சித்தாந்தங்கள் உண்டு. ஆனால் இந்த நாட்டின் முதல் அரசியல் சித்தாந்தம் காந்தியடிகளால் தான் பிறந்தது. இந்த நாட்டின் கருணைமயமான முதல் அரசியல் மதம் காந்தியம் என்ற பெயரில்தான் உண்டாயிற்று.

"அன்பும் அஹிம்ஸையும்
உள்ளத்தில் ஊறியிருப்பதால்
அன்றிச் சேவை செய்வது
என்பது சாத்தியமில்லை."

என்று இந்திய அரசியல்வாதிக்கு மிக எளிய ஆரம்பப் பாடம் சொல்லிக் கொடுத்ததே காந்தியம்தான். அஹிம்சையால் காரியங்களைச் சாதித்து வெற்றி பெறலாம் என்று பரபரப்பு நிறைந்த இன்றைய அரசியல்வாதிக்கு ஏற்படும் சந்தேகத்துக்கு அன்றே சொல்வது போல், "ஆண்டவனின் அருளும் பலமுமின்றி அஹிம்ஸாவாதியால் எதுவும் செய்ய முடியாது." என்று காந்தியடிகள் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அஹிம்ஸை, ஆண்டவன், அருள், சத்தியாக்ரஹம் என்று வரும் சொற்களிலேயே ஓர் இந்தியப் பண்பாட்டின் அடிப்படை பலமாக அமைந்திருப்பதை நாம் கண்டுகொள்ள முடிகிறது. கதர், குடிசைத்தொழில் போன்றவற்றைக்கூட நாட்டின் இருவகை மக்கட் கூட்டத்தையும் இணைக்கும் சாதனமாகவே காந்தியடிகள் தொடங்கினார். "கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தக் கதர் ஒரு முயற்சி" என்று கூறியிருப்பதிலிருந்தே இது தெரிகிறது. இந்திய அரசியல், நகர்களையும் நகர்ப்புறங்களையும் வைத்து நிகழ்வதில்லை. அதில் இந்தியாவின் நாட்டுப் புறங்களுக்கும், கிராமங்களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட ஒரே அரசியல் சித்தாந்தம் காந்தியம்தான். அதனால்தான் காந்தியடிகள் "கிராமங்கள் அழிந்தால் இந்தியாவே அழிந்துவிடும்" என்றார்.

ஆயுத பலமும், பரபரப்பும் நிறைந்த இன்றைய உலகுக்கு சத்தியாக்கிரகம் பொருந்துமா பொருந்தாதா என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டது. அந்த வீண் சந்தேகத்தை அறவே போக்குபவர் போல் காந்தியடிகள் "சத்தியாக்கிரகம் என்பது எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரக்கூடிய நியதி" என்று தெளிவாகச் சொல்லி வைத்திருக்கிறார்.

ஒவ்வொரு நாட்டுக்கும், உலக அரங்கில், தனக்குச் சொந்தமான "தேசிய அரசியல் தன்மை" என்று காண்பித்துக் கொள்ள ஓர் சித்தாந்தம் வேண்டும். அப்படியே இந்தியாவும் தன்னுடைய அனைத்துலக அடையாளமாக உலகுக்குக் காண்பிக்க ஏற்றது காந்தியம் ஒன்றே.

காந்திக்கு முன்னும் பின்னும் இத்தகைய சமுதாய அரசியல் தத்துவங்களை, ஆன்மீக அடிப்படையில் ஆக்கி அளித்த தலைவர் வேறு எவரும் இல்லை. எனவே காந்தியம் ஒன்றே இந்தியாவின் கருணைமயமான அரசியல் மூலதனமாகிறது. சமதர்மம், சமதர்மம் என்று இப்

போது யார் யாரோ புதிதாக வந்து இந்தியாவுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உலகுக்கே முதன்முதலாக கருணைமயமான சமதர்மத்தை அளித்த நாடு இந்தியா தான்.

"பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள்
எல்லாம் தலை".

என்று வள்ளுவர் சொல்லாத சமதர்மமா?

"அன்பு என்பது எதையும் பிறரிடமிருந்து கேட்பதில்லை; கொடுக்கிறது". என்று காந்தியம் கண்ட சமதர்மத்தைவிட பெரிய சமதர்மத்தையா அந்நிய நாடுகளின் வரட்டுத் தத்துவங்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்துவிடப் போகின்றன? "தற்காப்புக்கு அடுத்தவனைக் கொல்லும் சக்தி நமக்குத் தேவையில்லை. தானே சாவதற்குரிய மன உறுதிதான் தேவை." என்று காந்தியடிகள் கூறியிருப்பதிலுள்ள தியாகத் தன்மையை விடவா வெளிநாடுகளின் 'கிளிப்பிள்ளை சமதர்மம்' பெரிது? நமக்கு வேண்டியது காந்தீய சமதர்மமே. இந்தியா, வறுமைப்படலாம், பல்லாயிரம் கோடி ரூபாய்கள் அந்நிய நாடுகளிடம் கடன் படலாம், அந்நிய நாடுகளால் ஏமாற்றப் படலாம், மோசம் செய்யப் படலாம். ஆனால் எல்லா ஆபத்துக்களிலிருந்தும் பிழைப்பதற்கு இன்னும் ஒரே ஒரு பெரிய மூலதனம் இந்தியாவில் மீதமிருக்கிறது. கருணைமயமான அந்த மூலதனத்தின் பெயர்தான் காந்தீயம். அது நம்மிடமிருக்கிறவரை "எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரக்கூடிய நியதி நம்மிடமிருக்கிறது" என்று தாராளமாக நாம் நம்பலாம்.

Cable: DIAZO, CALCUTTA   Phone: 45-3411, 45-5284, 45-9734

With the Compliments of :

DAS REPROGRAPHICS PRIVATE LTD.

Taratulla Road,

CALCUTTA-53.

தில்லியிலே காந்தி

(சுந்தா)

—o—

இங்கே இந்த தில்லியில் காந்தி நடமாடினார்
இங்கே இந்த ஊரிலே ஏந்தல் உரையாடினார்
இங்கே இந்தக் கூடலில் ராமன்துதி பாடினார்
சிங்கக் குகை வாசலில் சாந்தச்சமர் ஆடினார்.

வண்ணமலர் தூவினார் அண்ணல் இந்த மண்ணிலே
தண்அருளை ஊட்டினார் அண்ணல் இந்த மண்ணிலே
விண்ஒளியை வீசினார் அண்ணல் இந்த மண்ணிலே
விண்ணவராய் மாறினார் அண்ணல் இந்த மண்ணிலே.

ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது உண்மையையும், அகிம்சையையும், புலனடக்கத்தையும் குறிக்கும். அகிம்சையும், புலனடக்கமும் உண்மையைப் பின்பற்ற அவசியமானவை. உண்மை என்பதோ கடவுளுக்குச் சமம்; என்னைப் பொறுத்தவரை உண்மையே கடவுளாகும். ஆகவே ஒழுக்கத்திற்கு அப்பாற்பட்ட அறமோ, சமயமோ; கடவுளோ இல்லை.

'இதைச் செய்வது நமது கடமையாகும்' என்று தெரிந்து செய்வதுதான் ஒழுக்கம்; அச்சத்தாலும், பலவந்தத்தாலும் செய்யும் செயல் ஒழுக்கமாகாது.

தன்னலமில்லாத செயல்களே ஒழுக்கமாகும்.

நமது நடைமுறை வாழ்க்கைக்கு வழிகாட்டாத ஒழுக்கம் எனக்குத் தேவை இல்லை; ஆகவேதான் எனது நடைமுறை, வாழ்விலிருந்து பிரிக்க முடியாததாக இருக்கிறது.

—காந்திஜி

With best compliments from:

FARMAK LIMITED

REGISTERED OFFICE:

Station Road

AHMEDNAGAR

★

Manufacturers of:

PICKLES, CHUTNEYS, SQUASHES
AND SYRUPS

Suppliers of:

FIVE-MEN COMPO PACK TO THE
DEFENCE SERVICE

Phone: 718 - 719 Grams: "PICKLE"

வர்தா வைபவம்

நாரோடி

[குறிப்பு : காந்திஜீயின் 75-வது பிறந்தின விழாவன்று அடிகளை சேவா கிராமத்தில் சந்திக்கும் பாக்கியம், எனக்குக் கிடைத்தது. அதைப்பற்றி கல்கியில் அப்பொழுது எழுதப்பட்ட கட்டுரைதான் இது.]

—o—

இரண்டு நாட்களாக என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாம், "என்ன ஸார்! ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு நடக்கிறீர்களே! என்ன சமாச்சாரம்? ஏதோ விசேஷம் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறதே" என்று கேட்கிறார்கள்.

இவர்கள் எல்லாருக்கும் நான், "அதுதான் உங்களுக்கே தெரிந்திருக்கிறதே, ஏதோ விசேஷம் இருக்கவேண்டுமென்று. விசேஷந்தான்" என்றேன்.

"என்னதான் அப்படி பெரிய விசேஷம்? வாயைத் திறந்துதான் சொல்லுமேன்!" என்றார் ஒருவர்.

"அதுவா? வர்தா போய் வந்தேன்" என்றேன்.

"வர்தாவா! மகாத்மா காந்தி இருக்கும் இடத்துக்கா!"

"ஆமாம், அதே சாக்ஷாத் சேவா கிராமத்துக்குத்தான். அதுவும் அவருடைய 75வது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு."

"அப்படியானால் நீர் ரொம்ப பாக்கியசாலிதான்."

"சந்தேகமென்ன? அதனால்தான் ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு நடக்கிறேன். இன்னும் கொஞ்சம்நாள் போனால் கண்ணை மூடிக்கொண்டு கூட நடப்பேன்" என்றேன்.

உண்மையிலேயே, வர்தா போய்விட்டு வந்த இரண்டு நாட்களாக எனக்கு நிலை கொள்ளாமலேயே இருக்கிறது. மகாத்மா

காந்தியை, சேவா கிராமத்தில், அவருடைய 75வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது தரிசித்த நான் அப்படி தரிசிக்காத மற்ற எல்லாரையும்விட ஒருபடி மேலே போய்விட்டதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

வர்தாவுக்குப் போவதற்காக சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு ஸெண்ட்ரல் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தேன்.

ரயில் புறப்பட்ட சற்று நேரத்துக்குள்ளேயே, "வர்தா, வரதா, வராதா" என்று ஆகிவிட்டது. காரணம், என்னுடன் கூட வந்த கஸ்தூரிபா நிதி தமிழ் நாட்டுக் காரியதரிசியும் இன்னும் இரு தமிழர்களும்தான்.

சென்னையிலிருந்து வர்தா ஒருநாள் பிரயாணம்தான் என்னும் விஷயம் வர்தாவுக்கு எத்தனையோ தடவை போய் விட்டு வந்திருக்கும் இவர்களுக்குத் தெரிந்த விஷயமே. இருந்தும் ஏதோ பத்துநாள் பிரயாணத்துக்குப் புறப்படுவதுபோல் புளியஞ் சாதமும் தயிர் சாதமும் மூட்டை கட்டிக்கொண்டுவந்து சேர்ந்திருந்தார்கள். இதில் நான்கில் ஒரு பங்கைத் தீர்க்கும் பொறுப்பை எடுத்துக்கொண்டாக வேண்டும் என்று என்னை, வற்புறுத்தினால் நான் வர்தா, வரதா, வரதா, என்று ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டே சென்றதில் என்ன ஆச்சரியம்?

ஆகவே ஞாயிற்றுக்கிழமை காலை வர்தா ஜங்ஷன் வந்து சேர்ந்ததும் நான் கொண்ட சந்தோஷம் கொஞ்சம் நஞ்சமல்ல. இதற்கு மேலே சொன்ன காரணம் ஒருபுறமிருக்க, இன்னொரு முக்கிய காரணமும் உண்டு.

வர்தா வழியாக, நான் இதற்கு முன்னர் எத்தனையோ தடவைகள் சென்றிருக்கிறேன். வர்தா ஜங்ஷன் வந்ததும், "ஆகா! காந்திமகான் தங்கியிருக்கும் இடமல்லவா? அவரைத் தரிசிக்காமல் போகிறோமே" என்று வருத்தப்பட்டிருக்கிறேன்.

வர்தா வழியாக எத்தனையோ தடவை சென்றும், காந்தியைப் பார்க்க முடியாமல் சென்ற எனக்கு, இந்தத் தடவை கட்டாயம் காந்தியைப் பார்க்கப் போகிறோம் என்றதும் உண்டான சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல.

இத்தனை நாளாக அவரைப் பார்க்க நான் கொண்டிருந்த ஆவலை அறிந்தவரைப் போல, நானும் போய்ச் சேர்ந்தேன், காந்திஜியும் பம்பாயிலிருந்து அதே சமயம் வந்திறங்கினர்.

காந்தி வாக்கு

நமது பண்பாடு சீரழியாமல் காப்பதுதான் எனது சுயராஜ்யம். நமது பண்பாட்டுக்கேற்ப பல புதிய செய்திகளை எழுத விரும்புகிறேன்—அவற்றை இந்தியாவின் ஏட்டில் எழுதுவதையே சிறப்பாகக் கருதுகிறேன்.

—நான் கனவு காணும் இந்தியா

காந்திஜியுடனேயே சேவா கிராமத்துக்குப் போகவேண்டு மென்று நான் வெகு ஆவலாக இருந்தேன். ஆனால் அந்த ஆசை நிறைவேற வொட்டாமல் செய்துவிட்டார்கள், அங்கு நீல அரை நிஜாரும், வெள்ளை ஷர்ட்டும் அணிந்து கொண்டிருந்த சில தொண்டர்கள்.

வர்தாவிலிருந்து சேவா கிராமம் கிட்டத்தட்ட எட்டு மைல் இருக்கும். இந்த இரண்டு இடங்களுக்கு மிடையில் வர்த்தகக் கல்லூரி ஒன்று இருக்கிறது. எங்களைப்போல் காந்தியைப் பார்ப் பதற்காக வரும் எல்லாரையும் அங்கே வளைத்து வைத்து அவர் களுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடுப் பதை இக் கல்லூரி மாணவர்கள் அன்று தங்கள் வேலையாகக் கொண்டிருந்தார்கள். அப்பா! அந்த பொல்லாத மாணவர்களை இப்பொழுது நினைத்தாலும் ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

எங்களை ஒரு நிமிஷம்கூட விடாமல், ஒருவர் மாற்றி ஒருவர் உள்ளே நுழைந்து எங்கள் பிராணனை வாங்கிவிட்டார்கள். "வெந்நீர் வேண்டுமா" என்று கேட்டார் ஒருவர். "சாய், (அது தான் டீ) வேண்டுமா" என்று கேட்டார் இவருக்குப் பின்னால் வந்த இன்னொருவர். "பாம்பே சூடா, ஸார், பாம்பே சூடா" என்று எடுத்துக்கொண்டு ஓடி வந்தார் இன்னொருவர். "வாழைப் பழம் ஸார், வாழைப் பழம் ஸார்" என்று நச்சரித்து விட்டார் இன்னொருவர்.

தொந்தரவு பொறுக்காமல் இத்தனையையும் சாப்பிட்டு முடிப்பதற்குள் "சாப்பாட்டுக்கு வா, சாப்பாட்டுக்கு வா" என்று வேறு நச்சரித்து விட்டார்கள்!

சரி, சாப்பிட்டு விட்டுத்தான் வருவோம் என்று சாப்பாட்டு மண்டபத்திற்குள் நுழைந்தோம்.

அந்தப் பக்கத்துச் சாப்பாட்டுக்கும் இந்தப் பக்கத்துச் சாப்பாட்டுக்கும் எவ்வளவோ வித்தியாசம். இங்கே உள்ளது போல் அங்கே சாம்பார், ரஸம், மோர் ஒன்றும் கிடையாது. ஏதோ இரண்டு கறியை வைக்கிறார்கள். பிறகு சாஸ்திரத்துக்குக் காக்காப் பிடி அன்னத்தைக் கண்ணில் காட்டிவிட்டு, மாறி, மாறி ரொட்டியைக் கொண்டுவந்து தள்ளுகிறார்கள்.

சாப்பிட்டு முடிந்து அறைக்குப் போன பிறகாவது இந்தத் தொண்டர்கள் நிம்மதியாக விட்டார்கள் என்கிறீர்களா? ஒருவர் பின் ஒருவராக "சாப்பிட்டாச்சா, சாப்பிட்டாச்சா" என்று விசாரித்துக்கொண்டு போனார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும், "சாப்பிட்டாச்சு, சாப்பிட்டாச்சு" என்று பதில் சொல்லி முடிப் பதற்குள் தாவு தீர்ந்து விட்டது, பசியும் வந்துவிட்டது. கடைசி யில், "சாப்பிட்டாச்சா" என்று கேட்ட தொண்டர்களிடம் "இல்லை" என்று சொல்லி இரண்டாம் தடவை சாப்பிட வேண்டி வந்துவிட்டது! இதனால் முதல் பந்தியில் ஆட்டம் கண்ட என் பற்கள் இன்னும் அதிகமாக ஆட ஆரம்பித்து விட்டன.

Manufactured by
Jg Glass Industries Pvt. Ltd.,
Bombay-Poona Road, Pimpri,
Poona 18.
Gram—'GLASS'
Phone—8431, 8432
Telex—PN-218
Bombay Office:
Phone—251791/298355
Telex—2262
'METTLE' Vacuum Flasks come in over a dozen delightful designs. Each based on an Indian or Oriental motif. Available in 5 handy sizes. And in metal or plastic bodies. So...be choosy. Select one that suits just you.
Remember 'METTLE' Flasks are doubly strong. The inner bottle is made of seamless heat-resistant neutral glass, evenly silver coated for double protection. They combine both good value and good taste!
METTLE
VACUUM FLASKS
be choosy!
METTLE
METTLE

சரி, மேலும் அங்கேயே தங்கியிருந்தால் மூன்றும் தடவை சாப்பிட வேண்டி வந்தாலும் வந்துவிடும் என்று பயந்து கொண்டு, சேவா கிராமத்தை நோக்கிப் புறப்பட்டோம். மத்தியானம் மூன்று மணிக்கு சேவா கிராமத்தை அடைந்தோம். ஏழெட்டு சிறு குடிசைகளுக்கு நடுவில் இருந்த காந்திஜியின் குடிசையை அடைந்தோம். வாசல் பக்கமாக உள்ள திண்ணைக் கருகில் காந்திஜி காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் டாக்டர் சுசீலா நய்யார் முதலானோர் உட்கார்ந்திருந்தார்கள். அன்று பகல் 12 மணியிலிருந்து காந்திஜி தமது மௌனத்தை ஆரம்பித்து விட்டபடியால் யாருடனும் பேச வில்லை. அவருடைய பேத்திகள் இருவர் அவரை ஏதேதோ கேலி செய்து கொண்டிருந்தார்கள். அதற்கெல்லாம் அவர் வாய் விட்டுச் சிரித்துக்கொண்டிருந்தார்.

மணி நாலானதும் காந்திஜி சட சட என்று எழுந்து பக்கத்துக் குடிசைக்குள் நுழைந்தார். கூடவே காந்திஜியுடன் இருந்த எல்லோரும் எழுந்து சென்றார்கள். எதற்காக இந்தக் குடிசையைவிட்டு அந்தக் குடிசைக்குப் போனார் என்பது எனக்கு முதலில் விளங்கவில்லை. பிறகு குடிசையின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்ததில் விஷயம் விளங்கிற்று. காந்திஜியும், அவருடன் கூட இருந்தவர்களும் நூற்க ஆரம்பித்து விட்டார்கள்! அந்தக் குடிசை காலஞ்சென்ற ஸ்ரீ மகாதேவ தேசாய் வசித்த குடிசை என்றும், அதில் இப்பொழுது எல்லோரும் வழக்கமாகச் சேர்ந்து உட்கார்ந்து நூற்கிறார்கள் என்றும் தெரிந்துகொண்டேன்.

காந்திஜி நூற்றுவிட்டுத் தம் குடிசைக்குத் திரும்பும் பொழுது, அவரை பிடித்துத் தம்முடைய காமிராப் பெட்டிக்குள் போட்டு விடுவது என்று எங்கள் காமிராக்காரர் வழியில் நின்று கொண்டு விட்டார்.

கடைசியில் காந்திஜி வந்தார். தடியின்றி, பக்கத்தில் பிடித்துக்கொள்ள ஆளுமின்றித் தனியாக வந்தார். இதைக் கண்டதும் அவர் பேத்திகள் சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விட்டனர். "பாபுஜி தடியில்லாமல் நடக்கிறார், பாபுஜி தடியில்லாமல் நடக்கிறார்" என்று ஆரவாரம் செய்தனர்.

அப்பொழுது காந்திஜி என்னைப் பார்த்துச் சிரித்தார்.

ஆனால் காந்திஜி அப்படி என்னைப் பார்த்துச் சிரித்தது எனக்கு அனர்த்தமாகப் போய்விட்டது. இதன் காரணமாக எனக்கும் என் பக்கத்தில் நின்ற கஸ்தூரிபா நிதி தமிழ் நாட்டுக் காரியதரிசிக்கும் சண்டையே வந்துவிட்டது. "என்னைப் பார்த்துத்தான் காந்திஜி சிரித்தார்" என்று நான் சொன்னேன். தன்னைப் பார்த்துத்தான் சிரித்ததாக அவர் சொன்னார். தாம் கொடுத்த புளியஞ் சாதத்தையும், உருளைக் கிழங்கு வறுவலையும் திருப்பிக்கொடு என்று அவர் சொல்லும் நிலைமைக்குச் சண்டை முற்றிவிட்டது! நாளைக்கு இதைப் பற்றிக் காந்திஜியைக் கேட்டு விடுவது என்று தீர்மானித்துக்கொண்டு நாங்கள் தங்கியிருந்த கல்லூரிக்குத் திரும்பினோம்.

பிறந்தநாள் கொண்டாட்டத்தை அடுத்த நாள் பகல் இரண்டு மணிக்கு ஆரம்பிப்பது என்று தீர்மானித்திருந்தார்கள். வர்தாவி லிருந்து மோட்டார் வண்டிகளிலும், டாங்கா வண்டிகளும், ரேக்ளா வண்டிகளிலும், கால் நடையாகவும் ஜனங்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

கூட்டத்துக்கு முன்னால் நாமும் போய்ச் சேரவேண்டும் என்று ஒரு மணிக்கே காந்திஜியின் குடிசையை அடைந்தோம். காந்திஜி, வழக்கம்போல் தம் இருப்பிடத்தில் இருந்தார். பக்கத்தில் அன்று காலைதான் வர்தா வந்து சேர்ந்த ராஜாஜி, புலாபாய் தேசாய், சரோஜினிதேவி எல்லோரும் இருந்தார்கள் முதல் நாளே காந்திஜியுடன் வந்து இறங்கிவிட்ட தக்கர் பாபா அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்தார்.

கஸ்தூரிபா நிதிக்காகப் பாங்கியில் சேர்ந்திருந்த பணத்துக்கு பாங்கி ரசீது வாங்கி அதை ஓர் உறையில் போட்டு வைத்திருந்தார் பாபா. அன்று நிதியை காந்திஜியிடம் சரோஜினிதேவி சமர்ப்பிப்பது என்று தீர்மானமாகியிருந்தபடியால் தக்கர் பாபா அந்த உறையை சரோஜினிதேவியிடம் கொடுத்தார்.

உறையை வாங்கிக் கொண்டதும் சரோஜினிதேவி காந்திஜியைப் பார்த்து "பணத்தை உங்களிடம் கொடுக்கப் போவதில்லை. நானே எடுத்துக்கொள்ளப் போகிறேன். என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். அதற்குக் காந்திஜி சிரித்துக் கொண்டு, "ஆமாம், உன்னை நம்ப முடியாது. நீ எடுத்துக் கொண்டு போனாலும் போய்விடுவாய்" என்றார்.

அதற்குள் ஒருவர் சரோஜினிதேவியைப் பார்த்து "நீங்களும் ஒரு டிரஸ்டியாக இருப்பதால் பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிப் போய்விட முடியாது" என்று ஞாபகப்படுத்தினார்.

"அப்படியானால் ஒன்று பண்ணுங்கள். விழா ஆரம்பிக்க இன்னும் அரைமணி நேரந்தான் இருக்கிறது. அதற்குள் உங்கள் டிரஸ்டி வேலையை ராஜினாமாச் செய்துவிடுங்கள்" என்று யுக்தி சொல்லிக் கொடுத்தார் பக்கத்தில் இருந்த இன்னொருவர்!

இதற்கிடையில், வெளியே, ஸ்ரீமதி கஸ்தூரிபா வசித்த குடிசைக்கு எதிரே போடப்பட்டிருந்த கொட்டகையில் கூட்டம் நிரம்பி விட்டது. 2000 பேருக்கு மேலிருக்கும் ஜனம். அத்தனை பேரும் காந்திஜி பேசப் போவதைக் கேட்க ஆவலாக இருந்தபடியால் ஆசிரமவாசி ஒருவர் ஒலி பெருக்கும் கருவி அமைத்திருந்தார். ஆனால் இதைக் கேள்விப்பட்டதும் காந்திஜி ஒலிபெருக்கும் கருவி இருக்கக் கூடாது என்று உத்தரவிட்டுவிட்டார். இது அந்த ஆசிரமவாசிக்குப் பெருத்த ஏமாற்றமாகி விட்டது.

அதைப் பார்த்து ராஜாஜி, "ஏனய்யா அப்படி திகைத்து நிற்கிறீர்! காந்திஜி வேண்டாம் என்றால் எடுத்துவிடும்" என்றார். அப்பொழுதும் அந்த ஆசிரமவாசிக்கு அந்த ஒலி பெருக்கும் கருவியை எடுக்க மனமில்லை. கடைசியில் ராஜாஜி, "வேண்டுமானால் நான், புலாபாய்தேசாய், சரோஜினிதேவி மூவரும் தங்கியிருக்கும் விடுதியில் கொண்டுபோய் அந்த ஒலி பெருக்கும்

கருவியை வையும். நாங்கள் மூவரும் உம் ஆசை தீரக் கத்து கிறோம்'' என்று சொன்ன பிறகுதான் அந்த ஆசிரமவாசி ஒலி பெருக்கும் கருவியை அப்புறப் படுத்தினார்.

காந்திஜி அத்தனை கண்டிப்பாக ஒலி பெருக்கும் கருவி கூடாது என்று சொன்னதன் காரணம் எனக்குப் பின்னர்தான் விளங்கிற்று. வர்தாவில் பொதுக் கூட்டங்கள் கூட்டக் கூடாது என்று ஒரு தடை உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவை மீறக் கூடாது என்றுதான், காந்திஜி அன்று வந்திருந்த கூட்டத்தைப் பொதுக் கூட்டமாக மாற்ற இஷ்டப்படவில்லை.

அவரே அன்று பின்னால் கூட்டத்தில் சொன்னதுபோல் இந்த நிதி சம்பந்தமாகத் தாம் அழைப்பு அனுப்பியவர்களுடன் மட்டுமே அவர் பேச விரும்பினார். "பாக்கி அழைக்கப்படாமல் கூட்டத்துக்கு வந்திருக்கிறவர்களை போ என்று நான் எப்படிச் சொல்ல முடியும்!'' என்றும் கூறினார். இது நிற்க.

அந்த ஆசிரமவாசி ஒலி பெருக்கும் கருவியை அப்புறப் படுத்துவதற்குள் மணி கிட்டத்தட்ட இரண்டாகி விட்டது. உடனே தக்கர் பாபா காந்திஜியை அழைத்துச் செல்வதற்கு காந்திஜியின் குடிசைக்கு வந்து சேர்ந்தார்.

இதைப் பார்த்து சரோஜினி, "என்ன பிறந்தநாள் குழந்தையை அழைத்துச் செல்ல வந்திருக்கிறீர்களா! ஒரு தொட்டிலில் போட்டு எடுத்துச் செல்லுங்கள்'' என்றார். காந்திஜியும் மற்ற எல்லாரும் இதைக்கேட்டு நகைத்தார்கள்.

சரியாக இரண்டு மணிக்கு விழா ஆரம்பமாயிற்று. காந்திஜி வந்து நின்றதும் சரோஜினிதேவி எழுந்து நின்று காந்திஜிக்கு நெற்றியில் திலகமிட்டுத் தலையில் புஷ்பங்களைச் சொரிந்தார். சொரிந்துவிட்டுத் தம் நெற்றியில் விரல்களை வைத்துச் சொடுக்கித் திருஷ்டி கழித்தார்.

இதற்குப் பிறகு ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தைச் சேர்ந்த குழந்தைகள் காந்திஜிமீது பாட்டுப் பாடியதும் விழா ஆரம்பமாயிற்று.

காந்தி வாக்கு

ஆங்கிலேயர்கள் வெளியேறுவதால் இந்தியா சுதந்திரமடையாது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு குடிமகனும், மனப்பூர்வமாக உழைத்து, தன்னுடைய வாழ்க்கையை வகுத்துக் கொள்ள வேண்டும். தானும் சட்டசபைக்குச் செல்லும் தன்னுடைய பிரதிநிதியும் மனச்சாட்சியுடன் உழைப்பதன்மூலம் சிறப்புப் பெறலாம் என்பதை அவன் உணர்ந்தால்தான் நாட்டு விடுதலை பரிபூர்ணமாகும்.

—யங் இந்தியா 13-2-1930

With compliments from

DGL PRIVATE LIMITED

Manufacturers of :

Complete range of Fire Fighting Equipment and Appliances including Fire Engines

SERVICE STATION EQUIPMENT

CENTRALISED

LUBRICATION EQUIPMENT

LIGHT ENGINEERING STORES

Regd. Office :

14-M Block, Connaught Circus. New Delhi-1.

Telephone : 4 5 0 2 8 Grams : GARAGE

Branch :

10, Shahnajaf Road. Hazrat Ganj, Lucknow.

Telephone : 2 5 2 5 3 Grams : GROWMORE

தக்கர் பாபாவுக்காக அவரது அறிக்கையை, சுவாமி ஆனந்த் வாசித்தார். தக்கர் பாபா எழுதிய அந்த அறிக்கையை சுவாமி ஆனந்த் வாசித்துக்கொண்டே போகையில் ஒரு வேடிக்கை நடந்தது. ஒரு இடத்தில், "இன்னும் கொஞ்சம் நாளில் எனக்கு 75-வயது முடியப் போகிறது" என்று அவர் வாசித்தார். அப்பொழுது சபையில் கொல்லென்று சிரிப்பு ஏற்பட்டது. ஏனெனில் சுவாமி ஆனந்தருக்கு வயது 50, 55 தான் இருக்கும். இதைக் கண்டு அவர் உடனே, "எனக்கல்ல, தக்கர் பாபாவுக்கு" என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டார்.

அறிக்கை படித்து முடிக்கப்பட்டதும் கஸ்தூரிபா நிதியின் மாகாண காரியதரிசிகள் ஒவ்வொருவரின் பெயரும் படிக்கப்பட்டது. அவரவர்கள் தங்கள் தங்கள் இடத்தில் எழுந்து நின்று வணக்கம் செய்தார்கள். காந்திஜியும் அவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

இதற்குப் பிறகு காந்திஜி ஹிந்துஸ்தானியில் பேசினார். பணம் சேர்ப்பது கஷ்டம், ஆனால் அதைவிடக் கஷ்டம் அதை நன்கு செலவிடுவது என்றார். கிராமங்களில் சேர்க்கப்பட்ட தனத்தில் முக்கால் பங்கு அங்கங்கேயே ஸ்திரீகள் குழந்தைகள் இவர்கள் நன்மைக்காகச் செலவழிக்கப்படும் என்றார். இது விஷயமாக வேலை செய்ய ஸ்திரீ தொண்டர்கள் நிறைய முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ அரியநாயகம் தம்பதியும் குழந்தைகளும் 'ஜன கண மன' என்ற கீதத்தைப் பாட விழா இனிது முடிந்தது.

With best compliments from:

SANDOZ (INDIA) LIMITED

NEW DELHI

300 YEARS MERCK DARMSTADT 1668—1968

E. MERCK (INDIA) PRIVATE LIMITED

DARMSTADT
GERMANY

HEAD OFFICE: SHIV SAGAR ESTATE 'A', DR. ANNIE BESANT ROAD, WORLI, BOMBAY-18. WB.
BRANCHES : BOMBAY • CALCUTTA • DELHI • MADRAS

பாபு உதயம்

(கவிதா ரத்தினம்—திருமதி ஹா. கி. வாலம்)

—o—

பத்துத்திக்கும் பரவி ஏத்த
பாபு பிறவிஎடுத்தனன்
சத்தியத்தை சாணைபிடிக்க
சாந்தன் பிறவிஎடுத்தனன்
நித்தியத்தின் நிலைமை விளக்க
நிமலன் பிறவிஎடுத்தனன்
புத்தன் வடிவம் கொண்ட காந்தி
புனிதன் பிறவிஎடுத்தனன் 1

கொடுமை நெறியை வேறறுக்க
கூர்ஜரத்தில் உதித்தனன்
அடிமைத்தளை அறுத்துவீழ்த்த
ஆப்பிரிக்கா சென்றனன்
கடமை மறந்த இந்தியமக்கள்
கண்ணைத்திறக்க வந்தனன்
"உடமை உரிமை" என்றுஉணர்த்த
உத்தமன் இங்குவந்தனன் 2

கொல்லாமையை நிலைநிறுத்த
கொடுமை தாங்கவந்தனன்
அல்லாஹரியும் இரண்டும் ஒன்றென
ஆன்மநாதன் வந்தனன்
கல்லாதவர்க்கும் கருணைபொழியக்
காந்திமகான் வந்தனன்
இல்லாதவர்க்கு இதயம் அளிக்க
இனியன் எளிதுவந்தனன் 3

ஹரிஜனங்கள் உரிமைவழங்க
அன்பன் மகிழ்ந்துவந்தனன்
சிறுமையுற்ற மனிதர் தமக்குப்
பெருமையளிக்க வந்தனன்
வெறியையழித்து வெற்றியளிக்க
விமலன் எம்பால்வந்தனன்
கருணைபொங்க, பெருமை துலங்கக்
காந்திதாத்தா வந்தனன் 4

எட்டாக்கனியை எமக்கு அளிக்க
எங்கள்பிரான் பிறந்தனன்
அக்டோபரில் அகமகிழ்ந்து
அண்ணல்காந்தி பிறந்தனன்
"விட்டுப்போ, இனி, வெள்ளைக்காரா"
என்ற கிழவன் பிறந்தனன்
கெட்டுக்கிடந்த பாரதத்தை
திருத்தப்பாபு பிறந்தனன் ! 5

—o—

With Compliments from:

MERCK SHARP DOHME OF INDIA LTD.

Dugal House

Backbay Reclamation,

BOMBAY 20 BR.

மலாடுடையாரும் மகாத்மா காந்தியும்

பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார்

—o—

இந்தத் தலைப்பில் இரு பெருமக்களின் திருப் பெயர்கள் இணைக்கபபட்டிருப்பதை உணர்கிறோம். இருவர்களின் பெயரும் ஒருங்கே இணைக்கப்படுமானால் அதற்கு ஓர் இயைபு இருத்தல் வேண்டும் என்பது புலனாதல் திண்ணம். அந்த இயல்பை இக் கட்டுரையில் காணலாம்.

மலையமான் நாடு என்பதே மலாடு என மருவியுள்ளது. மலையமான் நாடு என்பது நடுநாட்டைச் சார்ந்தது. நடுநாடெனப்படுவது சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டிற்கும் இடைப்பட்ட நாடாகும். இந்த நடுநாட்டினைச் சார்ந்த சேதிநன்னாட்டுத் திருக்கோவலூரில் மலாடர் கோமன் என்னும் பெயரிய மன்னர் செங்கோல் செலுத்தி வந்தனர். இவர் சிவனடியார் வேடத்தை மெய்ப்பொருள் என எண்ணி அவர்களை வழிபட்டு வந்தமையின் அவர் மெய்ப்பொருள் நாயனார் என்றும் கூறப்பட்டு வந்தனர். அவர்பால் அழுக்காறுகொண்ட முத்தநாதன் என்னும் பெயரிய மற்றொரு மன்னன் பல முறை இவருடன் போர்புரிந்து தோல்வியுற்றுப் பிறகு வஞ்சகமாக மெய்ப்பொருளாரை வெல்ல சிவ வேடம் பூண்டு கையில் ஒரு புத்தகக் கட்டை வைத்துக்கொண்டு வருவான்போல அப் புத்தகக் கட்டுள் கத்தியை மறைத்துக் கொண்டு நாயனாரிடம் வந்து. தான் ஓர் அரிய சைவ ஆகம நூலினை வைத்திருப்பதாகவும், தான் அதனைத் நாயனாருக்கு உணர்த்த வந்ததாகவும் கூறினான். நாயனார் அவன் கூற்றை ஏற்றுத் தாம் வணங்கி நிற்கையில், முத்தநாதன் அவரைக் கத்தியால் குத்திவிட்டான். இதனைத் தம்நேரிலாத் தனிப்பெரும் தெய்வப் புலவராம் சேக்கிழார்,

கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅம் பரிசே செய்ய
மெய்த்தவ வேடமேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்

என்று பாடி அறிவித்துள்ளனர்.

PREVENT CHAPPING OF

PRETTY FACE!

LOVELY HANDS!!

USE

ALMOND BENZOIN
GLYCERINE
HAND LOTION

BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS

12-E, CONNAUGHT PLACE,

NEW DELHI.

PHONE: 42170

இந்த நிகழ்ச்சி நிகழ்ந்ததை உணர்ந்த தத்தன் என்னும் அணுக்கமான வாயில் காப்போன் தன் வாளினால் வஞ்சகனை முத்தநாதனை வெட்ட ஓச்சினான். இந்த நிலையிலும் மெய்ப் பொருளார், முத்தநாதனை வெட்டத் துணிந்த தத்தனின் வாள் ஏந்திய கையைத் தடுத்து "தத்தா இவர் நம்மவர்! இவரைக் கொல்ல வேண்டா" என்று கூறிக் கீழே சாய்ந்துவிட்டார். இந்த அரிய நிகழ்ச்சியினையும் அன்பில் பெரியராம் தொண்டர்சீர் பரவுவார்,

மறைத்தவன் புகுந்தபோதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண்கூடி வாளினால் எறியல் உற்றார்
நிறைத்தசெங் குருதிசோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில்தத்தா நமர்எனத் தடுத்து வீழ்ந்தார்

என்று அறிவித்துள்ளனர். இந்த அளவில் மட்டும் சொல்லி நிறுத்தினர் அல்லர் மெய்ப் பொருளார். மேலும், தத்தனை நோக்கி "எம்பிரான் அடியார் போக மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடுக" என்றும் கூறினர். அதாவது இந்தச் சிவனடியாரை யாரும் தடுத்துத் துன்புறுத்தாத வண்ணம் அவர் விரும்பும் இடத்தில் விட்டு வருக என்பதாம். இது மெய்ப்பொருளாரின் சுருக்கமான வரலாறு.

மகாத்மா காந்தியடிகளார் வாழ்க்கையிலும் மெய்ப்பொருள் நாயனாராம் மலாடுடையார் வாழ்க்கையின் நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சி நடந்தேறியதை யாவரும் அறிவர். அதாவது மகாத்மா காந்தியடிகளார் இராம நாம வழிபாட்டினை வழக்கமாகப் பல மக்களுக்கிடையே நடத்திக் கொண்டிருக்கையில், அவர்பால் வெறுப்புக் கொண்ட சமூக வெறிபிடித்த கோட்ஸே என்பவன் பிரார்த்தனைக் கூட்டத்திற் கலந்துகொள்ள வந்த ஓர் நன் மகன் போல அங்கு நின்று, கைத் துப்பாக்கியை மறைத்துக் கொண்டு, அருகு வந்து காந்தியாரைக் குறி பார்த்துச் சுட்டனன் அல்லனோ? எனவே இவ்விரு மகான்கள்,

திறன்அல்ல தன்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று.

மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தான்தன்
தகுதியால் வென்று விடல்.

the living past

The imprint of Time left on impressive buildings like the Taj Mahal is more easily discerned in written records. In place of mute memorials, eloquent books speak to one and all. The past is preserved in documents and books for posterity to show how and where history is imperishable. The same can be a guide to the future also.

Modern paper manufacture makes it easier to write or read about the great events or the mighty makers of history. Quality paper like that produced now by Seshasayee Paper & Boards truly helps the study of the living past.

Seshasayee Paper and Boards Ltd.,

Pallipalayam, Salem District, S. India.

Managing Agents:

Seshasayee Parsons and Whittemore Private Ltd.

MADRAS

Delhi Representative:

R. CHAKRAVARTHY

R 506, New Rajendranagar, New Delhi-5

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

என்னும் பொய்யா மொழிகட்கு இலக்கியங்களாகத் திகழ்பவர்கள் என்பதில் ஐயம் எழ இடம் உண்டா? இவ்விரு பெருமக்கள் உலகத்தார் உள்ளத்தில் மறவாமல் போற்றி வருதற்குத் தலையாய காரணம் யாது? நம் திருவள்ளுவர் கூறியுள்ளபடி,

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

என்ற குறள் நெறியின்படித் தமது வாழ்நாட்களில் ஒழுகினமையினால் அன்றோ?

PLASTICIZERS
for the
Plastic Paint and Perfumery Industries

DOP— DIOCTYL PHTHALATE
DIOP— DI-ISO OCTYL PHTHALATE
DBP— DIBUTYL PHTHALATE
DAP— DIALPHANYL PHTHALATE
DMP— DIMETHYL PHTHALATE
DEP— DIETHYL PHTHALATE

Available from
Pioneers in manufacture of Phthalate Plasticizers

Indo-Nippon Chemical Company Limited
Alice Bldg. 339 D. N. Road, Bombay-1.
Grams: PLASTCIZER Phones: 251723—252269

காந்தி பிள்ளைத்தமிழ்

—இளமுருகு—

—o—

காப்புப் பருவம்

அகர உயிரெனு மழகு கருவினி
    லலரு மழுதுகு பைந்தமிழ்த் தாயினள்
அரிய பொருளையு மறிய வுணர்வினி
    லறைய உரிமைகொள் செந்துகிர் வாயினள்
அழகு மிளிர்தரு மமுது கவிபொதி
    அலகி லொளிர்தரு செம்பொரு ளாயினள்
அசைக ளலைகடை பொழுதி லெழுதரு
    மமுது பொழிதரு நன்கவி யாயினள்.

சிகர வடமலை எழுமு னெழுதிய
    திகழு கவிமலர் சென்னியில் சூடினள்
செழுமை தழுவிய குமரி யொடுபுனல்
    செறிய ஓழுகுறு பொன்னியி லாடினள்,
சிறிய னெனது புன் கவியும் தனதொரு
    சிறிய விரறகு செம்பதம் ஏற்றனள்
திசைகள் திரிதரு வெளியில் நடமிடு
    செழியன் பொதிகையின் நந்தமிழ் ஏத்துதும்;

தகவு தழுவிய நிலவு தமிழ்மொழி
    தரணி பணிபுரி அன்புரு வாகிய
தனது பொருளுடல் பதவி உயிரையும்
    தரணி பயனுற அர்ப்பண மாக்கிய
சமய முழுதுண ரமல விறைபொருள்
    தழுவு கரமுறு நன்குண மாகிய
செறியு கொடுவினை செயுமொர் பகையது
    சிறுமை பொடிசெயு மின்னரு ளாகிய

மகர மெறிகடல் வளையு மலகினில்
    மனிதர் தமிலொரு தெய்வமு மாகிய
மடமை அகலுற அடிமை விலகுற
    மனதி லுரிமையாம் செந்தழல் மூட்டிய
மணியை எமதிரு விழியை மனனுறு
    கனியை மகிழ்தரு செம்மது வாகிய
மறையை எமதுயிர் நிலையை விரிதரு
    மனது மலரமர் காந்தியைக் காக்கவே!

செங்கீரைப் பருவம்

திங்களொடு செங்கதிர் பொங்கியொரு தாமரை
    சேர்ந்துலவு காட்சியொப்ப
திகழ்வதெ தன மதிலுலவு மருளொழுகு மிருவிழிகள்
    திருநடன மாடிநிற்க
செங்கையாங் காந்தள்மலர் சிந்தையுறு செம்பொருள்
    தெரிவித் தலர்ந்துநிற்க
திருவொளிரு குமுதமலர் விரியவரு செழுமதுவும்
    செம்மேனி தன்னைநனைக்க

மங்கையர்கள் பாராட்டி மணிமாலை பலசூட்டி
    மார்போ டணைத்திருத்தி
மரகதத் தொற்றியில் விளையாட விட்டுன்றன்
    மழலைமொழி கேட்டிருக்க
கங்கையொடு காவிரி கலக்கவழி செய்தவா!
    கனிந்து செங் கீரை யாடாய்
காந்தியெனும் சாந்தவுரு வேந்த! எமதேந்தலே!
    கனிந்து செங் கீரை யாடாய்!

மகாத்மாவின் வாழ்க்கையில்...

ஆகாகான் மாளிகையில், மனுபஹ்றன், சுசீலாபஹ்றன், பியாரேலால் முதலியவர்கள் மாலை வேளையில் பாட்மின்டன் ஆடுவதை பா, உற்சாகத்துடன் கவனிப்பதுண்டு. நோயுற்ற பிறகு அவர், 'கேரம்' விளையாடக் கற்றுக் கொண்டார். சாதாரணமாக மீராபஹ்றனும் பாவும் ஒரு கட்சியாகவும் வேறு இருவர் ஒரு கட்சியாகவும் அமர்ந்து விளையாடுவார்கள். மீராபஹ்றன் திறமையாக ஆடக் கூடியவர். ஆகையால் ஒவ்வொரு ஆட்டத்திலும் அவருடைய கட்சியே ஜெயிப்பது வழக்கம். அதைக் கண்டு பா குதூகலம் அடைவார். எப்போதாவது ஒரு முறை அவர்களுடைய கட்சி தோற்றுவிட்டால் பா வருத்தம் அடைவார்; அதனுல் அசதி ஏற்படும்.

ஆட்டத்தில் தோல்வி காரணமாக ஏற்படும் வருத்தம் பாவின் உடல் நலனைப் பாதிக்கிறது என்பதை உணர்ந்ததும், மீராபஹ்றனும் மற்றவர்களும் கலந்தாலோசித்து, எப்போதும் பா, ஜெயிக்கக்கூடிய முறையில் ஆடவேண்டும் என்று தீர்மானித்தார்கள். எப்போதும் வெற்றி கிடைத்ததால் பாவுக்கு 'கேரம்' ஆடுவதில் ஆர்வம் அதிகரித்தது. கடைசிக் காலத்தில் பா, படுத்த படுக்கையாக இருக்கும்போது கூட கட்டிலுக்கு அருகில் 'கேரம்' போர்டை வைத்துக்கொண்டு மற்றவர்களுடன் 'கேரம்' ஆடினுர்.

—ஜ.

தாலப் பருவம்

மருவற் றிலகு மறைப்பொரு ளூச்சொலும்
நால் பாழ் போகாமே
மனதிற் குறைவற் றருளிற் பெரிய
மேலோர் தாழாமே
முருகுற் றலர்தா மரையிற் பிரமன்
போய்மாய் வாகாமே
முறையிற் செலுமோ ருலகிற் குறுநடை
இழ்மே லாகாமே.

மருளுற் றடிமை யெனக்கொடு மைப்பிணி
யாலே மாயாமே
மார்பிற் புண்படு வீரக் குலமற
மாய்ந்தே போகாமே
தெருளுற் றிடவிரு விழியருள் காந்திச்
செல்வா! தாலேலோ!
செகமுற் றெளிரப் புவியிற் பிறந்தோய்
தாலோ தாலேலோ!

சப்பாணிப் பருவம்

இருநில மாண்டிடும் உரிமைக ளெமதே
என்றே இறுமாந்தே
இருந்தர சாட்சி புரிந்த பரங்கியர்
எழுந்து விரைந்தோட
மருள்படு கோழை மனிதர்க ளெல்லாம்
மாபெரு வீரர்களாய்
மாறிட நெஞ்சிற் போரிட நாட்டபி
மானம் வளர்த்தோனே!

ஒருபெரு தாரக மந்திர மாகச்
சத்திய மோதியருள்
உத்தம சந்திர காந்தி குலம்வரு
ஒளிவளர் தண்மதியே!
குருவென எமதிரு விழியருள் முதலே
கொட்டுக சப்பாணி
குஞ்சர மின்றியொர் வெஞ்சமர் வென்றோய்
கொட்டுக சப்பாணி.

முத்தப் பருவம்

சீர் பெற்ற பாருலகில் பேர்பெற்ற ஆருயிர்கள்
    சீரென்று பேதமின்றி
சிந்தனை செய் பந்துமுறு சந்ததமும் எந்தைகரம்
    சந்த்ரமோ கனதாசனே !
கார்பெற்றதோகைபோற் பார் முற்றும்வாழவொரு
    காட்சிதரு மோட்ச வுருவே !
கதியற்ற பேர்கட்கு மடிதற்று வந்துதவு
    காந்தி யெனும் சாந்த வுருவே !

போர் முற்றும் வேளையிற் சார்புற்று சாந்திசெய
    மார்தட்டும் மாணிக்கமே !
பொல்லாத பேர்களையுன் நல்லாசி யாஞ்சிறையில்
    பூட்டி வழி காட்டு தலைவா !
பார் முற்றும் வாழ்கவென ஆர்வுற்ற காந்தியொரு
    பனிவாயின் முத்தமருளே !
பல்லுடை பட்டவொரு பாலசுந் தரனையருள்
    பவளவாய் முத்தமருளே !

மகாத்மாவின் வாழ்க்கையில்...

ஒரு நாள் பிற்பகலில், திரு. ராம்நாராயண் சௌத்ரி, தோள்பட்டையில் கிழிசல் இருந்த சட்டையை அணிந்து கொண்டு தம்முடைய அலுவல்களைக் கவனிப்பதற்காக, காந்திஜியின் அறைக்கு வந்தார். "ஏன் இந்த கிழிசல் சட்டையை அணிந்து கொண்டிருக்கிறாய்?" என்று காந்திஜி கேட்டபோது "என்னுடைய மனைவிக்குத்தான் தைக்கத் தெரியும். அவள் இன்று உடல்நலமற்றிருப்பதால், கிழிசலைத் தைக்காமலே சட்டையை அணிந்து கொண்டேன்" என்று அவர் விடையளித்தார்.

காந்திஜி முகம் சுளித்தார். பிறகு புன்சிரிப்புடன், "உடை அணிந்து கொள்வதில் கவனம் வேண்டும். சட்டை அணிந்து கொள்வது அவசியமில்லை. அணிந்து கொள்ள விரும்பினால் வெளுப்பானதை அணிந்து கொள்ள வேண்டும். கிழிசல் சட்டையும் அழுக்குச் சட்டையும் அணிந்து கொள்வது சோம்பேறித்தனத்திற்கும் அறியாமைக்கும் அடையாளம். சட்டையில் கிழிசல் இருந்தால் அதை தைத்துப் போட்டுக் கொள்ளலாம். தேசத்தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் தன்னுடைய வசதிகளை தானேசெய்து கொள்ளும் திறமைவேண்டும். சட்டை தைத்துப் போட்டுக்கொள்ளும் அளவுக்கு தையல் வேலை தெரியாவிட்டாலும், கிழிசலைச் செப்பனிட்டுக் கொள்ளும் அளவுக்காவது தைக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்," என்று அவர் சொன்னார். —ஜ.

வருகைப் பருவம்

தண்ணிலவு போலவொளிர் தரளநகை காலஒளி
　　தாழ்முத்து மாலையாட
தாமரைகள் போலமிளிர் காலினொளிர் தண்டைகள்
　　தகும்தகும் என்றொலிக்க
கண்மல ரிரண்டுமிரு கைம்மலரும் விரியவரு
　　கதிரவ னொளிக்கற்றைபோல்
காதிலணி குண்டலம் மீதினொளிர் சோதியொரு
　　கதிர்வீசி இருள் தகைக்க

உண்ணிறை மகிழ்ச்சியா லுன்தாயர் அரைஞா
　　ணுறுத்த வொரு பொற் சதங்கை!
உற்றகை வளைகளொடு முற்றக் கலந்தினிது
　　ஓங்கார மாயொலிக்க
மண்ணுலகு தழையவரு அண்ணலெங் காந்தியிவண்
　　வந்தருள்க வந்தருள்கவே!
மாரியென வாரியருள் கூருமொரு மோகனம்
　　வந்தருள்க வந்தருள்கவே!

அம்புலிப் பருவம்

முற்றத் துறந்தவர் பற்றுற் றிறைஞ்சியே
　　முடிமீ திருத்திவரலால்
மூவுலகு புகழ் நிலா மேவுமொரு செயலினால்
　　முழுதும் பிறர்க்கீதலால்
சற்றுமொரு வெம்மையில் தன்மையால் யாவர்க்கும்
　　தண்ணளி மிகச்செய்தலால்
தாவரம் வாடவும் தாங்காத பேருளம்
　　தாங்கியே வாழ்ந்துவரலால்

கற்றுணர் காந்தியை ஒத்திடினும் நின்போல்
　　களங்கமில் பெருங் குணத்தான்
கருணையொடு நின்குறைகள் காணாது தன்னுடன்
　　களிக்கவரு மாறழைத்தான்
அற்றவர்க் குதவுகுண மற்றவொரு செல்வனோ
　　டம்புலீ யாடவாவே
அருமறைப் பொருள்விளக் கொருபெருங்
　　டம்புலீ யாடவாவே! [காந்தியோ

சிற்றிற் பருவம்

கன்னத் தறைந்த கைகளையும்
    கருணை காட்டி மன்னிக்கும்
காலச் சூழலில் மோதுண்டு
    கருகா தொளிரும் புகழ்விளக்கே ;
கன்னங் கரிய கூந்தலினைக்
    கட்டிப் பொட்டிட் டுனைமறுகில்
கலகம் செயவோ விடுத்தார்நின்
    கருணை யுருவாம் தாய்மார்கள்

முன்னம் இந்து முகமதியர்
    மூண்டு பகையுற் றெழுந்திடவே
முதல்வா ! உன்றன் திருவடிகள்
    முழுதும் புழுதி படிந்தனகாண்
இன்னம் புழுதி படலாமோ
    ஏந்தல் சிற்றில் சிதையேலே !
ஏழைக் கிரங்கும் காந்தியருள்
    எந்தாய் சிற்றில் சிதையேலே !

மகாத்மாவின் வாழ்க்கையில்...

பஞ்சமஹால் மாவட்டத்தில் 1923 ஆம் ஆண்டில் ஹிந்து முஸ்லிம் கலகம் ஏற்பட்டது. அங்குள்ள சிலர் காந்திஜியிடம் வந்து நிலைமையைக் கூறினார்கள். "கலகத்தைத் தடுக்க நீங்கள் செய்த முயற்சி என்ன?" என்று கேட்டார் காந்திஜி.

"நாங்கள் என்ன செய்ய முடியும்? உங்களுடைய அஹிம்சைத் தத்துவம் எங்களுடைய கைகளைக் கட்டி விட்டதே. நாங்கள்தான் துயரமடைந்தோம்" என்று அவர்களில் ஒருவர் கூறினார்.

அதைக் கேட்டதும் காந்திஜி வருத்த மடைந்தார். பிறகு சிறிது கடினமான குரலில் அவர் சொன்னார்: "கோழைத்தனமாக ஊரை விட்டு ஓடி வந்துவிட நான் அஹிம்சை வழி போதிக்கவில்லை. இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில், அஹிம்சையில் நம்பிக்கையுடைய வீரர்கள் உயிரைப் பயணம் வைத்துப் போராடவேண்டும். அதற்குத் துணிவு இல்லாவிட்டால், உங்களுடைய நம்பிக்கைக்கு ஏற்ற முறையில் போதனைக்கு தவறான பொருள் கண்டதுடன் உங்களுடைய கொள்கையிலும் நம்பிக்கையிலும் கோழைத்தனமாக நடந்துகொண்டு ஊரைவிட்டு ஓடி வந்து, துயரக் கதைகளைக் கூறுவதில் என்ன பயன்?" என்றார்.

—ஐ.

சிறுதேர்ப் பருவம்

ஆடும் புலக்குறும் போடக் கெடுத்தடித்
தான்மசோ தனைகளாற்றி
ஆலய மாமனக் கோயிலிற் கேற்றதா
யன்பாம் விளக்கை யேற்றி
வாடும் நமதிந்தியத் தாயையொரு தேவியாய்
வழிபட் டருள் வேட்டவா!
வஞ்சரையும் வெஞ்சமரில் குஞ்சரமு மின்றிவலி
மடக்கிக் கெடுக்கு மறவோய்!

பாடும் கவிப்புலவர் நாடுங் கவிப்பொருளில்
பரவிக் கலந்திருப்போய்
பண்புடையர் மாட்டிலே உண்டுலக மென்
பாட்டிற்குக் காட்டாயினோய்! [றுரைசெய்
தேடுஞ் சுதந்திரம் கூடவருள் செய்தவா!
சிறுதே ருருட்டி யருளே!
செய செயென உலகுசொல அறத்தில் வெலு
சிறுதே ருருட்டியருளே! [காந்தியொரு

சிறு பறைப் பருவம்

ஓராடை யுடனிதமும் போராடி வருமெளிய
ஒரு தமிழன் நிலை யெண்ணியே
உருமாலை யும்நினது நீளங்கியும் நீக்கி
ஓவாது காத்து வந்தோய்!
பாராட ஆளும் பரங்கியரின் வேந்தனைப்
பார்த்திடவு மெளிமை பூண்டோய்!
பரதத்து வறுமைநிலை படிமுற்று மறியவப்
படிசெய்த தன்மையாள!

போராட உரிமை நிலை தான்நாட வேண்டுமென
போதித்த ஞான குருவே!
புவி புகழ அறமுறையில் போரிட்டு வாகை
புனிதவுரு கருணை வாழ்வே! [கொளும்
சீராடு அன்பர்தம் சிரமாட இசைபாட
சிறுபறை முழக்கியருளே
தேன்கவிசெய் பாவாணர் சிந்தையுறு காந்தியொரு
சிறுபறை முழக்கியருளே!

—o—

காந்தி சேவா சங்கத்தில் காந்தியடிகள்

(க. அருணாசலம்)

—o—

அதிகாலை ஆறு மணி இருக்கும். சாந்தா ரயில் நிலயத்தில் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் வண்டி வந்து நின்றது. மலையாளம், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் முதலிய பகுதிகளில் இருந்து வந்த நிர்மாண ஊழியர்கள், தங்கள் மூட்டைமுடிச்சுகளை எடுத்துக்கொண்டு இறங்கினார்கள். கதர் உடை அணிந்த தொண்டர்கள் வரவேற்றனர். ரெயிலில் வந்தவர்கள் சுமார் அறுபது பேர் இருக்கும். அதில் நானும் ஒருவன்.

காலைக் கடன்களை முடித்துவிட்டு, எங்களை ஏற்றிச் செல்வதற்காகக் காத்துக்கொண்டிருந்த பஸ்ஸில் ஏறிப் பயணமானோம். தேக்கு மரங்கள் நிறைந்த காடுகள் வழியாகப் பாதை வளைந்து வளைந்து சென்றது. அந்தக் காலத்தில் தார் ரோடு அரிது, வெறும் கப்பி ரோடுதான். வண்டி புழுதியைக் கிளப்பிக்கொண்டு சென்றது. இரண்டு மணி நேரம் கழித்து சாவலி என்னும் கிராமத்திற்கு அருகில் அமைந்திருந்த தற்காலிக முகாமை வந்தடைந்தோம். இக் கிராமம் அன்றைய மத்திய மாகாணத்திலும் இன்றைய மகாராஷ்டிரத்திலும் இருக்கிறது. காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் திரு. ஆர். எஸ். தோத்ரே எங்கள் அனைவரையும் வரவேற்று அவரவர் தங்குமிடத்திற்கு இட்டுச் செல்லும்படி அங்கிருந்த தொண்டர்களிடம் தெரிவித்தார். மூங்கில் கழிகள், மூங்கில் பாய், மலைப்புல் முதலியவற்றால் அமைத்த தட்டைப் பந்தல் விடுதிகளை நோக்கிப் போனோம். ஒரு பெரும் மாமரத்திற்கு அருகாமையில் அழகிய சிறு குடிசை ஒன்று அமைந்திருந்தது. அதையொட்டி இரண்டு மூன்று சிறு குடிசைகள். நடுவில் இருந்ததில் காந்தியடிகளும், பக்கத்தில் உள்ள ஒன்றில் காந்தி சேவா சங்கத்தின் தலைவர் ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா அவர்களும் தங்குகின்றார்கள் என அறிந்தோம். மறுபுறத்தில் இருந்த ஒன்றில், சங்கத்தின் அலுவலகம் இருந்தது. மாமரத்திற்கு எதிரில் முன்னூறு, நானூறு பேர் உட்காருவதற்கு வசதியான ஒரு பந்தலும் அதன் எதிரில் 'ப' வடிவத்தில் காந்தி சேவா சங்க அங்கத்தினர்கள் தங்குவதற்கான அறைகளும் அமைத்திருந்தார்கள். இதற்கு வெளியில் பொதுச் சமையலறையும் உணவறையும் இருந்தது. மற்றொரு புறத்தில் குளிப்பதற்கும் மலஜலம் கழிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

நாங்கள் எங்களுக்கான அறையில் சாமான்களை வைத்துவிட்டு ஸ்நானாதிகளை முடித்தோம். நேரம் ஆக ஆக ஊழியர்களும் தலைவர்களும் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்துகொண்டிருந்தனர். அன்று மாலைக்குள், வர வேண்

with compliments from

CARBORUNDUM UNIVERSAL LTD.

Manufacturers of

BONDED AND COATED ABRASIVES,
SUPER REFRACTORIES, ABRASIVE GRAINS AND
CALCINED BAUXITE

Madras · Bombay · Calcutta · New Delhi

டியவர்கள் அனைவரும் வந்து சேர்ந்துவிட்டார்கள். ஒவ்வொருவரும் தமது பகுதியில் உள்ள கிராமக் கைத்தொழில் பொருள்கள், அவற்றைச் செய்வதற்கான சிறிய பெரிய கருவிகள், செயல் முறையைப் பற்றிய விவரங்கள் முதலியன கொண்டுவந்திருந்தார்கள். அவற்றையெல்லாம் சேர்த்து அங்கு ஒரு பெரிய பொருட்காட்சியாக அமைத்தார்கள். ஏற்கனவே சாவலிக்கு அக்கம் பக்கத்திலுள்ள கிராமக் கைத்தொழில் பொருட்கள், கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

கதர்த் தொழில் பற்றிய கண்காட்சி விரிவாக அமைக்கப் பெற்றிருந்தது. சாவலியில் அகில பாரத சர்க்கா சங்கத்தின் ஒரு கிளையும் இருந்தது. காந்தி சேவா சங்கத்தின் இவ்விரண்டாவது கூட்டத்தை நடத்த இந்த இடத்தைத் தெரிந்தெடுத்ததற்கு ஒரு காரணம் அதுவாகவும் இருக்கலாம். மறு நாள் காலையில் காந்தியடிகள் இப் பொருட் காட்சியைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். கிராம மக்கள் காந்தியடிகளைத் தரிசிக்கத் திரளாய் வந்திருந்தனர்.

காந்தி வாக்கு

நாம் ஒருவரை ஒருவர் சுரண்டி வாழ முயலாமலும் பிறர் நம்மை எத்திவாழ இடங் கொடுக்காமலும் வாழ்ந்தால் நமது தேசியத்திற்கு தீங்கு நேராது.

—யங் இந்தியா, 16-4-1931.

கிராமத் தொழில் பொருட்காட்சி எப்படி அமைய வேண்டும், அதிலிருந்து மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியதென்ன என்பதைப் பற்றி விரிவாகப் பேசினார் காந்தியடிகள். கிராமத்தவரின் வாழ்க்கை முறையினைத் தெரியவும், அவர்கள் தமது உழைப்பின் மூலம் உண்டுபண்ணும் பொருள்களைக் கண்டுகொள்ளவும் பொருட் காட்சி பயன்படும். மேலும், கிராமத்தார், தாம் செய்பவைகளை ஓரிடத்தில் சேர்த்துப் பார்த்துத் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும், புதுப்புது முறைகளை மற்றவர்களிடமிருந்து கற்று, தமது செய்நேர்த்தி முறைகளில் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை வகுத்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும் என்பதை அவர் விளக்கினார்.

பத்து மணிக்கு காந்தி சேவா சங்கக் கூட்டம் ஆரம்பம் ஆயிற்று. காந்தியடிகள் ஆறு வருட தண்டனை விதிக்கப் பெற்று சிறைவாசம் செய்துகொண்டிருந்த சமயம், அவரது கொள்கைகளை ஏற்றுத் தொண்டாற்றுவதற்காக காந்தி சேவா சங்கத்தை ஸ்ரீ ஜம்னாலால் பஜாஜ் அவர்கள் நிறுவினார்கள். இதில் நாட்டின் பெரும் தலைவர்களில் பலர் அங்கத்தினர்களாக இருந்தனர். ஸ்ரீ ராஜேந்திர பிரசாத், சர்தார் வல்லபபாய், ராஜாஜி, ஆச்சார்ய கிருபளானி, வினோபாஜி, ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் போன்றவர்கள் முக்கியமானவர்களில் சிலர். சங்கத்தின் முதற்கூட்டம் வர்தாவில் நடைபெற்றது. 1936-ம் ஆண்டு இரண்டாவது கூட்டம் புதிய முறையில் சாவலியில் கூடிற்று. மற்றக் கூட்டங்களைப் போலில்லாமல் இந்

தச் சங்கத்தின் கூட்டம் ஒரு முகாமாக—ஏதாவதொரு கிராமத்தில்—குறைந்தது ஆறு நாட்களாவது கூடும். அங்கத்தினர்கள் அனைவரும் இரண்டு மணி நேரம் கிராமத்திற்குப் பயன்படும் ஏதாவதொரு பணிக்கு உடலுழைப்பைத் தருவர். தம்முடைய வேலைகளைத் தாங்களே செய்துகொள்வர். அனைவரும் சேர்ந்து அரை மணி நேரம் வேள்வி நூற்பில் ஈடுபடுவர். இதற்குமேல் சுமார் நான்கு மணி நேரம் கருத்துப் பறிமாற்றம் செய்துகொள்வார்கள். இந்த அடிப்படையில்தான் சாவலிக் கூட்டமும் நடந்தது.

செயலாளர், அறிக்கையைச் சமர்ப்பித்தார். ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா தலைமை உரையாற்றினார். அதன் பிறகு காந்தியடிகள், சேவா சங்கத்திற்கு ஆசி கூறி அதற்கு அடைமொழியாக இருக்கும் காந்தி என்னும் வார்த்தையை எடுத்துவிடும்படி ஆலோசனை கூறினார். அதற்கான காரணங்களையும் விளக்கினார்: “காந்தி உயிருடன் உள்ள ஒரு மனிதர். அவர் இன்று சொல்வதை நாளை மாற்றிக்கொள்ளலாம். அவர் புதியது ஒன்றையும் கண்டுபிடிக்கவில்லை. பழைமையான சத்தியம் அகிம்சை இவற்றையே சமூகப் பொது வாழ்வில் கையாண்டு சோதனை செய்கின்றார். இப்படி ஒருவர் பெயரைச் சேர்த்து நடைபெறும் சங்கங்கள் பின்னால் ஒரு தனிக் கோஷ்டியாக மாறும் அபாயமிருக்கிறது. ஏற்கனவே எத்தனையோ வழிகளில் மக்கள் பிரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை இணைப்பதற்குப் பதிலாக, இச் சங்கம் ஏன் பிரிக்கும் கருவியாக வேண்டும்? வெறும் ‘சேவா சங்கம்’ என்று இருப்பதே நல்லது” என்றார். ஆனால் எவரும் இந்த வாதங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சங்கம் சத்தியம் அகிம்சை என்ற இரண்டின் அடிப்படையில் பணியாற்றும்; இவை இரண்டிற்கும் சின்னமாக ‘காந்தி’ இருப்பதால் சங்கத்தின் பெயர் காந்தி சேவா சங்கமாகவே இருக்க வேண்டுமென ஜம்னாலால் வாதாடினார்.

சாவலிக்குப் பக்கத்திலுள்ள ஏரி ஒன்றை ஆழப்படுத்தத் திட்டமிட்டு ஒவ்வொரு நாள் காலையிலும் இரண்டு மணி நேரம் ஊழியர்களும், தலைவர்களும் சேர்ந்து வேலையில் ஈடுபட்டனர். மண் வெட்டுவது, வாரிக் கொடுப்பது, கூடைகளைத் தூக்கித் தருவது, சுமந்து சென்று ஏரிக் கரையில் மணணைக் கொட்டுவது—என்று பிரித்துக்கொண்டு பலரும் குழுக் குழுவாக வேலையில் கலந்துகொண்டனர் காந்தியடிகளும் வந்து இதில் உற்சாகமாகக் கலந்து கொண்டார். ஸ்ரீ ராஜேந்திரப் பிரசாதும், ஸ்ரீ வல்லபபாயும் எல்லோருடனும் சேர்ந்து மண் தூக்கிக் கொட்டினர். அந்த ஆறு நாட்களில்

காந்தி வாக்கு

ஆங்கிலப் பிடிப்பிலிருந்து இந்தியாவை விடுதலை செய்வதில் மட்டும் எனக்கு அக்கறையில்லை. தீங்காக அமைந்துள்ள தளைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து இந்தியாவை விடுதலை செய்வதே என் நோக்கம்; அதற்காகவே உழைக்கிறேன்.

—யங் இந்தியா 12-6-1924

கணிசமான வேலை நடந்திருந்தது. இதை காந்தியடிகளே பாராட்டினார்.

சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் சுமார் முன்னூறு பேர் இருக்கும். தமிழ் நாட்டில் ஸ்ரீ ராஜாஜி, ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் போன்றவர்கள் அங்கத்தினர்களாயினும் சாவலிக் கூட்டத்திற்கு வரவில்லை. நானும், தற்போது பாரத் சேவக் சமாஜத்தின் செயலாளராக உள்ள ஸ்ரீ ராமச்சந்திராவும் போயிருந்தோம். ஆந்திர ஊழியர்கள் பலரும், அவர்கட்குத் தலைமை வகித்து ஸ்ரீ சீதாராம் சாஸ்திரி அவர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீ ஆர். ஆர். திவாகர் அவர்களின் தலைமையில் சில இளைஞர்கள் கர்நாடகத்தில் இருந்து வந்திருந்தனர். பீஹாரிலிருந்துதான் பெரிய கூட்டம். ஸ்ரீ ராஜேந்திரப் பிரசாத், ஸ்ரீ லக்ஷ்மிபாபு, ஸ்ரீ துவஜாபாபு முதலியோர் முக்கியமானவர்கள்.

கூட்டத்தில் அனைவரும் ஹிந்தியில்தான் பேசினார்கள். எனக்கு அரைகுறையாகத்தான் ஹிந்தி தெரியும். ஆனால் பக்கத்திலுள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வேன். பந்தலின் ஒரு பக்கத்தில் ஒன்றரை அடி உயரமுள்ள மேடை. அதில் தலைவரும், காந்தியடிகளும், வேறு சில பிரமுகர்களும் அமர்ந்தார்கள். மற்றவர்கள் அனைவரும் தரையில் அமர்ந்தார்கள். பந்தலில் நான் முதல் வரிசையில் உட்கார்ந்து காந்தி அடிகளையும் அவரது கை-கால் அசைவுகளையும் கவனித்துக் கொண்டிருந்தேன். சாவலிக் கூட்டம் அங்கத்தினர்களுக்கு சத்ய—அகிம்சை நெறிகளில் பயிற்சியாக அமைந்திருந்ததுடன் கூட்டு வாழ்விற்கு வழி காட்டியாக இருந்தது.

வன்முறைக்குப் பட்டாளப் பயிற்சியைப்போல் அகிம்சைச் சிப்பாய்களுக்கு இந்தக் கூட்டம் பயிற்சிச்சாலையாக அமைந்தது. சில சமயங்களில் அகிம்சைத் தத்துவ விரிவுரைகளும் நடந்தன. கேள்விகள் கேட்டு சந்தேகத் தெளிவு பெறவும் நேரம் ஒதுக்கியிருந்தார்கள். புலனடக்கத்தின் அவசியத்தைப் பற்றியும், பொதுவாக, விரதங்களின் அனுஷ்டானம் பற்றியும் காந்தியடிகள் வற்புறுத்தினார். மணமானவர்கள் கூட பிரம்மச்சர்ய விரதம் மேற்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு வழியாக மட்டுமல்லாமல், மனிதனது உயர்ந்த பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், ஆத்மீகத் துறையில் உயரவும் பிரம்மச்சர்யம் அவசியம் என்பதை ஸ்ரீ விநோபாஜி போன்றவர்கள் விவாதத்தின் மூலம் அங்கத்தினர்களுக்கு விளக்கினார்கள்.

பல மாநிலங்களிலிருந்தும் வந்தவர்கள் வெவ்வேறு உணவுப் பழக்கங்கள் உள்ளவராயினும் அனைவரும் ஒன்றாக உண்டு உறங்கி ஆன்ம நேய ஒருமைப்பாட்டினை வளர்த்துக் கொண்டனர். தலைவரும் தொண்டரும் ஒன்றாகவே நடந்துகொண்டார்கள்; காந்தி சேவா சங்கக் கூட்டங்கள் ஐந்து-ஆறு ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றன. கடைசி முறையாகக் கிழக்கு வங்காளத்திலுள்ள பத்மா நதிக் கரையில் கொமில்லா

They saved the ancient banyan tree and now their daring knows no bounds

'Let it stand,' someone said of the banyan tree as the site was being cleared for the Hindustan Lever Research Centre, at Andheri.

The tree signifies that we can't easily get away from what is home-grown. Appropriately, therefore, the Centre will tackle problems rooted in India—the kind that can only be solved here: Can we discover and exploit hitherto unused *local* sources of oil? How can the country's meagre milk supply be conserved? What can we do to increase the milk yield of buffaloes? How can we improve the nutritive value of protein-poor foods? Can we develop processes for the preservation of Indian-type food dishes?

Research on all this can only begin at home. It has, at the Hindustan Lever Research Centre in Andheri. The sweep and thrust of the studies are daring.

They have, of course, left the banyan tree alone to grow by itself.



Hindustan Lever

..-HLL. PR. 9-77

என்னுமிடத்தில் 1940-ல் கூடிற்று. என்னால் இந்தக் கூட்டத்திற்குப் போக முடியவில்லை. இங்குதான் மூன்னூறு பேரைக்கொண்ட காந்தி சேவா சங்கத்தின் உருவம் கலைக்கப் பட்டது. காந்தி சேவா சங்கத்தின் அங்கத்தினர் அனைவரும் சத்தியத்தையும் அகிம்சையையும் வாழ்க்கையில் எல்லாத் துறையிலும் கையாள முடியவில்லை என்பதுதான் முக்கிய காரணம். அத்துடன், காங்கிரஸின் அக்கிராசனராக அப்போதிருந்த ஸ்ரீ சுபாஷ் போஸின் ஆதரவாளர்கள், இந்தச் சங்கத்தின் மூலம் ஸ்ரீ போஸிற்கு எதிராக காந்திஜி வேலை செய்கிறார் எனக் கருதினார்கள். ஸ்ரீ ஜவாஹர்லால் போன்றவர்கள் கூட இச் சங்கத்தினைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். உண்மையில், ஒரு சங்கம் அகிம்சையைப் பின்பற்றினால் அதைக் கண்டு யாரும் பயப்படவோ சந்தேகப்படவோ கூடாதல்லவா? காந்தி சேவா சங்கம் எல்லாருக்கும் பாதுகாப்பு உணர்ச்சியைக் கொடுத்துப் பணி புரிய வேண்டும். அதன் மீது அனைவருக்கும் நம்பிக்கை ஏற்பட வேண்டும். இது அவ்வாறில்லாத நிலையில், அப்போதிருந்த உருவத்தைக் கலைத்து ஸ்ரீ மஷ்ருவாலாவைத் தலைவராகவும், வேறு நான்கு பேரை அங்கத்தினர்களாகவும் கொண்ட சங்கமாக மாற்றியமைத்து அகிம்சையைப் பற்றிய ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு செய்தார்கள்.

காந்தி சேவா சங்கம் கூடிய ஐந்து கூட்டங்களிலும் விவாதித்த விஷயங்களையெல்லாம் அவ்வப்போது ஹிந்தியில் விரிவாக வெளியிட்டுள்ளார்கள். அவற்றின் சாரத்தை 'அகிம்சை அரசியல்' என்ற தலைப்பில் அண்மையில் தஞ்சையிலுள்ள சர்வோதயப் பிரசுராலயம் வெளியிட்டுள்ளது. அதில் காந்தியடிகளின் கருத்துக்கள் பல கோணங்களில் ஆராயப் பெற்றுள்ளதைக் காணலாம். அவரது கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், காந்தியடிகளை முழுமையாகக் காணவும் காந்தி சேவா சங்கம் பெரிதும் உதவியது.

காந்திஜியும் கம்யூனிஸ்டுகளும்

காந்திஜி மீரத் நகரத்திற்குச் சென்றபோது, மீரத் சதி வழக்குக் கைதிகளைப் பார்க்கச் சென்றார். கம்யூனிஸத்திலும் பலாத்காரத்திலும் நம்பிக்கையுடைய அந்தக் கைதிகள் காந்திஜியைப் பார்த்ததும், வியப்படைந்தார்கள். "எங்களைப் பார்ப்பதற்கு நீங்கள் வரக்கூடும் என்று நாங்கள் நினைக்கவேயில்லை" என்று அவர்கள் ஒளிவு மறைவின்றி கருத்தைத் தெரிவித்தார்கள்.

"நீங்கள் என்னை எதிர்பார்த்திருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். என்னை நீங்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. நான் மாறுபட்ட கருத்துடையவன் என்றாலும், எதிரிகளிடம் எனக்குப் பகைமை கிடையாது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அவர்களை மதித்து பழகும் இயல்புடையவன்" என்றார்.

—ஐ.

With the best compliments

of:

Tata Engineering

and

Locomotive Company Limited

BOMBAY – JAMSHEDPUR – POONA

பெண்கள் கண்ட காந்திமகான்

மோகூர் வாசுகி

—o—

மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாவின் சிறப்பு எங்கும் எல்லோர் நினைவிலும் நின்று மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றது. அதே நேரத்தில் காந்தியின் பெயரைச் சொல்லியே கண்ணியமாக வாழும் நண்பர்கள், கடமையில் தவறி இருப்பவர்களின் உள்ளத்தில் கடமையின் நினைவு எழுந்து பாம்பென படமெடுத்து ஆடிக்கொண்டிருக்கிறது. இந்த நன்னாளில் அவருக்கு நாம் செய்ய வேண்டுவது என்ன? அவர் கூறிய நல்லுரைகளை இயன்றவரையில் நாம் வாழ்க்கையில் மேற்கொண்டு வாழ்வதுதான் நாம் அவருக்குத் தரும் பெரும் பரிசாகும். அந்த மகானின் பெருமையைப் பல்லோர் புகழ்ந்து பாடினும் வற்றாத ஊற்றாக அந்த பெருமகனின் சிறப்பியல்புகள் தோன்றிக்கொண்டேயிருக்கும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சான்றோன் கூறிய பொன்மொழி,

> தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று.

என்ற குறளை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். பிறவிகள் பலவற்றில் மக்கட்பிறவி சிறந்தது என்று அறிஞர்கள் கருத்தாகும். 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று அப்பரும், 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்று ஔவையும் கூறியுள்ள அருந்தமிழ் வாக்கில் அறியலாம். அப்படிப்பட்ட பெறுதற்கரிய பிறவியைப் பெற்றபிறகு அதை வீணாக்காமல் மக்கள் தன்மையுடன் வாழ்ந்து, புகழ் பெற்று விளங்க வேண்டும் என்பதுதான் பிறவி தோன்றுவதின் பொருளாகும்.

தொல்காப்பியம்-பொருளதிகாரம்-மரபியல் 27-ம் நூற்பாவில் உயிர்கள் ஆறுவகையாக வகுக்கப்பட்டிருப்பதைக் காணல் வேண்டும். அவை ஓரறிவுயிர்களாகிய தாவரமுதல் ஆறறிவுயிர்களாகிய மனிதர் ஈறாக உள்ளன. அவ்வுயிர்களிடையே அறிவு விளக்கத்தில் முறைமுறையே வேற்றுமை விளங்குதல் கண்கூடாகும். பகுத்தறிவு என்னும் மன உணர்வு மனிதப் பிறவியில் மட்டுமே சிறப்பாக விளங்குகின்றது. பகுத்தறிவின் தன்மையைக்கொண்டே மக்களுடைய நிலையை நாம் அறிகிறோம். அந்த நிலையில் நம் காந்தி, மனிதனாக வாழ்ந்ததுடன் மகானாகவும், மகாத்மாவாகவும் உயர்ந்து விளங்கினார் என்பதை மக்கள்

எங்கள் பலம் எஃகும்,
மக்களுமே. மனிதன் வெறும்
உணவினால் மட்டுமே உயிர்
வாழ்வதில்லை. ஆதலால்
நாங்கள் ஜாம்ஷெட்பூரில் இசை,
நடனம் மற்றும் மனிதனுடைய
உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்
இதர கலைகளையும் பேணி
வளர்த்து வருகிறோம்.

டாடா ஸ்டீல்

TS-7050A

அவரை அன்போடு மகாத்மா காந்தி என்று அழைத்ததிலிருந்து நாம் உணர முடிகின்றது.

காந்தியின் உள்ளத்தில் அருட்பண்பு மலர்ந்திருந்தது என்பதை அவர் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகளில் காண்கின்றோம். உறவினர், உறவினரல்லாதார், உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றோர், கல்லாதவர் என்ற பாகுபாடு இன்றி அனைவரிடமும் அன்பாக நடந்து கொண்டவர் என்பதை யாவரும் அறிவோம். தீண்டாமை ஒழிப்பு, நாட்டு விடுதலைக்கு நல்ல அமைதியான முறையில் போராடி உரிமை பெற்றது, பெண்கள் உரிமையுடன் வாழ வழிகாட்டியது போன்ற பல நிகழ்ச்சிகள் அண்ணலின் வாழ்க்கையில் நடத்திக்காட்டிய சாதனைகளாகும்.

இன்றைய சமுதாயத்தில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்று பலரும் சொல்லிக்கொண்டு வருவதைக் கேட்கின்றோம். உண்மையாக உற்று நோக்கில் காந்தி எதிர்பார்த்த முறையில் பெண்கள் முன்னேறவில்லையென்றுதான் சொல்லத் தோன்றுகிறது. ஒரு சில பெண்கள் முன்னேறியிருப்பதைக் கண்டு நாம் முடிவு செய்தல் கூடாது. ஆனால் காந்தி, மனமார, பெண்கள் உயர வேண்டும், அவர்களின் அடிமைத் தன்மையை ஒழிக்க வேண்டும் என்று அரும்பாடு பட்டார்.

பெண்களுக்கும் ஆண்களைப்போல் கல்வி பயில வாய்ப்பு அளிக்க வேண்டும். ஆனால் அவர்கள் இயல்புக்கேற்ற முறையில் போதித்தல் வேண்டும் என்பது அவரின் கருத்தாகும். காந்தி, பெண்களைக் காணும் போதெல்லாம் அழகின் இருப்பிடமாகவும், தெய்வத்தன்மையுடைவர்களாகவும், கண்டார். பெண்களைத் தன் சகோதரிகளாகவும் நினைத்தார். அதனால் அவர் வாழ்க்கையில், செல்லுமிடந்தோறும் சகோதரிகள் கூட்டங் கூட்டமாகச் சென்று அவரைக் காண்பது உண்டு.

காந்தியடிகள் கூறிய சொற்பொழிவிலிருந்து சில பகுதிகளைக் கண்டால்' அவர் பெண்கள்பால் கொண்ட அன்பு புலனாகும், அவைகளுள் சில வருமாறு :—

'பெண் மக்கள் தூய்மைக்கு நாம் காரணமாயிருத்தல் வேண்டும்'.

'மனிதன்பாலுள்ள விலங்கு பெண்மக்களைப் பொருட் பெண்டிராக்குகிறது'.

'காமவேட்கைக்கென ஒரு பெண்மகளை அர்ப்பணஞ் செய்யுங் குணம் நம்பாலுள்ளவரை ஆண்மக்களாய நாமனைவரும் வெட்கத்தால் தலைகுனிய வேண்டியவரே, கடவுளின் உயரிய படைப்பாகிய பெண்மக்களை நமது காமவேட்கைக்கு இரையாக்கி விலங்காவதைப்பார்க்கிலும் மனிதக் கூட்டமே அழிந்து விடுவது சாலவும் நன்று' என்று ஆண்மக்கள் கொடுமையை விளக்குதல் காண்க.

பெண்களைப் பற்றிய பல தலைப்புக்களில் 'யங் இந்தியா'வில் எழுதியிருப்பதிலிருந்து, நாம் அவர் உள்ளம் பெண்கள்பால்

எவ்வாறு அன்பும் அவர்கள் உயர வேண்டும் என்ற அக்கறையும் கொண்டிருந்தது என்று நன்கு அறிய முடிகின்றது.

பெண்களைப் போற்றியதில் குலமகளிரைப் பாராட்டியதுடன் நில்லாமல், விலைமகளிரின் நிலைக்கு வருந்தியும், அதற்குக் காரணம் ஆடவர்தானேயென்றும் கருதி துன்புற்றார். எந்த நிலையிலும் பெண்களுக்கு ஆறுதல் தரும் நிலையிலேயே அவர் அன்புள்ளம் நினைத்தது.

காந்தி ஓரிடத்தில், 'மானமுள்ள இந்தியாவில் ஒவ்வோர் ஆண் மகனும் தன்னுடைய சகோதரியைப்போல் (மற்றப் பெண்மணிகளைக்) கருதிக்கொண்டால் பெண்மக்களின் நல்லொழுக்கங் காக்கப்படும்,' என்று கூறியுள்ளார். காந்தி சொற்பொழிவிலிருந்து எடுத்துக்காட்டிய மேற்கோள்கள் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. இந் நூலின் ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தரனார் ஆவார்.

பெண்கள் செயற்கையில் அணிகலன்களைக் கொண்டு ஒப்பனை செய்து கொள்வதைக் காந்தி விரும்பவில்லை. கணவனுக்காகவுங்கூட புனைந்து கொள்வது அவசியமில்லையென்று கூறினார். பலவகையில் இந்தக் கருத்து வரவேற்கத்தக்கதாகும் பெண்களின் இயல்பான குணம ஆடை அணிகளில் பெரிதும் ஆசைப் படும் தன்மையுண்டு—செல்வர்கள் அடைந்து மகிழ்ச்சியோடு இருக்க முடியும். அடைய முடியாதவர்கள் உள்ளத்தில் ஓயாது அடைய வேண்டும் என்ற அவா இருந்து ஏங்கிக் கொணடேயிருக்கும். அதன் விளைவால், தாங்கள் வாழும் இல்லம் அவர்களுக்கு நரகமாகிவிடும். ஓயாது உரிய உறவினர்களிடம் சண்டையிட்டுக்கொண்டேயிருப்பார். இத்தகைய உள்ளம் படைத்த பெண்கள் பலர் காந்திமகான் பேசிய கூட்டத்திலேயே தாங்கள் அணிந்திருந்த நகைகளைத் கழற்றி அவரிடம் கொடுத்து விட்டதாகவும் அறிகிறோம். இந்த நிகழ்ச்சியிலிருந்து அவரின் சொல்வன்மை புலனாகின்றது. எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அணிகலன்களைக் கொடுக்க மனம் வராத பெண்கள், காந்தியின் அன்புகனிந்த சொல்லிற்குக் கட்டுண்டனர். சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி ஒப்புநோக்கத்தக்கது. ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன் நம் பெருமதிப்பிற்குரிய மறைந்து விட்ட, பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் சென்னையில் நடத்திய கூட்டத்தில் நாட்டு வீரர்களின் நலனைக் கருதி பெண்கள் அங்கேயே அணிந்திருந்த நகைகளை கழற்றி திரு. சாஸ்திரியார் எதிரில் வைத்துவிட்டனர். பெண்கள் அன்பில் ஈடுபட்டுச் செயல்புரிவதுடன் தியாக உணர்வுடையவர்கள் என்பதையறிய வேண்டும், மேலே நடந்த நிகழ்ச்சிகள் பெண்களின் தியாக உணர்வுக்குச் சான்றாகும்.

எங்கள் பச்சையப்பன் கல்லூரியில் ஒரு நாள் நடந்த நிகழ்ச்சியை நினைவுக்குக் கொண்டுவருவது இங்கு அவசியமாகும். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மகாத்மா காந்தி சென்னையில் பூக்கடையருகே இருந்த பச்சையப்பன் கல்லூரியில் (தற்போது கல்லூரி சேத்துப்பட்டில் உள்ளது) சொற்பொழிவு

நிகழ்த்த வந்திருந்தார். கூட்டம் எள்விழ இடமில்லை. பச்சையப்பன் கல்லூரியில சொற்பொழிவு என்றால் மாணவர்கள் ஆர்வத்தோடு கூடிக்கேட்க மணிக்கணக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். அன்று அந்தக் கூட்டத்தில் இருந்த பச்சையப்பன் கல்லூரி மாணவன் ஒருவன் தனக்கேயுரிய தனிப்பண்பு மிளிர அண்ணல் காந்தியிடம் நெருங்கி அண்ணலிடம சிறு புத்தகத்தைக் (autograph) காட்டி காந்தியின் கையெழுத்து வேண்டும் என்று கேட்டு நின்றான். அண்ணல் அவனை நோக்கினார். அவனும் அண்ணலை நோக்கினான். ஒரு விநாடிக்குப் பிறகு அண்ணல், தன் கையெழுத்திற்குரிய மதிப்பை உன்னால் தரமுடியுமாவென்று மாணவனைக் கேட்டார். பண்பின் உறைவிடமான பச்சையப்பன் கல்லூரி மாணவன் நெஞ்சுரத்துடன் அண்ணல் கையெழுத்திற்குரிய மதிப்பைத் தான் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். காந்தி என்னக் கேட்கப்போகிறார் என்று ஒவ்வொரு உள்ளமும் ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்தன. காந்தி தன் வாய் திறந்தார். அவர் கூறியது, "நீ ஒரு விதவையை மணம் செய்து கொள்ளுகிறேன் என்று வாக்குக்கொடுத்தால், நான் கையெழுத்திடுவேன்" என்றார். எதையும் தாங்கும் இதயம் படைத்த இளைஞர்களை உருவாக்கியனுப்பும் பச்சையப்பன் கல்லூரி, இந்த உறுதி கொண்ட நெஞ்சையுடைய வீரனையும் காந்தி எதிரில் கண்ணியமுடன் கனிவோடு பேசவைத்தது. காந்தியின் கையெழுத்தைப் பெற, அவர் கேட்டபடியே தான் ஒரு விதவையைத் திருமணம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டு அண்ணலின் புன்னகையையும், பொன்னெழுத்தையும் பெற்றான். கூட்டத்தில் இருந்த அனைவரும் வாய்மூடி சிலையானார்கள். மாணவன் பெருமித நடையோடு தன்னிடம் நோக்கிச் சென்றான். இந்த நிகழ்ச்சியைப் பற்றி பச்சையப்பன் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கும் பேராசிரியர் வெங்கட்ராவ் அவர்கள் வகுப்பில் ஒரு நாள் சொன்னதாகும்.

மகாத்மா காந்தியின் உள்ளத்தில் பெண்கள் முன்னேற, அடிமை விலக, கல்வி வளர, மகிழ்ச்சியோடு வாழ என்ன வெல்லாம் வழியுண்டு என்று ஓயாது ஒழியாது நினைந்து நினைந்து, வாய்ப்பு ஏற்படும்போது செயலில் காட்டி வந்த பெருந்தகை என்று மேற்கண்ட நிகழ்ச்சியின் மூலமாக நாம் அறிய முடிகின்றது. ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர், இராஜராம் மோகன்ராய் போன்றவர்கள் விதவைகளின் முன்னேற்றத்தைக் கருதி பெரிதும் உழைத்தவர்கள். ஆமைவேகத்தில்கூட முன்னேற்றம் வளரவில்லை. காந்திமகான் சமுதாயத்தை நன்கு உணர்ந்து பாடுபட்டார். ஆனாலும் சமுதாயம் ஓரளவு மாறியிருப்பினும் நல்ல உள்ளம் படைத்த அன்பர்கள் எதிர்பார்த்த அளவு மாறவில்லை. அதிகமாகச் சொல்லப் போனால் உரிமைமிகுந்த நாட்டிலே நாம் வாழ்ந்தாலும், விதவைகள் எவ்வளவு பாடுபட்டாலும் சமுதாயம் முழு ஆதரவு கொடுக்கவில்லையென்றுதான் சொல்லவேண்டும். அவர்கள் வாழ்க்கைக் கடலில் எதிர் நீச்சலில் போராடி வருகிறார்கள் என்பதை உணர வேண்டும். ஒரு சிலர் அவர்களுக்குள்ள பிறசெல்வாக்கினால் உயர்ந்து விளங்கலாம். அவ்வளவு தான். உண்மையாக சிந்தித்துப் பார்த்தால்



Binny's created Marlborough - to make you look different!

BINNY'S

Marlborough

THE LARGEST SELLING
'TERENE'/ COTTON SUITING !

Buy your requirements of Binny fabrics from authorised stockists who display this signboard.

ஆதரவு போதுமான அளவு கொடுக்கவில்லையென்றே கூறத் தோன்றுகிறது. மகாத்மா காந்தி, தமிழ்த்தென்றல் திரு. வி. க. போன்ற சான்றோர்கள் பலர் தோன்றினால் தான் இந்த நிலை மாறும், மாற வேண்டும், காந்தியின் கனவு நனவாகும் நாள் வர வேண்டும்.

இதுவரை கண்ட பல நிகழ்ச்சிகளை நோக்குமிடத்துப் 'பெண்கள் கண்ட காந்திமகான்' எத்தகையவர் என்பதை நாம் நன்கு உணரமுடிகின்றது. பெண்கள், அவர் அன்பைக் கண்டபோது தங்களின் தந்தையாகவும், அவர் காட்டிய ஆதரவைக் கண்டபோது தங்களின் கண்கண்ட தெய்வமாகவும் நினைத்தார்கள் என்பதில் ஐயமில்லை. அத்தகைய மாபெரும் மகான் பெண்களின் பால் காட்டிய பரிவையும், பண்பையும் நினைக்கும்போது நல்லார் நெஞ்சங்களில் நன்றியுணர்ச்சி ததும்பி கண்களில் இன்பக் கண்ணீர் பொங்குகின்றது. அன்னார் அருங் கொள்கைகள் வாழ்க. வளர்க. வெல்க.

—o—

என் தமிழ்ப் படிப்பு*

இப்போராட்டத்தில் தமிழ் மக்கள் பங்கெடுத்துக் கொண்டதைப் போல் வேறு எந்த இந்திய சமூகமும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. எனவே, வேறு எந்தக் காரணத்துக்காக இல்லாவிடினும், தமிழ்மக்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் பாவனையில் தமிழ் இலக்கியத்தில் உள்ள நூல்களை கருத்தூன்றி வாசித்து அறிய வேண்டும் என நான் கருதினேன். ஆகவே, தமிழ்மொழியைக் கவனத்துடன் கற்பதில் கடைசி மாதத்தைச் செலவழித்தேன். கற்கக் கற்க அம்மொழியின் அழகுகளை மேன் மேலும் நான் உணரலானேன். அது இனிமை நிறைந்த, ஈடுபாடு அளிக்கும் ஒரு மொழி. நான் படித்து அறிந்த வரையில் தமிழர்களில் மதி நுட்பமும், அறிவுத் திறனும், விவேகமும் நிறைந்த பலர் இருந்திருக்கின்றனர். என்பதை நான் உணர்ந்தேன். இப்பொழுதும் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்தேன். இந்தியாவின் மக்கள் அனைவரும் ஓரின மக்கள் சமுதாயமாக வாழவேண்டும் என்று இச்சைப்படுவோமானால், சென்னை மாகாணத்திற்கு அப்பால் வாழ்ந்துவரும் இதர மாகாணத்தினர்கள் தமிழ் மொழியை அவசியம் அறிமுகம் செய்து கொள்ளவேண்டும்.

—மகாத்மா காந்தி.

* 1922-ல் சென்னை தாகூர் அண்டு கம்பெனியார் முதற்பதிப்பாக வெளியிட்ட "மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்—அவரே கூறியவை." என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்பு, இங்கு குறிப்பிட்டிருப்பது தென் ஆப்ரிக்காவில் நடைபெற்ற போராட்டத்தை.

With best Compliments

of:

SUHRID GEIGY LIMITED

WADI - WADI

BARODA

Manufacturers of

Optical whitening agents 'Tinopal', Dyes
Intermedials & 'Geicy' Pharmaceutical

With best compliments from:

SAKTHI SUGARS LIMITED

72, Sengupta Street, Ramnagar,

COIMBATORE-9.

NSC SEED FOR FARM PROSPERITY

HIGH QUALITY NSC SEED OF MAIZE HYBRIDS, COMPOSITE MAIZE, LATEST PADDY AND WHEAT VARIETIES, FODDER, FIBRE AND VEGETABLE CROPS, ETC., IS AVAILABLE

PLEASE CONTACT:

N.S.C. LOCAL SEED DEALER

OR

N.S.C. LOCAL UNIT

OR

MARKETING DIVISION

NATIONAL SEEDS CORPORATION LTD.

F-44/A, South Extension Part-I,

RING ROAD, NEW DELHI-49

and

CENTRAL STORES AND SUPPLY DIVISION,

C.T.O. BUILDINGS, PUSA, NEW DELHI-12

NSC SEED IS CERTIFIED SEED

பதினாறும் பெற்ற காந்தி

க. நடனசபாபதி

—o—

தாய் தந் தையர்க்கு
தலைசிறந்த மகனேயவர்
கஸ்தூரி அம்மைக்கு
கடவுளாய் விளங்கியவர்
பள்ளிச் சிறார்களுமே
பாரதத்தாத்தா வென்பர்
இந்திய மக்களுமே
இலட்சியவாதி என்பர்
உலகத்தின் மக்களுமே
உத்தமர் அவரென்பர்
மக்களினை திருத்திட்ட
மகானும் அவராவார்
வாய்மையினை நிலையிருத்திய
வழக்கறிஞர் ஆவாரவர்
ஆங்கிலர் எதிர்ப்புக்கே
அஞ்சாதமனிதர் அவர்
அறம்தனை கடைபிடித்த
அஹிம்சைவாதி அவராவார்
வறுமையுள்ள மக்களுமே
வழிகாட்டி இவரென்பர்
உடலுறுதி கொண்டிட்ட
உழைப்பாளி இவராவார்
அறிஞரும் போற்றிடும்
அறிஞர் ஆவாரிவர்
தன்மானம் காத்திட்ட
தலைவர் இவராவார்
எவருமே போற்றிடும்
எழுத்தாளர் என்றிடுவர்
அறிவுதனை ஊட்டிட்ட
ஆசிரியர் இவரேயாவார்
அன்புவழி சென்றிட்ட
அண்ணலும் ஆவாரிவர்
இப்பெயரெலாம் பெற்றவராம்
இந்நாட்டு காந்தியம்மா.

—o—

நட்டுவனூர் நினைவுகள்

"தூன்"

நவரத்தினங்களால் இழைத்த பொன்மீன் செங்குத்தாய் நாலா பக்கங்களிலும் நாக ரத்தினங்கள் ஜ்வலிக்க நிற்பது போல் குமாரி நடனகலா மேடையின் நடுவில் நின்றுள்.

மேடையின் வலதுபுறம் பளபளவென்று நடராஜ விக்கிரகம் இருபுறமும் பெரிய குத்துவிளக்குச் சுடர்கள் யோக நிஷ்டையிலிருக்கும் ஞானிகள்போல் ஒளிபரப்பத் திகழ்ந்தன.

மேடையின் இடது பக்கம் மிருதங்கக்காரர், நட்டுவனூர் நரசிங்கம், பாடகர், சுருதி போடுகிறவர், புல்லாங்குழல் வாசிப்பவர் இவர்கள் அமர்ந்து இருந்தனர்.

உயர்ந்த பரத நாட்டியத்தை எதிர்பார்த்து சலங்கையணிந்த பாதங்களைச் சேர்த்து இடையில் கைவைத்து அழகை கொட்டிக்கொண்டு நிற்கும் நடனகலாவின் தலையலங்காரமுதல் செம்பஞ்சுக் குழம்பிட்ட கால் விரல் நகங்கள் வரையுள்ள சிங்காரிப்பை, கூட்டம் அள்ளிப் பருகிக்கொண்டிருந்தது,

போட்டோ பிடிப்பவர்களின் மின்விளக்கொளிகள் தீவிரப் பொழிவுகளில், தெய்வ சந்நிதியில் ஆத்மாக்களின் ஒவ்வொரு கணம் பொலிவுற்று வீசுவதுபோல, நடனக்காரியின் நகைகளில் போலி வைரங்கள் பச்சையும், சிவப்பும், நீலமுமாகப் பொழிந்தன.

ரசமான சங்கீதக் கடலில் மிதந்து வரும் இலக்குமிபோல நடனகலா நடந்துவந்து குருவை வணங்கிவிட்டு, மலரும் ஜரிகையும் ஜடகுஞ்சலமும் சேர்த்துப் பின்னிய நீள்சடை மேடையில் மலர்களை உதிர்க்க, காண்பவர் மயங்க மைதீட்டிய கண்கள் சுழல அலாரிப்பு ஆடினுள்.

நிருபர்கள் நோட்டில் விரைவாக தாம் ரிபோர்ட் செய்யக் குறிப்புக்களை அவளைப் பார்த்துக்கொண்டே வரைந்துகொண்டிருந்தினர். வெள்ளவொளி துணைக்கொண்டு பிலிம் எடுக்கும் சுழல் சப்தம் அடிக்கடி கவனத்தைக் கலைத்துக்கொண்டு இருந்தது.

மேலக் கடற்கரையிலே மாலை வேளையிலே பாயும் அலைகளுக்கு செம்முத்தமிட்டு மெள்ள மெள்ள மறையும் கதிரவன் வில்லைப்போல நடனகலா ஆடிக்கொண்டே வலது புறமாக மறைய வெல்வெட்டுத் திரைவிழ, மக்கள் ஆட்டக்காரியின் அபரிமிதமான பயிற்சியைப் பாராட்டி பலத்த கரகோஷம் எழுப்பினர்.

திரை எழவாரம்பித்தது. விரல், கணுக்கால், முழங்கால், ஒட்டியாணம், இறுக்கிக் கட்டிய மார்பகம், தோள், பதக்கம் அணிந்த கழுத்து, முகம்—அன்று நடனகலா செவ்விதழில் போலிப் புன்சிரிப்பு கிளுகிளுத்து நெளிய நடுமேடையில் ஜதிஸ்வரத்துக்கு தயாராக நின்ருள்.

இவ்வளவு தேர்ச்சி பெற்ற நடனகலாவை பயிலுவித்துத் தயாரித்த நட்டுவாங்கம் நரசிங்கத்தின் முகத்தில் பெருமையின் பூரிப்போ சந்தோஷத்தின் சின்னமோ காணப்படவில்லை. ஜதிஸ்வரத்துக்கு அவர் இயந்திரம்போல் ஸ்வரமும் தாளமும் போட்டார். அடிக்கடி அவர் கண்ணை மூடிக்கொண்டு நிகழ் காலத்தை விட்டு நெடுங்காலமான பிற்காலத்து எண்ணங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். நாற்பது வருஷப் பழக்கத்தால், அவர் மனம் இறந்த காலத்தை நினைத்து ஓடிக் கொண்டிருந்தாலும், சற்றுக்கூட தாளம் ஸ்வரம் தவருமல் நட்டுவம் கொட்டினர்.

"நாற்பது ஆண்டுகளுக்குமேல் நான் பரத நாட்டியம் கற்றுக் கொடுத்து வருகிறேன்," என்று சிந்தனை இறந்த காலத்திலே சற்று புரையோடத் தொடங்கியது நட்டுவனர் நரசிங்கத்துக்கு.

கறையற்ற கதர்

1927-ம் ஆண்டில் மகாத்மாஜி கதர்ப் பிரசாரத்திற்காகவே சுற்றுப்பிரயாணம் தொடங்கினர். அப்போது அவரைப் பலர், "மில் துணிகளுடன் கதர் துணி போட்டி போடமுடியுமா?" என்று கேட்டார்கள்.

"மில் துணியின் தன்மை வேறு, அது ஒழுக்கம் இல்லாத வாழ்க்கைக்கு இடம் கொடுத்து, சுரண்டல் கறையுடன் தோன்றுவது. கதர் மேன்மையானது, அன்பில் வளர்வது; எளியவர்களுக்கு உதவி செய்வது. எவ்வித கறையும் அற்றது. ஆதலால் அது மக்களுடைய பக்தியால் தான் வளரவேண்டும். பக்தியும் நம்பிக்கையும் இருந்தால் கண்டிப்பாக அது வளரும்" என்று அக் கேள்விக்கு காந்தியடிகள் மறுமொழி கூறினர்.

---

murphy radio

Delights the home!

Sole distributors in South India.

Mohamed Ebrahim & Co. Private Ltd.

MADRAS – BANGALORE – HYDERABAD – ERNAKULAM.

MOCAMBO

The home of the Elite for
Luxury - Comfort and Indian
Hospitality at its best.

We serve the best quick BUSINESS LUNCHES in town with a Connoisseur's Bar. Vivian and the fabulous "Knockouts" entertain you at Tea-Time. Dinner dance nightly with THE BEST FOOD IN TOWN and charming coleen with versatile Mocambo Combo.

PHONE: 23-1482 BAR 23-5896

அவர் நாட்டியம் பயிலுவித்த தேவதாசிகளின் திருமுகங்களும் குடித்தனக்காரப் பெண்களின் வதனங்களும், வெளி நாட்டுப் பெண்களின் ரூபங்களும் அவர்முன் தோன்றலாயின. அவரிடம் நட்டுவாங்கம் பயின்று இப்போது பல தலை நகரங்களிலும் பரத நாட்டியப் பள்ளிகள் நடத்துபவர் பல ஆடவர்கள்.

ஒரு காலத்தில் சில ஊர்களில்—முக்கியமாக தஞ்சை மாவட்டத்தில்—தேவதாசிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிலரே பரத நாட்டியத்தில் வல்லுநராய் இருந்தார்கள். அப்போது இவர்கள் நாட்டியத்தை வைத்துக்கொண்டு வயிறு வளர்க்க முடியாது. பெரிய மிராசுதார்கள் வீட்டில் திருமணக் காலங்களில் நாட்டியக் கச்சேரி வைப்பார்கள். அல்லது கோவில்களில் வைப்பார்கள். இங்கு பரதம் தனியொருத்தி மட்டுமாக ஆடமாட்டாள். குழுவாட்டமாக பின்னல் கோலாட்டம் போன்ற ஜனரஞ்சகமான ஆட்டங்கள் இருக்கும்.

அப்பொழுதெல்லாம் பரத நாட்டியம் கற்றுக் கொடுப்பவர்களுக்கு இவ்வளவு சிறப்பும் கிடையாது. இத்தனை குரு தட்சிணை வரும்படியும் கிடையாது.

நடனகலா அன்று விறுவிறுப்பாய் ஆடினாள். பழய சிந்தனைகள் சிடுக்கு விழாமல் நரசிங்கத்தின் மனத்தில் பிரிந்து வந்துகொண்டிருந்தது. தாளமும் நடனத்தின் விறுவிறுப்புக்கு ஏற்றபடி தவருமல் விழுந்துகொண்டிருந்தது. சபை, மேடை முழுதும் ஆடும் அவளுடன் கண்ணைப் புரட்டி ரசித்து லயித்துக்கொண்டிருந்தது.

"இப்போது குடித்தனக்காரப் பெண்கள் கூத்துப் பழகத் தொடங்கியதிலிருந்து குரு தட்சிணை பெருகிவிட்டது. ஒவ்வொரு தெருவிலும் தனக்கும் பரதம் தெரியும் என்று சொல்லிக் கொள்ளும் பெண்கள் பத்தாவது இருக்கின்றனர்" என்று மேலும் நரசிங்கத்தின் எண்ணப் பந்தின் இழை பிரிந்து நீண்டு வந்தது.

பரத நாட்டியத்தை தொழிலாகக் கொண்டு ஆடிவந்த பண்டைய பெண்களின் இரத்தத்தில் ஊறி வந்தது பரத நாட்டியம். இரத்தத்தில் ஊறியது என்ருல் பலகாலம் ஆடியதால் அவர்களுடைய சிருஷ்டியில் ஒரு பரத நாட்டிய ஜீவாணு ஒன்று வளைய வந்து கொண்டிருந்தது என்று சொல்லலாம். பரம்பரையாக ஒரு தொழிலை செய்துவந்தால் தொழில் மூலமான ஜீவாணுவை தொழிலாள ஆண் பெண் இனங்கள்

PHONES: HEAD OFFICE: 2433 · SECRETARY: 4623 · PRESIDENT RESI.: 4625 · DYE FACTORY: 3204

ESTABLISHED: 1938
TELEGRAMS: "SOCIETY"
RLY. STATION: SALEM EAST
POST OFFICE: SALEM-3

Patronise Handloom Fabrics. **Provide work for Millions.**

Always insist upon

THE SALEM AMMAPET SOCIETY'S PRODUCTS.

*LATEST DESIGN SAREES
*CHOLI PIECES
*DHOTHIES: BAVANCHU, GUNDANCHU &
*LACED DHOTHIES, & ANGAVASTRAMS
*BED-SHEETS, KERCHIEVES ETC.,

PLEASE VISIT OUR SALES DEPOT AT:—

1. Thiagaraya Nagar Sales Depot, No. 9, Usman Road, T. Nagar, MADRAS-17. Phone: 441723

2. Salem Sales Depot, 47/646, Car Street, SALEM-1.
3. Shevapet Sales Depot, 85-B. Kannara Street, SALEM-2.
4. H. O. Retail Depot, Ammapet, SALEM-3.
5. Attur Sales Depot, 257, Main Bazaar Street, ATTUR. (Salem District.)
6. Harur Sales Depot, 151, Bazaar Street, HARUR. (Dharmapuri Dist.)
7. Erode Sales Depot, 292, Agraharam Street, ERODE. (Coimbatore Dt.)
8. Trichy Sales Depot, 35-B, Chinnakadai Street, TIRUCHY-2.
9. Tirunelvely Sales Depot, 103-87, West Car Street, TIRUNELVELI TOWN.
10. Thirupathur Sales Depot, 22, Alangayam Road, THIRUPATHUR. (N.A.Dt.)
11. Neyveli Township Depot, Central Bazaar, Block No. 19, Unit No. 6/4, NEYVELI-3. (S.A.Dt.)

12. Silver Jubilee Depot, Thiru V. Ka. Pathai, Ammapet, SALEM-3.
13. Salem Wholesale Depot, 55, Second Agraharam, SALEM-1. Phone: 4621

Our Products can be had from all Co-optex Units, Handloom Houses, our authorised Agents and our Sales Depots.

A. MARIAPPAN,
President.

THE AMMAPET HANDLOOM WEAVER'S CO-OPERATIVE PRODUCTION & SALE SOCIETY LTD.

S. 532, AMMAPET: SALEM-3. (TAMILNADU)

உடல் கூற்றில் பரிணமம் செய்துகொண்டு சந்ததிகளுக்கு அளிக்காமல் இருக்க முடியாது என்று நட்டுவம் நரசிங்கம் எண்ணினர்.

திரை விழுந்தது, தாளம் ஓய்ந்தது, ஆனல் சிந்தனை ஓயவில்லை.

"இந்தக் காலத்தில் கற்றுக்கொள்ளும் பெண்கள் பள்ளிக் கூடம் அல்லது கல்லூரி சென்று படிப்பவர்கள். அவர்கள் படிப்பைப் போலவே பரதத்தையும் கருத்துடனும் உழைப்புடனும் தான் கற்கிறார்கள்" என்று யோசித்த நட்டுவனர் ஒரு பெருமூச்சு விட்டார். இதுவரை சிந்தனையின் பளு சுவாசத்தை அழுத்தி வைத்திருந்தது.

திரை தூக்கப்பட்டது. அடுத்த நிகழ்ச்சி, நட்டுவனர் கை தாளமிட வாய் வர்ணம் பாடியது, "மேலும் இவர்கள் பரதத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ள நூல்களை அலசிப் படிக்கின்றனர் ...... ஆனல் படிப்பும், கருத்தும், உழைப்பும் இரத்தத்தில் ஊறிய ஞானத்துக்கு ஈடாகுமா?"

மனம் கேள்வி கேட்க, 'ஆகாது' என்று பதிலாக தலை ஆடியது. அந்தச் சமயத்தில் வர்ணத்தின் உச்சமான கட்டம். குருவின் தலை ஆடியது தன் நடனத்தின் சிறப்புக்கு என்று எண்ணிய நடனகலா மேலும் ஆர்வத்துடன் ஆடினள்.

பரதம் பயிலும் தேவதாசி குடும்பத்தைச் சேர்ந்த சிறுமிகள் சிறு வயதிலேயே, தங்கள் குடும்பத்தில், ஆடுகிறவர்களைப் பார்த்து அனுயாசமாக சில அசக்கல்களை பிறவியுடன் வந்தவைபோல ஸ்வீகரித்துக்கொண்டு விடுகிறார்கள். ஆனல் குடித்தனக்கார மாணவிகளோ எவ்வளவு சிரமப்பட்டு கற்றாலும் சில நெளிவுகளும், அசைவுகளும் அவர்களிடை கலைப் பாங்கின் லாகவம் குறைந்துதான் இருக்கிறது. இந்தக்

காந்தி வாக்கு

பிற நாகரிகம் வீசாமல் என்னுடைய வீட்டை அடைத்து வைக்க நான் விரும்பவில்லை. நான் வாழும் வீட்டில், என்னைத் தூக்கி எறிந்துவிடாமல், பிற நாகரிகங்கள் மந்தமாருதம்போல வீசுவதை விரும்புகிறேன். என்னுடைய சமயம் ஓர் சிறைக் கூடமல்ல. நான் எல்லாச் சமயங்களையும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனல் இனம், சாதி, நிறம் என்ற ஆணவத்துடன் வீசும் காற்று வீசுவதை ஏற்கமாட்டேன். —யங் இந்தியா. 1—6—1921

குறை எனக்குத் தீராத மனக்குறை. இவர்கள் வெளிநாட்டில் போய் என்ன பதக்கங்கள், பத்திரிகைப் புகழ்கள் பெற்றாலும் இவர்களிடம் உள்ள இக் குறையை நான் மறக்க முடியவில்லை" என்று எண்ணமிட்டார் நட்டுவனார்.

நடனகலாவின் நெற்றியில் வியர்வை பூத்தது. முதல் வரிசைக்காரர்கள் அவள் களைப்பையும், ஒப்பனைக் கலைவையும் கவனிக்க முடிந்தது. இடைவேளைத் திரை விழுந்தது.

மரத்துப்போன கால்களை நீட்டி மிருதங்கக்காரரை மெது வாகப் பிடித்துக்கொண்டு நரசிங்கம் எழுந்தார். கால் உணர்வு பெற சிறிது நேரம் பிடித்தது. வாத்தியக்காரர்களுடன் அவர் இடைவேளை சிரமபரிகாரம் செய்துகொண்டு சிற்றுண்டி அருந்தினார்.

இடைவேளைக்குக் கலைந்த கூட்டத்தில் நடனகலாவின் நடனச் சிறப்பைப் புகழாத நாவில்லை.

நடனகலாவுக்கு இருவர் விசிறிபோட்டனர். அவள் சிறிது சூடான பானம் அருந்தினாள். ஒப்பனையாளர்கள் கலைந்த பூச்சுக்களைச் செப்பனிட்டனர். பிறகு ஆடையை மாற்றி வேறு நிற ஆடைகளை வேறு ஒரு பாணியில் அணிந்து கொண்டாள்.

இடைவேளையில் நட்டுவனார் ஒருவரிடமும் பேசவில்லை. நடனகலாவிடமும் அணுகவில்லை.

இடைவேளை முடிந்த மணியொலிக்க வெல்வெட் திரை சுருக்கங்களும் குஞ்சலமும் நலுங்காமல் எழுந்தது.

வாத்தியக்காரர்களும் நட்டுவனாரும் அமர்ந்திருந்தனர் நடனகலா அழகு நடை போட்டு நடந்து வந்தாள் மேடைக்கு

'தூக்கிய திருவடி' என்று அனௌன்ஸர் பிரகடனம் செய்தார். இசை தாளத்துடன் பாய்ந்தது. நடனகலா சொற் களைச் சாடையாக முணுமுணுத்துக் கொண்டே அபிநயம் பிடித்தாள்.

நட்டுவனார் சிந்தையும், தில்லை அம்பலத்தில் மீண்டும் உலவச் சென்றது.

"பண்டைய தாசிகளின் வாழ்க்கைச் சூழ்நிலை இளம் வயதிலேயே பலவித உணர்ச்சிகளின் இலட்சணங்களை பச்சைப் பதத்தில் நேரடியாகக் கண்டு அதை இயற்கையாகப் பாவங் களில் காட்ட முடிந்தது. குடித்தன வாழ்க்கையில் உணர்ச்சி

களைப் பச்சைப்பதத்தில் பார்க்கமுடியாததால் பாட்டு சொல்லளவில் காற்றில் பறக்க. பாவம் முகத்தில் வடிவதில்லை. நாட்டியத்துக்கு இதைவிட என்ன குறைவு வேண்டும். பரதம் பெருகி வருகிறது என்பது ஆஷாடபூதித்தனம்'' இந்த எண்ணப் படலத்தில் கை ஜாலரா நழுவிவிட்டது. தாளம் தட்டுப்பட்டது. நடனத்தில் தடங்கல். சபையில் கண்யமானர்களே இருந்ததால் கலவரமில்லை.

நரசிங்கம் ஜாலராவை விட்ட இடத்தில் பிடித்தார். நடனகலாவும் புன்முறுவலுடன் தொடங்கினாள். நரசிங்கத்தின் எண்ணமும் அறுந்த இடத்திலிருந்து தொடங்கிவிட்டது.

"நடனகலா, மேற்குலப் பெண். ஒரு நீதிபதியின் மகள். நாட்டியத்தைத் தொழிலாக்கிக்கொள்ள அவளும் விரும்பாள், அவள் விரும்பினாலும் பெற்றோர்கள் விடமாட்டார்கள். திருமணமாகி அன்னையாகி பாட்டியாகிவிடுவாள்."

மகாத்மாவின் வாழ்க்கையில்...

தீனபந்து ஆண்ட்ரூஸும் காந்திஜியும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒருவரையொருவர் செல்லப் பெயருடன் விளித்து உரையாடுவது வழக்கம். ஒரு சமயம் தீனபந்து ஆண்ட்ரூஸ், சட்டையும அகலமான கருப்புக் கரையுள்ள வேஷ்டியும் அணிந்துகொண்டு, காந்திஜியை காண வந்தார். மோட்டார் காரிலிருந்து இறங்கும்போது, அவருடைய உடையைக் கவனித்த அன்பர் ஒருவர். "புடவைக் கரை போட்ட வேஷ்டியை அணிந்து கொண்டிருக்கிறாரே" என்று கூறியது காந்திஜி காதில் விழுந்தது.

தீனபந்து ஆண்ட்ரூஸை வரவேற்ற காந்திஜி, "சார்லி, இது என்ன வேஷம்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

காந்திஜியின் கேள்வி அவருக்கு புரியவில்லை. "ஏன் இப்படிக் கேட்கிறாய்? இந்த உடைக்கு என்ன?" என்றார் அவர்.

"அகலக்கரை போட்ட துணியைப் பெண்கள்தான் விரும்புவார்கள் என்று இந்த அன்பர் கூறினார்" என்று காந்திஜி, அருகிலிருந்த ஊழியரைச் சுட்டிக்காட்டினார்.

"அப்படியா? என்னுடைய மோஹனைப் பார்க்க வந்திருக்கிறேன் அல்லவா? அதனால்தான் இந்த வேஷம்?" என்றார் தீனபந்து ஆண்ட்ரூஸ்.

முதியவர்கள் இருவரும் நகைச்சுவையுடன் உரையாடியதை. அனைவரும் ரசித்தார்கள். —ஜ.

வழி காட்டும் தமிழகம்:

தெளிவான கொள்கைகள் மூலம் சிக்கல்களுக்குத் தீர்வு; ஏழை மக்களின் நலன்களைக் காப்பதில் உறுதி; அறிவியக்க வழியில் முன்னேற்றம் – இவை இன்றைய தமிழக அரசின் தனிமுத்திரைகளாக விளங்குகின்றன.

தாய் மொழி; ஆங்கிலம் என்ற இரு மொழித்திட்டம் மூலம் மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டது;

தொழிலாளர் நலனை மையமாக வைத்து "வளர்க தொழில்; வாழ்க தொழிலாளர்" என்பது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது.

படி அரிசித்திட்டம், விலைவாசி ஏற்ற விஷ வட்டத்தை வெட்டி எறிந்தது. மதுவிலக்குத் திட்டத்தில் உறுதியினால் ஏழை மக்கள் நல் வாழ்வுக்கு அரண் அமைக்கப்பட்டது.

வீரிய விதைகள், திருந்திய சாகுபடி முறைகள், விவசாயக் கடன் உதவி மூலம் வேளாண்மை வளம் பெருக்கப்படுகிறது. வறட்சி துயர் துடைப்பு பணி, மக்களின் வாட்டத்தை நீக்கப் பயன் படுகிறது.

நாட்டின் மனித சக்தியை பயன்படுத்த, அதன் மூலம் பொது நலப் பணிகளை நிறைவேற்ற, சீரணி— ஒரு பேரணியாக உதவுகின்றது.

மக்களின் பேராதரவைப் பெற்ற நிலையூன்றிய ஆட்சியில் நன்மைகளை மக்கள் கண்கூடாகக் காண்கின்றனர். தங்களுடைய அரசுக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் அளிக்கின்றனர்.

(தமிழக அரசு செய்தித்துறை வெளியிட்டது)

இப்படி அவர் நினைத்தபோது வெள்ளைத் தாடி முளைத்த முகவாய்க்கட்டை தானாகச் சிரிப்பில் நகர்ந்தது.

அவர் சிரித்தபோது 'தீராத விளையாட்டுப் பிள்ளை' தொடரவேண்டிய தருணம்.

"யாராவது வக்கீலுக்குப் படித்து பிராக்டீஸ் செய்யாமல் இருப்பாளா? எவளாவது டாக்டர் பட்டம் பெற்று வைத்தியம் செய்யாமல் பாட்டியாவாளா? ஆனால் ஐந்து ஆறு ஆண்டு பரதம் கற்றுக்கொண்டு அதை கைவிட மனம் வந்துவிடுகிறது. அதனால் குடித்தனக்காரர்களிடம் நடன பரம்பரை ஏற்படுவது இல்லை. கல்யாணம் ஆகிவிட்ட பிறகு பரதம் ஆடக்கூடாது என்று கட்டினவன் கட்டளையிடுவான், கட்டுமுன் பரதம் தெரியுமா என்று அது ஒரு அவசியத் தகுதி போலக் கேட்டிருந்தாலும்கூட"

"தீராத விளையாட்டுப் பிள்ளைக்கு"—நடனகலா கும்மாளமாக அபிநயம் பிடித்தாள். சபை குலுங்கக் குலுங்கச் சிரித்தது. சபை அவள் முக நெளிவுகளில், அங்க அசைவுகளில் கண்ட சிறப்பில் நரசிங்கம் பரம்பரை வழி பிறவா குறையை மட்டும் கண்டார்.

அவர் உள்ளம் குமுறியது. தன் கலை வாழ்க்கை மலடானது போல ஒரு வெறுப்பு ஏற்பட்டது.

"கலையைக் கற்றுக்கொண்டால் அதற்குத் தன்னை அர்ப்பணம் செய்துகொண்டு வாழ வேண்டும். பெருமை, பொழுது போக்கு இதற்கு கலைதானம் செய்தவன்—நான் முட்டாள், என் வாழ்வு வியர்த்தம். நாட்டியப் பரம்பரையை விட்டு நான் வயிற்றுப் பிழைப்பிற்கு கலை சொல்லிக் கொடுக்கத் தொடங்கியது தவறு."

'தீராத விளையாட்டுப் பிள்ளை' முடிந்தது, நரசிங்கம் ஜாலராவை கீழே வைத்துவிட்டு எழுந்தார். அவருக்கு அதை வீசி எறிய வேண்டும் போல இருந்தது. ஆனால் சபை, நடனகலா இரண்டையும் அவமானப்படுத்த அவர் இச்சைப்படவில்லை. சபை, ரஸிக சபை. நடனகலா, உயர்ந்த மாணவி. தவறு அவர்கள் பேரில் இல்லை. குறை மயிலாடுமிடத்தில் வான்கோழிக் கூட்டம் ஆடுவதால் வந்தது. சிஷ்யனிடம் எஞ்சிய இரண்டு உருப்படியையும் கவனித்துக்கொள்ளச் சொல்லி விட்டு மேடையை விட்டு அகன்றுவிட்டார் நரசிங்கம். அன்று முதல் அவர் பரதம் பயில்விப்பதையும் விட்டொழித்தார். ★

With the compliments of

MADURA MILLS CO., LTD.,

MADURAI, S. INDIA.

MANUFACTURERS OF:

YARN

INDUSTRIAL FABRICS

HARVEY TWIN TUSKER FABRICS

HARVEY SARABAND SUITINGS

HARVEY SARATOGA SHIRTINGS

தெரியலையே!

மந்தைவெளி - சுந்தரம்

—:o:—

1 காலை இளம் பரிதி கடல் மேல் எழுந்து விட்டான்
வான முகட்டினிலே பல வண்ண முகிற் கூட்டம்
பனித்துளியாய் உருவெடுத்து பசும் புற் றரைமேலே
மணி மணியாய் பாய் விரிக்க மனமகிழ்ந்ததோர் காலை!

2 அத்தகைய வேளையிலே அவ்வூர் ஆற்றருகே
சேயுடன் தாயொருத்தி சின்னஞ்சிறு குடிலினிலே
காயான பருவத்தில் கணவனை இழந்ததினால்
விதவைக் கோலத்தில் விதியென வாழ்ந்திருப்பாள்.

3 அவள்ஈன்ற ஆண் மகவோ அறிவிலு லக்கைக் கொழுந்து
மதியற்ற அவனுக்கே மறதிக் குண மதிகமடா!
முக்கிய விஷயத்தையும் முணுமுணுத்தே சொல்லிவிட்டால்
'பக்' கென மறந்திடுவான், பார்ப்பவர் வியந்துநிற்க!

4 அபாக்யப்பேதை அவள் தன்மகனை யெழுப்பி
'தம்பி எழுந்திருடா' தந்தைக்குத் தர்ப்பண நாள்!
அக்கறை கடந் துற்று ஆங்குள்ள சாத்திரியை
இன்று அமாவாசை என்றறிந்து வா'வென்றாள்.

5 என்றவள் முடித்தவுடன் எழுந்தான் அம்பிப் பயல்
நன்றெனச் சொல்லி நடந்து செல்கையில்
'அமாவாசை இன்றோ?' என்றே முணு முணுத்து
விரைவில் நதி கடந்து வேற்றூர் வந்துற்றான்.

6 அந் நாட்டு அய்யரை அறிந்த அம்மூடன்
'ஐயா! வணக்கம். அமாவாசை இன்றோ சொல்!'
பொய்யா துரைப்பீர் பிழைத்திடுவேன்' என்றான்.
சாவு கிராக்கி என சாத்திரியும் கருதலுற்றார்.

7 'ஏடா, சிறுவாய்! இந்தோ கேட்டுக் கொள்!
இன்றதை நீ விட்டு விட்டால் இனி யடுத்ததோர்
முப்பதாம் நாளினிலே மீண்டும் அடைந்திடுவாய்!
மூடி வைத்து சொன்ன பதில் மூடா மறவாதே!'

8 பார்ப்பனர் கூற்றைப் பன்முறை பகர்ந்து
அந்நகர் பாட்டைகளை அதிசயித்த நம்பிள்ளை
பாங்குடன் நடைசெய்தான் பல்வேறு காட்சிகளை
பார்வைக்கு விருந்தளித்து பசியற்று பயணமுற்றான்.

9 அந்நாட்டு அரசனுக்கு அழகிய மகளொருத்தி
பைந்தோளி லுற்றிருக்கும் பஞ்சவர்ணக் கிளியொன்று
அக்காலைப் பொழுதினிலே அரண் மனையில் காணவில்லை
அஞ்சினர் அதுகண்டு ஆங்குற்ற பன்மக்கள்.

10 இதுகண்ட இளவரசி ஏவலர் பலர் கூட்டி
'மூவுலகம் தானாளும் மூக்கரசன் காவலரே!
நானாளும் கிளி யொன்று நாழிகையாய் இங்கில்லை!
கொணர்ந்திடுவீர் இன்றிற்குள், கொன்றிடு வேனில்லையேல்!

இளவரசியின் ஆணைக்கஞ்சி ஏவலர்கள் சந்து பொந்து கடைகள் கோவிலெல்லாம் தேடி நிற்க, நமதம்பி "இன்றதை நீர் விட்டால் இனியடுத்த முப்பதிலே மீண்டும் அடைந்திடுவாய் மூடா மறவாதே" என்றான். ஏவலர்கள் அவனை அடித்து துன்புறுத்தி ',இன்றே பிடிபடணும்" என்று சொல்லடா என்றார். பையன் சாத்திரியார் சொன்னதை மறந்து "இன்றே பிடிபடணும்" என்பதையே முணுமுணுத்து வந்தான். ஒரு காதம் நடந்த பையன் பக்காத்திருடனொருவனைப் பார்த்து "இன்றே பிடிபடணும்" என்று இயம்பினான். கொள்ளையிட்ட பொருளோடு இருந்த திருடன் "மூடா அரண்மனையில் திருட ஒரே நாள் போது மோடா – "இதைக் கொண்டு வைத்துவிட்டால் இன்னும் ஒன்றிருக்கு" என்று சொல்லடா' என்றான். கவனமாய்க் கேட்ட பையன் முன்னவர் சொன்னதை மறந்தான்—நடந்துகொண்டேயிருந்தான். அவ்வூர் தனவந்தன் ஒருவன்—தன்னிரு மகள்களில் ஒருத்தியை இடுகாட்டில் எரிக்க சென்றபோது, பையன் திருடன் சொன்னதை அவனிடம் சொன்னான். அவச்சொல் சொன்ன பையனை அங்கிருந்தோர் கடிந்து "பையா அவச்சொல் சொல்லாதே எங்கு சென்றாலும் 'நீடூழி வாழி' என்று சொல்" என்றார். பையனும் அவ்வுரையை சிக்கெனப் பிடித்தான்; பின்னும் நடந்தான். வழியில் எரிந்துகொண்டிருந்த வீட்டைக் கண்டு "நீடூழி வாழி" என்றான். அங்கிருந்தவர் சினமுற்று 'எரிகின்ற வீட்டுக்கு வாழ்த்துக்கூறாதே மூடா—'தெரிகிறது என்று சொல்' என்று பணித்தார். பையனும் "தெரிகிறதே' என்பதை முணுமுணுத்தான். வீட்டுக்குத் திரும்ப ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. அந்த நதியில் உடைகளெல்லாம் கழற்றிவிட்ட சிலர் நீந்திக்கொண்டிருந்தார்கள். "தெரிகிறது-தெரிகிறது" என்றா தன்வீட்டை நோக்கிக்கொண்டே பையனும் நீந்தினான்.

32 அவன் கூற்றின் காரணத்தை அறியாத அம்மனிதர்
கடைக்கண்ணால் தம்முடலை கணக்காக பார்த்துக் கொண்டு
எம்பியைக் கண்ணுற்று 'எவருக்கும் தெரியலையே!'
எனக்கூற அம்பியும்முன் கற்றதினை மறந்திட்டான்.

33 ஆற்றைக் கடந்திட்டான் அவளில்லம் அடைந்திட்டான்
அம்மையும் அருகழைத்து அன்புடன் துடைத்திட்டாள்
'என்றடா, அமாவாசை?' எனக் கேட்கும் பொழுதிலே
'எவருக்கும் தெரியலையே!' எனச் சொல்லி வாயடைத்தான்!

—o—

revel
in every
puff
RICH, RIPE VIRGINIA TOBACCOS SPECIALLY BLENDED FOR YOUR SMOKING DELIGHT
Esquire
Filter Tipped
CIGARETTES
MADE IN INDIA
Esquire
FILTER-TIPPED
GOLDEN TOBACCO CO. PRIVATE LTD. Bombay - 56
INDIA'S LARGEST NATIONAL ENTERPRISE OF ITS KIND

மஹாத்மாஜியுடன் எனது முதல் சந்திப்பு

[க. சந்தானம்]

—o—

நான் 1920-ம் ஆண்டில் தான் முதன் முதலாகக காந்திஜியை நேரில் கண்டேன். அதற்கு முன், அவர் இரண்டு மூன்று தடவைகள் சென்னைக்கு வந்திருந்த போதிலும், நான் என் கல்வியில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் எனக்கு அரசியலிலோ, பொதுவாழ்க்கையிலோ சுவை ஏற்படவில்லை.

லோகமானியர் இறந்ததும், பம்பாயில் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தைப் பிரகடனம் செய்ததும், எனக்கு மனத்தில் ஓர் துடிப்பு ஏற்பட்டும் வெற்றிக்கான நம்பகம் ஏற்படவில்லை. காந்திஜி துவக்கிய இயக்கம் பலன் தரும் என்று நான் அப்போது கருதவில்லை, பள்ளிக்கூடம், கல்லூரி, கச்சேரிகள், பதவி இத்துறைகளில் மறியல் செய்வதால் எதிர்பாராத விதத்தில் வெற்றி கிடைப்பினும், ஆங்கிலேயர் அரசாங்கம் விலகிவிட்டால் அதனுல் குழப்பம் உண்டாகுமேயன்றி சிரான சுதந்திரம் கிடைக்காது என்று நான் எண்ணினேன்.

காந்திஜி 1920-ம் ஆண்டு ஆகஸ்டு முற்பகுதியில் சென்னைக்கு வந்தார். திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அவருடைய மகத்தான சொற்பொழிவைக் கேட்டபோது என் உள்ளம் குழைந்துவிட்டது என்ருலும் என் சந்தேகங்கள் திரவில்லை. மறுநாள் பிராட்வேயிலிருந்த கிலாபத் அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடந்தது. கனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரி, ஜி. ஏ. நடேசன். யாகுப் ஹாஸன், ராஜாஜி முதலான பெரியோர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டத்திற்கு யார்வேண்டுமானுலும்வரலாம் என்று இருந்ததால் ஒத்துழையாமை இயக்கத்தில் பற்றுள்ள சில நண்பர்களுடன் நானும் சென்றிருந்தேன். காந்திஜி சுருக்கமாக, தமக்கேயுரித்தான நம்பிக்கையுடன் தம் திட்டத்தை விளக்கி முடித்ததும் கேள்விகள் ஏதேனும் உண்டா என்று கேட்டபோது ஆழ்ந்த நிசப்தம் நிலவியது. எவரும் கேள்வி கேட்கத் துணியவில்லை. நான் அவ்வமைதியைக்கலைத்து, "பெருவாரியான மாணக்கர்களும், வழக்கறிஞர்களும், அரசாங்கப் பணியாளர்களும், பள்ளிக்கூடம், கச்சேரி, அலுவலகம் இவைகளில் மறியல் செய்வார்கள் என்று காந்திஜி உண்மையில் எதிர்பார்க்கிருரா?" என்று கேட்டேன். கூடியிருந்த பெரியோர்கள் என்னைப் பார்த்த பார்வையிலிருந்து அவர்கள் என்னை பண்பு அறியாத துடுக்கான சிறுபையன் என்று கருதியதாகத் தோன்றியது. ஆனல்

நம்பிக்கை

சில சமயங்களில் அறிவு நமக்கு வழிகாட்டுவதில்லை. அப்போது நமது நம்பிக்கையே வழி காட்டுகிறது. ஆகவே, நம்பிக்கை அறிவுக்கு முரண்பாடானதல்ல; அறிவுக்கு அப்பாற்பட்டது. அறிவு நம்மைக் கைவிடும்போது நம்பிக்கையே உதவுகிறது.

நம்பிக்கை மெல்லிய மலரைப் போன்று காற்றடித்தால் வாடிவிடக் கூடியதல்ல; நம்பிக்கை இமயமலையைப் போன்றது; அதை யாரும் அசைத்து விட முடியாது. கடவுளிடத்து நம்பிக்கை வைப்பவன் இத்தகைய சக்தி பெறுகிறான்.

பிரார்த்தனை, நமது நம்பிக்கையை சக்தி வாய்ந்ததாகச் செய்கிறது. —காந்திஜி

காந்திஜியின் பார்வையில் அத்தகைய நோக்கில்லை. அவர் அமைதியாகவும் உள்ளபூர்வமாகவும் பதிலளித்தார். அவர் சொன்ன சொற்கள் அப்படியே இப்போது என் நினைவில் இல்லை. அவர் கூறியதின் சாரம்: இதுதான் "நான் அறியேன், நடக்க வேண்டியது கடவுள் சித்தம். ஆனால் இரண்டு விஷயங்கள் உண்மை என்பது எனக்கு நிச்சயம். போதிய பேர்கள் கலந்து கொண்டால் ஆங்கிலேயர் படிந்து வருவார்கள். நாம் வெற்றி காணமுடியும். ஆயினும் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்வதில் அசாத்தியம் ஒன்றுமில்லை. உதாரணமாக என்னையே எடுத்துக் கொள். நீயோ இன்னும் வழக்கறிஞனாகத் தொழிலைத் தொடங்கவில்லை. உனக்கு இதில் விருப்பமில்லை என்பதைத் தவிர இந்த இயக்கத்தில் சேர உனக்கு வேறு தடை என்ன இருக்க முடியும்?"

என்னைப் பற்றியவரை நான் ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டேன். என் நண்பர்கள் சிலரும் இயக்கத்தில் சேரத் தீர்மானம் செய்தார்கள். அன்றே எம்மில் சிலர் கூடிப் பேசினோம்; ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்துவிடத் தீர்மானித்தோம். எங்கள் தீர்மானத்தைக் காந்திஜிக்கு அறிவித்தோம். அவர் அதை ஏற்கத் தயாராக இல்லை! இன்னும் ஏழு நாட்கள் வரை இந்தத் தீர்மானம் நிலைத்திருக்குமானால் எங்களை இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதாக அவர் கூறினார். எங்களுடைய ஆர்வத்தை உணர்ந்த ராஜாஜி, மலையாளத்தில் காந்திஜி சுற்றுப்பயணம் செய்வதால் அவர்களுடன் கலந்து கொள்ளுமாறு சொன்னார். காந்திஜி குழுவினருடன் மூன்றாவது வகுப்பில் ரயில் பிரயாணம் செய்தோம். இதனால் காந்திஜியை நன்கறிய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. காந்திஜி அக்காலத் தலைவர்களுள் தனித்தன்மை வாய்ந்தவர் என்று அப்போது தான் நான் உணர்ந்தேன். புராதன மஹரிஷிகள், மதாசாரியர்கள் இனத்தைச் சேர்ந்தவர் என்று எனக்கு விளங்கியது. அவர் சொல்லும், நடப்பும் இயற்கையைத் தழுவியவை. சொற்கட்டும் பொருட்செறிவுமுடைய அவர் பேச்சில் வீணான சொற்களே இல்லை; ஓடிக்கொண்டிருக்கும் ரயில் வண்டியில், முகம் பார்க்க கண்ணாடி கூட வைத்துக் கொள்ளாமல், சாதா

ரணக் கத்தியால் அவர் சவரம் செய்து கொள்வதைக் கண்டேன். சாப்பாடு நேரத்துக்கு வண்டி சேரும் நிலையங்களில் அங்குள்ள தொண்டர்கள், அவருக்காக ஆட்டுப்பால் கொண்டு வந்தார்கள். அவருடன் பயணம் செய்த மௌலானா ஷௌகத் அலிக்கு செக்கச் சிவந்த இறைச்சியுடன் உணவு கொண்டு வந்தார்கள். தென்னிந்திய வைணவ குடும்பத்தில் பிறந்த நான் இறைச்சியுண்பதைப் பார்த்ததில்லை ஆகையால் எனக்கு அது அருவெறுப்பாக இருந்தது. நான் உடனே எழுந்து வண்டியின் மறு கோடிக்குச் சென்றுவிட்டேன். இதைக் கண்ட காந்திஜி புன்னகை பூத்தார். விகண்டையாகப் பேசுபவர் ஒருவர் முணுமுணுத்தார்; "ஆட்டை வாங்கிப் பாலை மஹாத்மாவுக்கும், அதன் உயிரை வாங்கி இறைச்சியை முத்தண்ணு மௌலானாவுக்கும் தருகிறார்கள்" என்று ஒருவர் கிசுகிசுத்தார். இந்த நகைச்சுவையும் விருந்தாக இருந்தது.

ஒவ்வொரு நிலையத்திலும், இரவில் கூட காந்திஜியைக் காண ஏராளமாகக் கூட்டம் கூடிற்று காந்திஜி மணிப்பிரகாரம் தூங்கிவிடுவார். வண்டியின் இரைச்சலோ கூட்டத்தினருடைய ஜய கோஷத்தையோ பொருட்படுத்தாமல் அவர் உறங்கினர்.

கோழிக்கோடிலும், மங்களூரிலும் இரவில் நாங்கள் தங்கியது நன்ருக நினைவிலிருக்கிறது. மாலையில் நாங்கள் கோழிக்கோடு போய்ச் சேர்ந்தோம். செல்வந்தரான ஒரு குஜராத்தி வியாபாரி வீட்டில் தங்கினேம். அவர் ராஜபோக விருந்தளித்தார். நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது காந்திஜி வாழையிலையில் பரிமாறியிருந்த பல்வகை உணவுகளைப் புசித்துக்கொண்டிருப்போரின் பந்தி நடுவே நடந்து வந்தார். "ஓ நாம் நடத்தவேண்டிய கடும் போருக்கு தயார் செய்து கொள்கிறீர்கள் போலும்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். கோழிக்கோடிலும், மங்களூரிலும் மக்கள் உணர்ச்சி வெறி கொண்டிருந்தனர். முக்கியமாக, கிலாபத் இயக்கத்தை நடத்தி வைக்க காந்திஜி முன் வந்தது முஸ்லிம்களை அதிசயத்தில் ஆழ்த்தியது. சென்னை திரும்பியதும் திருவாளர்கள், ராமனுஜனும், ராஜகோபாலனும் நானும் காந்திஜியை அணுகி நாங்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் சேருவது என்று செய்த தீர்மானத்தில் உறுதியாக இருப்பதாகக் கூறினேம். மகிழ்ச்சியுடன் எங்களை ஏற்ற காந்திஜி நாங்கள் உண்மை வீரர்களாகத் திகழ்வோம் என்று தான் நம்புவதாகவும் முக்கியமாக நாங்கள் கதர் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும் என்றும் கூறினர். □

காந்தி வாக்கு

இந்தியா தோற்ருல் ஆசியா செத்துவிடும். பலப்பல நாகரிகங்களையும் சமயங்களையும் ஏற்றுக் கொண்டு சமரச நோக்கத்துடன் வாழும் இந்தியா, உலகின் பல பகுதிகளில் வசிக்கும் 'நசுக்கப்பட்ட மக்களுக்கு' தெம்பூட்டுவதாக இருக்கவேண்டும்.

—தில்லி நாட்குறிப்பு.

Get that Hamam complexion. Fresh. Glowing. Radiant. Hamam's rich, fragrant lather gently refreshes your skin as it cleanses. Use Hamam daily. It always keeps its shape— and lasts and lasts...
FRESH & GLOWING
HAMĀM
the family soap
हमाम
the longer-lasting toilet soap
A TATA PRODUCT
CMTH-4A

"Great men and eminent men have monuments in bronze and marble set up for them, but this man of divine fire managed in his lifetime to become enshrined in millions and millions of hearts so that all of us became somewhat of the stuff that he was made of, though to an infinitely lesser degree."

—Jawaharlal Nehru

INDIANOIL — *a National Trust for Economic Prosperity*

INDIAN OIL CORPORATION LIMITED

மஹாத்மா காந்தி அஞ்சலி*

(S. ஸ்ரீநிவாசன்)

—o—

1 மக்களெல்லாம் மகிழ்வெய்த,
சக்கரைபோல் உரை மொழிந்தேன்.
வக்கணையால் ஏழையென்றார்
வாய்மையிதோ தோழீ?
ஏழையென்றும் மோழையென்றும்
இயம்புவ ரிருக்கட்டும்
வழங்கிடுவோம் வள்ளலென்றே!
வாய்மையிதே தோழீ!

2 வாய்மையினில் வல்லவனை,
வாழ்வின்வழி வகுத்தவனை,
பொய்யனென்று புலம்பிடுதல்
பொருந்து வதோதோழீ?
பொய்யனென்றும் தீயனென்றும்
புகலுபவர் புலம்பட்டும்
பொய்யாத நிலைபெற்றான்
என்றிசைப் பீர்தோழீ!

காந்தி வாக்கு

அந்நிய ஆதிக்கத்திலிருந்து நாட்டை மீட்டு நம்மவர் சிலரிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது சுயராஜ்யம் என்று கருதுவது தவறு. பதவியிலிருப்பவர்கள், தங்களுடைய அதிகாரத்தை தவறாக உபயோகிக்கத் துணிந்தால் அதை எதிர்க்கக்கூடிய அளவுக்கு மக்களுக்கு அறிவூட்டி, நேர்மையான ஆட்சி முறைக்கு ஆற்றலைப் பேணுவதே சுயராஜ்யம்.

—யங் இந்தியா 29—1—1925

---

3 சித்தமெல்லாம் சத்தியமாய்ச்
சின்மயமாய் வாழ்ந்தவனைப்

பித்தனென்றே பேசுகிறார்
பெட்பிது வோதோழி!

பித்தனென்றும் பேதையென்றும்
பேசுபவர் பேசட்டும்,

முத்தனென்றே மொழிந்திடுவோம்
முறையிது வேதோழி!

4 வெள்ளையரை வெளியேற்றி
வெற்றிதனைத் தேடிவைத்தோன்!

உள்ளத்தா லுன்னியுன்னி
உவப்பெய்தல் பிழைப்போடி

உள்ளத்தா லுவப்பெய்தி
எள்ளளவு மிகழாமல்

வள்ளலையாம் வழிபடுதல்
வாழ்முறை யாம்தோழி!

5. மண்ணுலகை அமரர் வாழ்
விண்ணுலகாய்ச் சமைத்திடவே

பண்பிலுயர் அண்ணலையாம்
'பரதன்' என்றேழும் தோழி!

யாருக்கும் மேலவனைப்
பரதனென் றிசைத்திடவா?

பாருக்கெலாம் உரியனெனப்
பாடிடுவோம் தோழி!

---

* 1967-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி காந்தி கவியரங்கத்தில் செய்தளித்தது—தில்லி தமிழ்ச் சங்கம்.

—o—

Ample Food Stable Prices

Giving the consumers a steady supply of good quality food at reasonable prices...giving the farmers a fair price for their produce is our duty.

We are committed to achieve this goal by buying from the farmers increasingly large quantities of foodgrains, moving them into safe storage centres and regulating the supplies to ensure that more and more people can get ample and better food at stable prices.

THE FOOD CORPORATION OF INDIA
1, Bahadur Shah Zafar Marg, New Delhi-1.



FC11031-'B

சத்தியம் - சத்தியாக்கிரகம்

திரு. ஜே. பி. கிருபளானி

—o—

உலக மக்களுக்கு புதுமையாக வழங்க, தம்மிடம் ஏதுமில்லை என்று காந்திஜி அடிக்கடி கூறுவதுண்டு. காந்தீய சமயம் ஒன்றை நிறுவும் யோசனை அவருக்குக் கிடையாது. தம்முடைய சீடர்கள் என்று எவரையும் அவர் குறிப்பிட்டதில்லை. சத்தியமும் அஹிம்ஸையும் மகாமேரு போலத் தொன்மையானவை என்று கூறிய அவர், அரசியலிலும் சர்வதேச விவகாரங்களிலுமுள்ள பிரச்னைகளைத் தீர்க்க, அவற்றை ஆண்டு, புதிய விளக்கம் தந்தார்.

சத்தியமும் அஹிம்ஸையும் தொன்மையானவையே. மகான்களும் சீர்திருத்தவாதிகளும் பல்லாயிரக் கணக்கான மக்களும் சத்தியவாதிகளாக வாழ்ந்தார்கள்—வாழ்கிறார்கள். சத்தியத்தின் மேற்பூச்சுடன் அசத்தியம் தழைக்கிறது. மக்கள் அனைவரும் பொய்யர்களாக வாழத் துணிந்தால், உலகம், செயல் தடுமாற்றமடையும். வாழ்க்கைக்கு அடிப்படை வாய்மையே. ஒருவரை ஒருவர் நம்பாவிட்டால் செயலாற்றல் சரளமாக இராது. தன்னுடன் பழகுகிறவர்கள் நேர்மையாக நடந்துகொள்ளக்கூடும் என்ற நம்பிக்கையுடன் ஒவ்வொருவனும் செயலாற்றுகிறான். அந்த நம்பிக்கையில்தான் உறவும் தொடர்பும் வளர்ந்து செயல்கள் நடைபெறுகின்றன.

இன்றைய வாழ்க்கையில் பொய்யும் பித்தலாட்டமும் மலிந்து விட்டது. வணிக உலகத்திலும் இவற்றைக் காண்கிறோம். ஆயினும் ஒரு வணிகன் மற்றோர் வணிகனுக்குக் கொடுத்த வாக்கை—சான்றாகக் கொண்டு—நிறைவேற்றுகிறான். நாணயம் இல்லாவிட்டால் வாணிபம் இல்லை. எழுத்து மூலமாகச் சான்றுகள் இன்றி, வாக்குமூலமே பல்லாயிரக் கணக்கில் வியாபாரம் நடைபெறுகிறது.

சர்வதேச அரசியலிலும் பித்தலாட்டங்கள் உள. ராஜதந்திரம் என்ற பெயரில் நடைபெறும் அவற்றை, ஒவ்வொரு நாடும் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள முயலுகிறது. நாடுகள், பலப்பல துறைகளில், ஒன்றுடன் ஒன்று ஒப்பந்தம் செய்து கொள்கின்றன. விரும்பிய முறையில்—தனக்குச் சாதகமாக—அந்த ஒப்பந்தத்தின் பலன் ஏற்படாது என்று தோன்றினால் அதை 'குப்பைக் காகிதமாக' ஒதுக்கிவிட ஒவ்வொரு நாடும் முனைவதை நாம் காண்கிறோம். பழைய ஒப்பந்தம் முறிந்தால் புது ஒப்பந்தமேற்படுகிறது. தனி நபராயினும், சமூகமாயினும், வாழ்க்கையில் மேம்பாடு அடைவதற்கு சத்திய உபாசனை தேவை. அதைத்தான் காந்திஜி வற்புறுத்தினார்.

With the compliments

of

THE METAL BOX

COMPANY OF INDIA LIMITED

CALCUTTA—BOMBAY—MADRAS—DELHI

FARIDABAD—COCHIN—MANGALORE

சத்தியத்திலிருந்து சத்தியாக்கிரகம் பிறந்தது. பொய்மை, அநீதி, அக்கிரமம், கொடுமை முதலியவற்றை எதிர்த்துப் போராடும் ஆயுதமே சத்தியாக்கிரகம்: அது வலிமைமிக்கது. உலகில் வாழும் மக்களில் பெரும்பாலோர் சத்திய வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்கள் பொய்யை—பித்தலாட்டத்தை—எதிர்த்துப் போராடுகிறார்களா? அநீதியை எதிர்த்துப் போராடுகிறார்களா? சத்திய வாழ்க்கை நடத்தும் பல்லாயிரக் கணக்கான மக்களில், ஒரு சிலரே. தங்களுடைய வசதிகளையும்—உயிரையுங்கூட—தியாகம் செய்து சத்தியத்தை நிலைநாட்டப் பாடுபடுகிறார்கள். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்கள் சத்தியவாதிகள்; அவர்களை சத்தியாக்கிரகிகள் என்று கூற முடியாது. விளைவுகளை எதிர்பார்த்துச் சிந்திக்காமல் தியாகவேள்வியில் குதித்து, அசத்தியத்தையும் அநீதியையும் எதிர்த்துப் போராடத் துணிந்தவனே சத்தியாக்கிரகி. சத்தியத்தைப் பேணி நடப்பவன் சத்தியவாதி, சத்தியம் என்ற ஆயுதம் ஏந்தி, அசத்தியத்தை வெல்லத் துணிந்த வீரன் சத்தியாக்கிரகி.

காந்திஜி சத்திய உபாசகர். சத்திய வாழ்க்கை நடத்தியதுடன் அசத்தியத்தையும் அநீதியையும் எதிர்ப்பதற்கு சத்தியத்தை ஆயுதமாகப் பயன்படுத்தியவர். காந்தியின் சீடன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறவர் சத்தியவாதியாகவும் சத்தியத்தை ஆயுதமாகக் கொண்டு அசத்தியத்தையும் அநீதியையும் எதிர்க்கும் நெஞ்சுர முடையவராகவும் இருத்தல் அவசியம். மெய்யும் பொய்யும் ஒன்று சேரா. மெய்யுடன் மெய் தான் சேரமுடியும்.

காந்திஜி கூறிய அஹிம்சை தத்துவமும் இதைப்போன்றதே. மனிதர்களில் பெரும்பாலோர்—பலாத்காரச் செயலை விரும்பாமல்—அமைதியாக வாழ விரும்புகிறார்கள். அண்டை அயலாருடன் சண்டையிட நேர்ந்த சமயங்களில்கூட—அது வாய்ச் சண்டையாகத் தான் இருக்கும்—கைகலப்பு ஏற்படுவதில்லை. தொடர்ந்து சண்டையிடக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அண்டை அயலார் எவருமே இருக்காமல் ஒழிந்துவிடக்கூடும். பல்லாயிரக் கணக்கான மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள்; அஹிம்சையைக் கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் அது காந்திஜி கூறும் அஹிம்சை தானா? இல்லை என்று கூறிவிடலாம். அஹிம்சையைக் கடைப்பிடித்து அமைதியாக வாழ முயலுவது வேறு: அஹிம்சையைக கடைப்பிடித்து அநீதியை எதிர்ப்பது வேறு. அமைதியாக வாழ விரும்பும் நிலைமை வேறு; அநீதியை அஹிம்சைமூலம் எதிர்த்துப் போராடி அமைதி காண்பது வேறு.

காந்திஜி அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டது ஏன்? பழிக்குப் பழி என்ற குரோத எண்ணம் இயல்பானது. ஒரு கொலை விழுந்தால் அதற்குப் பழிவாங்க மற்றோர் கொலை விழும். பழிவாங்க வேண்டும் என்ற கருத்தை மாற்றிக்கொள்ள முடியும். இது எதைக் காட்டுகிறது? பலாத்காரத்திற்குப் பரிகாரம்

With Compliments From

THEMIS PHARMACEUTICALS

38, SUREN ROAD, ANDHERI (East)

BOMBAY-29

Always insist for RAYON YARN

Manufactured by

THE BARODA RAYONS

Pioneers in the field of manufacturing Finer Deniers viz. 25, 30, 40 etc. having Collaboration with Messrs. Asahi Chemicals Industry Company Limited of Japan. The World Renowned Manufacturers of Man-Made Fibres. Use their finer Deniers 25, 30, 40, 60, 75 In the manufacture of Georgettes, Shiffon, Dupatta etc. for durability, quality and elegance.

CONTACT :—

The Baroda Rayon Corporation Limited

130/132, Apollo Street, Fort,

BOMBAY-1.

பலாத்காரமல்ல என்று கூறலாம் அல்லவா? குரோதத்தை வெல்வதற்கு குரோதம் பயன்படாது என்று ஏசுபிரான் கூறியிருக்கிறார்.

பலாத்காரச் செயல்களைச் சமாளிப்பதற்கு பலாத்காரம் பயன்படாது. அஹிம்ஸை வழியை ஆளுவதன் மூலம் பலாத்காரத்தின்மீது வெற்றி கொள்ள முடியும். அப்படிச் செய்வதால் நிரந்தரமான பரிகாரம் கிடைக்கும். காந்தி வழியைப் பின்பற்றுவதாகக் கருதும் நாம் அனைவரும் சத்தியவாதிகள்—சத்தியாக்கிரகிகளல்ல. அமைதியாக வாழ விரும்பும் பிரஜைகளே தவிர, அஹிம்ஸையை ஆயுதமாகக் கொண்டு போராடி அமைதியாக வாழுகிறவர்கள் அல்ல. காந்திஜியின் உபதேசத்தை ஏற்றுக்கொண்ட நாம், அதைப் பரிபூர்ணமாகக் கடைப்பிடிக்கவில்லை என்றுதான் கூறுவேன். சத்தியவாதியாக அமைதியுடன் வாழ்வது வேறு; சத்தியத்தையும் அஹிம்ஸையையும் கடைப்பிடித்து பொய், பித்தலாட்டம், பலாத்காரம் முதலியவற்றை—மன உறுதியுடன்—எதிர்த்து அமைதியாக வாழ்வது வேறு. சத்தியாக்கிரக தத்துவத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல்—ஒரு பகுதியை மட்டும் அறிந்துகொண்டு—போராட்ட முறைகளை வகுத்துக் கொண்டதால்தான், சுதந்திரமடைந்த பிறகு அஹிம்ஸைவழிப் போராட்டம் தெம்பு இழந்துவிட்டது. அமெரிக்காவில் வாழ்ந்த மார்டின் லூதர் கிங், அஹிம்ஸை தத்துவத்தை நன்ருகத் தெரிந்து கொண்டு நீக்ரோ விடுதலைக்காகப் போராடினர். அந்த சத்தியாக்கிரகி தன்னுடைய கொள்கைகளுக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடினர்—மாண்டார் என்பதை நாம் நினைவுகூறுதல் அவசியம்.

—o—

பக்தியின் சாதனை

"பக்தியால் மட்டும் தொடர்ந்து காரியங்கள் நடைபெறுமா" என்று, பக்தியின் சாதனையில் அவநம்பிக்கைப் பட்ட சிலர் காந்திஜியைக் கேட்டார்கள்: அதற்கு அவர் கூறிய பதில் ஆச்சரியமானது.

"உங்கள் தென்னிந்தியாவையே நீங்கள் பாருங்கள், எவ்வளவு பெரிய பெரிய கோயில்களைக் கட்டியிருக்கிறீர்கள். அவை பல ஆயிர வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டவை. ஆயினும் இன்னமும் எவ்வளவு சிறப்பாக நடந்து வருகின்றன! அவைகளால் மக்களுக்கு ஏதாவது வருமானம் வருகிறதா? யாதொரு வருமானமும் இல்லையே! பல இடங்களில் அவற்றின் நோக்கங்கள் கூட சரிவரப் பின்பற்றப்பட்டு வருகிறதில்லை. எனினும் அவை தொடர்ந்து பெருமையுடன் விளங்குவதன் காரணம் யாது? மக்கள் மனதில் இருக்கும் பக்திதானே காரணம்! அது அங்ஙனமானால், பக்தியால் நடைபெற முடியாதது என்ன இருக்கிறது", என்று காந்திஜி திருப்பிக் கேட்டார். ஆம், பக்தியால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை.

For Comfortable worry free Tomorrow

SAVE WITH

THE KARUR VYSYA BANK LIMITED

Regd. Office: KARUR Estd 1916

at Madras: 456—457, Mint Street

HANDSOME INTEREST ON DEPOSITS.

4¼% on Savings Bank Account – Withdrawal by Cheques

No restriction in the number of withdrawals.

5½%	for	91 days
6½%	for	1 Year
6¾%	for	2 Years
7¼%	for	5 Years
7½%	for	7 Years

7% & 7½% on Recurring Deposits according to the period.

For further details, please contact our nearest Branch Manager.

We are serving with 45 Branches spread over Tamil Nadu.

KARUR
28th August, 1969

C. RAMANATHA CHETTY,
Secretary



HOECHST PHARMACEUTICALS LIMITED

AHMEDABAD • BOMBAY • CALCUTTA • DELHI • MADRAS • KATHMANDU

"இதோ கீதை! - காந்தி"

(கவியோகி சுத்தானந்த பாரதியார்)

—o—

1916 லக்னே காங்கிரஸ் மிகச் சிறப்பாக நடந்தது. அப்போதுதான் மாந்தளைச் சிறையிலிருந்து விடுபட்ட திலகர் அங்கே திலகம்போல விளங்கினர். கோகலே வழியைப் போற்றிய காந்திஜியும் அங்கே வந்து—எங்கும் ஓடியாடித் தொண்டு செய்தார். முஜம்தார் தலைவர்: அனிபெசண்டு, மாளவியா, ஜின்னு, மோதிலால், கபார்தே முதலியோர் காங்கிரஸில் பங்கு கொண்டனர். எல்லோரும் தலைவராகவே இருந்தனர். காந்தி மட்டும் தொண்டராகவேயிருந்தார். அக்காலம் திலகர் அன்னிபெசண்டுடன் சேர்ந்து ஓம்ரூல் (சுயாட்சி) இயக்கம் நடத்தினர். ஜின்னுவும் திலகரும் நண்பர்கள். இருவரும் இந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானத்தைச் செய்தனர். இந்தக் காங்கிரஸிற்கு நானும் சென்று ஒரு மூலையில் கீதையும் கையுமாயிருந்தேன். விஷயாலோசனைக் கூட்டம் பேச்சுச் சந்தையாயிருந்தது. நான் கீதையை முணுமுணுத்துக் கொண்டே திலகரைப் பார்த்தேன். "கிம் தெத் புஸ்தகம் இதி" "இது என்ன நூல்" என்று திலகர், சமுஸ்கிரதத்தில் கேட்டார்.

கீதாஸு கீதா கர்தவ்யோ
கிம் அன்யத் சாஸ்த்ர விஸ்தரை:
யாஸவயம் பத்மநாபஸ்ய
முகபத்மாத் விநிச்ருதா

"கீதை ஒன்றே போதுமே; வேறு சாத்திர விரிவு எதற்கு? கீதை பத்மநாபனுன பகவான் வாய்மலரிலிருந்து பூத்தது" என்றேன், அவர் மகிழ்ந்து ஆரும் அத்தியாயம் ஒப்பிக்கச் சொன்னர். ஒப்பித்தேன். திலகர் உடனே தன்னிடம் இருந்த கையடக்கமான கீதையைத் தந்து—இதை உன் உள்ளத் துடிப்பில் வைத்திரு—என்ருர். இதை அருகில் இருந்த காந்தியும் பார்த்து "ராம் ராம்" என்று புன்னகைத்தார். காந்தியை 1915-ல் மதுரையில் நான் பார்த்திருந்தேன். அவரைக் கண்டதும் "இதோ கீதை இதோ கீதை!" என்று ஆரவாரம் செய்தேன்.

தலைவர் பேச்சு மிக நீண்டது. காந்தி தென்னாப்பிரிக்கா பற்றி ஒரு தீர்மானத்தை எழுதிப் படித்து முஜும்தாரிடம் தந்து—மின்னல் போல மறைந்தார். காந்தி எங்கே!

காந்தி நேராகச் சமையற் பந்தலுக்குச் சென்றார். "ஸஃபாயி ஸஃபாயி கரேம்' என்றார். தொண்டருடன் பந்தலை நன்றாகச் சுத்தம் செய்தார். கைகால் சுத்தம் செய்துகொண்டு ரொட்டி சுடும் இடத்திற்குப் போனார். பாத்திரங்களைச் சுத்தமாகத் துடைத்தார். தொண்டருடன் ரொட்டி, பூரி, உருளைக் கிழங்குக் கறி, பாயஸம், சப்ஜீ (கூட்டு), சோறு எல்லாம் தட்டுகளில் வைத்து ஒழுங்கு செய்தார். பிறகு நெடும் பாய் பரப்பி மணியடித்தார். 'டண் டண் டணார்'. நானும் தொண்டன் ஆனேன். தலைவரும் பிரதிநிதிகளும் வந்தனர். அவர்களை உபசரித்து அமர்த்தி, அவர்களுக்கு வரிசை வரிசையாக உணவுத் தட்டுக்களை வைத்தார். திலகரும் கபார்தேயும் அமர்ந்து கீதைப்பற்றிப் பேசினர். "யோக: கர்மஸு கௌஸலம்" கருமமே யோகம் என்பதைத் திலகர் விளக்கும்போது—காந்தி என்னிடம் தட்டுகளைத் தந்து திலகருக்கு வைக்கச் சொல்லி, "ராம் ராம்" என்றார். திலகர் "அதோ கீதாசாரம்—காந்தி—கர்ம யோகி" என்று புன்னகைத்து, கபார்தேயிடம் "காந்தி செயல் பெற்ற கீதை" (Gandhi is active Gita) என்றார்.

காந்தி கீதை கற்க ஆர்வம் கொண்டார். திலகர் மாந்தலைச் சிறையில் கீதா ரகசியம் எழுதிக்கொண்டு திரும்பினார். அதைக் கபார்தேயிடம் படித்துக்கொண்டிருந்தார்—மராதியில். காந்திக்கு மராதி புரியும். இரண்டாம் அத்தியாயம், ஸ்திதப்ரக்ஞ லக்ஷணத்தைச் சொல்லுகிறது. அதில் அவரைக் கவர்ந்த பாசுரம் இதுவே:

> ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம்
> ஸமுத்ரமாப: ப்ரவிஸந்தியத்வத்
> தத்வத் காமாயம் ப்ரவிஸந்திஸர்வே
> ஸவாந்திம் ஆப்னோதி நகாமகாமீ.

அலைகடல் உறுதியாக நிலைபெற்றுள்ளது. ஆறுகள் பாய்ந்தும் மாறுவதில்லை. அதுபோல ஆசைகள் பாய்ந்தும், அவைகள் சூழ்ந்தும், உண்மை ஞானி பரம சாந்தனாகவே இருந்தபடி இருப்பான். காம இச்சை உள்ளவனுக்கு அப்படிச் சாந்தம் வராது. கடலில் ஆற்று நீர், வேற்று நீர், ஊற்று நீர் எல்லாம் கலக்கின்றன. அதனால் கடல் கரையை மீறிப் பொங்கி வழிவதில்லை. சூரிய வெப்பத்தால் கடல் நீர் ஆவியாகி மேலே சென்று மேகத்தை ஆக்குகிறது — அதனாலும் கடல் குறைவ

தில்லை. குறைநிறைவற்று என்றும் மாறாத சம யோக நிலையில் இருப்பவனே ஞானி — "ஸமத்வம் யோக உச்யதே" என்ற கருத்து காந்தியின் உள்ளத் துடிப்பானது—காந்தி புகழ் மேடையிலும் திகழ்ந்தார், நவகாளியிலும் நடந்தார், அமைதியிலும், ஆபத்திலும் சம புத்தியுடன் வாழ்ந்தார்—திலகர் சொன்னபடியே "காந்தி கீதையின் செயல் வடிவம்" என்போம்.

1924-ம் ஆண்டு நானும், வ. வே. சு. ஐயரும் காந்தியைப் பார்த்தோம். அப்போது காந்தி நூற்றுக் கொண்டிருந்தார். என்னை கீதை படிக்கச் சொன்னார். நான் மூன்று அத்தியாயங்கள் இசைத்தேன். காந்தி நூற்று முடித்துச் சிட்டம் போட்ட பிறகு பேசத் தொடங்கினர். வெளியேயிருந்த சத்தியமூர்த்தி முதலியோர் உள்ளே புகுந்தனர். "உங்கள் சத்தம் கீதையை அழுத்திவிட்டதே" என்றார். ஸ்ரீநிவாச ஐயங்கார் குடுகுடு என்று வந்து "காந்திஜி கீதை, ராமாயணம் படிக்கிற நேரம் இல்லை. இரண்டே வார்த்தையில் இரண்டின் சாரத்தையும் கூறும்" என்றார். காந்தி ஒரு நிமிஷம் கண்ணை மூடியிருந்து,

"போலோ ராம்! கரோ காம்"

என்றார். இதுதான் காந்தியின் மந்திர நாதம். இதுவே காந்தியின் ஜீவ நாதம். அறிவோம், புரிவோம்—காந்தியை மறவோம்.

—o—

காந்தி வாக்கு

ஜனநாயகம் என்பது ஆட்டுமந்தைக் கூட்டமல்ல. ஒவ்வொரு மனிதனும் சுயமாகச் சிந்தித்து செயலாற்றும் உரிமை பெறுவதுடன் கருத்துச் சுதந்திரம், செயல்ச் சுதந்திரம் முதலியவற்றை நன்கு பேணிக் காத்தால் அது சிறப்புப்பெறும்.

—யங் இந்தியா 2—3—1922

புரட்சி வீரன்

மு. வில்வநாதன்

—o—

ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் என்ற வெள்ளையரால் காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் நாட்டு மக்களுக்கு வேண்டிய நலன்களைப் பெறும் நோக்கத்துடன் 1885-ல் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியப் பெருந் தலைவர்கள் காங்கிரசில் இடம் பெறலாயினர். திலகர் காலத்தில் 'விடிவெள்ளி' தோன்றுவதுபோல் விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது. அதற்கு முன்பு வரையில், விடுதலை கோரி மனுச் செய்யும் மேதாவிகளிடமே, நாடு இருந்தது.

இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்று, இளம் வழக்கறிஞராக தொழில் புரிய தென்னாப்பிரிக்கா சென்றார் மோகன் தாஸ் கரம்சந்திர காந்தி. முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கி ரெயில்ப் பிரயாணம் செய்த மோகன்தாஸ் நிறத்திமிர் கொண்ட வெள்ளையனால் வெளியில் இழுத்து தள்ளப்பட்டார். வெட்ட வெளியில் கொட்டும் பனியில் குளிரில் வாடி வதங்கினாரே தவிர வேறு வகுப்பில் பிரயாணம் செய்ய அவர் மறுத்துவிட்டார். 'நெப்போலியனையே விரட்டிய பனி'யால் காந்தியை விரட்ட முடியவில்லை. 'மனிதனுக்கு மனிதன் சமம்' என்ற 'தனி மனிதக் கொள்கைப் போர்' அது. அவருடைய அகிம்சைத் தத்துவம் சத்தியத்தின் அடிப்படையில் எழுந்தது. "இன்னவரும் புலி தன்னையும் அன்புடன் சிந்தையில் போற்றிடுவாய்" என்ற பாரதியாரின் பாட்டை செயலில் காட்டினார் காந்தியடிகள். 1893-ல் தென்னாப்பிரிக்காவிலுள்ள நீதிமன்றத்திற்கு காந்தியடிகள் தலைப்பாகையுடன் சென்றார். அதை அகற்றும்படி நீதிபதி உரைத்தார். காந்தியடிகள் மறுத்து வெளியேறினார். 1907-ல் தென்னாப்பிரிக்காவில் ஜெனரல் ஸ்மட்சு கொண்டுவந்த கருப்புச் சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். 1913-ல் மணப்பதிவு அதிகாரியின் புத்தகத்தில் பதிவாகாத திருமணங்களுக்கு தென்னாப்பிரிக்காவில் இடமில்லை என்று நீதி மன்றம் தீர்ப்பளித்ததை

காந்தி வாக்கு

போராட்டத்தின் மூலம் விடுதலை பெறுவது திண்ணம். ஆனால் ஆத்மீகத் துறையிலும் நாம் சுதந்திரமாகச் சிந்தித்து, விடுதலை பெற்றால்தான், விடுதலை நிறைவுபெறும்.

—யங் இந்தியா, 1—11—1928.

எதிர்த்து அறப்போர் துவக்கினார். இப்படி தன்னுரிமைப் போராட்டத்தில், யாருமே துணையில்லாமல் தன்னந்தனியாகப் போராடினார்; வெற்றி கண்ட 'போராட்ட வீரர் காந்தி' இந்தியாவுக்குத் திரும்பினார். கோகலேயை தமது அரசியல் குருவாகக் கொண்டு இந்திய ஊழியர் சங்கத்தில் சேர எண்ணிய 'இந்தியாவின் ஜோதி'யைக் காங்கிரஸ் கட்சி தம் கதவுகளைத் திறந்து வரவேற்கக காத்துக்கிடந்தது.

உலக வரலாறு காணாத பேரதிசயம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இந்த நாட்டில் நடந்திருக்கிறது. வெள்ளைக்காரரிடமிருந்து இந்த நாட்டை விடுவிக்க முயன்றவர் பலர், காந்தியடிகளுக்கு முன்பே தோன்றி இருந்தனர். ஆனால், காந்தியடிகள் அரசியலுக்கு வந்த பிறகுதான் உண்மையான போராட்டம் ஆரம்பித்தது.

காந்தியடிகளின் வரலாற்றையும், இந்தியாவின் விடுதலை வரலாற்றையும் பிரித்தறிய முடியாது. அடிகளின் வரலாறு இந்தியாவின் விடுதலை வரலாறாகவும் விடுதலை வரலாறே அடிகளின் வரலாறாகவும் அமைந்துவிட்டன. அவர் கண்ட அந்த நாள் இந்தியா. வீரர்களைக் கோழையாக்கிவிடக்கூடியது. விவேகிகளை விசாரத்தில் ஆழ்த்தக்கூடியது. முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் அவர்களின் முதுகெலும்பு முறிந்ததுபோல் இருந்தது. அடிமைச் சுமையினால் நம்பிக்கை தகர்ந்துபோய் இருந்த நேரம். முடி தரித்த மன்னர்கள் எல்லாம் ஆங்கில ஆட்சியின் பிடியிலே. கோட்டை கொத்தளம் கட்டிக் காத்தவர்கள் எல்லாம் நாட்டை இனி மீட்டிட முடியாது என்று எண்ணி வாட்டமுற்றுக் கிடந்தனர். எப்படியோ ஆட்சி நடக்கட்டும். இதை எதிர்ப்பதோ முடியாத காரியம். இதற்குப் பய பக்தி விசுவாசம் காட்டி ஏதேனும் பலன்பெற்று காலம் தள்ளுவோம் என்று பலர் எண்ணிவிட்டனர். இவர்களிடம் ஆயுதம் இல்லை. ஆட்சியாளர்களோ ஆயுதபலமுள்ளவர்கள். இவர்களிடம் நம்பிக்கை ஆணவமாகிவிட்ட நிலை—இந்தச் சூழ்நிலையிலே தாயகத்திற்கு விடுதலை தேடித்தர அந்த 'விடுதலை விரும்பி' தயாரானார். யார் அந்தச் சமயத்திலே நாட்டை நோக்கினாலும் துளியும் நம்பிக்கை பிறக்காது. ஆனால் காந்தி நம்பிக்கையுடன் பணியாற்றத் தொடங்கினார். நாட்டு மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டினார். அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். நானிலத்தின் நன்மதிப்பை பரிசாகப் பெற்றார். நாடு விடுதலை பெறவேண்டுமா அல்லவா என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டார். ஆம் என்றது அவரது தூய்மையான உள்ளம். உள்ளம் உரைத்ததை ஊராருக்கு அறிவித்தார். ஊரார் சந்தேகமும், பயமும் கொண்டனர். விடுதலை வேண்டும், நாடு மீளவும் கேடு தீரவும் நாம் மனிதராக வாழவும் கட்டாயமாக விடுதலை வேண்டும். ஆனால் நம்மால் முடியுமா? என்று கேட்டனர் மக்கள். விடுதலை வேண்டும் என்று மனம் கட்டளையிட்டுவிட்ட பிறகு மறு கேள்வி ஏது?

உரிமைப் போரிலுள்ள ஆபத்துக்களை அவர் ஒளிக்காமல் குறைக்காமல் கூறினார் 'சிறைச்சாலை என்ன செய்யும்'? "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடலுக்குப் பொருளானார். மரண பயமின்றி இக்காரியத்திலே ஈடுபட தீர்மானித்து விட்டேன், ஆயுத பலத்தை நம்பியல்ல—மனவுறுதியை நம்பி. நாம் நமது பிறப்புரிமைக்காகப் போராடுகிறோம். இது 'தர்மம்' என்ற பலத்தை நம்பி போரைத் தொடுக்கிறேன்" என்றார். தொடுத்தார், வயலோரத்திலே வாட்டமுற்று உழலும் உழவர் முதற்கொண்டு வசிகர வாழ்விலே திளைத்துவந்த சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை வரையிலே அவர் முகாமிலே வந்து குவிந்தனர்.

வேறு நாடுகளிலே விடுதலைப்போர் தொடுத்தவர்கள் இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ, சொந்தத்திலேயோ, வேறு நாட்டின் துணைகொண்டோ, இராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைக் குவிப்பது, மறைந்திருந்து தாக்குவது, சதி செய்வது என்று பலமுறைகளைக் கையாண்டனர். தாய் நாட்டின விடுதலைக்காக இவை யாவும்—எனவே சரியா? தவறு? என்ற கேள்விக்கு இடமில்லை என்றனர். உலக வரலாற்றிலேயே இந்தத் திட்டம் வேண்டாமென்று ஒதுக்கிவிட்டு, புதியதோர் தத்துவத்தைக் கொண்ட திட்டத்தை ஆயுதமின்றி, இரகசியமின்றி, வெளிப்படையாக, தூய்மையுடன் விடுதலைப் போர் தொடங்கினார். அவர் கண்ட தத்துவங்களும் கொண்ட சாதனங்களும் 'அகிம்சை' 'சத்தியம்' என்பதாகும். அவைகள் இரண்டையும் 'கண்களை இமை காப்பது போல்' கடைசிவரைக் காத்தார் காந்தி மகான். 'அகிம்சை' ஓர் இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம். அகிம்சை கோழைத்தனமன்று. வீரத்தின் சிகரம். 'செய் அல்லது செத்து மடி' என்பது காந்தியின் கட்டளை. தன்னை வருந்தித்

Mount Mettur Pharmaceuticals Limited

(Manufacturers of ethical pharmaceuticals)

Specialist in manufacture of:
TRANSFUSION SOLUTIONS

Under rate contract with Directorate General of Supplies & Disposals. Suppliers to Kerala Health Services Department, State Hospitals, Railways etc.

VITAMIN & SPECIAL INJECTIONS
ELXIRS & TABLETS

Factory & Administrative Office:
7, Thangal Pattai, Tiruvanmiyur, Madras-41.
(Telephone: 73170/74401/74888—Grams: PHARMLAB)

DEPOT:
XXII/362, Convent Road, Ernakulam.

With best Compliments of:

SYNBIOTICS LIMITED

WADI - WADI

BARODA

தியாகம் புரிவது அந்தத் தியாக சீலரின் கோட்பாடு. 'மெழுகுவர்த்தி எரிந்து வெளிச்சம் தருவது போல்' 'ஊதுவத்தி எரிந்து மணம் தருவது போல்' மக்கள் தங்களை வருத்தி மற்றவர்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்பது அந்த 'உலக மணி'யின் உன்னதக் கொள்கை.

தம்முடைய தலைமுறையைச் சேர்ந்தவர்களை வீரர்களாக்கி விடுதலைப் போருக்கு வழி வகுத்தார், ''களிமண் பொம்மைகளுக்கு உயிர் ஊட்டி கர்ம வீரர்களை உருவாக்கும் திறமை காந்திக்கு உண்டு'' என்று 'குரு' கோகலே 'சீடர்' காந்தியைப் பற்றி இதனால் தான் குறிப்பிட்டார் போலும்.

தோற்றத்தில் எளியவராகி ஆற்றலில் வலியரான அடிகள், வாழ்க்கைக்குப் புதிய வியாக்யானம் தந்தார். 'வாழ்க்கையின் ஒரு மாறுதலே சாவாகும். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை' என்றார். எனவே, 'உள்ள உயிர் ஒன்றுதான். அது பிரிவதும் ஒரு முறைதான். அப்படிப் பிரிகின்ற உயிர் இப்படிப்பட்ட காரியத்தில் பிரிவதிலே நான் பெருமைப்படுகிறேன்' என்றார், அந்த 'ஈடற்ற மாணிக்கம்'.

நாம் பலகோடி, அவர்கள் சில லட்சம். நாம் அடிமைகள் அவர்கள் ஆட்டிப் படைப்பவர்கள் என்ற நிலை தெரியாத குருடர்களாக நம் நாட்டவர் கோடிக் கணக்கிலே இருந்தனர். காந்தி மகான் அவர்களுடைய கண்களைத் திறந்தார். என்ன பேசுவது என்று தெரியாமல் வாயடைத்துப் போயிருந்த ஊமைகளாக நம் நாட்டினர் லட்சக் கணக்கிலே இருந்தனர். அவர்களை உறுதியுடன் முழக்கமிட வைத்தார் உத்தமர். விடுதலையை எப்படிப் பெறுவது என்று தெரியாமல் கோழைகளாய், மோழைகளாய், மூடவர்கள் நிலையில் லட்சோப லட்ச மக்கள் இருந்தனர் இதனையே ''அஞ்சி அஞ்சிச் சாவார் அவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே'' என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினார் பாரதியார். படை பல வந்திடினும் தடை பல நேரிடினும் அஞ்சாது என்றுரைத்தார் 'அஞ்சா நெஞ்சினர்' அந்த அச்சம் அகற்றினார். ஆங்கில அரசிடமிருந்த அச்சத்தை ஆயுத பலமிக்க ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பேரணியை, போர் அணியை, சாகப் பயப்படாத ஓர் அணிவகுப்பை ஏற்படுத்தினார். சிட்டுக்குருவி வல்லூரை எதிர்த்திடும் ஆற்றல்பெறச் செய்தார், காந்தி— ஆத்திரம் ஊட்டியல்ல அன்பை ஊட்டி.

காந்தி வாக்கு

> கிராமங்களுக்கு எழுத்தறிவு ஊட்டுவது மட்டும் கிராமப் பணியல்ல; நேர்மையுடனும், தூய்மையுடனும் வாழக் கற்றுக் கொடுத்து, சிறந்த மனிதர்களாக வாழ்வதற்கு வகை செய்வதே கிராமப் பணியாகும்.
>
> —நான் கனவு காணும் இந்தியா.


drink Cadbury's
Bournvita
for strength and vigour
—and taste
Bournvita
450

The New India Industries Ltd.

Regd. Office :

JETALPURE ROAD, POST BOX NO. 67

BARODA

MAKERS OF	—	Photo Paper
BROVIRA	—	For enlargements
LUPEX	—	For contact prints
Agfastat	—	For document copying (camera)
COPEX	—	For document copying (camera)

in collaboration with :

M/S. AGFA-GEVAERT AKTIENGESELLSCHAFT
LEVERKUSEN, WEST GERMANY

FACTORY :
Bombay Agra Road,
MULUND
BOMBAY-80.

BOMBAY OFFICE :
Industrial Assurance Building,
OPP. CHURCHGATE STATION
BOMBAY-20.

விடுதலைப் போர் முரசொலி அடியோடு எங்கும் எப்போதும் அழிந்து படுவதில்லை. முரசு இருந்து அதைக் கொட்டும் திறமையுடையோர் முன் வராமல் இருந்ததுண்டு. முரசறையும் திறமுடையார் இருந்து முரசு அமையாது இருந்ததுண்டு. ஆனால் அடிமைப்பட்ட எந்த நாடும் எப்பாடு பட்டேனும், எத்தனை முறை தோற்றேனும் விடுதலை பெறாமல் போனதில்லை. ஏறத் தாழ இயற்கையின் கட்டளை இந்த 'விடுதலை வேட்கை'. எனவே தான் எவ்வளவு பெரிய பலமுள்ள நாட்டின் பிடியிலே சிக்கி விட்டாலும் ஓர் நாடு விடுதலைப் பெறும் என்ற எண்ணம் கருகியதில்லை 'கர்ம வீரர்' காந்தியாருக்கு. நாடும் மக்களும் எந்த நிலை பெறவேண்டுமோ அதற்கு அடிமைத்தனம் தடையாக இருக்கிறது, ஆகவே அதை எந்த விலை கொடுத்தேனும் அகற்றியாக வேண்டும் என்று அறிவித்த 'ஆண்மையின் சிகரம்' அவர்.

அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ, இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடிய விதமாக இல்லை. ஆனால், அவரால் இராணுவத்தையும் எதிர்த்து நிற்கக்கூடிய—இலட்சக் கணக்கானவர்களை உண்டாக்க முடிந்தது. எத்தனை எத்தனை போராட்டங்கள்! அவைகளிலே கலந்து கொண்ட வீர வாலிபர்கள் எத்தனை இலட்சம்!! எத்தகைய வீரச் செயல்கள், தீரச் செயல்கள், தியாகச் செயல்கள் அவர் காலத்திலே நேரிட்டன. காந்தி மிதவாதி என்பர் சிலர். ஆனால் அவர் தீவிரவாதிக்கு மேலான தீவிரவாதி. மௌனப் புரட்சி செய்து வெற்றி கண்ட அந்த மகானை, புரட்சியாளர் என் பதே பொருந்தும். உலகிலேயே படை பலமும், ஆயுத பலமும், இராஜதந்திரபலமும் மிகுந்ததோர் ஏகாதிபத்தியத்தை ஆயுத பலமின்றி எதிர்த்துப் போரிட்டு வெற்றிகாண முடியும் என்ற திடமனதை அந்த உத்தமர் உண்டாக்கினர். அவரிடம் ஏகாதிபத்தியமே பணிந்து விட்டது. நமது வாழ்நாளிலே நாடு விடுதலை பெறக் கண்டோம். ஆங்கில நாட்டுக்கு நாம் ஓர் அடிமை என்ற இழிவு நீக்கப்பட்டு. அதனால் நமது மக்களெல்லாம் தலைநிமிர்ந்து நின்று பூரித்து நமது தலைமுறை மகத்தானது என்று மார்தட்டிக் கூறவைத்தவர் அந்த மகான். சுயராஜ்யம் ஓர் இலட்சியத்திற்கு வாய்ப்பு. ஒரு நாட்டுக் காதையிலே பொன்னேடு அது. காந்தியார் ஒரு விடுதலை வீரர், நமது நாட்டின் அடிமைத் தளையை அறுத்தெறிந்த அஞ்சா நெஞ்சர். அந்த அரையாடை மனிதர் தேடித் தந்தது கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு. அந்த 'அரை நிர்வாண பக்கிரி' இந்த நாட்டு மக்களை பாதுஷாக்களாக்கினர். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற நிலையை தேடித்தந்தார், பரங்கியனுக்குப் பணியாத பாரிஸ்டர். காந்தி ஒரு தனி மனிதரல்ல. அவர் ஒரு சகாப்தம், இதை 'காந்தியுகம்' எனலாம். முப்பதாண்டுக்கால அரசியல் பணியில் ஒரு கடுமையான சொல், ஒரு நேர்மையற்ற செயல், ஒரு நாணயமற்ற சுயநலத்திட்டம் இருந்ததில்லை. சொல்வதைச் செய்தார். செய்வதைச் சொன்னர். வராதது போல் வந்த மாமணி விடுதலை. அந்த மணியைத் தந்தது காந்தி கனி.

—o—

With the compliments of

DALMIA CEMENT (BHARAT) LIMITED

DALMIAPURAM P. O.,
TIRUCHIRAPALLI DISTT. (Tamil Nadu)

Manufacturers of

'ROCKFORT' BRAND
DALMIA Portland & Pozzolana Cements

ALSO MINE-OWNERS & SUPPLIERS OF
High Grade Iron Ore for export

ORISSA CEMENT LIMITED
RAJGANGPUR (Orissa State)

Manufacturers of:

'KONRAK' Brand DALMIA Portland Cement, 'OC' Brand DALMIA Pozzolana Cement, all shapes and sizes of Firebricks and Insulating bricks, Silica bricks, Basic bricks including Burnt and chemically Bonded bricks with or without Steel Cladding and respective Mortars and Ramming Masses, R.C.C. Spun Pipes and Prestressed Concrete products.

DALMIA ENTERPRISES

H.O. 4, Scindia House, New Delhi-I

காந்தியடிகளின் பதினோரு விரதங்கள்

க. விசுவநாதன்

—:o:—

அண்ணல் காந்தியடிகள் கடைபிடித்தொழுகிய பதினோரு விரதங்கள், வாழ்க்கையின் பதினோரு படிகளாகும். சமூகத்தை உயர்த்த காந்தியடிகள் பெரிதும் பாடுபட்டார்; தனி மனிதனை உயர்த்தினால்தான் சமூகம் உயரும். எனவே காந்தியடிகள் தனி ஒரு மனிதனை உயர்த்துவதற்காக பதினோரு விரதங்களை யமைத்து, அதற்கு வழி காட்டியாகத் தானே அதனைக் கடைப் பிடித்தார்.

(1) காந்தியடிகளின் முதல் விரதம் 'சத்தியம்' ஆகும். இளமைப் பருவத்தில் அவர் 'சிரவணனின் பிதுர் பக்தி' நாடகம், 'அரிச்சந்திரன் நாடகம்' முதலியவற்றைக் கண்டார். காந்தியடிகள் வாழ்க்கையில் சத்தியத்துக்கான வித்து இங்கேதான் விதைக்கப்பட்டது. தன் சுயசரிதையைக்கூட காந்தியடிகள், 'வாழ்க்கை வரலாறு' எனக் குறிக்காமல் "சத்திய சோதனை" என்றே குறிப்பிடுகின்றார்.

(2) இம்சையின் எதிர்ச் சொல் 'அகிம்சை' எனலாம்; அதாவது உயிருள்ள ஒன்றினையும் இம்சிக்காதிருத்தல் ஆகும். இதற்காக காந்தியடிகள் மாமிசம், பால், முட்டை ஆகியவைகளை உண்ணாதிருந்தார். மேலும் அவர் வெளிநாட்டில் சிக்கலான சூழ்நிலையில்கூட அகிம்சையைக் காப்பாற்ற, தொடர்ந்து முயற்சி செய்து வெற்றியும் பெற்றார். பசு தன் கன்றுக் குட்டிக்குத்தான் பாலைச் சுரக்கின்றதேயொழிய நமக்கல்ல என்று காந்தியடிகள் கூறுகிறார். நண்பரொருவர் ஒரு மரத்தின் சிறு கிளையை ஒடித்ததற்காக காந்தியடிகள் கடுமையாகக் கோபித்துக் கொண்டார். இப்படி எத்தனையோ சம்பவங்கள் அவருடைய அகிம்சா நெறியை விளக்கி நிற்கின்றன.

(3) வாழ்நாளில் 'திருடாமை'யைக் கடைப்பிடித்த காந்தியடிகள் இளமைப் பருவத்தில் திருட்டுக் குற்றங்கள் செய்யாதவரல்லர்; ஆனால் அவற்றைத் திருத்தி வாழ்க்கையை நல்ல திசைக்கு மாற்றி விட்டார். வேலைக்காரன் பணத்தைத் திருடிச் செலவழித்தது, அண்ணனின் தங்கச் சங்கிலியில் சிறிது வெட்டியெடுத்து விற்றது போன்ற குற்றங்களைக் காந்தியடிகள் இளமைப் பிராயத்தில் செய்தார். தான் செய்த தவறுகளை உணர்ந்து தந்தையிடம் ஒளிக்காது தெரிவித்து, அன்றிலிருந்து 'திருடாமை' விரதம் பூண்டார். ஒருவன் திருடுவதற்குக் காரணம் ஆசையே; எனவே ஆசையை முதலில் ஒழிக்க வேண்டும்.

பௌத்த, சமண மதங்களெல்லாம் இக் கருத்தை நன்கு வற்புறுத்தியிருக்கின்றன. ஆனால் "காந்தி கண்ட திருடாமை" இன்னும் சற்று மேலானது. தனது தேவைக்குமேலே சொத்து சேர்ப்பவன் எவனும் திருடனேயாவான் என்று காந்தியடிகள் விளம்புகின்றார்.

(4) ஆமையைப் போல் ஐம்பொறிகளை அடக்கிக் காக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார். காந்தியின் விரதங்களில் ஒன்றான "நாவடக்கம்" என்பதும் இதில் ஒன்று. இதைச் சிறப்பிக்கத் தனிக் குறளும் வகுத்து,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்று தெய்வப் புலவர் வள்ளுவர் எழுதுகின்றார். காந்தியடிகள் நாவடக்கத்தை ஒரு சிறந்தக் கருவியாகக் கையாள வேண்டும் எனக் குறிப்பாகச் சுட்டிச் சொல்கிறார். மௌனம், நாவடக்கம் முதலானவை மனிதனின் உள்ளொளியைப் பெருக்க உதவுவன.

(5) எவ்வாறு சமய ஒருமைப்பாடு காண இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை ஒற்றுமைக் காப்பியமாக்கினாரோ அதே போல், காந்தியடிகளும் சமய சமரசம் காண விழைந்தார். வைசிய குலத்தில் பிறந்த காந்தி, குரான், பைபிள், போன்றவைகளையும் கற்றுணர்ந்தார். பைபிளிலுள்ள 'மலைப் பிரசங்கம்'

HERCULES, PHILLIPS, B.S.A.

Three World Renowned Bicycles in the World

—o—

Made in India by:

TI CYCLES OF INDIA,

AMBATTUR, MADRAS-53

—o—

Proprietors: **Tube Investments of India Ltd.,**

MADRAS-1

காந்தியடிகளை வெகுவாகக் கவர்ந்தது. சமயப் பூசல் நிலவு மாயின் நாட்டில் அமைதி உருக்குலையும் என்பதை நன்கு அறிந்தவர் அண்ணல் காந்தியடிகள். எனவே சமய சமரசம் காண அவர் உள்ளம் விழைந்தது. வாழ்க்கையின் இறுதிக் காலம் வரை மாலை தோறும் சர்வ சமயப் பிரார்த்தனை செய்தார்.

(6) உடல் உழைப்பின்றிச் சோம்பி இருத்தலை அண்ணல் காந்தியடிகள் விரும்பமாட்டார். சோம்பலைப் பற்றி வள்ளுவர் கூறுமிடத்து,

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

எனச் சுட்டுகிறார். நிலத்தை வைத்துக் கொண்டு சோம்பி இருப்பவரைக் கண்டால், நிலமகள் இகழ்ந்து சிரிப்பாள் என்று மற்றொரு குறளில் அவரே குறிப்பிடுகின்றார். காந்தியடிகளும் விவசாயத்தைப் பெரிதும் ஆதரித்து உடலுழைப்பை வற்புறுத்தியிருக்கின்றார்.

(7) காந்தியடிகளின் தென்னாப்பிரிக்க வாழ்க்கையில் அவரது அஞ்சா நெஞ்சத்தைக் காணலாம். 'அஞ்சாமை' என்னும் விரதத்தை மிகவும் விரும்பி அவர் பின்பற்றினார். கோச்சு வண்டி சம்பவம் அவரது அஞ்சாமைக்கு ஓர் நல்ல எடுத்துக் காட்டு ஆகும். தாம் அஞ்சியதுபற்றி அவர் சத்திய சோதனையில் குறிப்பிட்டதே இல்லை.

"அஞ்சுவ தியாதொன்றும் இல்லை! அஞ்ச வருவதும் இல்லை!" என்ற அப்பரின் வாக்கை தன்னுடைய வாழ்க்கையில் மெய்ப்பித்தவர், அண்ணல் காந்தி.

(8) அடுத்து முக்கியமான விரதம் "நிலையாப் பொருள் சேமியாமை" ஆகும். நிலையற்றப் பொருள்களைச் சகடம் போன்ற நிலையற்ற இல்வாழ்க்கைக்குச் சேமிக்கக் கூடாது என்கிறார் காந்தியடிகள். தென்னாப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பும் காலத்து காந்தியடிகள் தமக்களிக்கப்பட்ட அன்பளிப்புகளைத் திருப்பிக் கொடுத்துவிட்ட செய்கை இவ் விரதத்தை மேலும் சிறக்கச் செய்கிறது.

(9) 'தீண்டாமை ஒழிப்பு' என்பது மற்றொரு விரதமாகும். சகோதரத்துவம் கொண்டு, தீண்டத் தகாதோரை உயர்த்திய பெருமை காந்தியடிகளையே சாரும். தன்னுடைய சொற்பொழிவைக் கேட்க வந்த தீண்டத் தகாதோரை முன்புறம் அமர்த்தி, அவர்களுக்குமுன் காந்தியடிகள் சொற்பொழிவாற்றினார். பொது இடங்களில் அவர்களுக்கு நீர் இறைப்பது போன்ற பல உரிமைகளைக் காந்தியடிகள் அளித்தார்.

காந்தி வாக்கு

பக்திக்கும் பண்புக்கும் சத்தியமே ஆதாரம். சத்திய நெறியில்லாமல் சான்றோனாக உயர முடியாது. சத்தியம் பேணாமல் ஒழுக்க சீலனாக சிறப்புற முடியாது.

—எரவாடா மந்திர்.

இவள்தான் ஸாரா பிறக்கும்போதே
குறைந்த எடையோடு பிறந்த குழந்தை.
வேறொரு குழந்தை உணவு அருந்திக்
கொண்டிருந்த இவள் இப்பொழுது
அமுலஸ்ப்ரே சாப்பிட்டு வருகிறுள்

இப்பொழுது அவளைப்பாருங்கள்!

"அவள் எடை கூடி இருக்கிறது. அமுல்ஸ்ப்ரே தொடங்கியதிலிருந்து அவள் வளர்ச்சி அபாரம்" என்கிருர், 15 மாதக் குழந்தையான ஸாராவின் தந்தை திரு. ஸைரஸ் கஸ்தர்.

உங்கள் குழந்தை முதலாண்டிலே வெகு வேகமாக வளருகிறது—இக்காலத்திற்குள், அது பிறந்த போது இருந்த எடை மும்மடங்காக வேண்டும். எனவே தான் உங்கள் குழந்தையின் உடல் வளர உதவும் புரத சத்தை அதிகமாகக் கொண்டிருக்கிறது அமுல்ஸ்ப்ரே. குழந்தை உணவுகள் தயாரிக்க அமெரிக்காவில் உபயோகிக்கப்படும் உன்னதமான ஸ்ப்ரே-ட்ரையிங் செய்முறையினுல் ஆக்கம் பெற்றது அது. பாலிலுள்ள புரதத்தின் தரம் குறையாமல் இருப்பதற்காக, ஸ்ப்ரே—ட்ரையிங் செய்முறையில், குறைந்த வெப்பத்தில் பால் பதனமாக்கப் படுகிறது. அமுல்ஸ்ப்ரே ஒரு சீரான சரி விகித உணவு. அதில் விடமின்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாதுப்பொருள்கள்—ஏன், உங்கள் குழந்தை வேகமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதற்குத் தேவையான அனைத்தையுமே கொண்டது அது.

ஆயிரக்கணக்கான தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் பிறந்த முதல் வாரத்திலிருந்தே அவற்றிற்குத் தாய்ப் பாலுக்குப் பதிலாகவோ அல்லது உபரி உணவாகவோ அமுல்ஸ்ப்ரே புகட்டி வருகிருர்கள். அதனுல் தான், தயாரிக்கத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள குழந்தை உணவாகிவிட்டது.

அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது!

(10) புலனடக்கத்தை அடுத்த விரதமாக அவர் குறிப்பிடு கின்றார். வள்ளுவரும்,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

எனக் கூறுகின்றார். புலனடக்கத்திற்காக அவர் உணவில் சில மாறுதல்களையும் செய்கின்றார். ருசியெல்லாம் நம் எண்ணத்தில் தான் இருக்கிறதேயொழிய உணவில் இல்லை என்று அவர் குறிப் பிடுகின்றார். புலனடக்கத்திற்கு உணவுக் கட்டுத் திட்டங்களும், உண்ணாவிரதங்களும் அவசியமென காந்தியடிகள் போதிக்கிறார்.

(11) அடுத்த விரதம் 'சுதேசியம்' எனப்படுவதாகும். இந்தியாவின் வறுமையைத் துடைக்கும் மருந்து கைத்தறி அல்லது கை ராட்டினமாகும். வெளி நாட்டு ஆடைகளை அணிய மறுத்து, இந்தியத் துணிகளையே ஆசிரமத்திலுள்ள அனைவரும் உடுத்திக் கொண்டனர். கங்கா பஹன் என்ற பெண்மணியின் உதவி பெற்று காந்தியடிகள் ராட்டை சுற்றத் துவங்கினார். நாளடைவில், கதர் இயக்கம் வெகுவாகப் பரவியது.

மேலே குறிப்பிட்ட பதினொரு விரதங்களும் உள்ளமையுமாறு வருகின்ற பாடல் பின்வருமாறு :

"சத்தியம் அகிம்சை திருடாமை
நாவடக்கம் சமய சமரசம்
நித்தியம் உடலுழைப்பு அஞ்சாமை
நிலையாப் பொருள் சேமியாமை
எத்தாலும் கீழ்மேல் எண்ணாமை
புலனடக்கம் சுதேசி என்னும்
பத்தினோடு சீலம் ஒன்றும்
திரிகரணம் பற்றி வாழ்வோம்"

மேற்குறிப்பிட்ட எல்லா விரதங்களையும் தனி மனிதனொருவன் பின்பற்ற முடியுமானால் அவன் மனத்தால் மகாத்மா ஆகின்றான்.

நன்றி ; கிராம ராஜ்யம்.

காந்தி வாக்கு

சத்திய வாக்குகளைக் கற்பதால் ஒழுக்கம் வளராது. அச்சத்தை ஒதுக்கிவிட்டு, சத்திய நெறியில்—சகிப்புத் தன்மையுடன் — செயலாற்றினால் தான் தார்மீக உயர்வு பெற முடியும்.

—தார்மீக நெறி.

My dad's really clever
He's just made some changes in the house. He's bought us a lovely radio. Now I can learn new songs and dance to the music. And the lights he has fixed—they're wonderful! They've made it so easy for me to dress the dolls and draw pictures. My room looks like a grand fairyland!
Dad says he did it all himself—but I know he called in somebody called Philips!
PHILIPS
PHILIPS
PHILIPS INDIA LIMITED

மகாத்மாவின் வாரிசுகள்

கி. கஸ்தூரிரங்கன்

மகாத்மா காந்தி பிறந்து நூறாண்டுகள் ஆகிவிட்டன. அவர் இறந்து 21 ஆண்டுகள் ஓடிவிட்டன.

அவர் இன்னும் வாழ்கிறார்—சிலர் நினைவில மட்டுமதான். மகாத்மா காந்தி கனவு கண்ட சுதந்திர பாரதம் எங்கே? அவர் உருவாக்கிய வாரிசுகள் எங்கே? எளிய வாழ்க்கை, அஹிம்சை, சத்திய வழி இவற்றுக்கெல்லாம் நிதரிசனமாக நடந்து காட்டிய மகாத்மாவின் அடிச்சுவட்டில் நடப்பவர்கள் எத்தனைபேர்? அவர் போற்றி பெரும் இயக்கமாக வளர்த்த காங்கிரஸ் ஸ்தாபனம் எந்த நிலைக்கு வந்துவிட்டது?

அவர் பெயரைப் போற்றுகிறோம். பொதுக் கூட்டங்களிலும் நாடாளு மன்றத்திலும் கல்விக் கூடங்களிலும் மகாத்மாவின் பெயரை மந்திரமாக உச்சரிக்கிறோம். ஆனால் அம் மந்திரம் உணர்த்தும் பொருளை எவரும் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. எத்தனையோ சடங்குகளில் ஈடுபட்டிருப்பது போல மகாத்மா நூறாண்டு விழாவையும் ஒரு மாபெரும் சடங்காக விமரிசையுடன் நடத்திவருகிறோம்.

பாரதம் சுதந்திரம் அடைந்த போது மகாத்மாவுக்குத் துயர் தான் மிஞ்சியது. நாடு இரண்டாகி சோதரர்கள் சண்டையிட்டு இரத்தம் ஆறுகப் பெருகிய போது "என் கனவுகள் சிதைந்துவிட்டன. இதுவா சுதந்திரம்?" என்று மருகினார்.

தொண்டர்களெல்லாம் தலைவராகி பதவிகளிலும் செல்வத்திலும் உயர்ந்துவிட்டபோது மகாத்மா எச்சரித்தார், "தில்லியைப் பாருங்கள், மாட மாளிகைகள் ஒருபக்கம், குடிசை மண்டிய சேரிகள் இன்னெரு பக்கம். இந்த நிலை ஒரு நாள் நீடித்தாலும் இந்தியாவுக்கு சுதந்திரம் வரவில்லை என்றுதான் அர்த்தம்".

இந்த நிலை 22 ஆண்டுகளாக நீடித்து இருக்கிறது. இன்னும் ஒரு நூறாண்டுகூட நீடிக்கும்

அஞ்சாமை

ஆன்மீக வாழ்க்கையின் முதல் குணம் அஞ்சாமை. எங்கு கோழைத்தனம் மிகுந்திருக்கிறதோ, அங்கு ஆண்மையோ தியாகமோ இருக்கமுடியாது.

கோழைகள் ஒழுக்கத்தைப் பின்பற்ற முடியாது.

எங்கு அச்சம் மிகுந்திருக்கிறதோ, அங்கு சமய வாழ்க்கை என்பது சாத்தியமில்லை.

அஞ்சாமை மனிதன் பெறக்கூடிய எல்லாக் குணங்களிலும் முதன்மையானது.

—காந்திஜி

போல் தோன்றுகிறது. மாளிகைகள் உயர்ந்து வருகின்றன. குடிசைகள் பெருகி சேரிகள் மலிந்து கிடக்கின்றன.

காந்தி வழியில் ஆப்ரிக்காவிலும், அமெரிக்காவிலும் உரிமைப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அங்கெல்லாம்கூட இரத்தப் புரட்சியையே அறிந்தவர்கள், மகாத்மா வகுத்துத் தந்த சாத்துவிகப் புரட்சியை நாடினார்கள். பல கட்டங்களில் வெற்றி கண்டார்கள்.

இங்கேயோ சாத்துவிகம் சாத்துவிகம் என்பதின் பொருளே மறந்துவிட்டது. எங்கும், எதற்கும் பலாத்காரப் புரட்சி. மாணவர்கள் காலித்தனம்; கல்வீச்சு; கடையடைப்பு; போலீஸ் தடியடி; குண்டுவீச்சு; தொழிலாளர் வேலை நிறுத்தம்; அதிகாரிகள் 'கேரோ'—போராட்டங்களெல்லாம் பலாத்கார வழியிலேயே நடந்துவருகின்றன.

காந்தி வழியை "என் வாரிசு", என்று அவர் நியமித்த நேருவே நிராகரித்துவிட்டார். ஆட்சி ஏற்று 15 ஆண்டுகளுக்குப்பின் சீனர்கள் படையெடுத்தபோது தான் அவருக்குக் காந்தியின் அகிம்சைப் போராட்டம் நினைவுக்கு வந்தது. இந்தியா பலாத்காரத்தைத் துறந்த நாடாக இருந்திருக்கலாமோ என்று நினைத்தார். அதுவரை எல்லையைக் காக்க பாரதம் குவித்த படைகளும், ஆயுதங்களும் சீனப் படையெடுப்புக்குப்பின் பயனில்லாமற் போயின.

காந்தியத்தை ஓரளவு கடைப்பிடிக்க முயலும் ஜெயப்பிரகாஷ் நாராயண் இதே கருத்தை பல ஆண்டுகளுக்கு முன்பே தெரிவித்தார். ஆனால் பரிகசிப்புக்குள்ளானார். "படைகளை அறவே துறந்த நாடாக இந்தியா இருக்கவேண்டும்; பலாத்காரத்தை நிராகரித்து விட்டால் நம் வாழ்க்கையிலும் சமூகத்திலும்கூட இப்போது உள்ள பூசல்களும், சுரண்டல்களும் இல்லாமற் போய்விடும். சமூகத்தில் ஆத்மீக பலம் ஓங்கும். சீனர்கள் கம்யூனிஸம்கூட அதற்கு முன்னே செயலற்றுப் போகும்" என்றார் அவர். ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு புத்தி பிசகிவிட்டது என்று அப்போது பலர் நினைத்தார்கள்.

BEST FOR

SOUTH INDIAN DISHES

MADRAS HOTEL

Hotel & Restaurant

CONNAUGHT CIRCUS

NEW DELHI-1.

Phone: 40595

காந்திஜி இப்போது இதே போல் கருத்துக்களை தெரிவித்துக்கொண்டு வாழ்வாரானால் அவரையும் புத்தி பிசகிவிட்ட கூட்டத்தில் சேர்த்துவிடுவார்கள். அவர் இறந்து போய் விட்டதால் அவருடைய நினைவையாவது கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

புத்தனை ஈன்று உலகத்திற்கு வழங்கிய இந்தியா புத்தருடைய வழியை ஏற்க மறுத்துவிட்டது. காந்தீயவழியும் அதே போல் மறக்கப்பட்டுவிட்டது.

அவருடைய நூறாண்டு விழாவைக் கொண்டாடும் இந்நாளில் நாம் செய்ய முனைந்திருக்கும் மகத்தான காரியம் தில்லியில் இந்தியா கேட்டில்—பல இலட்ச ரூபாய் செலவில்—அவருடைய உருவச் சிலையை நிறுத்தி வைப்பதுதான். ஆண்டுதோறும் குடியரசு நாளில் அகிம்சா மூர்த்தியான காந்திஜியின் சிலை முன்னே டாங்குகளும், பீரங்கிகளும், காலாட் படைகளும், போர் விமானங்களும் அணிவகுத்துச் செல்லும். இந்தியாவின் படை பலம் பெருகி வருவதை மகாத்மா காந்தி கண்டு மகிழ வேண்டாமா?

●

WITH COMPLIMENTS FROM

PHARMED PRIVATE LTD.

MANUFACTURERS & DISTRIBUTORS OF:

BIOLOGICALS & PHARMACEUTICALS

REGISTERED OFFICE

25-31, Rope Walk Lane,

P.O. Box No. 1185,

BOMBAY.

Phone: 254244–254260

THE LAKSHMI MILLS COMPANY LTD.,

PAPPANAICKENPALAYAM - COIMBATORE-18

Branches at: **PALLADAM & KOVILPATTI**

Telegram:	Telex:	Telephone:
"LAKSHMI" Coimbatore	Coimbatore: 042-212	Coimbatore: 30251-30251
"LAKSHMIMILL" Kovilpatti		Kovilpatti : 18
		Palladam : Sulur 50

Spindles: 1,52,636 **Looms: 396**

Manufacturers of finest quality cotton and stable fibre yarn and fabrics.

ASK BY NAME OUR FOLLOWING PRODUCTS!

'DEMOCRAT'	—	POPLINS—Bleached, mercerized and sanforized and in pleasing shades and stripes.
'DAYTONE'	—	POPLINS—White and soft colours with special 'CRESLIN' crease resistant finish.
'GALAKSHI'	—	GABERDINE—Bleached, mercerized.
'VALECIA'	—	SATIN DUCK—Bleached, mercerized.
'CAPTAIN'	—	DRILLS—Bleached, and mercerized.
'BALERINA'	—	VOILES—Superfine, mercerized, dyed and printed in tomorrows designs.
'SNOWDOWN'	—	BEDSHEETS—Bleached and dyed.
'PRINCES'	—	PILLOW CASES.

Also your hot favourites—LMC 21-A (Grey & Bleached)
LMC 65 (Bleached long cloth) and
LMC 24 the better gada.

Managing Agents:

G. Kuppuswamy Naidu & Co., Coimbatore.

நினைவுத்திரையில்

(தி. கோ. அனந்தஸ்வாமி)

—o—

நான் மஹாத்மாவை முதல் முதலாகச் சந்தித்தது 1917–ம் வருஷம் திருச்சிராப்பள்ளியில் டவுன் ஹாலில் நடந்த பொதுக் கூட்டத்தில்தான். மாணவர்கள், தேசியவாதிகள் நடத்தும் கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாது என்று சென்னை அரசாங்க ஜி. ஓ. 559 ஒன்று இருந்தது. திருச்சிராப்பள்ளி புனித சூசையப்பர் காலேஜில் மாணவனாயிருந்த நானும் இன்னும் சிலரும் திரு. எம். கே. காந்தி பேச்சைக் கேட்கப் போனோம். அடுத்த நாள் என் கல்லூரி முதல்வர் பூஜ்ய ஃபாதர் பெர்ட்ராம் என்னைக் கூப்பிட்டு "நீ கூட்டத்தில் கலந்து கொண்டதாகப் புகார் வந்திருக்கிறதே. அது உண்மையா" என்று கேட்டார். நான் 'ஆம். திரு. காந்தி பேசினதைக் கேட்டேன். நானோ வேறு மாணவர்களோ பேச வில்லை' என்று பதில் சொன்னேன். "மாணவர்கள் பெரியவர்கள் பேச்சைக் கேட்பதில் தவறில்லை. ஆனால் படிப்பு முடியும்வரை இயக்கங்களில் ஈடுபடாமலிருப்பதே புத்திசாலித்தனம்" என்று அறிவுரை கூறினார்.

1922 மார்ச் மீ 11உ நான் மறக்க முடியாத நாள். காந்திஜிக்கு ஆறு வருஷகாலம் சிறைத்தண்டனை கிடைத்த நாள். நான் அப்பொழுது ரங்கூன் டெய்லி நியூஸ் என்ற தினசரிப் பத்திரிகையில் திரு. எஸ். வேதமூர்த்தியின் உதவி ஆசிரியராக வேலை செய்து கொண்டிருந்தேன். காந்திஜிக்குத் தண்டனை கிடைத்ததைப்பற்றி அடுத்த நாள் காலையில் வெளிவரும் இதழில் தலையங்கம் எழுதவேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் ஏற்கனவே திரு. வேதமூர்த்தி அவர்கள் தலையங்கம் ஒன்று எழுதி வைத்திருந்தார். அதை எப்படித் தள்ளி வைப்பது என்று கவலைப்பட்டேன். என்றாலும் இருந்த வேகத்தில் தலையங்கம் காரசாரமாய் எழுதிவிட்டு எப்பொழுது ஆசிரியர் வருவாரென்று காத்திருந்தேன். மாலை 5 மணிக்கு அவர் வந்தார். நான் எழுதியிருந்த தலையங்கத்தைக் காண்பித்தேன். அவர் வாசித்துவிட்டு,

---

காந்தி வாக்கு

சாவின் நடுவில் வாழ்வு இருக்கிறது பொய்மையின் நடுவில் மெய்மை உண்டு. இருளில்தான் ஒளியின் சிறப்பைக் காணமுடியும், நாம் வேண்டுவதை வழங்கும் இறைவன் சர்வ வியாபி. வாழ்வு, சத்தியம், அன்பு, ஒளி, எல்லாவற்றையும் இறைவனைக் காண்கிறேன்.

—எரவாடா மந்திர்.

"நீர் எழுதியிருப்பதெல்லாம் சரி. ஆனால் சில வாசகங்களில் வெறியிருக்கிறது. அவைகளை எடுத்துவிட்டு நாளைத் தலையங்கமாகப் போட்டுவிடும்" என்று சொல்லி, குற்றமுள்ள வாசகங்களை நீலப் பென்ஸிலால் அடித்துவிட்டார். எழுத்தில் வேகமிருக்கலாம், வெறி கூடாது என்ற அறிவுரை அன்று எனக்குக் கிடைத்தது. அது பிற்காலத்தில் எனக்கு மிகவும் பயன்பட்டது.

1947-ல் மறக்க முடியாத ஸம்பவம் ஒன்று நேர்ந்தது. ஸ்ரீமதி ஸரோஜினி தேவியார் தலைமை வகித்த அகில ஆசியா ஸம்மேளனத்தில் மஹாத்மா காந்தி பேசுவதைக் கேட்க அனேகம் மத்திய அரசாங்க அலுவலகப் பணியாளர்கள் கூடியிருந்தார்கள். மஹாத்மா மேடையில் வந்து உட்கார்ந்ததும் அவருடைய தலையைச் சுற்றி தங்க நிறமான முழுமதி கண்டேன். தெய்வீகப் பிறவிகளுக்குத்தான் இந்தமாதிரி பிரபையிருக்கும் என்று வாசித்திருந்ததை நினைந்தேன். நான் ஒரு பாக்யசாலியென்று மகிழ்ச்சியுற்றேன். அந்த தெய்வப் பிறவியின் வழியில் நடக்க ஒரு வாய்ப்பும் சில நாட்களுக்குப்பின் கிடைத்தது.

திருவாளர் ஜகஜீவன்ராம் தொழிலாளர் மந்திரியாக இருந்தார். அவர் திட்டமிட்டபடி நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யும் பெண்களுடைய நலனை வளர்க்க ஒரு ஸ்தாபனம் நிறுவ வேண்டுமென்று உத்தரவிட்டார். அந்த நிறுவனப் பணியை திருவாட்டி. ஸி. எ. ராதாபாய் (தற்காலம் மத்திய அரசாங்க டெபுடி ஸெக்ரெடரி) அம்மையாரிடம் ஒப்படைத்தார். அந்த அம்மையாருடைய உதவிக்காக நானும் ஜாரியாவுக்கு அடுத்த பத்தர்டிஹி என்னும் முகாமுக்குச் சென்றேன். நானும் அம்மையாரும் உயர்திரு. ராஜாஜி அவர்களுடைய ஆசியைப் பெறச் சென்றோம். அவருக்கே உரிய முறையில் ஆசியும் தந்தார். "நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யும் பெண்களை நவநாகரிக நாரீமணிகளாக்க வேண்டாம்" என்று சொன்னார்கள்.

1947 ஏப்ரல் மீ 14உ யன்று பத்தர்டிஹி முகாம் திறக்கப்பட்டது. நாங்கள் எல்லோரும் (ஸேவிகைகள்—அலுவலக குமாஸ்தாக்கள்) திருவாட்டி ராதாபாய் உட்பட, குடிசைகளில் வாழ்ந்தோம். அனேகர் உதவியினால் மின்சார வசதி கிடைத்தது. அரசாங்கத்தினர் சில டிராக்குகளையும் ஒரு சிறு மோட்டார் காரையும் கொடுத்தார்கள். ஸ்தாபனத்தின் பெயரை ஹிந்தியில் "காமின் கல்யாண் ஸன்ஸ்தா" என்று எல்லோருக்கும் தெரியச் செய்தோம்.

காமின் கல்யாண் ஸன்ஸ்தாவில் காந்தியடிகளுடைய கொள்கைகளை நடைமுறையில் கைப்பிடித்தோம். மத வேற்றுமையோ ஜாதி வேற்றுமையோ கிடையாது. முகாமில் பொதுச் சமையலுக்கு ஏற்பாடுகள் செய்தோம். ஸேவிகைகளே முறை போட்டுக் கொண்டு சமைப்பார்கள், பாத்திரம் கழுவுவார்கள். அவரவர்கள் குடிசைகளை சுத்தமாய் வைத்துக்கொள்வார்கள். பயிற்சி முடிந்த பின்னர் ஸேவிகைகள் சுரங்கங்களில் வேலை செய்பவர்களுடைய மத்தியிலேயே குடியிருந்து, சுகாதார விதிகளைப் பரவச் செய்து குழந்தைகளுக்கு எண் எழுத்தறிவித்தார்கள்.

நோயுற்றவர்களை மருத்துவ மனைக்கிட்டுச் சென்றூர்கள் மருத்துவ மனைகளில் கூலிகளுக்குச் சரியான உதவி பெற உதவினர். மதுவிலக்குப் பிரசாரமும் செய்தனர். மாலை வேளையில் திறந்த அரங்கில் திரைப்படங்கள் காட்ட ஏற்பாடு செய்தோம். தேநீர் குடித்து, சத்துடைய சுண்டல், அப்பளம் தின்று பசியைத் தீர்த்துக் கொள்ள ஸேவிகைகளே உழைத்தார்கள். ஒரு வருஷ காலத்துக்குள் 12 கேந்திரங்களைத் தோற்றுவித்தோம். சுரங்க உரிமையாளர்கள் தங்களது சுரங்கங்களிலிருக்கும் குடியேற்றங்களில் கேந்திரங்கள் இருந்தால் நலமென்று அறிந்து உதவினுர்கள்.

எங்கள் முகாமிலும் ஸ்தாபனத்திலும் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிருஸ்தவர் இருந்தார்கள். எங்கள் கார், லாரி ஓட்டுனர்களில் இருவர் முஸ்லிம்கள், ஒரு சீக்கியர், ஒரு ஹிந்து. 1947ல் ஹிந்து முஸ்லிம் கலவரங்கள் நடந்தபோது திருவாட்டி ராதாபாய் அம்மையாரிடமும் என்னிடமும் முஸ்லிம் ஓட்டுனர்களை வைத்துக்கொண்டிருப்பது ஆபத்தென்று ஹிந்து நண்பர்கள் சொன்னதுண்டு. ஆனுல் நாங்கள் ஒருவரையும் விலக்கவில்லை. எங்கள் நம்பிக்கையும் வீண் போகவில்லை. சுற்றுச் சுவரோ தியணைக்கும் இயந்திரங்களோ இல்லாத எங்கள் முகாமில் மத வேறுபாடுள்ளவர்களுக்குள் வாய்ச்சண்டைகூட நடக்கவில்லை. வெளியார்கள் வந்து துன்புறுத்தவுமில்லை.

காமின் கல்யாண் ஸன்ஸ்தா ஸேவிகைகள் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தும்போது, ராம்துன் பாடுவார்கள்:

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன சீதா ராம்
ஈச்வர அல்லா தேரே நாம்
ஸப்கோ ஸன்மதி தே பகவான்''

என்று தூய மனத்துடன் பாடிவிட்டு வேலையில் ஈடுபடுவார்கள்.

1947 ஆகஸ்ட் 15உ யன்று நாங்கள் எல்லோரும்,

"கயி குலாமி—அடிமைத்தனம் ஒழிந்தது
ஆயி ஆஸாதி—வந்தது சுதந்திரம்
காந்திஜிகா சாந்திராஜ்

என்று ஸந்தோஷமாய் சுரங்கங்கள் இருக்கும் இடங்களுக்கு திறந்த லாரிகளில் சென்று முழக்கமிட்டதை இன்னும் நான் மறக்கவில்லை.

—o—

காந்தி வாக்கு

பொய்யால் மெய்யை வெல்ல முடியாது. மெய் பேசி, செயலாற்றினுல்தான் வெற்றி காண முடியும், சத்தியமும் நேர்மையும் நிறைந்த உழைப்பால் தான் சாயுஜ்ஜியம் அடைய முடியும். —ஹரிஜன் 13-7-1947.

தியாகவானிலே பூத்த முழுநிலா!
காதல் இலக்கியத்திலே புதிய உலா!
புரட்சி நடிகரின்
இணைந்த கைகள்
ஈஸ்ட்மென் கலர்
டைரக்‌ஷன் • சாணக்யா
கதை: ரவீந்தர்
ஸ்டுடியோ • சத்யா
உரையாடல் சொர்ணம்
இசை எம்.எஸ்.விசுவநாதன்
பாடல்கள் கவிஞர் வாலி • புலவர் வேதா
ஒளிப்பதிவு வி.ராமமூர்த்தி
எடிட்டிங் ஜம்பு
சண்டைப்பயிற்சி சியாம் சுந்தர்
கலை அங்கமுத்து
ELEGANT
எம்ஜியார் புரொடக்‌ஷன்ஸ் தயாரிப்பு

AVM PRODUCTIONS

THE EMBLEM
that
DENOTES
MOTION PICTURES
for
WHOLESOME
ENTERTAINMENT